# அநுபோக
# வைத்திய நவநீதம்

ஹக்கீம்
பா.மு. அப்துல்லா சாயபு

## பாகம்-6

தாமரை நூலகம், சென்னை-26.

# அனுபோக வைத்திய நவநீதம்

ஆறாம் பாகம்

ஆசிரியர் :

ஹக்கீம். பா. முகம்மது. அப்துல்லா சாயபு அவர்கள்

பதிப்பாசிரியர் :

எஸ். பி. ராமச்சந்திரன்

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561,

தொலைபேசி எண் : 420 249

தாமரை நூலகம்

7. என். ஜி. ஓ. காலனி,
வடபழனி, சென்னை —600 026.

தாமரை வெளியீடு எண் : 160
முதற் பதிப்பு : செப்டம்பர், 1995.
உரிமை பெற்றது. : ©

**நூலைப் பற்றி**

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அனுபோக வைத்திய நவநீதம் |
| ஆசிரியர் | : ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள் |
| பதிப்பாசிரியர் | : எஸ். பி. ராமச்சந்திரன் |
| வெளியிட்டோர் | : தாமரை நூலகம், 7, என். ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26. |
| பதிப்பு ஆண்டு | : அக்டோபர், 1995. |
| உரிமை | : பதிப்பகத்திற்கு |
| நூல் வடிவம் | : 21 செ மீ × 14 செ. மீ |
| தாளின் தன்மை | : 14.4 வெள்ளைத்தாள் |
| அட்டை | : 13.8 சேஷசாயி |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : மொத்த பக். 144 + 8 = 152 |
| பிரதிகள் | : 1000 |
| பைண்டிங் | : செக்ஷன் |

**விலை** **ரூ. 40—00**

அச்சிட்டோர் : : அமுதன் அச்சகம்
: 66, பெரியார் தெரு
: எம். ஜி. ஆர். நகர், சென்னை 78.

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக் கடை
மு.முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

**கடவுள் துணை**

# அனுபோக வைத்திய நவநீதம்

## ஆறாம் பாகம்

### முகவுரை

செந்தமிழறிவும், வைத்தியாபிமானமுள்ள கனவான்களே! இந்த மகா மேன்மை தங்கிய நவநீதத்தின் சீரும் சிறப்பும் அளவிட்டுச் சொல்லற்கரியன வெனினும், இதற்குமுன் வெளிப் பட்டுள்ள இதன் ஐந்து பாகங்களின் பலமுறைகளாலும், முகவுரைகளினாலும் பார்த்த ஸ்ரீமான்களுக்கு நேர்த்தியாய் விளங்கியிருக்கும். ஆதலின், அவற்றை மீண்டும் இம்முகவுரை யில் துலக்கியெழுதின் 'கூறியது கூறல்' என்னும் குற்றஞ்சாரும். அதனால், அவற்றை விடுத்து இந்தப் பாகத்தின் விசேஷத்தைப் பற்றி மாத்திரம் சிறிது விளக்கியெழுதுவோம்.

இதற்கு முந்தின ஐந்தாம் பாகத்தின் முகவுரையில் நாம் கூறியபடி இந்தப் பெரிய நூலானது பலபாகங்களாக வெளிவரவேண்டி யிருப்பதை முன்னிட்டு ஒவ்வொரு பாகத்தை யும் அடுத்தடுத்துச் சீக்கிரத்தில் முடித்து வெளிப்படுத்தக் கருதி எவ்வளவோ முயன்றுவரினும் தெய்வசங்கல்பத்தால் பலவித இடையூறுகள் நேருகின்றமையால், தடையுண்டாகி விடு கின்றது. அவ்வித தடையினாலேயே இந்த ஐந்தாம் பாகம் வெளியாகிப் பலமாதங்கள் கழிந்தும் இப்பாகம் வெளிவரா மலிருந்தது. எனினும், வழக்கப்படியே நமது அபிமானிகளுட் பலர், ஆறாம்பாகத்தையும் விரைவில்பார்க்கவேண்டுமென்னும் அவாவினால் நேரிலும் கடிதமுகத்தாலும் வற்புறுத்தி வந்ததை மறுக்கவசமற்றுச் சிரமத்தோடு சிரமமாய்ச் சிலநாட்களாக இவ்வேலையிற் பிரவேசித்து மிக்க ஊக்கத்தோடு இப்பொழுது இதனை வெளிப்படுத்தினோம் இது மற்ற பாகங்களைக் காட்டிலும் மிக்கமேன்மையுற்றதென்பது இப்புத்தக முழுவதும் வாசிப்போர்க்கு நன்கு விளங்காமற் போகாது இந்தப் பெருமை வாய்ந்த பாகத்தில் வைத்தியச் சரக்குகளில் மிகவும் முதன்மை பெற்றவைகளாகிய கெந்தகம், தாளகம் ஆகிய இரண்டைப் பற்றிய அநேக அற்புத முறை களடங்கியிருக்கின்றன. அவை

யாவும் பல தலைமுறைகளாக நமது பரம்பரையார் கையாடி அனுபவப்பட்டு வந்தனவும், மிகச்சிறந்தகுணங்களுடையனவு மாம் அவைகளாவன:—

கெந்தகத்தின் பிறப்பு, கெந்தகத்தின் நாமங்கள், கெந்தகத்தின் பிரபாவம், கெந்தகத்தின் வகைகள், கெந்தகத்தின் குணம், கெந்தகசுத்திப் பொதுவிதி, கெந்தக சுத்திகள், கெந்தகத்தைக் கட்டப் பொதுவிதி, கெந்தகக் கட்டுகள், கெந்தகக் கட்டிற்குச் செந்தூரம், கெந்தக பற்பங்கள், கெந்தக பாகபற்பம், கெந்தகச் சுண்ணங்கள், கெந்தக செந்தூரங்கள், கெந்தக மெழுகுகள், கெந்தக சர்க்கரைகள், கெந்தகச் சூரணங்கள், கெந்தக ரசாயனங்கள், கெந்தக லேகியங்கள், கெந்தகநெய்கள், கெந்தக மாத்திரைகள், கெந்தகக் குழித்தைலங்கள், கெந்தகச் சுடர்த்தைலம், கெந்தக எண்ணெய்கள், தாளகத்தின் வகைகள் தாளகத்தின் பிரபாவம் தாளகத்தின் நாமங்கள், தாளகத்தின் குணங்கள், தாளகத்தின் செய்கையும் குணமும், தாளக சுத்திகள், தாளகப் பதங்கங்கள், தாளக சத்துக்கள், தாளகக் கட்டுகள், கரும்பு ரசக்காடித்தீநீர் தாளக உருக்குகள், தாளக பற்பங்கள், தாளகச் சுண்ணங்கள், கோதந்தி தாளகபற்பங்கள்: தாளக செந்தூரம், தாளக செந்தூரம் திராவகப்போக்கு, சாறுவரா மூலிகைகள் உலர்ந்த மூலிகைகள் ஆகியவைகளின் சத்தெடுக்கும் வகை, ஹம்மா மே மாரியா வென்னும் திராவக வாலை, மேற்படி யந்திரத்தில் திராவகம் பிறக்கும் முறை, தாளக மெழுகுகள், தாளக மாத்திரைகள், சீதாம்சரசம், தாளகச்சூரணங்கள், தாளகப்புகைகள், தாளகம் விஷமித்த லட்சணம், தாளகம் விஷமித்ததற்குச் சிகிச்சைகள் ஆகியவைகளும், இவற்றிலுட் பிரிவாகியபல அற்புத விஷயங்களுமேயாம்.

இத்தகைய தெய்வீக முறைகள் யாவும் நாம் மேலே கூறியபடி நமது பரம்பரையில் கையாளப்பட்டு வந்தனவும் சிறந்த குணங்களுடையனவு மன்றி, பல அரிய கிரந்தங்களிலுள்ள பல்லாயிர முறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவைகளும், செய்து முடிப்பதற்கு மிகவும் சுலபமானவைகளும், எள்ளளவுஞ் சந்தேகமில்லாதவைகளுமாம். இவைகள் மிகவும் அருமையானவைகளென்று நமது பரம்பரையில் இரகசியமாக வெளிப்படுத்தாமல் வைக்கப்பட்டு வந்திருந்த போதிலும் நமது வைத்தியாபிமானிகளை உத்தேசித்தும், லோகோபகாரத்தைக் கருதியுமே வெளிப்படுத்த நேர்ந்தன. வாதம், வைத்தியம் ஆகிய இரு வகைகளை விரும்புவோர்க்கும், நோயற்ற சுகவாழ்வைப் பெற எண்ணுவோர்க்கும், இப்புத்தகம் மிக அவசியமானது. கெந்தகம், தாளகம் ஆகிய இரண்டினதுபல அற்புத முறைகளை

யும் தெரிந்து கொள்ளவிரும்புவோருக்கு இப்புத்தகமொன்றே போதுமானது. இதன் பொருட்டு நாம் எடுத்துக்கெ ண்ட பிரயாசை, பொருட்செலவு, தேகசிரமம், மனோசிரமம் ஆகியவற்றை உத்தேசிக்க, இதற்கு நாம் ஏற்படுத்தியிருக்கும் விலையானது மிகவும் அற்பமென்பது எல்லோருக்கும் ஒருவர் எடுத்துச் சொல்லாமலே நன்கு விளங்கும். உலோகோப காரார்த்தமாகவே ஒவ்வொரு பாகத்துக்கும் இவ்வாறு குறைந்த விலை ஏற்படுத்தப்பட்டது.

இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த இக்கிரந்தமானது நம் தமிழ் நாட்டு நண்பர்களின் அதிஷ்டவசத்தினாலேயே வெளிவந்திருப்பதாலும், வரையறையான தொகைப்பிரதிகளாக அச்சிடப்பட்டிருப்பதாலும் ஒவ்வொருவரும் சிறிதும் தாமதிக்காமல் இதனைத் தருவித்து வாசித்து இதிலுள்ள பன்முறைகளையும் செய்தனுபவித்து நற்சுகமடைந்து எமை மகிழ்வித்துமென்மேலும் இத்தகைய கிரந்தங்களை ஏற்படுத்துதற்கான ஊக்கத்தை உண்டா க்குமாறு விரும்புகிறோம். இனி, இதன் மற்ற பாகங்களும் முன்போல தாமதமின்றி வெளிவரக் கூடும். இவ்வெண்ணம் யாதொரு இடையூறுமின்றி இனிது முடியுமாறு எல்லாம் வல்ல இறைவன் கடாக்ஷிப்பானாக ஆமின்.

இங்ஙனம்
**ஹக்கீம்—பா—மு—அ.**

[illegible] 777140
[illegible]

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கரும்புரசக் காடித் தீநீர் ... ... | 84 |
| கற்சுண்ண உப்பு ... ... | 117 |
| குருச் சுண்ணம் ... ... | 117 |
| கெந்தக எண்ணெய் ... ... | 64—69 |
| கெந்தகக் கட்டிற்குச் செந்தூரம் ... ... | 18 |
| கெந்தகக் கட்டு ... ... | 16—19 |
| கெந்தகக் குழித்தைலம் ... ... | 59—63 |
| கெந்தகச் சர்க்கரை ... ... | 47, 48 |
| கெந்தகத் தூய்மை ... ... | 12—14 |
| கெந்தகத் தூய்மை பொதுவிதி ... ... | 10 |
| கெந்தகச் செந்தூரம் ... ... | 38—40 |
| கெந்தகச் சுடர்த்தைலம் ... ... | 64 |
| கெந்தகச் சுண்ணம் ... ... | 35, 36 |
| கெந்தகச் சூரணம் ... ... | 8, 49 |
| கெந்தகத்தின் குணம் (தமிழ்) ... ... | 9 |
| மேற்படி (அமிர்தசாகரம்) ... ... | 9 |
| மேற்படி (யூனானி) ... ... | 9 |
| மேற்படி (ஆங்கிலம் ... ... | 9 |
| கெந்தகத்தின் பெயர்கள் ... ... | 4 |
| கெந்தகத்தின் சிறப்பியல்புகள் ... ... | 5 |
| கெந்தகத்தின் பிறப்பு ... ... | 2 |
| கெந்தகத்தின் வகைகள் ... ... | 8 |
| கெந்தகத்தினைக் கட்டப் பொதுவிதி ... ... | 15 |
| கெந்தகத் தைலம் ... ... | 63 |
| கெந்தக நெய் ... ... | 58—69 |
| கெந்தக பற்பம் ... ... | 19—34 |
| கெந்தகபாக பற்பம் ... ... | 27, 28 |
| கெந்தக மாத்திரை ... ... | 29 |
| கெந்தக மெழுகு ... ... | 40—46 |
| கெந்தக ரசாயனம் ... ... | 50—56 |
| கெந்தக லேகியம் ... ... | 57 |
| கெந்திபூர பற்பம் ... ... | 30 |
| கோதந்தி தாளக பற்பம் ... ... | 111—113 |

பக்கம்


சாறுவரா மூலிகைகள், உலர்ந்த மூலிகை
ஆகியவைகளின் சத்தெடுக்கும் வகை ... ... 126
சீதாம்ரச ரசம் ... ... 133
தாளக உருக்கு ... ... 90—92
தாளகக் கட்டு ... ... 85—90
தாளகக் கட்டுகள் 84
தாளகக் கட்டுச் செந்தூரம் ... ... 123
தாளகத் தூய்மை ... 77—81
தாளகச்சத்து ... ... 82
தாளகச் சுண்ணம் ... ... 99—101
தாளகச் செந்தூரம் ... ... 114—125
தாளகச் செந்தூரம் (திராவகப்போக்கு)... 124
தாளகத்தின் குணம் [ஆயுர்வேதம்) ... ... 76
தாளகத்தின் குணம் [யூனானி] ... ... 74
தாளகத்தின் குணம் (ஆங்கிலம்) ... ... 77
தாளகத்தின் செய்கையும் குணமும் ... ... 74
தாளகத்தின் பெயர்கள் ... ... 74
தாளகத்தின் பிரபாவம்-சிறப்பியல்புகள்... ... 73
தாளகத்தின் வகைகள் ... ... 71
தாளக பற்பம் ... ... 92—135
தாளகப் பதங்கம் ... ... 82
தாளகப் பதங்கம் அல்லது சத்து ... ... 82
தாளகப் புகை ... ... 136—137
தாளக மாத்திரை ... ... 131—133
தாளக மெழுகு ... ... 130, 131
தாளகம் 70
தாளகம் விடமித்ததற்கு மருத்துவம் ... ... 140
தாளகம் விடமித்த லட்சம் ... ... 139
தாளகாதிச் சூரணம் ... ... 136
மால்தேவி செந்தூரம் ... ... 125
ஹம்மா மே மாரியாவென்னுந்
திராவகவாலை ... ... 127
,, (வாலையில் திராவகம்
இறக்கும் முறை) ... ... 128


அனுபோக வைத்திய நவநீதம் ஆறாம் பாகம்
முற்றிற்று

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு.முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

# அனுபோக வைத்திய நவநீதம்

## ஆறாம் பாகம்

பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றஹீம்.

கடவுள் வணக்கம்.

**அல் ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்**
**அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ஸய்யிதில்**
**முர்ஸலீன; வஆலிஹி, வ அஸ்காபிஹி**
**அஜ்ம ஈன்.**

### நூல்

கடவுளினது அருளினாலும், பெரியோர்களினது வாழ்த்தினாலும் பற்பல மருத்துவ அறிஞர்களின் ஆதரவினாலும் இதன் முன் ஐந்து பாகங்களிலும் அநேக அபூர்வ முறைகள், குருமுறைகள், நுணுக்க முறைகள், மறைவான முறைகள் ஆகிய பற்பல அற்புத முறைகள், சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றிலுள்ள முறைகளெல்லாம் பல தலைமுறைகளாக பல தடவைகளிலும் அனுபவ சித்தி பெற்றவைகள் யாவரும் இலகுவாகத் தெரிந்து கொள்ளும் விதமாக வகை விபரமாகவும் எழுதப்பட்டுள்ளன. அவற்றின் முறைகளைச் செய்தனுபவித்த அனுபவசாலிகள் ஒவ்வொருவரும் அவற்றின் அருமை பெருமைகளை அடங்கா மகிழ்ச்சியோடு வெகுவாய்ப் புகழ்ந்து, நன்கு மதித்து வருகின்றார்கள். ஆகையால் முன்னிலும் அதிக ஊக்கமதிகரித்து இந்த ஆறாம்பாகத்தில் நமது முன்னோர்களும் நாமும் பல தடவைகளில் உபயோகித்து அனுபவ சித்திபெற்றவைகளும், பரம்பரையாக அனுபவித்து வரப்பட்டவைகளுமான அநேக இந்து யூனானி வைத்திய முறைகள், சீவகாருண்யத்துடனும் இரக்கச் சிந்தையுடனும், வெளிப்படுத்தப்பட்டிருக்

கின்றன. இதிலடங்கிய கருத்துகள், விவரங்கள். முறைகள் முதலியவைகளெல்லாம் இதுவரையில் அச்சில் வெளிப்படுத்தப் படாத நூதனமானவைகள், நாட்பட்ட நோய், கடின நோய், கடின சாத்திய நோய் முதலிய பெருநோய்களை அறத்தீர்க்கும் பற்பல முறைகள் இந்த ஆறாம்பாகத்தில் சொல்லப்பட்டிருக் கின்றன. இம்முறைகள் ஒவ்வொருவரும் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் விதமாக மிகவும் தெளிவாகவும், வெளிப்படையாக வும் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் அருமை பெருமைகளெல்லாம் அங்கு சொல்லியிருக்கிறபடி செய்து அனுபவிப்பவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும்.

## கெந்தகத்தின் பிறப்பு

இதைப்பற்றி நமது இரசவாத சிந்தாமணி முற்தபாகத்தில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு சொல்லப்பட்டி ருக்கிறதென இங்கு குறிப்பாகச் சொன்னால் அதைப்பற்றி அந்த நூல் தம்மிடத்திலில்லாத பலர் குறை கூறுகின்றார்கள், அந்த விஷயத்தையே இங்கும் எடுத்து எழுதினால், தங்களிடத்தில் அந்தப் புத்தகமுள்ள சிலர் ஒருதடவை ஒரு புத்தகத்தில் எழுதினதை மறுபடியும் மறுபுத்தகத்தில் எழுதி பாரத்தைப் பெருக்கிவிடுகிறோமெனக் குறை கூறுகின்றார்கள். இவ்விதம் எழுதாது விடுத்தாலும் குறையே, எழுதினாலும் குறையே ஆயினும் அங்குள்ளவைகளை எல்லாம் எழுதாமல், இதனைப் படிப்பவர்களுக்குப் பயன் படும்படியாக அவைகளை ஒருவாறு சுருக்கி எழுதுவாம் அவை பின்வருகிற விதமாம்.

கெந்தகமானது உயிர்த்தன்மை பொருள்களுள் முதன்மை யானது. மேலும்கெந்தகமானது பல உலோகங்களோடு சேர்ந்து போவதால், இது ஒரு பிரதான இரசவாத கர்த்தாவெனவும் சொல்லப்படுகிறது. ஆதிகாலந்தொட்டு தமிழர்கள், யூனானி கள், அரேபியர்கள் முதலியவர்களால் இது வாதம் வைத்தியம் என்ற இருவகைகளிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. முட்டையின் அம்பிலி,[1] வெள்ளுள்ளி, வெங்காயம் முதலிய பண்டங்களில் கெந்தகம் ஐக்கியப்பட்டிருக்கிறது ஆனால், பெரும்பான்மையாய் இது இரும்பு, செம்பு, ஈயம், இரசம், ஆகிய உலோகங்களோடு சேர்ந்திருக்கின்றது. இப்படிச் சேர்ந் திருப்பதை வறுத்துக் கெந்தகத்தை எடுத்துக் கொள்ளப் படும். இன்னும் இதுசில வாயுவோடும். உப்புக்களுட னும், சில தாதுக்களுடனும் சில தாது சம்பந்த சலத்துடனும் கலந்திருக்கிறது. தூய்மையான பிறவிச்

1 முட்டை வெள்ளைக்கரு

சரக்கானது அக்கினி மலையடிவாரங்களிலும், பூமியில் அநேக இடங்களிலும் அகப்படும். கடைச்சரக்கானது முக்கியமாய் சிஸிலி, இத்தாலி முதலிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகிறது. கடையில் விற்கப்படும் கெந்தகத்தில் அயம், நாகம், பாடாணம், சுண்ணாம்பு முதலிய தோடங்களிருக்கின்றன. ஆகையால் இதை உருக்கி யாவது, வாலையிலிட்டிறக்கியாவது, பதங்கித்தாவது, தூய்மை செய்து கொள்ளவேண்டும். கோழித் தலைக் கெந்தகம், அமரசிலை கெந்தகம், கரட்டுக் கெந்தகம், நெல்லிக்காய்க் கெந்தகம், பருப்புக் கெந்தகம், வாணை அல்லது குழாய்க் கெந்தகம் எனப் பலவகைப்படும். ஆனால் யூனானி இரசவாத வல்லுனர்கள், சிவப்புக் கெந்தகம், பசுஞ்சாயலான பீதகெந்தகம், வெள்ளைக் கெந்தகம் ஊதா கெந்தகம் என நான்கு வகைகளெனச் சொல்லுகின்றார்கள். சிவப்புக் கெந்தகமானது ஒளியுள்ளதாகவும்: தன் சுரங்கத்தில் இராக்காலங்களில் தீபத்தைப் போன்ற ஒளியையுடையதாய் தனக்கடுத்திருக்கும் கரங்களிலும் வெளிச்சத்தையுண்டாக்கும் தன்மையையுடையது

அதன் கனியானது முக்கியமாய் பார்சி நாட்டில் அமான் தீவில் இருக்கின்றது. நவாப்முதுல் மூலூரக் ஸையத் உல்விகான் ஒன்னும் மகாவல்லுனர் தம்முடைய நூலில் சொல்லுகிறார் 'அமான் தீவிலுள்ள சில பாகங்களில் சிவப்புக் கெந்தகத்தைப் பூமியிலிருந்து வெட்டியெடுத்ததை நான் நேரே பார்த்தேன்' ஆனால் இவரது முதன்மைச் சீடர். சிவப்புக் கெந்தகத்தைத் தான் பார்த்ததேயில்லை யென்கிறார் ஜாலிநியூஸ் வல்லுனர் சொல்கிறதாவது:- சிவப்புக் கெந்தகம், மஞ்சள் கெந்தகம், வெள்ளைக்கெந்தகம், கறுப்புக்கெந்தகம் என்னும் நான்கு வகைகளென்பது நிச்சயமேயாகும். ஆனால் அன்நாகியென்னும் வல்லுனர், சிவப்பு கெந்தகமானது பொன் சுரங்கங்களில் மாத்திரம் கிடைக்குமென்கிறார் இவர்களெல்லாம் இவ்விதம் பல விதமாய்ச் சொல்லினும் இரசவாதிகளுள் பெரும்பாலார் கருத்தாவது:- சிவப்பு. வெள்ளை, கறுப்பு என்னும் மூவகை கெந்தகங்களையும் பிறவிச் சரக்கான மஞ்சள் கெத்தகத்தால் வைப்பாகச் செய்யலாமென்பதும் ஆகையால்மஞ்சள் கெந்தகம் பிறவியென்பதில் எவ்வித சந்தேகமில்லையென்பதுமேயாம்.

கெந்தமானது ஏகபூத தன்மைப்பொருளென்பதில் மறுப்பேதுமில்லை. கெந்தகமானது இயல்பாக மங்கலான மஞ்சள் நிறமுளளது. இதைப் பாகப்படுத்துவதால், சிவப்பு, வெள்ளை, கருப்பு, முதலிய வண்ணமுடையவைகளாகச் செய்யலாம்; அல்லது, இதை எரித்தெடுக்கும்போது படும் அனலுக்கு தக்கபடி நிறம் வேறுபடுவதுமுண்டு, இதற்கு வாசனையும் சுவையுமில்லை ஆனால் இதைத் தேய்த்தால் ஒருவித நாற்றமுண்

டாகும். கைக்கும் நற நற வென்றிருக்கும். இது நீரில் கரையாது. கருப்பூரத்தைலம், கொழுப்பு, மண்ணெண்ணெய், ஆல்கஹால், சாராயம் முதலியவைகளிற் சொற்பமாய்க் கரையும்.

இது எளிதில் நெருப்புப் பற்றத்தக்கது, 300-டிகிரிக்குக் காற்றுப்பட இது எரிக்கப்பட்டால் பற்றியெரியும், இதன் சுடரானது மங்கலான நீலநிறமாயிருக்கும், இன்னும் இது இவ்வளவைப் பார்க்கிலும் அதிகமாய் எரிக்கப்பட்டால், நீல வண்ணமாக எரியும். 108-டிகிரிக்கு எரிக்கப்பட்டால், அது ஆவியாய் எழும்ப ஆரம்பிக்கும். 216-டிகிரிக்கு எரிக்கப்பட்டால், இளகும். 226-முதல், 280-டிகிரிக்கு எரிக்கப்பட்டால், முற்றும் நீர்மயமாகி இலேசான மஞ்சள் வண்ணமுடையதாகும். 320-டிகிரியானால் உருக்கின பாத்திரத்தைத் தலைகீழாகக் கவிழ்த்தாலும் அது சொட்டாத விதமாக நன்றாய் இறுகிச் சிவந்துபோம்.

இந்த நிலையில் அது, தண்ணீரில் போடப்பட்டால், சற்று நேரம் மெழுகைப்போல நைப்பாயிருக்கும்; ஆகையால், முத்திரைகளை அழுத்திப்பதித்துக் கொள்ளக்கூடும். இன்னும் இதை இந்த நிலையில் நெகிழ்ந்து உரழத்தக்க கம்பிகளாகவும் இழுக்கலாம். இதனுடைய கொதிநிலையாகிய 482-டிகிரிலிருந்து 600-டிகிரி வரையில் எரித்தால், இலோசான நீர்மயமாகி விடுகிறது. இத்தருணத்தில் காற்றை வெளிப்படுத்தினால் எவ்வித மாறுதலுமின்றி கமலாப்பழ வண்ணமான பதங்கமாகி விடும். இதைக் குளிர ஆறவைத்தெடுத்தால், முன் செல்லப்பட்ட மாறுதல்களைப் பழையபடி அடையத்தக்கதாய் விடும்.

## கெந்தகத்தின் பெயர்கள்.

உரோணிதம்' கெந்தகம், கெந்தி, கவி, காரிழை, குணச்சல் குருந்தம், கெந்தகம் கெந்தோகம், சத்தி, சௌகம், செந்தூரத்தாதி, செந்தூரகுரு, தந்தி, தவணியம், தனம், திராசதம், நாநம், பூர்வபட்சம், பொன்வர்ணி, மரதம் ஆகியவைகளாம்.

இதன் பெயர்கள் வைத்திய வழக்கிலும் வாத வழக்கிலும் அதன் தன்மைப் பண்புகளையே குறிப்பாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. இவ்விதம் இன்னும் தமிழ்ல் பல பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன,

## யூனானி

அரபியில் கிப்ரீத் என்றும், பார்சியில் கோகிர்த் என்றும், இந்தி மொழியில் கெந்த்ஹக் என்றும். தக்னி மொழியில் கந்த

என்றும், மற்ற மொழிகளில் அநேகமாய் கெந்தகம் என்றும், பர்மா மொழியில் 'கான்' என்றும், யூனானி வாதிகளின் மறை மொழியில் (பரிபாஷை) 'அரூஸ்' என்றும், 'மாஏ அஸ்பர்' என்றும், 'ஹமீரே அஅரூஸ்' என்றும், 'ஸப்ரயே அஅரூஸ்' என்றும் 'பைலா' என்றும் 'ஷம்ஆ' என்றும், 'ஹம்ரா' என்றும், 'ஸம்ஆ' என்றும், இன்னும் பல பெயர்களுண்டு.

## கெந்தகத்தின் சிறப்பியல்புகள்

கெந்தகமும் இரசத்தைப் போலவே ஏகபூதமதி கரித்த சரக்கு. இதன் பிறப்பும் இரசத்தைப்போலவேயாம். ஆனால் வண்ணபேதம், உருவபேதம் ஆகிய பேதங்களுள். இப்பேதங்கள் அது விளை நிலங்களின் குணத்தாலுண்டாவதேயாம் கெந்தகத்தில் தேயுவின் குணம் சிறப்பாயிருக்கிறது. இக் காரணம் பற்றியே சொற்பச் சூட்டாலும் இது உருகிவிடு கிறது. இது பூர்வீகமானது. இது சந்திர சம்பந்தமானது. நாம் முன் சொல்லியிருக்கிறபடி இரசமானது, சூரிய சம்பந்த முடையது ஆகையல், இவ்விரண்டிற்கும சத்தி சிவமென்றும் வாத வைத்திய வழக்கில் சொல்லப்படுகிறது. இவ்விரண்டின் சம்மந்தங்களால் எல்லா உலோகங்களும் உற்பத்தியாகின்றன. தங்கம், வெள்ளி, தாம்பிரம், வெள்வங்கம், கருவங்கம், நாகம், இரும்பு என்னும் உலோகங்கள் மேற்கண்ட இரசம், கெநதகம் ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்டு அதனதன் அளவு, அதனதன் பாகம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி விளைகின்றன. அவ்விவரங்களெல்லாம் இதற்கு முந்தின ஐந்தாம் பாகத்தில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

கெந்தகமானது இரசவாதத்தில் இரசத்தைப்போல மிகவும் அவசியமானது. வெள்ளியை ஆரம்பத்தில் கறுப்பாக்கி முடிவில் மஞ்சள் வண்ணமாக்கும். தனிப்பொருள்களில் பிரதானமானது கெந்தகமேயாம். இவ்வகையில் இதற்குச் சமானமானது ஒன்று மில்லையென்பதே எல்லா இரசவாத பண்டிதர்களின் முடி வாகும். இன்னும் இரசவாத சம்பந்தமான செந்தூர முறை களிலே கெநதகம், இது சம்பந்தமாயுண்டான தாளகம் ஆகியவைகளில் ஒன்றில்லாமல் எந்த செந்தூரமும் பூரணமாக நிறைவேறாது. இது இரசவாதத்தில் இவ்விதம் பிரதானமான தென்பதை நமது இரசவாத சிந்தாமணி முதற்பாகத்சில் விவர மாகச் சொல்லியிருக்கின்றோம். அவசியமானவர்கள் அங்கு பார்த்துக் கொள்ளவும்.

இரசமானது மருத்துவ செய்முறையில் எவ்விதம் முதன்மை யாக உபயோகப்படுகிறதோ அவ்விதமே கெந்தகமும் வைத்திய துறையில் முதன்மையாக உபயோகப்படுகிறது. இரசமானது அகம்புறம், எனற இரண்டுவகை நோய்களிலும் பயன்படுவது போலவே கெந்தகமும் பயன்பட்டு வருகிறது.

இரசமானது தட்பவெப்ப நோய்களிலும், அகம்புற மென்னும் இருவகை நோய்களிலும், மற்றெல்லா நோய்களிலும் உபயோக மாகிறது போலவே இந்தக் கெந்தகமும் தட்பவெப்ப நோய் களிலும் அகம்புறமென்னும் இருவகை நோய்களிலும், மற்றெல்லா நோய்களிலும் உபயோகமாகிறது.

ஆகையாற்றான், அனுபவசாலிகளான வல்லுனர்கள் எந்த வகை நோய்களிலும் இதனதன் துணைமருந்துகளுடன் கெந்தக சம்பந்த முறைகளை உபயோகித்து வெற்றி பெற்று வருகிறார் கள். ஒரு வகையில் கெந்தகமானது இரசத்தைப் பார்க்கிலும், மேன்மை யானதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி யெனில், இரசத்தைத் தனியே பயன்படுத்தினால் வாய்பிடிக்கிற குணமிருக்கிறது. கெந்தகத்தைத் தனியாக உபயோகித்தாலோ அவ்வித தீக்குணம் செய்யாமல் இருப்பதுடன், இரசம், வீரம் பூரம், என்னும் சரக்குகளை முறை பிசகாய் உபயோகித்து வாய்பிடித்திருப்பதையும் நீக்கி, அவைகளின் வேகத்தை அடக்கி ஆரோக்கியத்தையுண்டாக்கும் சக்தியையுடையது.

இரசம், கெந்தகம் ஆகியவைகளை உபயோகிக்கும் வகை களையும், இவை சம்பந்தமான பயன்படுத்துமுறைகளையும் முறைப் பிரசாரம் தெரிந்து கொள்ளாதவர்கள் ஒருபோதும் மருத்துவராகாரெனப் பல சாத்திரங்களிலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இரசத்தையும் கெந்தகத்தையும் முறைப்படி சுத்தி செய்து முறைப்படி உபயோகிப்பார்களேயாயின், எந்தவித நோயையும் தீர்த்துக்கீர்த்திப் பிரதாபத்தையடைந்து, நற்பேரையும், புகழையும் அடைவார்களென்பது நிச்சயம்.

இரசம், கெந்தகம் ஆகியவைகளின் பெருமையைப்பற்றி நம் முன்னோர்கள் எழுதியிருப்பதை இங்கு தனியே எழுதுவத னால், அதுவே ஒரு பெரிய நூலாகி விடும். ஆனால் அனுபவ சாலிகளுக்கு அவையெல்லாம் தெரிந்தேயிருக்கும். ஆயினும், அப்பொருள்களையே இங்கு மிகவும் சுருக்கமாக எழுதியிருக் கின்றோம்.

இரசம், கெந்தகம் ஆகியவைகள் முறைப்படி பாகப்படுத்தப் பட்டு, யாரிடத்திலிருக்கின்றனவோ அவர்கள் தாம் எல்லா நோய்களையும் போக்கக்கூடு மென்பது நிச்சயம்.

கெந்தகத்தின் மூலமாவே இரசத்தைப் பாகப்படுத்தித் தேவர்களுண்டு, சுகவாழ்வினராயிருக்கிறார்கள்.

ஆறாம்பாகம்

முறைப்படி செய்யப்பட்ட கெந்தக சம்பந்த மருந்துகளை பெரும் நோய்கள் கண்டவுடன் வணக்கம் செய்து அவ்விடத்தை விட்டு ஓடிப்போம்.

முறைப்படி செய்யப்பட்ட கெந்தகபற்மானது எவ்வகை பெரும் நோய்களான குட்டம், குன்மம், பாண்டு. சயம், பெருநோய், குறைநோய் முதலிய அநேக நோய்களைத்தீர்க்கின்றன.

இன்னும் கருங்குட்டம், வெண்குட்டம், செங்குட்டம் முதலிய அநேக குட்ட வகைகளெல்லாம் கெந்தக பற்பத்தைக் கண்டால் அந்தமானுக்கோடிவிடும்.

இன்னும் பலவகை நஞ்சுகள் இதனால் திருகின்றன. பச்சை நாபி, கருநாபி, பாடாணம், அபினி முதலிய நஞ்சுகளெல்லாம் முறிந்து தீர்ந்து போகின்றன. இன்னும் பைத்தியநோய், பிரமை நோய் முதலிய அநேக நோய்களும் திருகின்றன.

முறைப்படி செய்யப்பட்ட கெந்தக முறைகளினால் ஆயுள் விருத்தி, தீபனவிருத்தி, ஞாபகசக்தி, யௌவன விருத்தி முதலியவைகளுண்டாகின்றன

கெந்தகபற்பத்தை மற்ற மருந்துகளைப் பார்க்கிலும் மிகவும் குறைந்த அளவாகவே உபயோகப்படுத்தப் படுகிறபடியால். இதன் சுவையைப்பற்றி எவ்வித துன்பமுமில்லை, ஆகையால், இதை உட்கொள்பவர்களுக்கு எவ்வித் துன்பமும் அருவருப்பு மிரா.

இரசமானது காயசுத்தி, காயசித்தி ஆகியவைகளுக்கு அவசியமானதாயிருப்பதுபோலவே கெந்தகமும் மேற்கண்டவைகளுக்கு மிக அவசியமானதாகயிருக்கிறது.

கெந்தகமானது இரசவாதம், வைத்தியம் ஆகிய இருவகையிலும் முதன்மையானதாயிருப்பது போலவே துப்பாக்கிமருந்து பீரங்கிமருந்து, வாணமருந்து முதலியவைகளிலும் விநோத விசித்திர வேடிக்கைகளிலும் தேவையான தாயிருக்கிறது.

இவ்விதம் கெந்தகத்தின் பெருமையும், மகிமையம், இரசத்தின் பெருமை, மகிமை ஆகியவைகளைப் போலவே பெரிய நூல்களில் விரிவாகக் சொல்லப்பட்டிருப்பதால் இச்சிறிய மருத்துவ நூலில் எழுதுவதரிதாகும்.

இன்னும் இதற்கனுகூலமாகவே ஆங்கிலேயே அமெரிக்க பண்டிதர்களும் கெந்தகக் கைப்புகள் Sulphur bitter என்னும்

பாகப்படுத்தின ஒருவகை தனி கெந்தகத்தால் அனேக நோய்கள் தீர்ந்து வருவதாக நிச்சயித்திருக்கின்றார்கள். ஆகையால், புத்திமான்கள் தம் தம் புத்தி கூர்மையினாலும், ஆழ்ந்த அறிவின் சிறப்பினாலும் பின்சொல்லப்படும் முறைகளை ஆய்ந்தாராய்ந்து முறைப்படி செய்து கடினமான நோய்களைத் தீர்த்துக் கீர்த்தியையும் மகிமையையும் அடைவார்கள்.

நாம் அடிக்கடி வற்புறுத்திச் சொல்வதெல்லாம் இந்த அருமையான பாகங்களைத் தெரிந்து கெட்ட நோய்களால் துன்பப்படும் சகோதரர்களை அவ்வாபத்தினின்று நீக்கி, உயிர்களிடம் அருட்தன்மை, பிறர்க்குதவுதல், நல்வினை ஆகியவைகளுக்கு ஏதுவாக்க வேண்டியதென்பதேயாம்.

## கெந்தகத்தின் வகைகள்

முன் சொல்லியிருக்கிறபடி இதில் அநேக வகைகளிருக்கின்றன. ஆனால், பிரதானமாய் நான்கு வகைகள் கடையில் விற்கப்படுகின்றன. வாண கெந்தகம், அல்லது குழாய்க் கெந்தகம். 2-நெல்லிக்காய்க் கெந்தகம், 3-பச்சைக் கெந்தகம், 4-பருப்புக் கெந்தகம் ஆகியவைகளாம்.

கடையில் விற்கிற கெந்தத்தில், மேற்கண்டபடி நாகம், அயம், பாடாணம், சுண்ணாம்பு ஆகிய தோடங்களிருக்கின்றன. ஆகையால், அவைகளைச் சுத்தி செய்து அவைகளிலுள்ள தோடங்களை நீக்காமல் உள்ளுக்குக் கொடுக்கலாகாது.

கோழித்தலைக்கெந்தகம் அல்லது, சிகப்புக் கெந்தகம் என ஒருவகையும் கடையில் விற்கப்படுகிறது. ஆனால், உண்மையில் அது சிவப்புக் கெந்தகமல்ல. அது ஒருவகை உப்பு அதனை நெருப்பிற் கொளுத்தினால் அது எரிந்து அதில் கெந்தக வாசனை வந்தால்தான் சிவப்புக்கெந்தகமென நம்பலாம். அவ்வித பரீட்சைக்கு ஒத்திராவிட்டால் அதை நம்புவதில் பயனேதுமில்லை.

மேற்கண்ட வகைகளில் நெல்லிக்காய்க் கெந்தகம், பருப்புக் கெந்தகம் ஆகிய இரண்டினங்களும் சாப்பிடும் மருந்துகளில் உபயோகப்படுகின்றன. குழாய்க் கெந்தகமானது மேற்பூச்சு மருந்துகளில் உபயோகப்படுகிறது. கரட்டுக் கெந்தகமென ஒரு வகையுமுண்டு. இது அதிகமாக மருந்துகளில் உபயோகப்படுகிறதில்லை சிவப்புக் கெந்தகமானது பெரும்பான்மையும் இரசவாத முறைகளில் உபயோகமாகிறது.

## செந்தகத்தின் குணம்

### தமிழ்

பதினெட்டுவகைக் குட்டம், மந்தநோய், வல்லைக்கட்டி, கவுசை நோய், பெருவயிறு, வாயுநோய்கள் குந்தநோய்கள், பெருநஞ்சுகள், மேகநோய்கள், வாதசுரம், வாதக்கழிச்சல், கபகிராணி, இருமல், இரைப்பிருமல், பைத்தியம் முதலிய நோய்கள்போம்.

### அமிர்த சாகரம்

வாத, பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்று வகைத் தோடங்களையும் நீக்கும் இரத்தகாசம், பெருநோய்கள் மண்ணீரல் நோய் ஆகியவைகளைக் கண்டிக்கும். சொறி, சிரங்கு, புண்கள், விரணங்கள் முதலிய தோல்நோய்களைக் கண்டிக்கும். நச்சு நுண்புழுக்களை நாசமாக்கும். மலத்தையிளக்கும். இரத்த விருத்தியை உண்டாக்கி முதுமைத் தன்மையைப் போக்கும்.

### யூனானி

வியதாபேதகாரி (அதாவது தன்னுடைய சத்தினால் ஆழ்ந்து கிடக்கும் பழமையான சத்துக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துவதாம்) நோய்த்தன்மையை மாற்றச் செய்யும்; குட்டம், மண்ணீரல் சம்பந்தமான நோய்கள், மஞ்சள்நோய் ஆகியவைகளைக் கண்டிக்கும்; சூதக இரத்தத்தை வெளிப்படுத்தும்; பிரமேக நோய்களைக் கண்டிக்கும்.

### ஆங்கிலம்

மலத்தை இளக்கும் தன்மையுடையதாகையால், எருவாய் நோயாளிகள், கருப்பவதிகள் ஆகியவர்களுக்கு மலபந்தத்தை நீக்க அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. தோல்நோய்க்கு அகத்திலும், புறத்திலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

### குறிப்பு

மேற்கண்டபடி ஆங்கிலேய அமெரிக்க டாக்டர்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற 'பிட்டர் சல்பர் (bitter Sulphur) என்னும் பாகப்படுத்தின ஒருவகைக் கெந்தகத்தால் அநேக நோய்கள் போகுமெனக் கண்டிருக்கிறது.

அப்படியே அநேகரும் உபயோகித்து நலமடைந்து வருகிறதாகத் தெரிகிறது. ஆனால், நமது மருத்துவநூல் முறைப்படி அதனைப் பாகப்படுத்தி உபயோகித்தால், எத்தனையோ ஆயிரம் பங்கதிகமான சிறப்புக் குணத்தைக் காணலாம்.

## கெந்தகச் சுத்தி (பொதுவிதி)

கெந்தகத்தைச் சுத்தி செய்வதில் கீழ்க்கண்ட விவரங்களைக் கவனத்தில் வைக்க வேண்டியது.

(அ) கெந்தகத்தில் நின்றெழும்பும் புகையானது வெளியே போய்விடாமல் உள்ளே அடங்கியிருக்கும்படிச் செய்யவேண்டியது. அப்படிச்செய்யாவிட்டால்அதன்சத்துவெளிப்பட்டு, அதன் பூரண குணமிருக்காது. ஆகையால் கெந்தகத்தை அதன் புகை அதிகம் வெளியே போகும்படியாக பக்குவப்படுத்துவது அவ்வளவு சிறப்பானதல்ல. அது உள்ளடங்கி நிற்கும்படியாக விழிப்பாகச் செய்யவேண்டும்.

சாய்க்க வேண்டியது மூலிகைச் சாறாயிருந்தால், அதனை இரண்டு மூன்று தடவை வடிகட்டி அதிலுள்ள திப்பியை நீக்கிவிட வேண்டும். அப்படி நீக்காவிட்டால், கெந்தகமானது அந்தச்சக்கையிற் சேர்ந்து அதிகம் சேதமாவதற்கு ஏதுவாகும்.

கெந்தகத்தைத் தனியாக இரும்பு பாத்திரத்தில் வைத்து உருக்கலாகாது. ஏனெனில், சீக்கிரம் கெந்தகத்தில் தீப்பற்றி எரிந்து அதிலுள்ள சத்துக் குறைந்து போக ஏதுவாகும். ஆகையால், நெய்யைச் சேர்த்துக் கெந்தகத்தை உருக்கவேண்டும். மேலும் கனத்த நெருப்பில் வைத்து உருக்காமல் இளஞ்சூட்டில் வைத்து உருக்கிக் கொள்ளவேண்டியது.

பின் சொல்லியிருக்கிறபடி பூப்புடம் போட்டு வருகையில், நாலைந்து தடவைக்குப் பின்பு கெந்தமானது உருகி துணியின் கீழிறங்காது. அச்சமயங்களில் மேற்கண்டபடி உருக்கி அந்தப் பாத்திரத்திற்சாய்த்து அந்தப் பாத்திரத்துக்குப் பொருந்தும்படியான மறுபாத்திரத்தால்: அல்லது கீழ்க்கண்டபடி தகரத் தகடடால், அல்லது, மண்தாலத்தால் மூடிப்புகை வெளியே போகாதபடி விருப்பாகச் செய்யவேண்டியது,

கெந்தகத்தைச் சுத்தி செய்வதில் அரைவாசிக்கதிகம் குறைந்துபோகும். ஆகையால், நமக்கு வேண்டிய அளவிற்கு.

இரண்டு, அல்லது, மூன்று பங்கெடை கெந்தகத்தை ஆரம்பத்தில் அதிகமாக வைத்துத் தூய்மை செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) நாம் உருக்கிச் சாய்க்கவேண்டிய சாற்றை அல்லது, பாலை மண்பாத்திரத்தில் வார்த்து அதன் வாய்க்கு மெல்லிய துணியில் வேடுகட்டி அதன்மீது கெந்தகத்தைப் பொடித்து வைத்து, அதன்மீது பாத்திரத்தின் உதடு மறையும் வரையில் சக்கரமான தகரத்துண்டை வைத்து, அல்லது மண்தாலத்தால் மூடி, வாய்மட்டம் பூமியிற் புதைத்துத்: தகரத்தின் ஓரம் அல்லது தாலத்தின் உதடு மறைம்படியாக மண்ணினால்மூடி, அதன்மீது கரிநெருப்பைப் போட்டு விசிறவேண்டியது. அல்லது வறாட்டியாற்புடமிட வேண்டும். கெந்தகம் உருகிக் கீழிறங்கி பின்பு குளிர ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும். இப்படிச் செய்வதினால், கெந்தகத்தின் புகை வெளியிற் போகாமல் உள்ளே அடங்கி நிற்கும். கெந்தகத்தில் புகை அதிகமாய் வெளியே போவதினால் அதிலுள்ள சத்தானது வெளிப்பட்டுப் பூரண குணம் செய்யாமல் கெட்டுப் போவதற்கு இடமாக இருக்கிறது. மேற்கண்டபடி செய்வதற்குப் பூப்புடம் அல்லது, தூபப்புடமெனப் பெயர்.

(இ) தேவையான சாற்றைப் பாத்திரத்தில் விட்டு, அந்தப் பாத்திரத்திற்கு மெல்லிய துணியினால் வேடுகட்டிக் கெந்தகத்தைப் பொடித்து அதன்மீது வைத்து வேறு பாத்திரத்தை அதன் மீது கவிழ்த்துச் சந்தில்லாமல் சீலைமண் செய்து அடுப்பின் மீதேற்றி மெதுவாக எரித்துவந்தால், பாத்திரத்திலுள்ள திரவத்தின் ஆவிச் சூட்டால் கெந்தகம் உருகிப் பாத்திரத்திற்குள்ளிருக்கிற திரவத்தில் விழும். குளிர ஆறின பின்பு எடுத்துக் கொள்க... இதற்கு ஆவிப்புடம், அல்லது, பிட்டுப்புடம் எனப் பெயர்.

(ஈ) சுத்திக்காக வேண்டிய சாற்றை, அல்லது. திரவத்தைப் பாத்திரத்தில் வார்த்து, உரத்த துணியில் கெந்தகத்தை முடிந்து கிழிக்கட்டி அதில் தொங்கவிட்டு, மறுபாத்திரத்தால் அதன் வாயை மூடி புகை வெளியே போகமல் சீலைமண் செய்து அடுப்பேற்றிச் சாறெல்லாம் சுண்டுகிறவரையில் மெதுவாக எரித்து, ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும். இதற்கு அவிபுடம், அல்லது, துலாந்திரப்புடமெனப் பெயர்.

கெந்தகத்தைச் சுத்தி செய்யும்போது மேற் கூறப்பெற்ற வைகளைக் கவனத்தில் வைத்துச் செய்தால் வாதம்: வைத்தியம் என்னும் இருவகைகளிலும் பயன்களைப் பெறலாம். இந்த செய்முறைகளைக் கவனியாத அநேகர் ஒரு பிரயோசனத்தையும் அடையாமல் ஏமாந்து ஏங்கி நூல்களின் மீதும் முறையின்

மீதும்குறை சொல்கின்றார்கள். ஆகையால், நமது நண்பர்கள் மேற்கண்ட செய்முறைகளில் கவனத்தைச் செலுத்தி, அதிக கவனத்துடன் செய்து வெற்றியடைவார்களென நம்புகிறோம்.

## 1. கெந்தக சுத்தி

நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 5, (175 கிராம்) இதனைத் தூள்செய்து கொள்ளவும். சோற்றுக் கற்றாழைச்சாறு படி ½, வெங்காயச்சாறு ½ படி.

**செய்முறை:—** வாயகன்ற ஒரு சிறு பானையில் சோற்றுக் கற்றாழைச்சாற்றைவிட்டு, வாய்க்கு மெல்லிய துணியால் வேடு கட்டி, துணியின்மீது கெந்தகத்தைப் பரப்பிப் பானையின் உதடுமட்டம் பூமியிற் புதைத்துப் பானையின்மேல் ஒரு மண் தாலத்தால் மூடி, வாய்மட்டம் பூமியிற்புதைத்து, அதன் உதடு மறையும்படியாக மண்ணைத் தள்ளி அதன்மீது சரக்கிற்குத் தகுந்தபடி வராட்டியை ஒடித்தடுக்கி நெருப்பிடவும். எரிந்து குளிர ஆறினபின்பு கெந்தகத்தை எடுத்துப் பொடித்து முன் போலவே புதிய சோற்றுக் கற்றாழைச்சாற்றை வார்த்துப் புடமிடவேண்டும். இவ்விதம் ஐந்து, ஏழு, பத்துமுறை செய்து வெங்காயச்சாற்றிலும் மேற்கண்ட தடவைகள் செய்துகொள்ள சுத்தியாம்.

### குறிப்பு

இவ்விதம் செய்யப்பட்ட கெந்தகத்தூய்மையானது வைத்தியம். வாதமென்னும் இருமுறைகளுக்குமாகும். ஆனால், வாத முறையிற் பொன் செய்வதற்காக அவசியமானால், ஒவ்வொன்றிலும் இருபது இருபது தடவை புடம்போட்டெடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப புடம்போடுவது சிரமமாகக் காணுமாகில் மேற்படி சாற்றில் கெந்தகத்தைக் கிழிக்கட்டித் தொங்கவிட்டு சாறெல்லாஞ் சுண்டுகிறவரையில் மெதுவாகத் தீயெரித்து ஆறவிட்டுஎடுத்துக் கொள்ளலாம். இவ்விதமே மடக்கிமடக்கிச் செய்துகொள்ள வேண்டும்.

## 2. கெந்தக சுத்தி (வேறு)

எருமைப்பாலில் மேற்கண்டபடி இருபது தடவை புடமிட்டுக் கொள்ளலாம். அல்லது, மேற்படி பாலில் கிழிக்கட்டி தொங்கவிட்டு எரித்தும் எடுத்துக்கொள்ளலாம். குறைந்தது ஐந்து தடவை செய்யவேண்டியது. ஐந்துமுதல் இருபதுவரை

யில் எத்தனை தடவைகள் செய்துகொள்கிறோமோ அத்தனைக் கத்தனை சிறப்பான குணமுண்டாகும். இது பெரும்பான்மையும் மருந்திற்கு சிறப்பானதாகும்.

### 3. கெந்தக சுத்தி (வேறு)

ஒரு இரும்பு கரண்டியில் கெந்தகத்திற்குத் தகுந்தபடி கொஞ்சம் நெய்யைவிட்டுக் காய்ச்சி அதிற் கெந்தகத்தைப் போட்டு உருக்கி கெந்தகமுருகினவுடன் பசுவின்பாலிற் சாய்க்க வேண்டும். ஆறின பின்பு முன்போல் நெய்யில் உருக்கி முன்போல பாலிற் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி முப்பது தடவைகள் செய்து கொண்டால் வைத்தியம், வாதம் ஆகிய இரண்டிற்கும் உபயோகமாகும். ஆனால், புகை வெளிப்போகாமற்படி பக்குவஞ் செய்யவேண்டும்.

### 4. கெந்தக சுத்தி (வேறு)

ஒரு பாத்திரத்தில் சுத்தி செய்யவேண்டிய கெந்தகத்திற்கு இருபது பங்கெடை பசுவின் பாலை, அல்லது எருமைப் பாலை விட்டு பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய சல்லாத் துண்டை வேடுகட்டி அதன்மீது கெந்தகத்தைப் பொடித்துப் பரப்பி அதன்மீது ஒரு தகரத்துண்டை வாயின் உதட்டின் வரையில் வைத்து அதன்மீது கரிநெருப்பை வைத்து மெதுவாய் விசிறவேண்டும். அப்படிச் செய்வதால் கெந்தகம் உருகிப் பாலில் விழுந்துவிடும். ஆறினபின்பு கெந்தகத்தை எடுத்து ஈரத்தைத் துடைத்துப் பொடித்து முன்போல் செய்துகொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்தால் கெந்தகத்திலுள்ள குற்றங்களெல்லாம் நீங்கித் தூய்மையாகி விடும். ஆனால், தடவைக்குத் தடவை புதிய பாலைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

### 5. கெந்தக சுத்தி [வேறு]

நெல்லிக்காய்க் கெந்தகம் ஒரு பங்கு, நெய் ஒரு பங்கு, இவ்விரண்டையும் சேர்த்து, இரும்பு கரண்டியில் வைத்து இளஞ்சூட்டில் காட்டி உருக்கிப் பசும்பாலில் ஊற்றவேண்டும். புகை வெளியே போகாமல் உடனே தகுந்த பாத்திரத்தால் மூடவும். ஆறினபின்பு முன்போல் சமன் நெய்யைச் சேர்த்து முன்போலுருக்கி முன்போல் புதிய பாலிற் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்தால், கெந்தகம் தூய்மையாகிவிடும்.

## 6. கெந்தக சுத்தி [வேறு]

தேவையான கெந்தகத்தை நெய்யுடன் உருக்கி வெங்காயச் சாற்றில் சாய்த்து மூடவேண்டும். ஆறினபின்பு எடுத்து முன்போலுருக்கி முன்போல் புதிய சாற்றில் சாய்க்கவேண்டும். இவ்விதம் இருபத்தொரு தடவையும், வெள்ளாட்டுப்பாலில் இருபத்தொரு தடவையும் உருக்கிச் சாய்த்துக்கொண்டால் தூய்மையாகிவிடும்.

## 7. கெந்தக சுத்தி [வேறு]

நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 1க்குப் பசுவின்பால் படி ½, வேண்டும். மேற்கண்டபடி பசுவின் பாலில் பத்துப்பூப்புடமும், வாழைத்தண்டுச் சாற்றில் மூன்று பூப்புடமும், மருதோன்றி யிலைச் சாற்றில் மூன்று பூப்புடமும் போட்டெடுத்துக் கொண் டால் கெந்தகம் குற்றமற்றுத் தூய்மையாகிவிடும்.

## 8. கெந்தக சுத்தி [வேறு]

ஒரு பலம் புதுப்புளியை இருபது பலம் (700 கிராம்) தண் ணீரில் கரைத்து ஒரு இரவு வைத்திருந்து மறுநாள் காலையில் தெளிந்த நீரை இறுத்துக் கொள்ளவேண்டும். புளித்த காடி, புளித்த பசுவின் மோர், காளான் சாறு, இவை வகை 1 க்குப் பலம், 6. (210 கிராம்) இவற்றைக் கலந்து வாய் குவிந்த ஒரு பானையில் விட்டு, மேலே மெல்லிய துணியை வேடுகட்டி அதன்மேல் ஒரு பலம், (35 கிராம்) கெந்தகத்தைத் தூள்செய்து வைத்து வேறு பாத்திரத்தால் மூடி சீலைமண் செய்து அடுப் பேற்றித் தீபாக்கினியாக இரண்டு சாமம் எரித்துக் கீழேயிறக்கி ஆறின பின்பு எடுத்துப் பார்க்கக் கெந்தி உருகிப் பாண்டத்திற் குள் இறங்கி இருக்கும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்து கொண்டால் கெந்தகம் பரிசுத்தமாகிவிடும். மேற்கண்ட கணக்கின் விகிதப்படி எத்தனை பலம் வேண்டுமோ அத்தனை பலம் சித்தப்படுத்திக் கொள்ளலாம்.

மேற்படி கெந்தகத்தூய்மைகள் இன்னும் அநேகமுள. இன்னும் நமது **இரசவாத சிந்தாமணி** 2ஆம் பாகத்திலும் பல முறைகள் சொல்லப்பட்டிருககின்றன. மேற்சொல்லப்பட்ட பாகங்கள் இவ்விடம் வேண்டிய முறைகளுக்குப் போதுமான வைகளானபடியால் இம்மட்டும் நிறுத்திக் கெந்தக சம்பந்த மான மற்ற முறைகளை எழுதுவோம்.

## கெந்தகத்தைக்கட்ட பொதுவிதி

கெந்தகத்தில் தேயுவின் குணம் அதிகரித்திருப்பதால் சூடு பட்டவுடன் உருகி மேற்கண்டபடி சூடதிகமானால் ஓடிப் போய்விடும். ஆகையினால், இரசத்தை நெருப்பிற்கோடாமல் கட்டிக்கொள்வதற்கு எவ்வளவு நுணுக்கமான அறிவு வேண்டுமோ அவ்வளவு நுணுக்க அறிவு இதற்கும் வேண்டும். இது நெருப்பிற் கோடாமல் கட்டுவதற்குக் கொஞ்சம் அனுபவமும் கைப்பழக்கமும், புத்தியும் வேண்டும். அவசரப்பட்டு முன் பின் யோசியாமல் பக்குவப் பிசகாகச் செய்து விட்டு நூலின்மீதும், மற்றவர்கள் மீதும் முறைபிசகெனக் குறைசொல்வதில் எவ்வித பிரயோசனமுமில்லை. ஆகையால், கெந்தகத்தைக் கட்டுவதற்கு விருப்பமானவர்கள் கீழ்க்காணும் விதிகளைக் கவனிப்பதுமன்றிச் சமயோசிதம் போல தம் தம் புத்தியையும் உபயோகப்படுத்தவேண்டியது அவசியம்.

1 கெந்தகத்தைத் திராவகத்தால், அல்லது செயநீரால் கட்ட வேண்டியதிருந்தால், கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி திராவத்தைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமம் வரையிலரைத்து அக்கினிப் பீங்கான் பாத்திரத்தை அடுப்பின் மீது வைத்துச் சூடுகண்டவுடன் மேற்படி கெந்தகத்தைப் போட்டுப் புரட்டி ஈர முலர்ந்துபோனபின்பு எடுத்துப் பொடித்து முன் திரவத்தையே விட்டு முன்போலவே அரைத்து முன்போலவே வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பல தடவைகள் செய்துவந்தால், கெந்தகமானது நெருப்பிற்கோடாமல் கட்டுப்பட்டுப்போகும். ஏழெட்டுத் தடவை வறுத்தபின்பு இதனைக் கொஞ்சமெடுத்து நெருப்பிற் போட்டுப் பார்த்தால் உருகாமலும் புகையாமலும் இருந்தால், அதுவே பக்குவமாம்; அப்படியில்லா விட்டால் முன்போல் பாகப்படுத்தவேண்டும்

2 கெந்தகத்தைக் கட்டுவதற்குத் தைலமாக இருந்தால் முன்போலவே இரண்டு சாமமரைத்து முன்போலவே பக்குவப் படுத்திக் கொள்ளவேண்டும்.

3 கெந்தகத்தைக் கட்டுவதற்கு மூலிகைச்சாறு அல்லது, இதைப்போன்றதாகவிருந்தால், அப்போது அதனை பிரதானமாக தூமப்புடத்தினால், அல்லது, பூப்புடத்தினால் கட்டிக் கொள்வது உசிதம். சில சமயங்களில் தூமப்புடத்தில் ஏழெட்டுத் தடவை மடக்கி மடக்கிச் செய்த பின்பு அது உருகி துணியில் இறங்காமற்போமாகையால், அந்தச் சமயங்களில் அதனைக் கரண்டியில் உருக்கி முன் சித்தப்படுத்தவேண்டிய

பாத்திரத்திலேயே சாய்த்து வரலாம். ஆனால், புகை வெளிப் போகாமல் பந்தப்படுத்திச் சித்தப்படுத்துவது உத்தமம்.

இவ்விதம் மடக்கி மடக்கிச் செய்துகொள்ளவேண்டும். கெந்தகத்தைக் கட்டும்வகையில் பூப்புடமிட்டுக்கொள்வதுதான் பிரதானமானதும் முக்கியமானதும்ாம். மற்ற வகைளிலும் கெந்தகத்தின் புகை வெளியே போகாமல் செய்தால் அப்போது அதன் குணம் சிறந்ததாக இருக்கும்.

4. கெந்தகத்தை ஆவிப்புடம் அல்லது புட்டுப்புடமாக வைத்தும் கட்டிக்கொள்ளலாம்.

5 கெந்தகத்தை அவிப்புடமாக வைத்தும் சுத்தப்படுத்திக் கொள்ளலாம்!

6 கெந்தகத்தின்மீது வேறு பற்பத்தை அல்லது வேறு சரக்குகளை குழைத்துப் பூசிப் புடமிட்டுக் கட்டிக்கொள்வதுமுண்டு. அந்தச் சமயங்களில் ஆரம்பத்தில் சிறுபுடமாக ஆரம்பத்துப் படிப்படியாக தீயை அதிகரிப்பித்துக் கட்டிக் கொள்ள வேண்டும்.

இன்னும் கெந்தகத்தைக் கட்டிக்கொள்ளும் வகைகள் அநேகமுள; அவற்றுள் முக்கியமானவைகள் மாத்திரம் இங்கு எழுதப்பட்டிருக்கிக்றன. இன்னும் அனுபோக வைத்தியம் ஐந்தாம் பாகத்தில். சொல்லப்பட்டிருக்கிற கட்டுவகை செய நீரினாலும் கந்தகத்தைக் கட்டிக் கொள்ளலாம். அனுபவ சாலிகளுக்கு இம்முறைகள் போதுமானவைகள்

## 753.கெந்தகக் கட்டு

தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் தேவையான அளவு, மருளூமத்தைச் சமூலச் சாறு, மணித்தக்காளிச் சாறு. இவை வகை ஒன்றுக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— மருளூமத்தைச் சாற்றை ஒரு பாத்திரத்தில் விட்டு அதன் வாய்க்கு வேடுகட்டி அதன்மீது கெந்தகத்தைத் தூள் செய்து வைத்து மண்தாலத்தால் அல்லது தகரத்தகட்டினால் மூடி முன் கண்டிருக்கிறபடி பூப்புடமிடவும். சாறானது கெந்தகத்திற்கு ஐந்து பங்கெடையிருக்க வேண்டும். குளிர ஆறின பின்பு கெந்தகத்தையெடுத்துப் பொடித்து முன் சாற்றில் மூன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி

நான்கு தடவை செய்த பின்பு. மணித்தக்காளிச் சாற்றிலும் மேற்கண்டபடி நான்கு புடமிட்டெடுக்க, கெந்தகம் கட்டிப் போயிருக்கும். கொஞ்சமெடுத்து நெருப்பிற் போட்டுப் பார்த்தால் புகையாமலிருந்தால் பதம். அப்படியில்லாவிட்டால் முன்கண்ட இரண்டு சாற்றையும் சமனளவாகச் சேர்த்து முன் போல கெந்தகத்தைப் புடம்போட்டுச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனைக் கரிநெருப்பில்வைத்து உருக்கிக் கண்விட்டுருகினாலும் கட்டுப்பட்டதென நிதானித்துக் கொள்ளவேண்டும் இப்படிக் கட்டுப்பட்ட கெந்தகத்தைப் பொடித்து வைத்துக்கொண்டு தனியே தகுந்த துணைமருந்துகளில் முன் சொல்லியுள்ள நோயகளுக்கெல்லாம் உபயோகிக்கலாம்.

## 754 கெந்தகக் கட்டு (வேறு)

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் ஒருபங்கு சுத்தமான எள்ளெண்ணெய் எட்டுபங்கு.

செய்முறை:— எண்ணெயை ஒரு இரும்புக் கரண்டியில் விட்டு மேற்படி கெந்தகத்தை அதில் பொடித்துப்போட்டு நெருப்பில் காட்டினால் கெந்தகமுருகிச் சிவந்துபோகும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று நான்கு தடவைகள் செய்யின் கெந்தகம் கட்டுப் பட்டுப்போம். பிறகு எடுத்து நெருப்பில் போட்டுப் பார்க்க வேண்டும். அது கட்டுப்பட்டிருந்தால் உத்தமம். அப்படிக் கட்டுப்படாதிருந்தால், முன்போல் நல்லெண்ணெயைச் சேர்த்துக் காய்ச்சி உருக்கிக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிச் செய்தால் கெந்தகமானது கட்டுப்பட்டுப்போகும். இதனையும் பொடித்துத் தனியாகத் தகுந்த துணைமருந்துகளில் அநேக நோய்களுக்கு உபயோகிக்கலாம்.

## 755 கெந்தகக் கட்டு (வேறு)

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் தேவையான அளவு இதனை இரும்புக் கரண்டியில் கொஞ்சம் நெய்யுடன் உருக்கி ஆளி விதைத் தைலத்தில் சாய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி நூறு தடவைகள் செய்தால் கெந்தகம் கட்டுப் பட்டுப்போகும். ஆனால் புகை வெளியே போகாமல் பக்குவப் படுத்த வேண்டும். இதனையும் தனியாகத் தகுந்த துணைமருந்துகளில் பல நோய்களிலும் உபயோகிக்கலாம்.

## 756 கெந்தகக் கட்டிற்குச் செந்தூரம்

கருவங்கத்தூள் 35 கிராம் கம்பி வெடியுப்பு 70கிராம் எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** மேற்கண்ட இரண்டையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துப் பில்லை தட்டியுலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடிச் சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழுபங் கெடை வராட்டியிற் புடமிட்டு ஆறின பின்பு எடுக்கச் சிவந்து போயிருக்கும். அதற்குச் சமனெடை வெடியுப்பைச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றை விட்டு முன்போலரைத்து முன்போல பில்லை செய்து முன்போல புடமிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி முருக்கம்பூப் போன்ற வன்னமாகிறவரையில் புடத்தைப் போடவேண்டும். பிறகு புட்டியில் பத்திரப்படுத் தவும்.

## 757 கெந்தகக் கட்டு (வேறு)

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 1பலம் (35கிராம்) 756-இல்சொல்லியிருக்கிற கருவங்க செந்தூரம் விராகனெடை 1 (3½ கிராம்) இந்தச் செந்தூரத்தை உமிழ்நீரிற் குழைத்து மேற் படி கெந்தகக்கட்டிக்குச் சமமாக எங்கும் பூசி உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச்சீலைமண் செய்து உலர்த்தி இலகு புட மாகப் புடமிட வேண்டும். எடுத்துச் சோதித்துப் பார்த்தால் கெந்தகம் கட்டுப் பட்டிருக்கும். அப்படியில்லாவிட்டால் முன் போல் இன்னொரு புடமிடவும். இரண்டு அல்லது மூன்று புடத் திற்குள் கெந்தகம் கட்டுப்பட்டுப் போகும்.

## 758 கெந்தகக் கட்டு(வேறு)

மருதம்பட்டைச் சாம்பல் படி-1, அது கொள்ளும்படியான ஒரு மண் கலயத்தில் அரைக்கலயம் சாம்பலைப் போட்டு மட்ட மாகச் செய்து அதன் மத்தியில் ஐந்து பலம் (175கிராம்) கெந்தகத்தை ஒரு கட்டியின்மீதொரு கட்டியாக அடுக்கி வட்ட வடிவாகச் சுற்றிலும் மேற்படி சாம்பலைப் போட்டுப் பரப்பி அந்த வாய்க்குச் சரியாகப் புது ஓட்டை மல்லாத்தி வைத்து மூடிச் சிறிய அடுப்பின் மீதேற்றிப் பனைஓலை அல்லது தென்னை ஓலையால் எரித்து மேலோட்டின் மீது கைவிரலை வைத்துப் பார்க்கக் கடுஞ்சூடு கண்டவுடன் தீயை நிறுத்திவிட வும். குளிர ஆறின பின்பு சாம்பலைப் பிரித்துப் பார்க்க எல் லாம் உருகி ஒரே கட்டியாயிருக்கும் அதனையெடுத்துக் குப்பை மேனிச் சாற்றிற் போட்டுக் கழுவியெடுத்து உலர்த்தி வைத்துக்

கொள்ளவும். கெந்தகம் கட்டுப்பட்டிருக்கும். இவ்விதம் செய்து கட்டிக்கொள்வது அதிக சுலபமாகையாலும் குணத்திற் குறைவில்லாதபடியாலும் இந்தப் பாகமும் இங்கெழுதப்பட்டிருக்கிறது.

### 759 கெந்தக கட்டு (வேறு)

மருதம்பட்டைச் சாம்பல் ஒரு பங்கு, பனிநீர் அல்லது தண்ணீர் இரண்டு பங்கு, இவ்விரண்டையும் பாத்திரத்தில் இட்டுக் கலக்கி மூன்றுநாள் வைக்கவேண்டும். நாலாம் நாள் தெளிவை இறுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். இதற்கு மருதசெயநீர் என்றுபெயர். (இங்கு பனிநீரானால் மிகவும் நன்று.)

தேவையான நெல்லிக்காய்க் கெந்தகத்தை இரும்புச் சட்டியிலிட்டு மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் சுறுக்கிட வேண்டும். பெரும்பான்மையும் நான்கு சாமத்திற்குள் கெந்தகம் உருகாமல் கட்டிப்போகும். கொஞ்சம் கெந்தகத்தை எடுத்து நெருப்பின்மீது வைத்தால் உருகாமலிருந்தால்தான் பதம். அப்படி உருகினால் முன் செய நீரால் அந்தப் பதமாகிற வரையில் சுறுக்கிட, கெந்தகம் நெருப்பில் உருகாமல் கட்டிப்போகும்.

இது மிகவும் சுலபமான தாகையால் யாவரும் எளிதாய்ச் செய்து கொள்ளலாம். ஆயினும் இதற்கும் புத்தி சாதுரியமும் ஊக்கமும் விடாமுயற்சியும் இன்றியமையாதன. மேற்கண்ட நுட்ப அறிவில்லாதார் இந்த மருந்து மாத்திரமல்ல எந்த மருந்தையும் செய்து முடிக்கமாட்டார்கள். மருந்தியல் நூல் மீதும், முறைகளின் மீதும், தங்களுக்கு உரிய தன்மையில் குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள். அத்தகையவர்களுக்கு யார் தான் என்ன செய்யக் கூடும். அவர்களைத் திருத்துவதும் அவர்கள் திருந்துவதும் மிகவும் கடினமேயாம்,

### குறிப்பு

மருதம்பட்டைச் சாம்பல் உபயோகப்படுவது போலவே பூவரசம்பட்டைச் சாம்பல், அரசம்பட்டைச் சாம்பல் ஆகிய வைகளும் உபயோகப்படுகின்றன. ஆகையால் அவைகளிலும் மேற்கண்ட இருவகைகளாகவும் சித்தப்படுத்திக் கொள்ளலாம்.

### 760 கெந்தக பற்பம்

758-ல் அல்லது, 759-ல் சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்தின கெந்தகம் தேவையான அளவு, குப்பைமேனிச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :-** மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துப் பில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்ப மாகியிருக்கும். இதனைப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத் தவும்.

அளவு:- ½ குன்றிமணியெடை.

**அனுபானம்:-** தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாம்.

**பயன் :—** மேகரணங்கள், மேகசப்பந்தமான சிரங்குகள், மேகத்தடிப்பு, மேகப்பிடிப்பு, குன்மநோய், சுரம்முதலியவைகள் தீரும்.

**பத்தியம்:—** பசுவின்பால், நெய், ஆகியவைகளை அதிக மாகச் சேர்க்கவும். புளியைத்தள்ளவும்.

## 761. கெந்தக பற்பம் (வேறு)

முன் சொல்லியிருக்கிற முறைப்படி சுத்தி செய்து மேற்கண்ட கட்டுவகைகளில் ஒருவகைப்படி கட்டின கெந்தகம் பலம்-2½ (87½ கிராம்). கொம்புப் பாகலிலைச்சாறு, இலுப் பைப்பூச்சாறு, கையாந்தகரைச்சாறு, அறுகம்வேர்ச்சாறு, வெண்குன்றிமணி சமூலச்சாறு, நிலப்பனைக்கிழங்குச்சாறு, புல்லாஞ்சிச்சாறு, இவை வகை 1-க்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—1** மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொம்புப்பாகலிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துப் பில்லைச்செய்து வெய்யி லிலுலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து ஈரமில்லாமல் உலர்த்தி 20 பலம் (100 கிராம்) வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்பு எடுத்துக்கொள்ளவும்.

2. மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து இலுப்பைப்பூச்சாற்றை முன்போல் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துப் பில்லைச் செய்துலர்த்தி முன் போல் அகலில்வைத்துச் சீலைமண் செய்துலர்த்தி, 50 பலம் (1750 கிராம்) வறட்டியிற் புடமிட்டு எடுத்துக்கொள்ள வேண்டும்.

3. மேற்கண்டதைப் பொடித்துக் கையாந்தகரைச்சாற் றால் முன்போல், நான்கு சாமமரைத்து முன்போற் சித்கப்

ப்படுத்தி, 40 பலம் (1400கிராம்) வறட்டியிற் புடமிட்டெடுத்துக் கொள்ளவேண்டும்.

4. மேற்கண்டவாறே அறுகின் வேர்ச்சாற்றிலும் அரைத்துச் சித்தப்படுத்தி, 50 பலம் (1750கிராம்) வறட்டியில் புட மிட் டு எடுத்துக்கொள்ளவும்.

5. வெண்குன்றிமணி சமூலச்சாற்றில் முன்போல் சித்தப் படுத்தி 60 பலம் (2100 கிராம்) வறட்டியில் புடமிட வேண்டும்.

6. நிலப்பனைக்கிழங்குச் சாற்றிலும் முன்போல சித்தப் படுத்தி 70 பலம் (2540 கிராம்) வறட்டியிற் புடமிடவேண்டும்.

7. முன்போல் புல்லாஞ்சிச்சாற்றில் சித்தப்படுத்தி 80 பலம் (2800 கிராம்) வறட்டியிற் புடமிடவும்.

8. ஆலம்விழுது, அல்லது ஆலங்கொழுந்துச்சாற்றில் மேற் கண்டபடியே சித்தப்படுத்தி, 90 பலம் (3150 கிராம்) வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்பு எடுத்தால் வெண்ணிறமான திவ்வியபற்பமாகியிருக்கும். சில சமயங்களில் சிவந்தும் போகும். அப்படியானால் மிகமிக மேன்மையானதாம். எப்படியாயினும் எல்லாவித தேர்வுக்கும் ஒத்திருக்கும். இதனைப் பத்திரப்படுத்தவும்.

இது மிகவும் அருமையானதும், உன்னதமானதுமான பற்பமாகையால், இதனை அதிக விழிப்போடு பாதுகாக்கவேண்டியது. இதனால் அநேக பெரும் நோய்கள் தீர்ந்து போவது மன்றி இது கற்பத்திற்குச் சமமானது. இதனால் காயசித்தி யோகசித்தி முதலியவைகளுண்டாகின்றன.

அளவு:- 24. அரிசியெடை.

அநுபானமும், பயன்படுத்தலும்:- துளசிச்சமூலம், கண்டங்கத்திரி சமூலம் ஆகியஇரண்டையும் தனித்தனி வெய்யிலிலுலர்த்தி தனித்தனி குழித்தைலமிறக்கி இவ்விரண்டிலும் சமஅளவாக எடுத்துக் கலந்துஅதில் வேளை 1 க்குக்காற்பலம் $\frac{1}{4}$ (8$\frac{3}{4}$ கிராம்) வீதம் எடுத்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி அநுபானித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் உட்கொண்டுவர, வாத சம்பந்த சாத்திய கருங்குட்டம் தீரும்.

கருவேலின் வேர்ப்பட்டை, பெருங்கிளாவேர் ஆகிய இரண்டையும்தனித்தனி யுலர்த்தித் தனித்தனி குழித்லைமிறக்கி

இரண்டையும் சமனளவாகக் கலந்து வேளை 1க்கு காற்பலம் வீதம் எடுத்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி அனுபானித்துக் காலை மாலை 2 வேளை உட்கொண்டு வர வேண்டும். மேலும் மேற்படி தைலம் ஒரு பங்கும், மேற்படி பற்பம் அரைக்காற் பங்குமாகக் கலந்து மேலுக்கும் பூசி ஊற வைத்துச் சீயக்காய் தேய்த்து வெந்நீரில் தலைமுழுகி வர வேண்டும்' இவ்விதம் அகம் புறம் என்னும் இருவகைச் சிகிச்சையும் செய்து வந்தால் வாத சம்பந்த அசாத்திய கருங்குட்டமுந் தீரும்.

விளா, வில்வவேர்ப்பட்டை ஆகிய இரண்டையும் முன் போலவே உலர்த்தித் தனித்தனி குழித்தைலமிறக்கி இரண்டையும் சமனளவாகக் கலந்து அதில் வேளை 1-க்குக் காற்பலம் வீதமெடுத்து அதில் மேற்படி பற்பத்தைப் அளவுப்படி கலந்து உட்கொன்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் உட் கொண்டு வருவதுடன்' மேற்படி தைலம் ஒரு பங்கு, மேற்படி பற்பம் அரைக்காற் பங்குமாகக் கலந்து மேலுக்கும் பூசி, ஊறவைத்துச் சிறுபயற்றை அரைத்துக் தேய்த்து வெந்நீரில் தலைமுழுகி வர வேண்டும். இவ்விதம் அகம் புறம் என்னும் இருவகை மருத்துவம் செய்துவர' பித்த சம்பந்தமான சாத்திய வெண்குட்டம் தீரும்.

உவளமரத்தின் வேர்ப்பட்டை பனைமரத்தின் வேர். ஆகிய இரண்டையும் தனித்தனி யுலர்த்தித் தனித்தனிக் குழித்தைலமிறக்கி இரண்டையும் சமனளவாகக் கலந்து அதில் வேளை 1-க்குக் காற்பலம் வீதமெடுத்து அதில் மேற்படி பற்பத்தைப் அளவுப்படி சேர்த்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் செய்துவருவதுடன்' மேற்படி தைலம் ஒருபங்கும் மேற்படி பற்பம் அரைக்கால் பங்குமாகக் கலந்து மேலுக்குப் பூசி ஊற வைத்துப் புளியிலையை வேக வைத்த தண்ணீரில் குளித்து வர வேண்டும். இவ்விதம் இருவகைச் சிகிச்சையும் செய்துவந்தால், பித்த சப்பந்த அசாத்திய வெண்குட்டம் தீரும்,

தாழைவிழுது, ஈயக்கொடி சமூலம், ஆகிய இரண்டையும் தனித்தனி முன்போலவே யுலர்த்தித்தனித்தனிகுழித்தைலமிறக்கி இரண்டையும் சமனளவாகக் கலந்து அதில் வேளை1-க்குக் காற்பலம் வீதம் எடுத்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் செய்துவருவதுடன், மேற்சடி தைலம் ஒரு பங்கு, மேற்படி பற்பம் அரைக்காற் பங்குமாகக் கலந்து மேலுக்கும் பூசி ஊறவைத்து எள்ளிலையை அரைத்துத்தேய்த்து

வெந்நீரில் குளித்துவரவேண்டும் இவ்விதம் இருவகைச் சிகிச்சையும் செய்துவந்தால் சேத்துமச் சம்பந்த சாத்திய செங்குட்டம் தீரும்.

இலுப்பை வேர்ப்பட்டை மாமர வேர்ப்பட்டை, ஆகிய இரண்டையும் தனித்தனி யுலர்த்தித்தனித்தனி முன்போற் குழித் தைலமிறக்கிச் சமனளவாகக் கலந்து வேளை 1-க்குக் காற்பலம் வீதம் எடுத்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி அநு பானித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் செய்து வருவதுடன், மேற்படி தைலம் 1 பங்கு' மேற்படி பற்பம் அரைக்காற் பங்குமாகக் கலந்து மேலுக்கும் பூசி ஊறவைத்து முன்னி இலையை அரைத்துத் தேய்த்து வெந்நீரில் தலைமுழுகச் செய்து வரவும். இவ்விதம் இருவகை மருத்துவமும் செய்து வந்தால் சேத்தும சம்பந்த அசாத்திய செங்குட்டம் நிவாரணமாகும்.

## குறிப்பு

மேற்கண்ட குட்ட நோய்களுக்கு மேற்படி பற்பத்தை மேற் கண்ட வகையாக நோயின் பலத்திற்குத் தகுத்தபடி பத்து நாள்: இருபது நாள், முப்பது நாள், நாற்பது நாள் வரையில் இச்சா பத்தியத்துடன் உபயோகிக்கவேண்டும். அதிக வேகம் செய்தால் ஒருமுறை உபயோகித்து, இடையில் இரண்டொரு வாரம் விட்டு, மறுமுறை உபயோகிக்கவேண்டும். இது வேகமான மருந்தாகையால் பசுவின் பால், பசுவின்னெய், இறைச்சி முதலிவைகளை அதிகமாக உபயோகித்தும் வரவேண்டும்.

காற்பலம் இலவங்கத்தை அரை ஆழாக்கு நீரில் போட்டு நான்கிலொரு பாகஞ்சுண்டவைத்து இறக்கி வடிகட்டி, அந்தக் குடி நீரில் சமனளவு இஞ்சிச்சாற்றையும் கலந்து, அதிற் காற்பல மெடுத்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொள்ள வேண்டும். மிகுந்திருப்பதைச் சிரசிலும் தேய்த்துக் கையை அனலிற் காய்ச்சித் தலையில் வைத்துச் சூடுண்டாக்க வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் ஒன்பது நாள் செய்த பிறகு, சீக்கிராணிலையை அரைத்துத் தேய்த்து வெந்நீரில், தலை முழுகச்செய்யவும். இவ்விதம் இருவகை மருத்துவமும் செய்து வந்தால் வாதப்பிரமை ரோகம் தீரும்.

துளசிச்சாறு, சீரகக் குடிநீர், பனங்கள், இம்முன்றையும் சமனளவாகக் கலந்து அதிற் காற்பலமெடுத்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டு வரவேண்டும்.

முன் கலவையைத் தலையிலும் உடலிலும் பூசியும்வரவே ண்டும். இந்த இருவகை மருத்துவமும் பதினெட்டுநாள் செய்து. மருந்தை நிறுத்திப் பத்தோன்பதாம் நாள் பயற்றம் பருப்பை யரைத்துப் பூசி குளிக்கச் செய்யவும் பச்சைப் பயற்றம் பருப் பைப் பதார்த்தங்கள் செய்துகொள்ளவேண்டும். இவ்விதம் செய்து வந்தால் பித்தபிரமை நோய்கள் தீரும்.

பேரரத்தைக்குடிநீர், அரிசிதிப்பிலிக்குடிநீர், காய்ச்சின பட்டைச்சாராயம் ஆகியமூன்றையும் சமனளவாகச்சேர்த்து அதிற் காற்பலமெடுத்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ளவும். அந்தககலவையையே சர்வாங்கத் திலும் பூசி ஊறவைத்து, இலுப்பைப் பிண்ணாக்கை அரைத் துத் தேய்த்துத் தலைமுழுகச்செய்ய வேண்டும். இவ்விதம் இரு வகை மருத்துவங்களையும் 27-நாட்கள் செய்துவந்தால்சேத்தும் சம்பந்த பைத்திய நோய்கள் தீரும்

**இதற்கு பத்தியம் :** பால் சர்க்கரை, நெய், சேர்க்கவும். பெண்போகம், மிளகாய் ஆகியவைகளை நீக்க வேண்டியது. இன்னும் நோய்க்குத் தகுந்தது போல கடும்பத்தியமாகவும் வைத்துக் கொளளலாம்

பனங்கள் வராகனெடை-1½ (5¼ கிராம்) தேன் வராக னெடை-1½ (5¼ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர, வாயுப் பிடிப்பு நோய் தீரும்.

காய்ச்சின ஆட்டுப்பால் வராகனெடை 5 (17½ கிராம்) தேன் வராகனெடை 2 (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்டுவர பாண்டு நோய் தீரும்.

இஞ்சிச்சாறு வராகனெடை 2 (7 கிராம்), தேன் வராக னெடை 2 (7 கிராம்) இரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, மேற்சுவாச நோய் தீரும்.

மாவிலங்கப் பட்டைச்சாறு வராகனெடை 2 (7 கிராம்) தேன் வராகனெடை, ¼ (0,75 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி துணைமருந்துடன் உண்ண, பதின்மூன்று வகை சன்னிகளும் தீரும்

பசு மஞ்சள்சாறு வராகனெடை 2 (7 கிராம்) தேன்வராக னெடை 2 (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, பலவகை சுரங்கள் தீரும்.

பசுவின்மோர் வராகனெடை 5, (17½ கிராம்) தேன் வராகனெடை 5, (17½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள மகோதரம் தீரும்.

வேப்பம்வேர்ப்பட்டைக் குழித்தைலம் வராகனெடை, 1, (3½ கிராம்) தேன் வராகனெடை 2, (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொண்டுவர பெருநோய் தீரும்.

கடுகிலைச்சாறு அல்லது கடுகுச் குடிநீர் வராகனெடை 1, (3½ கிராம்) தேன் வராகனெடை 2, (7 கிராம்) இரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள மாரடைப்பு நோய் தீரும்.

தித்திப்பு மாதுளம்பூச்சாறு வராகனெடை 3, (10½ கிராம்) தேன் வராகனெடை 3, (10½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண காக நோய் தீரும்.

பசுவின்நெய் வராகனெடை 1½, (5¼ கிராம்) தேன் வராகனெடை 1½, (5¼ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள சேத்தும சம்பந்த நோய் தீரும்.

செங்கழுநீர்க்கிழங்குச்சாறு வராகனெடை 2, (7 கிராம்) தேன் வராகனெடை 2, (7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள தலையிடிப்பு நோய் தீரும்.

பசுவின் தயிர் வராகனெடை 3, (10½ கிராம்) தேன் வராகனெடை 1, (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள கக்கல் நோய் தீரும்.

பசுவின் வெண்ணெய் வராகனெடை 3, (10½ கிராம்) தேன் வராகனெடை 3, (10½ கிராம்) இவ்வி ண்டையும் சேர்த்துமேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொண்டுவர திமிர்வாத நோய் தீரும்.

பன்னீர் வராகனெடை 3, (10½ கிராம்) தேன் வராகனெடை 3, (10½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள இளைப்பு நோய் தீரும்.

**பத்தியம்:—** மேற்கண்ட நோய்கள் வலுவாக இருந்தால் கடும் பத்தியமாகவும், இலகுவாயிருந்தால் இலகுபத்தியமாகவும் சமயோசிதம்போல் ஏற்படுத்தவேண்டியது மருத்துவர்களின் கடமையாகும்.

## 762. கெந்தக பற்பம் (வேறு)

சுத்தி செய்து கட்டின கெந்தகம் தேவையான அளவு, கரு ஊமத்தஞ்சாறு செல்லத்தக்க அளவு, கருஊமத்தனிலை செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** மேற்படி கெந்தகத்தை மேற்படி சாற்றில் மூன்று நாள் ஊறப்போட வேண்டும். பிறகு எல்லாவற்றையும் எடுத்து மேற்படி இலையை அரைத்த விழுதுக்குள் வைக்க வேண்டும். கெந்தகத்தின் மீது இரண்டங்குல கனம் கவசமிருக்க வேண்டும். பிறகு அதன்மேல் இரண்டு சீலைமண் செய்து உலர வைக்காமல் கவசத்தின்ஏழு பங்கெடை வராட்டியில்புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுக்கப் பற்பமாகியிருக்கும். அதனை யெடுத்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு.-** ½ முதல் 1 குன்றிமணி எடை.

அனுபானம்:- தேன், நெய் முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:-** மேகச்சொறி, மேகரணம், இருமல் நோய், பெருநோய், முறைச் சுரம் முதலியவை தீரும்.

**பத்தியம்:-** சமயோசிதம் போலவும் நோயக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்தவேண்டும்.

## 763. கெந்தக பற்பம் (வேறு)

கட்டின கெந்தகம் பலம் 1 ½, (52½ கிராம்) கறியுப்பு படி கால்.

**செய்முறை:—**மேற்படி உப்புடன் ஒரு வராகனெடை கெந்தகத்தையும் சேர்த்து மைபோலரைத்து வெய்யிலில் உலர்த்தி பின்பு இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தை ஒரு கலயத்திற் போட்டு அழுத்திக் கெந்தகத்தைஅதன்மேல் வைத்து மறுபாதி உப்பை அதன்மீது போட்டு வாய்க்குச்சில்லிட்டுச் சீலைசெய்து கவசத்தின் நாலுபங்கெடை வராட்டியிற் புடமிட்டுக்குளிர ஆறின பின்பு எடுக்கப் பற்பமாகியிருக்கும்.

**அளவு:**— ½ முதல் 1 குன்றிமணி எடை.

**அனுபானம்** :— தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாம்.

**தீரும் நோய்கள்**:— குன்மநோய், செரியாமைநோய், வாயு நோய், புண்கள், சொறி, சிரங்கு ஆகியவைகள் தீரும்.

**பத்தியம்**:— இச்சாபத்தியம்.

## 764. கெந்தக பாகபற்பம்

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 1, (35 கிராம்) கறியுப்பு பலம் 2 (70 கிராம்)

**செய்முறை**:— இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நல்ல தண்ணீர் வார்த்து ஒரு சாமநேரமரைத்து ஒரு சட்டியிற் போட்டு நாலுபடி தண்ணீரை அதில் விட்டுக் கலக்கி நான்கு சாமநேரம்வைத்திருந்துதெளிவையிறுத்துநீக்கிவிடவேண்டியது. மறுநாள் இரண்டு பலம்உப்பை அதனுடன் சேர்த்து முன்போல் தண்ணீர் வார்த்தரைத்து முன்போல் நாலுபடி தண்ணீர் விட்டுக் கரைத்து நான்கு சாமம் தெளிய வைத்துத் தெளிவை யிறுத்து விடவேண்டும் இவ்விதமே மூன்றாந்தடவையும் உப்பைச் சேர்த்தரைத்துத் தண்ணீர் வார்த்துத்தெளியவைத்துத் தெளிவையிறுத்து நீக்கிவிடவேண்டும் பிறகு வெய்யிலிலுலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:—4 முதல் 5 குன்றிமணி எடை.

**அனுபானமும் தீரும்நோயும்**:- பசுவின் வெண்ணெய் பலம் அரை, இதனுடன் மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ளவேண்டும் இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் கால்மண்டலம், அரைமண்டலம் உடல்நிலைக் கேற்றவாறு உபயோகித்தால் பலவகை மேகநோய்கள் தீரும்.

வெந்தயத்தைப் பசுவின்பாலில் ஊறவைத்து மேற்படி பாலால் வெண்ணெய்போலரைத்துப் பசுவின் நெய் விட்டு சர்க்கரை அளவு போல் கூட்டி இளகமாகச் செய்துகொள்ளவும் இந்த இளகம் வேளையொன்றுக்குக் காற்பலம்வீதம் எடுத்து அதனுடன் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட் கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் கால்மண்டலம், அல்லது அரை மண்டலம் சமயோசிதம்போல உட்கொண்டுவர, எல்லாவகைப்படர் தாமரை நோய்களும் தீரும்.

பசுவின் வெண்ணெய் அல்லது பசுவின்நெய் இவற்றில் சேர்த்துக் கொடுக்க மேகப்புண்கள், சொறிகள், சிரங்குகள் முதலியவைகள் தீரும்.

**பத்தியம்:**— புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

## 765. கெந்தக பற்பம்[வேறு]

நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 1. (35கிராம்) இதனைப் பழச் சாற்றில் 60-நாழிகை (24 மணி) ஊறவைத்து எடுத்துக் கொள்க.

மருதம்பட்டைச் சாம்பல் ஒன்றரை ஆழாக்கு, இதில் அரை பாசியை, ஒரு வாய்சிறுத்த கலயத்திற்போட்டுக் கெந்தகத்தை ஒவ்வொரு கட்டியாக பரவலாக வைத்து அதன்மீது மற்றப் பாதிச் சாம்பலையும் போட்டு அழுத்தி கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்தி முழக்குழி வெட்டி நூறு பலம் (3500 கிராம்) வராட்டியில் புடமிட்டு ஆறினபின்பு கலயத்திலுள்ளதை எல்லாமெடுத்துப் பொடித்துக்கொள்ளவும்

**அளவு:**- 2 முதல் 3 குன்றிமணி எடை.

**அனுமானம்:**- தேன், நெய், வெண்ணெய் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள்:**- எண்பது வகை வாத நோய்கள், மேக நோய்கள், சொறி சிரங்கு ஆகியவைகள் தீரும்.

**பத்தியம்:**- இச்சாபத்தியம். ஏழுநாள் உபயோகித்தால் போதுமானது. நோய் பலமாயிருந்தால் உடல்தன்மைக்கேற்ற வாறு அதிகநாள் உபயோகிக்கவும்,

## 766. கெந்தக பாக பற்பம்

நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 8, (280கிராம்) அதனை முன் சொல்லியிருக்கிறபடி பாலில் சுத்தி செய்து கொள்ள வும். முக்கா வேளை வேர்த்தூள் பலம் 10, (350கிராம்) இதனை ஒரு துணியில் பரப்பி அதனடுவில் கெந்தகத்தை வைத்துச் சுருட்டிக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். சோற்றுக்கற்றாழைச் சாறு படி 4, கருவேலம்பட்டை பலம் 4, (140 கிராம்) இதனை இடித்துத் தூள் செய்து இரண்டையும் ஒரு பானையிற்போட்டு மேற்படி கெந்தகத் தூளை மேற்படி பானையில் கிழிக்கட்டித் தொங்க விட்டுப் பானை வாயை மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றி வேப்பம் விறகால் மெது வாக எரிக்க வேண்டும். சாறெல்லாம் சுண்டின பின்பு கெந்தகத்தை எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

**குறிப்பு:**- பழச்சாறு என்று மருத்துவத்தில் வருமிடங்களிலெல் லாம் எலுமிச்சம் பழச்சாற்றைச் சேர்க்க வேண்டியது முறை.

**அளவு:-** 2 முதல் 3 குன்றிமணி எடை.

**அனுமானம்:-** தேன், நெய், வெண்ணெய் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** மேகநோய், வாதநோய், புண்கள், புரைகள், படர்தாமரை முதலிய நோய்கள் தீரும்.

**பத்தியம் :-** புகை, புளி, புணர்ச்சி நீக்கவும்.

## 767. கெந்தக பற்பம் [வேறு]

மருதச்சாம்பலில் அல்லது மருதச் செயநீரில் கட்டின கெந்தகம் பலம் 1, (35 கிராம்) வெள்ளைக்காளான் செல்லத்தக்க அளவ.

**செய்முறை:-** மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி காளானைச் சிறுகச்சிறுகப் போட்டு 4 சாமம் அரைத்து வில்லைசெய்துலர்த்தி அகலில் வைத்து மேல கல் மூடிச் சீலைச்செய்து உலர்த்திக் கவசத்துக்கு நாலுபங் கெடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க பற்பமாகியிருக்கும். இந்தப் பற்பம் சில சமயம் நெருப்பின் விகற்பத்தால் கறுப்பாயிருக்கும். ஆயினும் குணம் செய்வதில் குறைவில்லை.

**அளவு:-** 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

**அனுமானம்:-** தேன், நெய், வெண்ணெய் ஆகியவைகளாம்.

**தீரும் நோய்கள்:-** வாயுநோய், சொறி, சிரங்கு, இரணம், சுரநோய் முதலியவைகள் தீரும்.

## 768. கெந்தக பற்பம் [வேறு]

மருதச்சாம்பலில், அல்லது, மருதச் செயநீரில் பாகப்படுத்தின கெந்தகம் தேவையான அளவு. இதனைக் கல்வத்திலிட்டு *வயல் வேளைச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேல்கல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்திற்கு நாலுபங் கெடை வராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

* வயல்வேளை-தைவேளை, கோடைக்காலத்தில் அறுவடைக்குப்பின் வயல்களில் அதிகமாக உண்டாகும்.

**அளவு:-** ½ முதல் 1 குன்றிமணி எடை.

**அனுமானம்:** நெய், வெண்ணெய், தேன் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** மேகம், மேகச்சுரம், வாயுகள், புண், புரை ஆகியவைகள் தீரும்.

**பத்தியம் :-** புகை, புளி, புணர்ச்சி நீக்கவும்.

## 769. கெந்தி பூர பற்பம்

கெந்தகத்தை மடக்கி மடக்கி ஏழு தடவை பசுவின் பாலில் ஆவிப்புடம் அல்லது தூமப் புடம் போட்டுத் தூய்மைசெய்து கொள்ளவும். அல்லது மருதச்சாம்பலில் அல்லது மருதச்செய நீரால் கட்டிக்கொள்ளவும். பிறகு. இதைக் கல்வத்தி விட்டு இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வெய்யிலில் வைத்துலர்த்தி மறுபடியும் கல்வத்தி விட்டுப் பொடித்து முன்போல் இஞ்சிச்சாற்றை விட்டு இரண்டு சாமநேரமரைத்து முன்போல் உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமே மூன்றாந்தடவையும் இஞ்சிச்சாற்றிற் பக்குவப் படுத்திக் கொள்ளவேண்டும்.

இரசகர்ப்பூரம் தேவையான அளவு இதனை முலைப் பாலில் மூன்றுநாள் ஊறவைத்தெடுத்து அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து மேற்படி முலைப்பாலில் நான்கு சாமநேரம் சுருக்குக் கொடுத்துச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும்

மேற்படி கெந்தகம் 1 பங்கு, இரசகர்ப்பூரம் காற்பங்கு, இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு வெண்ணிறமான வெங்காயச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு, ஒருசாம நேர மரைத்து எடுத்துப் பில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி மறு படியும் பொடித்துப் பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** 1 முதல் 1½ குன்றிமணி எடை.

**அனுமானம்:-** கருஞ்சீரக இளகம், எள் இளகம், பறங்கிச் சக்கை இளகம், வல்லாதி இளகம், வெண்ணெய், நெய், தேன் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள் :** இதனைக் காலை, மாலை இரண்டு வேளை யும் ஏழுநாள் உபயோகித்தால், யோனிப்புற்று, லிங்கப்புற்று, அங்குள்ள புண்கள், ரணங்கள், பவுத்திரம், மேகப்புள்ளிகள், மேகப்படை, வெண்குட்டம், கண்டமாலை, மேகநோய்கள், கிரந்திநோய்கள் ஆகியவை தீரும்.

**பத்தியம்:** புகை, புளி. புணர்ச்சி நீக்குவதுடன், நோயின் பலத்திற்குத் தகுந்தபடி பத்தியம் கொள்வதே சிறப்புடையதாகும்.

## 770. கெந்தக பற்பம் [வேறு]

மருதம்பட்டைச் சாம்பலில், அல்லது மருதம்பட்டைச் செயநீரில் பாகப்படுத்தின கெந்தகம் தேவையான அளவு, இதனைக் கல்வத்திலிட்டுத் *தும்மல்பூண்டுச் சாற்றைச் சிறுகச் சிறுக இரண்டு சாமநேரமரைத்துப் பில்லைதட்டி உலர்த்தி மேலகல் வார்த்து மூடிச் சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் நாலு பங்கெடை வராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாகி இருக்கும்.

**அளவு:-** 1 முதல் 2 குன்றிமணி எடை.

**அனுமானம்** - தேன், நெய், வெண்ணெய், இளகவகைகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** மேகநோய்கள், சுரம், வாயு, சருமநோய் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** புகை, புளி, புணர்ச்சி நீக்குக.

## 771. கெந்தக பற்பம் (வேறு)

மருதம்பட்டைச் சாம்பலில், அல்லது மருதச் செயநீரில் பாகப்படுத்தின கெந்தகம் தேவையான அளவு. இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிறுசின்னியிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்துப் பில்லை தட்டியுலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து புடம்போட பற்பமாம்.

**அளவு:-** 1 முதல் 1½ குன்றிமணி எடை

**அனுபானம்:-** தேன் நெய், வெண்ணெய் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** மேகம், மேகச்சுரம், பிரமேகம், வாயு நோய்கள் ஆகியவை தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

## 772. கெந்தக பற்பம் [வேறு]

மருதம்பட்டைச் சாம்பலில், அல்லது மருதச்செயநீரில் கட்டின கெந்தகம் பலம் 1 (35கிராம்) மேற்படிமருதம்பட்டைச் சாம்பல் பலம் 5 (175 கிராம்).

*தும்மல்பூண்டு-பாலைக்கொடி

**செய்முறை:-** மேற்படி சாம்பலை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சிறு கலயத்தில் வைத்து, அதனடுவில் முன் கெந்தகத்தை வைத்து இதன்மீது மறுபாகச் சாம்பலைப் போட்டு அழுத்திக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்தி நூறு பலம், (350 கிராம்) வராட்டியிற் புடமிட்டு ஆறின பின்பு எடுக்கச் சுத்தமான வெண்ணிற பற்பமா யிருக்கும்.

**அளவு:-** 1 முதல் ½ குன்றிமணி எடை

**அனுமானம்:-** வெண்ணெய், நெய், தேன், பறங்கிப் பட்டை இளகம்; வல்லாதி இளகம், சித்திரமூல வேர்ப்பட்டை இளகம், ஆகியவைகளாம்.

**தீரும நோய்கள் :-** குன்மநோய், குட்டங்கள், சூலைநோய், மூலநோய். கிருமிநோய், சுவாசகாசம், வாயுநோய் சுரம் ஆகியவைகள் தீரும் வீரிய விருத்தியுண்டாக்கும்.

**பதியம்:-** நோய் பலத்திற்குத் தகுந்தபடி இச்சாபத்திய மாகவும், பத்தியமில்லாமலும் உபயோகிக்கவும்.

## 773. கெந்தக பற்பம் (வேறு)

மேற்கண்டவாறு கட்டின கெந்தகம் பலம் 1, (35 கிராம்) கோங்கிலவம் பூச்சாறுசெல்லத்தக்க அளவு.

**செய் முறை:-** மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்து பில்லை தட்டி யுலர்த்தி மேற்படி பூவை அரைத்து அதன்மீது ஒரு அங்குல கனம் கவசம் செய்து உலர்த்தி, அதன் மீது ஐந்து சீலைமண் செய்து காய வைத்துக் காற்றில்லாத இடத்தில் குழிதோண்டி மூன்று படி உமியை மருந்துக்குக் கீழும் மேலுமாகக் கொட்டி நெருப்பிட்டுப் புடம் ஆறினபின்பு எடுக்கப் பற்பமாகியிருக்கும்.

**அளவு:-** 1 முதல் 2 குன்றிமணி எடை

அனுபானம், தீரும் நோய்கள், பத்தியம் ஆகியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

## 774. கெந்தக பற்பம்[வேறு]

மேற்கண்டபடி கட்டின கெந்தகம் பலம் 1, (35 கிராம்) முத்தெருக்கஞ் செவிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய் முறை:-** மேற்படி கெந்தகத்தில் மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாம நேரமரைத்துப் பில்லை செய்து

உலர்த்தி மேற்படி இலையை அரைத்து, அதன்மீது ஒரு அங்குலம் கவசம் செய்துலர்த்தி, ஒரு ஓட்டிவிட்டு மேலோடு மூடி, ஏழுசீலைமண் செய்துலர்த்தி, ஐம்பது பலம் (1750கிராம்) வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க மங்கல் நிறமான பற்பமாயிருக்கும்.

**அளவு:-** 1 முதல் 1½ குன்றிமணி எடை,

அனுபானம்:— தீரும்நோய் ஆகியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

## 775. கெந்தக பற்பம்[வேறு]

மேற்கண்டபடி பாகப் படுத்தின கெந்தகம் 1 பலம் (35கிராம்), இதனை எருமைச்சாணியில் ஐந்து நாள் ஊற வைத்து எடுத்து அதன்மீது அத்திப்பாலை அடித்து வர வேண்டும். எங்கும் சமமாக கால் அங்குல கனம் பாலை அடித்து உலர்த்தி ஊமலாத்திப் பட்டையையும் அதன் இலையையும் அரைத்து ஒரு அங்குல கனம் அதன் மீது கவசித்து ஏழு சீலை மண் செய்து உலர்த்தி முப்பது பலம் வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

**அளவு:-** 1முதல் 2குன்றிமனி எடை

அனுபானம், உபயோகம், பத்தியம் முதலியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

## 776. கெந்தகபற்பம்(வேறு)

முன்பாகப்படி சித்தப்படுத்தின கெந்தகம் 1 பலம் (35 கிராம்), கரும்பல்லிப் பூண்டுச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து மேற்படி சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேர மரைத்து வில்லை செய்துலர்த்தி மேற்படி இலையை அரைத்து மூன்றுவிரல் கனம் அதன்மீது கவசித்து உலர்த்தி அதன்மீது ஏழு சீலைமண் செய்துலர்த்தி நூற்றைம்பது பலம் வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்,

**அளவு:** 1 முதல் 2 குன்றிமணி எடை.

அனுபானம், உபயோகம் ஆகியவை மேற்கண்டவைகளேயாம்.

## 777. கெந்தக பற்பம் (வேறு)

தூய்மை செய்த பூநீறு படி ½ இதில் இரண்டுபடி பனித் தண்ணீர் அல்லது கடையில் விற்கிற பனிக்கட்டித் தண்ணீரை

* செய்து முடித்து வைத்திருக்கின்ற.

விட்டுக்கரைத்து மூன்றுநாள் வைக்கவேண்டும். பிரதிதினமும் நாலைந்து தடவை கலக்கியும் வரவேண்டும். நாலாம்நாள் தெளிவையிறுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும். இந்தத் தண்ணீர் ½ படி, செம்முள்ளிச்சாறு படி ½, வெள்ளறுகுச்சாறு படி ½.

நெல்லிக்காய்க் கெந்தகம் 5 பலம் (175 கிராம்), இதனைக் கிழிக் கட்டிமேற்படிமூன்றுவகை நீரிலும் தனித்தனியேதொங்க விட்டு எரித்தெடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் மேற்சட்டி மூடி புகை வெளியிற் போகாமல் பாதுகாக்க வேண்டும். தீயை அதிகமாக எரிக்காமல் சிறு தீயாக எரித்து மேற்படி திரவங்கள் சுண்டும்படி செய்யவேண்டும்.

பிறகு கெந்தகத்தை ஒரு சட்டியில் வைத்துக் கொம்புக் கள்ளிப் பாலைச் சிறுகச்சிறுக வார்த்து ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் சுருக்குக் கொடுத்தால் கட்டிப்போகும்.

பிறகு அதை எடுத்து, அதன்மீது மகிழம்பூவை அரைத்து ஐந்தங்குல கனம் கவசம் செய்து, அதன்மீது ஏழு சீலைமண் செய்து கொஞ்சம் ஈரமுலர்ந்த பின்பு நூறுபலம்வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க பற்பமாயிருக்கும்.

**அளவு**:- 1 முதல் 1½ குன்றிமணி எடை.

**அநுபானம்**:- வெண்ணெய், நெய், தேன், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்**:- குட்டநோய், கிரந்தி, புண், புரை முதலியவைகள் தீரும்.

**பத்தியம்**:- நோய்பலத்திற்குத் தகுந்தபடி ஏற்படுத்த வேண்டியது.

## 778. கெந்தக பற்பம் [வேறு]

மேற்கண்டபடி கட்டின கெந்தகம் 1 பலம் (35 கிராம்), கரிசலாங்காணிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:- மேற்படி கெந்தகத்தில் மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி மேற்படி கரிசலாங்காணியை அரைத்து மேற்படி வில்லையின் மேல் நாலங்குலக் கனம் கவசம் செய்து அதன் மேல் ஐந்து சீலைமண் செய்து சாம்பலிற் புரட்டி ஐம்பது பலம் வராட்டியிற்புடமிட்டு, ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

**அளவு:-** 1 குன்றிமணி எடை.

**அநுபானம், உபயோகமும்:-** பசுவெண்ணெய் 1 விராகனெடை (3½ கிராம்), தேன் 1 விராகனெடை (3½ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கொடுக்க சேத்தும சம்பந்த நோய்கள் தீரும்.

முள்ளங்கிச்சாறு 2 விராகனெடை (7 கிராம்), தேன் 2 விராகனெடை (7 கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள உடல்பலம், உடல் திடம் ஆகியவைகளுண்டாகும்.

வெள்ளைமிளகுச் சூரணம் 1 விராகனெடை (3½ கிராம்), தேன் 1 விராகனெடை [3½ கிராம்], இரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள, வெட்டை, வாயுநோய், வெள்ளைநோய் ஆகியவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு 1 விராகனெடை (3½ கிராம்), தேன் 1 விராகனெடை (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள, பித்தமயக்கம், பித்த நோய் ஆகியவைகள் தீரும்.

**பத்தியம்:-** நோய்க்குத் தகுந்தபடியும், உடல் இயல்பிற்குத் தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 779. கெந்தகச் சுண்ணம்

மேற்கண்ட வகைகளில் ஒரு வகையாகக் கட்டின கெந்தகம் தேவையான அளவு. ஆற்றங்கரையிலிருக்கிற சேம்புச் சமூலச் சாறு செல்லத்தக்க அளவு, வெள்ளெருக்கம் பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்படி கெந்தகத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து கெந்தகமானது இரண்டங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாக மேற்படி சேம்புச் சமூலச்சாற்றை விட்டுக் கடும் வெய்யிலில் வைத்து, விட்ட சாறு சுண்டிப்போன பின்பு கெந்தகமானது வெண்ணிறமாய் வெளுத்து பற்பமாயிருந்தால் பதம்; அப்படியில்லாவிட்டால் முன்போலவே முன்சாற்றை விட்டுக் கடும் வெய்யிலில் வைத்துவர வேண்டும். இந்தத் தடவை வெளுத்து பற்பமாகிவிடும். அப்படியாகாவிட்டால் மூன்றாந் தடவையும் செய்துகொள்ள அவசியம் பற்பமாகிவிடும். பாத்திரத்திலுள்ளதை எல்லாம் சுரண்டி அப்படியே கல்வத்திலிட்டு வெள்ளெருக்கம்பாலைச் சிறுக்ச்சிறுக வார்த்து

நான்குசாம நேரமரைத்து வில்லை தட்டியுலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்துலர்த்தி, கவசத்தின் ஐந்து பங்கெடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும். இதனை மஞ்சளில் கொடுக்க சிவக்கும். அப்படிச் சிவக்காவிட்டால் முன்போல் எருக்கம்பாலை விட்டு அரைத்து முன்போற் புடமிடச் சுண்ணமாகிவிடும்.
அளவு:— ¼ முதல் ½ குன்றிமணி எடை.

அனுபானம்:— வெண்ணெய், நெய், தேன், பறங்கிப் பட்டைச்சூரணம் முதலியவைகளாம்.

**திரும் நோய்கள்:**— குட்டநோய்கள். மேகநோய்கள், தந்தி மேக நோய்கள், திமிர் நோய்கள், வாயுக்கள், சூலைப் பிடிப்புகள் முதலியநோய்கள் தீரும்.

**பத்தியம்:**— இச்சாபத்தியம், நோய் பலமாயிருந்தால் அதற்குத் தகுந்தபடியும் பத்திய மேற்படுத்தவும்.

## 780. கெந்தகச் சுண்ணம் (வேறு)

சற்றேறக்குறைய ஒருசாண் நீளமும், நாலங்குலம் சுற்றளவுமுள்ள வெள்ளரிக்காய்கள் மூன்று, கட்டின நெல்லிக்காய்க் கெந்தகம் 40 பலம் (1400 கிராம்)இதனைப் பெருங் கட்டிகளாக உடைத்துக் கொள்ள வேண்டும். சுத்தமானதேங்காயெண்ணெய் பலம் 80 (2800 கிராம்)

**செய்முறை:**— மேற்படி வெள்ளரிக்காய்களில் கெந்தகக் கட்டிகளை ஒன்றோடொன்று படாமல் ஒவ்வொன்றிலும் பல இடங்களிற் கீறிச்செலுத்தி கெந்தகம் வெளியில் தெரியாமல் மறையும்படியாக உள்ளே அழுத்தி விடவேண்டும், பிறகு திரிநூலினால் ஒவ்வொரு வெள்ளரிக்காயையும் கொஞ்சமும் சந்தில்லாமல் முழுவதும் சுற்றிச் சித்தப் படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு தேங்காயெண்ணெயை ஒரு மண் பாத்திரத்தில் விட்டு அடுப்பிலேற்றிஅதில் மேற்படி வெள்ளரிக் காய்களை வைத்து, சிறு தீயாக எரித்து வரவேண்டும். காயின் மேலிருக்கிற நூல் முழுவதும் நன்றாகக் கறுத்து விட்டால் சட்டியைக் கீழேயிறக்கி வைத்துக் குளிர ஆறின பின்பு நூலைப் பிரித்து விட்டு காய்க்குள்ளிருக்கிற கெந்தியை எடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்,

மேற்படி கெந்தகம் 1 வராகனெடை (3 ½கிராம்) இதனைக் கல்வத்திலிட்டு அண்ட வெண்கருவை விட்டு ஒரு சாமநேர

மரைத்து தேற்றான் விதை அளவு மாத்திரைகள் செய்து காயவைத்து ஒரு முட்டை ஓட்டுக்குள் வைத்து மறு முட்டை ஓட்டால் மூடி மூன்று சீலைமண்செய்து உலர்த்திப் பதினைந்து பலம் எருவில் புடமிட்டு ஆறினபின்பு எடுக்கச் சுண்ண மாயிருக்கும்.

இவ்விதமே அவசியமானபோது பாக்கி கெந்தகத்தையும் சுண்ணஞ் செய்து கொள்ளலாம். அல்லது,மேற்கண்ட விதமாக நாலைந்து, அல்லது, அவசியமான முட்டைகளைச் சித்தப் படுத்தி தனித்தனி புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு முட்டையில் ஒரு வராகனெடைக்கதிகம் வைக்கலாகாது.

அளவு:— ½ முதல் 1 குன்றிமணி எடை.

அனுபானமும், தீரும்நோயும்;- பறங்கிப்பட்டைச் சூரணம் 1 வராகனெடை தேன் 1 வராகனெடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள, குட்ட நோய், திமிர்நோய் ஆகியவை தீரும்.

வெண்ணிறமான வெங்காயச்சாறு 2 வராகனெடை, பசு வெண்ணெய் 2 வராகனெடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள தந்திமேகம், பிரமேகம், நீர்ச்சுருக்கு, நீர்த்தாரை ரணம் ஆகியவை தீரும்.

சுக்குச் சூரணம் ¼ வராகனெடை, கொடிவேலி வேர்ப் பட்டைச் சூரணம் ½ வராகனெடை, பசுவெண்ணெய் வராக னெடை ஒன்றரை, இவற்றைச் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொள்ள வாயுநோய்கள், வயிற்றுவலி, அசீரண நோய் முதலியவைகள் தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

## குறிப்பு

முன் வேகவைத்த வெள்ளரிக்காய்களைச் சுமார் ஒரு பல முள்ள துண்டுகளாகத் துண்டித்து வெய்யிலிற் காய வைத்து எடுத்துக் கொள்ளவும். இதில் வேளை ஒன்றுக்கு அரைப்பலம் வீதம் உட்கொண்டு வந்தால் கொருக்குப் புண்கள், உடல் தடிப்பு, மேகத் தடிப்பு, சொறி, சிரங்கு ஆகியவைகள் தீரும்.

முன் காய்ச்சின தேங்காயெண்ணெய் ஒருபங்கும், அதற்குச் சமனெடை வேறு தேங்காயெண்ணெயையும் கலந்து, விரணங் களுக்கு மேற்பூச்சாகப் பூசி வந்தால் அவை ஆறிப்போகும். இதற்கும் மேற்கண்ட பத்தியமேயாம்

## 781. கெந்தகச் செந்தூரம்

கட்டின நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் (70கிராம்.) அய அரப்பொடி வராகனெடை இரண்டரை, கற்சுண்ணாம்புத் தெளிவு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**- ஒருபடி கற்சுண்ணாம்பில் இரண்டுபடி தண்ணீர், (கடையில் விற்கிற பனிக்கட்டி நீரை) விட்டு இரண்டுநாள் ஊற வைக்கவேண்டும்; நாள்தோறும் நாலைந்து தடவை கலக்கி விட்டு வரவேண்டும். மூன்றாம்நாள் தெளிவையிறுத்து புட்டியில் வைத்துக் கொள்ளவும். இதுவே * கற்சுண்ணாம்புத் தெளிநீராம். மேற்படி இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு இந்தத் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து வில்லையாகச் செய்து காய வைத்து ஒரு சட்டியின் மத்தியில் வைத்து மேற் சட்டி மூடிச் சீலைமண் செய்துலர்த்தி அடுப்பின் மீது வைத்து, நுணாக் கட்டை விறகால் நான்குசாமம் தீபாக்கினியாக எரித்து ஆறினபின்பு எடுக்கச்செந்தூரமாகியிருக்கும்.

அளவு :- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

**அனுபானம்:**- வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:**- மேகநோய்கள், மேக சம்பந்தமான பாண்டு, பித்தப்பாண்டு, சன்னி முதலிய அநேக நோய்கள் தீரும்.

**பத்தியம்:**- புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

## 782. கெந்தகச் செந்தூரம் (வேறு)

கட்டின கெந்தகம் 1 பலம் (35கிராம்), கட்டின லிங்கம் பலம் அரை. எருக்கம்பூச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**- மேற்படி இரண்டு சரக்கையும்கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து மூன்று சாம நேரமரைத்து பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வில்லையை வைத்து அதற்குக் கீழும்மேலும் முன் பிழிந்த பூச்சக்கையை வைத்து மேலோடு மூடி ஒரு சீலைமண் செய்து ஒரு சிறு குழி தோண்டி அதில் நாலங்குலம் மணலிட்டு பத்துபலம் வராட்டியில் புடமிடவும். இவ்விதமே முன்போலரைத்து ஐம்பது பலம்

● கற்சுண்ணாம்புக்குப் பதிலாக கிளிஞ்சல் சுண்ணாம்பையும் சேர்த்துக் கொள்ளலாம். பனித்தண்ணீருக்குப் பதிலாக புளித்த காடியை அல்லது தண்ணீரைச் சேர்த்துக் கொள்ளலாம்.

## 781. கெந்தகச் செந்தூரம்

கட்டின நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் (70கிராம்,) அய அரப்பொடி வராகனெடை இரண்டரை, கற்சுண்ணாம்புத் தெளிவு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** ஒருபடி கற்சுண்ணாம்பில் இரண்டுபடி தண்ணீர், (கடையில் விற்கிற பனிக்கட்டி நீரை) விட்டு இரண்டுநாள் ஊற வைக்கவேண்டும்; நாள்தோறும் நாலைந்து தடவை கலக்கி விட்டு வரவேண்டும். மூன்றாம்நாள் தெளிவையிறுத்து புட்டியில் வைத்துக் கொள்ளவும். இதுவே * கற்சுண்ணாம்புத் தெளிநீராம். மேற்படி இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு இந்தத் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து வில்லையாகச் செய்து காய வைத்து ஒரு சட்டியின் மத்தியில் வைத்து மேற் சட்டி மூடிச் சீலைமண் செய்துலர்த்தி அடுப்பின் மீது வைத்து, நுணாக் கட்டை விறகால் நான்குசாமம் தீபாக்கினியாக எரித்து ஆறினபின்பு எடுக்கச்செந்தூரமாகியிருக்கும்.

அளவு :- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

**அனுபானம்:-** வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:-** மேகநோய்கள், மேக சம்பந்தமான பாண்டு, பித்தப்பாண்டு, சன்னி முதலிய அநேக நோய்கள் தீரும்.

**பத்தியம்:-** புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

## 782. கெந்தகச் செந்தூரம் (வேறு)

கட்டின கெந்தகம் 1 பலம் (35கிராம்), கட்டின லிங்கம் பலம் அரை. எருக்கம்பூச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்படி இரண்டு சரக்கையும்கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து மூன்று சாம நேரமரைத்து பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வில்லையை வைத்து அதற்குக் கீழும்மேலும் முன் பிழிந்த பூச்சக்கையை வைத்து மேலோடு மூடி ஒரு சீலைமண் செய்து ஒரு சிறு குழி தோண்டி அதில் நாலங்குலம் மணலிட்டு பத்துபலம் வராட்டியில் புடமிடவும். இவ்விதமே முன்போலரைத்து ஐம்பது பலம்

● கற்சுண்ணாம்புக்குப் பதிலாக கிளிஞ்சல் சுண்ணாம்பையும் சேர்த்துக் கொள்ளலாம். பனித்தண்ணீருக்குப் பதிலாக புளித்த காடியை அல்லது தண்ணீரைச் சேர்த்துக் கொள்ளலாம்.

வராட்டியில் மணல் மறைவுப் புடமிடவும். மூன்றாந்தடவை யும் முன்னரைத்த படியே அரைத்துக் கவசித்து அறுபது பலம் வராட்டியில் வெளிப்புடமிடச் செந்தூரமாகும்.

**அளவு:-** ½ முதல் 1 குன்றிமணி எடை.

**அனுபானம்:-** வெண்ணெய், நெய். தேன் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:-** மூலவாயு, உஷ்ணவாயு, சூதகவாயு, கிராணி பலவித மலப்போக்கு, இரைச்சல், பொருமல், அக்கினி மந்தம், மேகரணங்கள், சூலைக்கட்டு முடக்கு, பிரமேகங்கள் முதலிய எல்லா வகை மேக நோய்களும் தீரும்.

**பத்தியம்:-** சமயோசிதம் போலவும், நோய்க்கு தகுந்தபடி யும் பத்திய மேற்படுத்தவும்.

## 787. கெந்தகச் செந்தூரம் (வேறு)

கட்டின கெந்தகம் 2 பலம் (70கிராம்), பொன்னாங்கண்ணிச் சாறு செல்லத்தக்க அளவு. சிவகரந்தைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு பொன்னாங்காணிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி மூன்று பலமுள்ள ஐந்து வராட்டியிற் புடமிடவும், அதனையெடுத்து முன்போல் முன் சாற்றாலரைத்து முன்போல் புடமிடவும். ஆனால், ஒரு வராட்டியை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பதினைந்து புடமிட வேண்டும். ஆனால், ஒவ்வொரு புடத்திற்கும் ஒவ்வொரு வராட்டியை அதிகப் படுத்திக் கொண்டே வரவேண்டும். பிறகு சிவகரந்தைச் சாற் றால் முன் கண்டபடியே பதினைந்து புடமிடவேண்டும். ஆனால், ஒவ்வொரு வராட்டியை உயர்த்திக் கொண்டு வர வேண்டும். செம்பரத்தம்பூப் போன்ற செந்தூரமாகும்.

**அளவு:-** ¼ முதல் ½ குன்றிமணி எடை.

**அனுபானம்:-** தேன், நெய், பசுவெண்ணெய் முதலியவை களாம்.

**தீரும்நோய்கள்:-** குட்டநோய்கள், காசம், சயம் முதலிய கப சம்பந்த நோய்கள், நுரைஈரல் விரணம், குடல் விரணம், அல் குல் புற்று, கருப்பைவிரணம் முதலிய உள் அவயங்களிலுள்ள

விரணங்கள் ஆகிய அநேக நோய்கள் தீரும். இது ஒரு கற்பத்திற்குச் சமமானது ஆனால் இதனைச் செய்வதும் சிரமந்தான்.

**பத்தியம்**:- சமயோசிதம் போலவும், நோயிற்குத் தகுந்தபடியும் உபயோகிக்க வேண்டியது.

## 784. கெந்தகச் செந்தூரம் [வேறு]

[அ] கட்டின கெந்தகம் 1 பலம் (35 கிராம்), சவுக்காரம் சீனாக்காரம், சூடன், வெடியுப்பு இவை நான்கும் வகை ஒன்றுக்குச் சமனெடை; சாஸ்திர பாண்டியிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

[ஆ] படலரிதாரம், இரசம், வீரம் வகை 1-க்கு விராகனெடை $1\frac{1}{4}$ ($4\frac{1}{2}$ கிராம்), செருப்படிச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:— (அ) வின் பின் நான்கு சரக்குகளையும் சாத்திர பாண்டியிலைச் சாற்றைவிட்டு வெண்ணெய் போல வரைத்துக் கெந்தகக் கட்டியின் மீது ஓலைக்கனம் பூசி பத்துபலம் சுண்ணாம்பு நீற்றுக்குள் வைத்துக் கவசத்தின் ஐந்துபங்கெடை வராட்டியிற் புடமிடவேண்டும். அந்தக்கட்டி வெளுத்துப் போம். அப்படி வெளுக்காவிட்டால் முன்போல் முன் மருந்துகளை அரைத்து முன்போற் கவசித்து வெள்ளையாகிறவரையிற் புடமிடவேண்டும்,

இந்த வெள்ளையுடன் (ஆ) விலுள்ள சரக்குகளைச் சேர்த்துச் செருப்படிச் சாற்றைச் சிறுகவிட்டு இரண்டுசாம நேரமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடிச் சீலைமண்செய்து கவசத்தின் ஐந்துபங்கெடை வராட்டியிற் புடமிடச் செந்தூரமாகும்.

**அளவு**:- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

**அனுபானம்**:- தேன், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்**:- முன் முறையின் கீழ்க்கண்ட நோய்கள் தீரும்.

**பத்தியம்**:- முன் சொன்னதேயாம்.

## 785. கெந்தக மெழுகு

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 4 பலம் [140கிராம்] முக்காவேளை வேர்ப்பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:- கெந்தகத்தை ஒரு சட்டியில் வைத்து உருக்கி மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு வரவேண்டும்.

இவ்விதம் ஐந்துசாமம் சுருக்குக் கொடுத்த பின்பு எடுத்து கொஞ்சம் சிற்றாமணக்கெண்ணெயையும் தேனையும் சேர்த்து விட்டு அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:—** 1 முதல் 2 குன்றிமணி எடை

**அனுபானம்:—** பனைவெல்லம், தேன், வெண்ணெய் முதலிய வைகளாம்.

**தீரும் நோய்கள்:—** மேகச்சொறி, சிரங்கு, புண். புரை, கிரந்தி, சூலை முதலியவைகள் தீரும்.

**பத்தியம்:—** சமயோசிதம்போல இலகு பத்தியமாகவும் கடின பத்தியமாகவும் ஏற்படுத்தவும்.

## 786. கெந்தக மெழுகு (வேறு)

சுத்தி செய்த கெந்தகம் 2 பலம் (70 கிராம்) சுத்தி செய்த வீரம், தூய்மை செய்த இரசகற்பூரம், சுத்தி செய்த இரசம் (இந்த மூன்று சரக்குகளையும் சேர்த்துப் பொடி செய்து அஞ்சனம் போற் செய்து வைத்துக் கொள்ளவும்) கொம்புத் தேன் 2 பலம் (70 கிராம்)

**செய்முறை:—** மேற்படி கெந்தகத்தை அகன்ற ஒரு இரும்புச் சட்டியில் வைத்துத் தீயை தீபம்போலெரித்து இரும்புத் துடுப்பி னால் கிண்டித் தைலம்போல் வருகிற சமயத்தில் அதில் காற் பலம் கொம்புத் தேனைச் சிறுகச் சிறுக விட்டுக் கிண்டியான பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற தூளையும் தேனையும் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கைவிடாமல் கிண்டிக் கொடுத்துச் சிவந்து மெழுகான பதத்தில் கீழிறக்கிச் சூடாறின பின்பு பீங் கான் சிமிழில் அல்லது கொம்புச் சிமிழில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:—** 2, முதல் 4 குன்றிமணி எடை.

**அனுபானம்:—** இதனைப் பனைவெல்லத்திற்குள் வைத்துப் புழுங்கலரிசித் தவிட்டில் புரட்டி விழுங்கவும். காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று நாள், அல்லது ஐந்து நாளைக் கதிகம் உபயோகிக்கலாகாது.

**தீரும் நோய்கள்:—** பக்கவாதம், இளம்பிள்ளை வாதம் முதலிய பதினெட்டு வகை வாதங்களும், எல்லாவகைக் கிரந்தி களும், சூலை நோய், யோனிப்புற்று, லிங்கப்புற்று, குட்ட நோய், குறைநோய், மேகப்புண், புரைகள், அண்டவாதம், அண்டசூலை, அந்தர வாயு முதலான நோய்களும், குன்ம நோய்களும் தீரும்

**பத்தியம்:-** பாசிப்பயறு, முளைக்கீரை, கத்தரிப்பிஞ்சு, துவரம்பருப்பு ஆகியவைகளாகும். புளி, உப்பு, பெண் ஆகிய வைகளை நீக்கவேண்டும். கரப்பான் பதார்த்தங்களையும் நீக்க வேண்டும். பசுவின்பால் பசுவின்நெய் ஆகியவைகளைக் கூட்டிக்கொள்ளவும். மூன்றுநாள் மருந்து சாப்பிட்டால் மறு மூன்று நாள் மறு பத்தியமிருந்து ஏழாம்நாள் தலைக்கு நீர் வார்த்து ஒன்பதாம் நாள் பாலையும், மிளகையும் அரைத்துக் கொதிப்பித்துத் தேய்த்து தலைமுழுகச் செய்யவும். பதினோராம் நாள் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய், பசுவின் நெய் ஆகியவைகளை சமனளவாகச் சேர்த்துக் காய்ச்சித் தேய்த்து தலைமுழுகச் செய்யவேண்டும். இவ்விதம் வாததேகி களுக்கு தலைமுழுகச் செய்விக்கவேண்டும். மற்ற தேகிகளானால் விளக்கெண்ணெயை மாத்திரம் தேய்த்து தலைமுழுகச் செய்விக்க வேண்டும். மேற்கண்ட கிரமப்படி ஒரு மாதம் வரையில் பத்தியமிருக்க வேண்டியது அவசியம்

## 787. கெந்தக மெழுகு [வேறு]

சுத்தி செய்த கெந்தகம் 8 பலம் (280 கிராம்) பசுவின் பால் 1 படி சுத்த தண்ணீர் 1 படி மூக்குவெட்டிச் சாணிப்பாலில் வேக வைத்துலர்த்தி சுத்தி செய்த சேராங்கொட்டை 8 பலம் (200 கிராம்) கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம் 8 பலம் (280 கிராம்).

**செய்முறை:-** பாலையும் தண்ணீரையும் சேர்த்து அதில் மேற்படி சேங்கொட்டையைப் போட்டுக் காய்ச்சி தண்ணீர் சுண்டி சேங்கொட்டை எண்ணெய்கக்கி மிதந்த பிறகு கொட்டையையெல்லாம் எடுத்துவிட்டு வடிகட்டிக் கொடிவேலி வேர்த்தூளை அம்மியில் வைத்துப் பசுவின் பாலைவார்த்து வெண்ணெய்போலரைத்து அதிற்போட்டுப் பிறகு கெந்தகத்தையும் அதிற்போட்டுக் காய்ச்சிக குழம்புப் பதமாய் வரும் சமயத்தில் இறக்கி ஆற வைத்துக் கல்வத்திற்போட்டு மெழுகு போலரைக்க வேண்டும். கெந்தகவாடை கொஞ்சமும் இல்லாமல் முழுவதும் போகிறவரையில் அரைக்கவேண்டும். பிறகு பீங்கான் பாத்திரத்தில் அல்லது கொம்புச்சிமிழில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:-** 4 முதல் 6 குன்றிமணி எடை.

**அனுபானம்:-** பனைவெல்லம், நெய், வெண்ணெய் முதலிய வைகளாம்

**தீரும்நோய்கள்:-** மேகநோய்கள், சூலைநோய்கள், சொறி இரங்கு முதலியவைகள் தீரும்.

**பத்தியம்:-** இச்சாபத்தியம் அவசியமானால் பத்தியமும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## 788. கெந்தக மெழுகு [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் (70 கிராம்), இதனை ஒரு பீங்கானில் வைத்துச் சிறு புள்ளடிச் சாற்றைஅதில் மீதக்கவிட்டு வெய்யிலில் வைக்கவேண்டும். சாறு கெந்தகத்தின் மேல் இரண்டங்குல மிருக்கும்படியாக விடவேண்டும். வெய்யிலில் வைத்து, விட்டசாறு சுண்டின பின்பு மறுபடியும் முன் போல் மேற்படி சாற்றை விடவேண்டும். இவ்விதம் சாறு சுண்டச்சுண்ட எட்டுத் தடவைகள் மேற்படி சாற்றை விட வேண்டும். பிறகு அதனைக் கல்வத்திலிட்டுப் பருமனானதும் முத்தினதுமான ஒரு தேங்காயைத் துருவித் தனிப்பாலெடுத்து அதில்விட்டு, மேற்படி கெந்தகத்தை இரண்டுசாம மரைத்து வேறொரு பருமனான தேங்காயை இரண்டாக உடைத்துச் சிறுதுத்தியிலையை அதிகாலையில் பறித்து அரைத்தவிழுது 10 பலம் (350கிராம்) இதனை இரண்டு பாகமாக்கி இரண்டு தேங்காய் மூடிகளுக்குள்ளும் பூசவேண்டும். அந்த இரண்டு மூடிகளிலும் மேற்படி அரைத்த கெந்தகத்தை இரண்டு பாகமாக்கி ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு மூடியிலும் பூசி இரண்டு மூடியையும் மூடிப் பொருத்திச் சவல் கயிற்றினால் சுற்றிக்கட்டி ஏழு சீலைசெய்து மேலோடு வேகும்படியாக நூறு அல்லது நூற்றிருபது பலம் வராட்டியில்புடமிட்டெடுத்து ஆறவிட்டுக் கவசத்தைப் பிரித்துப் பார்க்க, கெந்தகமானது உருகி வட்டாயிருக்கும். அதைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இருநூறு ரஸ்தாளி வாழைப்பழத்தை உரித்து ஒரு பீங்கானிற் போட்டு நெல் உமியை அல்லது கருவேலம்பட்டைத் தூளைப் போட்டுப் பிசைந்து ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் பிழிந்தால் தெளிவான நீர்வரும். அந்த நீரையெல்லாம் எடுத்துத் தனியே புட்டியில் வைத்துக்கொள்ளவும். இது வாழைப்பழ செயநீரெனப்படும்.

மேற்படி கெந்தகத்தை ஒரு சட்டியில்போட்டு மேற்படி வாழைப்பழ செயநீரில் அரைப்படியையும் அதில் விட்டுச் சிறு தீயாக எரித்து அது முக்கால் வாசி சுண்டிக் கால்வாசி

டாக்கியாயிருக்கும் தருணத்தில் அது சிவந்து பிசின் போல் கம்பி யாய்வரும். ஒரு குச்சியால் கிண்டிமேலிருக்கும் கசடைத் தள்ளி விட்டு மற்றதை எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

**அளவு:—** 2 முதல் 3 குன்றிமணி எடை.

**அனுபானம்:—** சர்க்கரை, பனைவெல்லம், வெண்ணெய், நெய் முதலியவைகளாம். காலை, மாலை இரண்டு வேளையும் நோய் பலத்திற்குத் தக்கபடி கால் அரை முக்கால் ஒருமண்டலம் வரையில் உபயோகிக்க வேண்டும்.

**தீரும்நோய்கள்:—** மேக நோய், மேக சம்பந்தமாயுண்டான புண், புரை, சிரங்கு, சொறி, கிரந்தி முதலிய அநேகநோய்கள் தீரும்.

**பத்தியம்:—** புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்க வேண்டும். பசுவின் நெய், வெள்ளாட்டுக்கறி, கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு ஆகியவைகளைக் கூட்டவும். பசுவின் மோர் ஆகும்; ஆயினும் நான்கு நாளைக்கொரு தடவை தான் சேர்க்க வேண்டும். பிரதி தினமும் சேர்க்கலாகாது.

## 789. கெந்தக மெழுகு [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்) வெண்ணிறமான வெங்காயச்சாறு 20பலம் (700கிராம்) பசுவின் நெய் 8 பலம் (280கிராம்).

**செய்முறை:—** ஒரு சட்டியிற் கெந்தகத்தைப் போட்டு அது உருகியிருக்கும் சமயத்தில் வெங்காயச்சாற்றை விட்டுக் கிளறிக் கொடுத்துக் கொண்டு வரவேண்டும். அந்தச்சாறு அரைவாசி சுண்டினவுடன் மேற்படி நெய்யையும் விட்டுக் கிளறிக் கொடுத்துக் கொண்டு வரவேண்டும். இளகல் பதமாகுஞ் சமயத்தில் கீழிறக்கி ஆறவைத்து கல்வத்தில் அரைத்து மெழுகு பசமாக்கி பீங்கான் சிமிழில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ பலம்.

**அனுபானம்:—** சர்க்கரை, வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** பிரமேகம், நீரெரிச்சல், நீர்த்தாரைப்புண், நீர்ப்பை அழலை, நீர்ப்பைப்புண், கருப்பை விரணம் முதலிய நோய்கள் தீரும்.

**பத்தியம்:—** பசுவின்பால், பசுவின்நெய், முருங்கைப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு, பச்சைப்பருப்பு, முதலியவைகளாகும். எருமை சம்பந்தமானது ஒன்றுமாகாது. இன்னும் சமயோசிதம் போல வும் பத்தியம் ஏற்படுத்தலாம்.

## 790. கெந்தக மெழுகு [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 5 பலம் (175 கிராம்) சிற்றாமணக்கெண்ணெய் 1 பலம் (35கிராம்), வெற்றி லைச்சாறு 1பலம் (35கிராம்) நாலங்குல சுற்றளவும், ஒன்றரை முழ நீளமுள்ள கருவேலன் கட்டை 1.

**செய்முறை:—** அச்சட்டியை வெள்ளையாகத் துலக்கி அதில் மேற்படி கெந்தகத்தைப் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து மேற்படி கெந்தகம் உருகின சமயத்தில் மேற்படி எண்ணெயை விட்டுக் கொஞ்ச நேரம் தாமதித்து மேற்படி வெற்றிலைச் சாற்றை விட்டால், சிடுசிடு என்னும் ஓர் வகைச் சப்தமுண்டாகும். அப்போது மேற்படி கருவேலங்கட்டையால் கடைந்து கொண்டிருக்கவும். பழுப்பு வர்ணமாகவும் கையால் தொட்டும் பார்த்தாய் கையில் ஒட்டாமலுமிருந்தால் பக்குவம் அதனையெடுத்து ஆறின பின்பு எடுத்து வைத்துக் கொள்ள வும். இதனைத் தனியாகவும் உபயோகிக்கலாம். இதற்கு கெந்தக சர்க்கரையென்று பெயர். ஆனால் மேற்படி சர்க்கரை யைக் கல்வத்திலிட்டுக் கெட்டித் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்றுமணி நேரமரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் டப்பியில் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளவும்.

**அளவு:—** 1 முதல் 2 குன்றிமணி எடை

**அனுபானம்:—** சர்க்கரை, தேன், நெய், வெண்ணெய், பறங்கிப்பட்டை இளகம், வல்லாதி இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** பலவகை மேக நோய்கள், செம்படைகள் கரும்படைகள், செம்புள்ளி, கரும்புள்ளி நோய், குட்டம், சிரங்கு, ரணம், புரைகள், மேகவூறல் பிரமேகம் முதலிய அநேக நோய்கள் தீரும். காலை மாலை இரண்டு வேளையும் நோய் பலத்திற்குத் தகுந்தபடி கால், அரை, முக்கால் மண்டலம் உபயோகிக்கவும்.

**பத்தியம்:—** பசுவின் பால், பசுவின் தயிர், பசுவின் மோர், பசுவின் நெய் முதலியவைகளை அதிகமாகச் சேர்க்க வேண்டியது மாமிசகவானால், சூப்பு, கறி வறுவல், குறுமாக்

கறி முதலியவைகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். சத்துள்ளவைகளான உணவுகளை அதிகமாக உபயோகித்து வரவேண்டும். அவ்விதம் சாப்பிட சக்தியில்லாதவர்களுக்கு இந்த மருந்தை உபயோகிக்கலாகாது. வலிமை தரக் கூடிய ஆகாரத்தை அதிகமாகச் சாப்பிடா விட்டால், தேகத்தை வெட்டையாக்கி நட்டப் படுத்தி விடும்.

## 791. கெந்தக மெழுகு ]வேறு[

நெல்லிக்காய்க் கெந்தகம் 20 பலம் (700கிராம்), * தம்பலப் பூச்சி 1200, கருங்கோவை ரசம் ¼ படி.

**செய்முறை:—** அரை அங்குலம் கனமுள்ள ஒரு சட்டியும் அதற்குத் தகுந்த மூடியும் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். கெந்தகத்தைச் சிறு துண்டுகளாக செய்து மேற்படி சட்டியிற் போட்டு மேற்படி பூச்சிகளையும் போட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுப் பதமாகப் பிசறி சாணக்கியை மல்லாத்தி மூடிச் சந்தில்லாமற் பார்த்து ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஒரு கெசம் அகலம்,ஒரு கெசம் ஆழமுள்ள ஒரு குழிதோண்டி, அதில் அரைவாசி சாணியைப் போட்டு நிறைத்து நடுவில் முன் சித்தம் செய்த சட்டியை வைத்துப் பள்ளம் வாய்மட்டம் சாணியைப் போட்டு நிறைத்து வைக்க வேண்டும். இந்தப் புடமானது எப்போதும் வெய்யில் படும் படியான இடமாயிருக்க வேண்டும் மூன்றுமாதம் சென்றெடுத்தால் மெழுகாயிருக்கும். அப்படி யில்லாமல் கொஞ்சம் கொட்டியாக இருந்தால் அதனைக் கல்வத்திலிட்டுச் சிறுகச் சிறுகத்தேனை வார்த்து ஒருசாம நேர மரைத்து மெழுகு பதமாகச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

அளவு: 1 முதல் 1½ குன்றிமணி எடை.

**அனுபானம்:—** வெண்ணெய், சர்க்கரை, நெய், இளகல் வகைகள் முதலியவைகளாம்.

தீரும்"நோய்கள்:— பதினெட்டு வகைக் குட்டநோய்கள், பெரு நோய்கள், கடிவிடங்கள், பேய்ச்சொறி,யானைச்சொறி, யானைக் கால் வாதம், அண்டவாதம், சூலை நோய், முதலிய அநேக நோய்கள், தீர்ந்து, இரத்தவிருத்தி, தாதுவிருத்தி, உடல் திடம், தைரியம், ஊக்கம் முதலியவைகளுண்டாகும். இது ஒரு வகைக்கற்பமாம்.

**பத்தியம்:—** நோய் வலிமை, உடல் வலிமை ஆகிய வைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

* இந்திர கோபப் பூச்சி

## குறிப்பு

முன் சாணிப்புடத்திலிருந்தெடுத்த மெழுகு மூன்று பலம், பொரித்த வெண்காரம் 2 பலம் (70கிராம்) இவ்விரண்டையும் பிசறி அழுத்தமான மூசையிற்போட்டு மூசை வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்துலர்த்தி மூசையமுக ஊதியெடுத்து உடைத்துப் பார்த்தால், மணி மணியா இருக்கும். அதனை யெடுத்து மூசையில் வைத்து வெண்காரங் கொடுத்து உருக்கி யெடுக்கச் செம்பாகும், அந்ததாம்பிரம் கொஞ்சம்வெட்டையாக இருக்குமாதலால், அதனுடன் நாலுக்கொன்று தங்கம் சேர்த்து உருக்கி வைத்துக் கொள்ளவும். பிறகு இதனை சமயோசிதம் போல் உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் அனுபவசாலி களைக் கேட்டு மற்ற விபரங்களைத் தெரிந்து கொள்ளவும்.

## 792. கெந்தக சர்க்கரை

சுத்தி செய்த கெந்தகம் பலம 8 (280 கிராம்), வெண் சங்கம் பழச்சாறு செல்லதக்க அளவு, வெண்ணிறமான வெங் காயச்சாறு செல்லதக்க அளவு.

**செய்முறை** - மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சங்கம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச்சாம நேரமரைத்துக் கல்வத்துடன் வெய்யிலில் வைத்து உலர்த்தி ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு மேற்படி வெங்காயச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச்சாம நேரமரைத்துக் கல்வத்தோடு வெய்யிலில் வைத்துக் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு பொடித்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு:— ¼ முதல் ½ குன்றிமணி எடை.

அனுபானம்: தேன், வெண்ணெய், நெய், இளக வகை கள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :- சூலைநோய்கள், கிரந்திகள், வாயு நோய்கள், கைகால் குடைச்சல், மார்நோவு, திமிர் முதலிய நோய்கள் தீரும். காலை மாலை இரண்டு வேளையும் நோய் பலத்திற்குத் தகுந்தபடி அரை மண்டலம், கால் மண்டலம் உபயோகிக்கவும்

பத்தியம்:— நெய், பால், மோர், இறைச்சி முதலியவை களை அதிகமாகச் சேர்த்து வரவேண்டும்-

## 793. கெந்தகச் சர்க்கரை [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 8 பலம் (280 கிராம்) கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு, வெண்ணிறமான வெங்காயச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:-** கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துக் காலையிலிருந்து பனிரெண்டு மணிவரையிலரைக்கவேண்டும். பிறகு அதனைக் கல்வத்துடன் வெயிலில் வைத்து அந்திவரையில் உலர்த்தவேண்டும். மறுநாளும் முன் சாற்றையே முன்போல் விட்டு மத்தியானம் வரையிலரைத்து வெய்யிலில் வைத்து அந்திவரையில் உலர்த்தவேண்டும். இவ்விதம் கையாந்தகரைச் சாற்றால் மடக்கி மடக்கி நான்கு தடவைகளும், வெங்காயச் சாற்றால் நான்கு தடவைகளும் அரைத்து முடிவாகச் செம்மையாக உலர்த்திப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:-** ¼-முதல்-½ வராகன் எடை.

**அனுபானம்:-** தேன், நெய், வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

**தீரும்ரோகங்கள்:-** மேகநோய்கள், மேகப்புண், புரை, கைகால் குடைச்சல், கிரந்தி நோய், சூலை நோய், கிரந்திப்புண் ஆகியவைகள் தீரும்.

## 794. கெந்தகச் சூரணம்

சுத்தி செய்த கெந்தகம் 1 பலம் (35 கிராம்), சுத்தி செய்த இரசம் ¾ பலம் (26¼ கிராம்), சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், இலவங்கப் பட்டை, பெருலவங்கப்பட்டை, இலவங்கம், கருஞ்சீரகம், கார்போகரிசி, வாலுளுவை அரிசி, வெட்பாலை அரிசி இவை வகை 1க்கு 1வராகன் எடை (3½ கிராம்.)

**செய்முறை:-** கெந்தகத்தையும், இரசத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கறுத்தபின்பு தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். மற்ற சரக்குகளை ஒன்றாகச் சேர்த்திடித்து துணியில் சலித்த தூளைக் கல்வத்திலிட்டு முன்சித்தப்படுத்தின தூளையும் சேர்த்து ஒரு சாமநேரமரைத்து பத்திரப்படுத்தவும்.

**அளவு:** 6 முதல் 10 குன்றிமணி எடை.

அனுபானம்: தேன், நெய், வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- கிரந்தி, புண், பிரமியம், சூலை, வாயு நோய்கள் ஆகியவைகள் தீரும். நோயின் பலத்திற்குத் தகுந்த படி அரை முதல் முக்கால் மண்டலம் உபயோகிக்கவும்.

பத்தியம்:- பசும்பால், நெய், பசுமோர் முதலியவைகளை அதிகமாகச் சேர்த்து வரவும். சூடான பதார்த்தங்களை நீக்கி வைக்கவும். இன்னும் சமயோசிதம் போலவும் வலுவிற்குத் தகுந்தபடியும் பத்தியமேற்படுத்தவும்.

## 795. கெந்தகச் சூரணம் (வேறு)

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 2 (70 கிராம்), மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி வாய்விளங்கம், இலவங்கம், சந்தனம், கடலைப்பருப்பு மா, சித்திரமூல வேர்ப்பட்டை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சேராங்கொட்டைக் குழித்தைலம் ½ பலம், சர்க்கரை 10 பலம் (350 கிராம்).

செய்முறை:- கெந்தகத்தைத் தூள் செய்து துணியில் வடி கட்டிக்கொள்ள வேண்டும். மற்றச் சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்ளவேண்டும் பிறகு கெந்தகத்தூளை கல்வத்திலிட்டு சேராங்கொட்டைத் தைலத்தை விட்டு அரைத்து மற்ற சூரணங்களையும் சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்து எல்லாம் சென்றபின்பு ஒருசாம நேர மரைத்துச் செம்மையாக கலந்த பின்பு பத்திரப்படுத்தவும்.

அளவு:- ½ முதல் 1 வராகன் எடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய் தேன் பறங்கிப்பட்டை இளகம், வாதாம்பருப்பு இளகம் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- குட்டநோய்கள், நச்சுக்கடிகள், நச்சுக் கட்டிகள், விக்கல், மார்ச்சிலந்தி, தலைவலி, வாதநோய்கள் கிராணி மூலம், பவுத்திரம், லிங்கப்புற்று, அல்குல்புற்று, மூத்திரகிரிச்சரம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

பத்தியம்:- இச்சாபத்தியம். பால், நெய் முதலியவைகளை அதிகமாகச் சேர்க்கவும்.

## 796. கெந்தக ரசாயனம்

சுத்தி செய்த கெந்தகம் 6½ பலம் (227½ கிராம்). மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், வாய் விளங்கம், சணல்விதை, அமுக்குராக்கிழங்கு இவை வகைக்கு 1பலம் (35 கிராம்), சேராங்கொட்டைக் குழித் தைலம் ½ பலம் (17½கிராம்), சர்க்கரை 20 பலம் (700கிராம்), தேன் 4 பலம் (140 கிராம்).

செய்முறை:- கெந்தகத்தைத் தனியே பொடித்துக் கொள்ள வேண்டும். மற்ற சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்திடித்து துணியில் வடிகட்டிக் கொள்ளவேண்டும், கெந்தகத்துடன் சேராங்கொட்டைத் தைலத்தையும் சேர்த்தரைத்து மற்ற சூரணத்தையும் சேர்த்தரைத்துப் பிறகு சர்க்கரையையும் சேர்த்துத் தேனை விட்டு கையால் நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**— 1 முதல் 1½ வராகன் எடை

அனுபானம்:— நெய், வெண்ணெய், தேன் இளக வகைகள் முதலிய வைகளாம்.

தீரும்நோய்கள்:— மேக நோய்கள், கிரந்திகள், சூலைகள், வாயுகள் ஆகிய நோய்கள் தீரும். இதனால் பிரதானமாய் எல்லா வகைக் கிராணிகளும் தீருகின்றன. இது அனுபவத்தால் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது.

**பத்தியம்:**— சமயோசிதமாகவும் நோய் வலிமை, உடல் வலிமை ஆகியவற்றிற்குத் தகுந்தபடியும் ஏற்படுத்தவும்.

## 797. கெந்தக ரசாயனம் [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 10 பலம் (350 கிராம்), தேன் 10 பலம் [350 கிராம்].

செய்முறை:— கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் தேனைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்துக் தேனெல்லாம் சென்ற பின்பு ஒருசாம நேரமரைத்து ஒரு புதுக்கலயத்திற் போட்டுச் சீலை மண்செய்து ஒரு முழப் பள்ளந்தோண்டி அதில் வைத்து மண்ணைத் தள்ளி ஒரு மாதம் சென்றெடுத்து மறுபடியும் கல்வத்திலரைத்து வைத்துக் கொள்க.

அளவு :— ¼ முதல் ½ வராகன் எடை.

அனுமானம்:— வெண்ணெய், நெய் முதலியவைகளாம். இதனை உட்கொண்டவுடன் செரித்தல் சக்திக்குத் தகுந்தபடி காய்ச்சிக் கற்கண்டிட்ட பாலை உட்கொள்ள வேண்டும்.

தீரும்நோய்கள்:— எல்லாவகைக் குட்ட நோய்கள் எல்லா வகைக் குன்ம நோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும். இது சித்தர் முறையாம். நொடிக் தொழில் முறையென்றும் பெயர்.

பத்தியம்: உடலின் தன்மை உடலின் வலிமை நோயின் கூறு ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்த வேண்டும்.

## 798. கெந்தக ரசாயனம் [வேறு]

(அ) நெல்லிக்காய்க் கெந்தகம் 10 பலம் (350 கிராம்). பசுவின் பால், நீராகாரம், பூசணிக்காய்ச் சாறு, இவை வகைக்குச் செல்லத் தக்க அளவு. இம்மூன்றிலும் மேற்படி கெந்தகத்தைத் தனித்தனி தூமப்புடம் வைத்தாகிலும் ஆவிப்புடம் வைத்தாகிலும் சுத்தி செய்துகொள்ள வேண்டும். இவ்விதம் சுத்தி செய்த கெந்தகம் 5 பலம் இதனைத் தனியே தூள் செய்து வைத்துக் கொள்க.

(ஆ) சாதிக்காய், இலவங்கம், ஏலரிசி வாலுழுவை அரிசி, சிற்றரத்தை வாய் விளங்கம், கொடிவேலி வேர்ப்பட்டை, மேற்றோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி மிளகு, அதிமதுரம், இவை வகைக்கு ½ பலம் [17½ கிராம்].

(இ) பசுவின் நெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— மேற்படி கெந்தகத்தையும் தூள்களையும் ஒன்றாகக் கலந்தரைத்து, பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு: ¼ முதல் ½ வராகன் எடை.

அனுபானம்:— தேன், சர்க்கரை, வெண்ணெய் இவைகள் முதலியவைகளாம்

தீரும்நோய்கள்: மூலபவுத்திரம், சூதகவாயு, சூலைநோய்கள், நீர்ப்பாண்டு, சோகை காமாலை, மேக ரணம், அன்ல் மாந்தம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

பத்தியம்: பசுவின் பால், பசுநெய், வெள்ளாட்டு உப்புக் கண்டம், துவரம் பருப்பு முதலியவைகள் ஆகும், உப்பை

வறுத்துச் சேர்த்துக் கொள்ளவும் இன்னும் நோயின் கூறு உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி மருந்தையும், பத்தியத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

## 799. கெந்தக ரசாயனம்

பழுப்பு நிறமுள்ள நெல்லிக்காய்க் கெந்தகம் 10 பலம்,

(1) இதனை ஒரு இரும்புக் கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின் நெய்யும் விடடுச் சிறு தீயிலுருக்கி அரைப்படி பசுவின் பாலிற் சாய்க்க வேண்டும். நன்றாய்க் குளிர ஆறின பின் னெடுத்து முன் போலவே இரும்புக்கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின் நெய்யும் விட்டுருக்கி முன்பாலை நீக்கிவிட்டு அந்தச் சட்டியிலேயே வேறு அரைப்படி பசும் பாலைவிட்டு அதில் சாய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பசுநெய் வார்த்துருக்கித் தடவைக்குத் தடவை புதிய பாலில் 7 தடவை சாய்க்க வேண்டும்.

(2) பின்பு இவ்விதம் பாலில் சாய்த்து சுத்தி செய்ததை முன்போலவே 7 தடவைகள் பசுவின் நெய் விட்டுருக்கித் தடவைக்குத் தடவைக்குத் தடவை ½ படி வெங்காயச் சாற்றில் சாய்த்துக் கொள்ள வேண்டும்.

(3) பின்பு இந்தக் கெந்தகத்தைத் தூளாக்கி வைத்துக் கொள்க. ஒரு வாயகன்ற மண்பாத்திரத்தில் காற்படி பசுவின் பாலை விட்டு அப்பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய சேலைத் துண்டை வேடுகட்டி முன் கெந்தகத் தூளைப் பரப்பி அதன் மேல் ஒரு சாணக்கியால் மூடி சாணக்கியின் உதட்டைச் சுற்றி லும் ஒரு அங்குலம் மறையும் படியாகப் பூமியிற் புதைத்துச் சுமார் 50 பலம் வராட்டியை அடுக்கிப் புடமிட்டாறின பின் எடுக்க கெந்தக மெல்லாமுருகிப் பாத்திரத்திற்குள்ளுள்ள பாலில் விழுந்திருக்கும்- அதையெடுத்து அதிலுள்ள ஈரத்தை மெல்லிய துணியில் துடைத்து மறுபடியும் தூளாக்கி முன் போலவே பால் விட்டு வேடுகட்டி முன்போலவே புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்து கொள்வதே கெந்தக சுத்தியாகும்.

குக்கில் அல்லது மைசாட்சி 5 பலம் (175 கிராம்): இதனை ஒரு மெல்லிய துணியில் தளர முடிந்து கட்டிக் கொள்க. ஒரு மண் பாத்திரத்தில் ½ படி கொள்ளைப் போட்டு அதனுடன் 1 படி தண்ணீரையும் விட்டு மேற்படி குக்கில் முடிச்சையும் போட்டுக் கொள்ளானது நன்றாக வெந்து மலர்கிறவரையில்

வேகவைத்துக கழுவி ஈரப்பசையில்லாமற் பக்குவம் செய்து மறுபடியும் மெல்லியசேலைத் துண்டில் முடிந்து கொள்க. ஒரு மண் பாத்திரத்தில், 10 பலம் முற்றின வேப்பம்பட்டையை நைய நறுக்கிப் போட்டு அதில் ஒரு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி அரைப்படியாகச் சுண்டின பின்னிறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டின குடிநீரை வேறொரு பாத்திரத்தில் விட்டு முன் குக்கில் முடிச்சையும் போட்டு மூன்று கொதிகள் வருகிற வரையில் காய்ச்சியெடுத்து நிழலில் ஈரப்பசையில்லாமலுலர்த்திக் கொள்வதே குக்கில் சுத்தியாம்.

தேவையான பறங்கிப்பட்டையை இடித்துத் தூளாக்கி வடிகட்டிக் கொள்க. ஒரு மண் பாத்திரத்தில் பசுவின் பால் விட்டுப் பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய துணியால் வேடு கட்டி அதன் முன் சூரணத்தை வைத்து மேற்சட்டி மூடி அடுப்பேற்றிசூரணம் வேகிறவரையில்எரித்துச் சூரணத்தை நிழலிலுலர்த்தி நன்றாக உலர்ந்த பின்பு மறுபடியும் பொடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்வதே பறங்கிப்பட்டைச் சுத்தியாம்.

கொடிவேலி வேர்ப்பட்டையையும் பறங்கிப்பட்டையைப் போலவே சுத்தி செய்து கொள்ளவேண்டும்.

இரசகற்பூரம் ஓரே கட்டியாக 1 பலம் (35 கிராம்),இதனை ஓட்டிலிட்டுச் சிறு தியாக எரித்து முலைப்பாலில் 2 சாமமும், மூசுமுசுக்கைச் சாற்றால் 4 சாமமும் சுருக்கிட்டு வில்வப்பழத்தைப் பொத்து, அதற்குள் முன் கட்டியைச் செலுத்தி வாயை அந்த ஓட்டினால் மூடி 2, 3 சீலை மண் செய்து அவிப்புடமாகப் போடவும். நன்றாயாறின பின் கட்டியை எடுத்து இன்னொரு பழத்தைப் பொத்து முன்போலவே கட்டியைச் செலுத்தி அவிப்புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி, 7 தடவைகள் வில்வப்பழத்தில் புடமிட்டெடுக்க சுத்தியாம்இதனை எத்தனை தடவை வில்வப்பழத்தில் அதிகமாய் சுத்தி செய்து கொள்கின்றோமோ அவ்வளவு சிறப்பான குணத்தைக் கொடுக்கும்.

மேற்படி பாகப்படி சுத்தி செய்யப்பட்ட கெந்தகம் 2 பலம் (70 கிராம்), மேற்படி பாகப்படி சுத்தி செய்யப்பட்ட குக்கில் அல்லது மைசாட்சி 8 வராகனெடை (280 கிராம்), மேற்படி பாகப்படி சுத்தி செய்யப்பட்ட பறங்கிப்பட்டைச் சூரணம். மேற்படி பாகப்படி சுத்தி செய்யப்பட்ட கொடிவேலி வேர்ச் சூரணம், மேற்படி பாகப்படி சுத்தி செய்யப்பட்ட இரசகர்ப்பூரம், இவை மூன்றும் வகைக்கு 4 வராகன் எடை [14 கிராம்], அரிசித்திப்பிலி, மிளகு, இலவங்கம் ஏலரிசி,சாதிக்காய், சாதிபத்

துரி கோஷ்டம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம் ,கார்போகரிசி, இப்பன்னிரண்டுசரக்குகளையும் தனித்தனியாக வெய்யிலில் காயவைத்துத் தனித்தனி இடித்துத் துணியில் வடிகட்டியச் சூரணம் வகைக்கு வராகன் எடை 2 [7கிராம்], பசுவின்நெய் 2½ பலம் [87½ கிராம்], நல்ல கெட்டித் தேன் 2½ பலம் (87½கிரா )

செய்முறை:- கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடித்து எடுத்துக் கொள்க. இவ்விதமே இரசகற்பூரத்தையும் பொடித்தெடுத்துக் கொள்க பின்பு இவ்விரண்டு தூள்களுடன் மற்ற சூரணங்களையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாய் சேர்த்துக் குக்கிலையும் சேர்த்துப்பிசறிக் கல்வத்திலிட்டு நெய்யையும், தேனையும் ஒன்றாகக் கலந்துவைத்துக் கொண்டு சிறுகச் சிறுக வார்த்து, 4 சாமமரைக்க மெழுகு போலாம். இதனைப் பீங்கான் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- ¼முதல் ½வராகன் எடை, இதனை உடல்வலிமை நோய் வலிமை ஆகியவைகளுக் கேற்றவிதமாகக் குறைந்த அளவாகவும், நிறைந்த அளவாகவும் காலையில் ஒரு வேளையாகவும், காலை மாலை இரண்டு வேளையாகவும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய்கள்:- அரிகிரந்தி, சொறிகிரந்தி, யானைக்கிரந்தி, மூகக்கிரந்தி முதலிய 21 வகைக் கிரந்திகளும், முகவங்கு புண்டரீக குட்டமெனும் பட்தாமரை, கரப்பான் வகைகள், அரையாப்பு. பறங்கிப் புண், குட்டவகைகள் நச்சுபாகம் ஊறல் வெடிசூலை, விரைவாதம்' அண்டவாதம், குடல்வாதம், அந்திரவாயு, யானைக்கால், வீக்கம், நாப்புற்று, வாய்ப்புற்று, லிங்கப் புற்று, தந்தவாயு, குன்மநோய், மேகவெட்டை முதலியவை தீரும்.

பத்தியம்;- பாசிப்பயறு, துவரம் பருப்பு, அவரைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, தகரைக்கீரை, அறைக்கீரை, ஆகியவைகளாம்.

வெள்ளாட்டிறைச்சி 'முயலிறைச்சி, கவுதாரி, காடை உள்ளான் ஆகிய இப்பறவைகளின் இறைச்சிகள் ஆகியவையாகும். இவற்றை உலர்த்தியும் உபயோகித்துக் கொள்ளலாம், திருக்கை, சுறா, கிழங்கான், பங்காலை, பன்னா, கற்றாழை, வரால், குரவை, உளுவை என்னும் மீன் வகைகளை உப்பிட்டு லர்த்தி உபயோகித்துக் கொள்ளலாம்.

## குறிப்பு

மருந்தை உடல்வலிவு முதலியவைகளுக்கேற்ற விதமாக 7, 14, 21 நாள்வரையில் கொடுக்கலாம். ஒரு முறை கொடுத்து இடையில் ஒருவாரம் அல்லது பத்துநாள் விட்டு விட்டுச் சாப்பிடலாம். மருந்து எத்தனை நாள் சாப்பிட்டார்களோ அத்தனை நாள் மறுபத்தியம் வைத்து, விளக்கெண்ணெயும், பசுவின் நெய்யும் சமமாகக் கலந்து தலைக்குத் தேய்த்து தலை முழுகச் செய்ய வேண்டும்.

## 600. கெந்த ரசாயனம்

நெல்லிக்காய்க் கெந்தகம் 10 பலம் (350 கிராம்). இதனைப் பசுவின் பாலில் தூபப்படம் அல்லது அவிப்புடம் வைத்து சுத்தி செய்து கொள்ளவேண்டும் மடக்கி மடக்கி ஐந்து தடவைகள் செய்தவுடன் பின்பு ஈரமில்லாமல் உலர்த்தி, இதில் ஐந்து பலம் நிறுத்தெடுத்துத் தூள் செய்து தனியே வைத்துக் கொள்ளவும்.

மைசாட்சி 10 பலம் (350 கிராம்) வேப்பம்பட்டையை நையச் சிதைத்து, இரண்டுபடி தண்ணீர் வார்த்து அரைப்படி தண்ணீராகச் சுண்ட வைத்து வடிகட்டித் திப்பியை நீக்கின நீரில் மேற்படி மைசாட்சியை துலாந்திரமாகக் கட்டி எரித்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவைகள் செய்யத் சுத்தியாம். இதில் ஐந்துபலம் எடுத்துக் கொள்ளவும்.

பறங்கிப்பட்டை 1 பலம் (35 கிராம்), சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கொள்ளவும பதினைந்து பலம் சங்கங்குப்பி இலைச்சாற்றில் ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் வெய்யிலில் வைத்து உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதமேசிறு செருப் படைச் சாற்றிலும், சின்னியிலைச் சாற்றிலும் ஊமலாத்திச் சாற்றிலும் முன்போல் ஊறவைத்து முன்போல் உலர்த்திப் பொடித்து வடிகட்டிக் கொள்ளவும்.

அரிசித் திப்பிலி, கண்டத்திப்பிலி, சீரகம், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, சிற்றரத்தை, சிறுதேக்கு, ஏலரிசி இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) சங்கம் வேர்ப்பட்டை, சிவனார்வேம்பு, உலர்த்தின வெள்ளறுகு சமூலம். உலர்த்தின சிறுசெருப்படை, சங்கங்குப்பி வேர்ப்பட்டை, பிரப்பங்கிழங்கு, உலர்த்தின பூவரசம்பட்டை இவை வகைக்கு ½ பலம், சடா மாஞ்சில், சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம் இவை வகைக்கு வராகன் எடை [3½ கிராம்]. இவையெல்லாவற்றை யும் இடித்து வடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும்.

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,

வில்வவேர் 50 பலம் (1750, கிராம்) இதனை நன்றாகச் சிதைத்து எட்டுப்படி தண்ணீர் விட்டு இரண்டு படியாகச் சுண்ட வைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

சர்க்கரை 32 பலம் (1210 கிராம்), தேன் 40 பலம் (1400 கிராம்), நெய் 4 பலம் (140 கிராம்).

திருக்கள்ளி 2 வீசை (2800 கிராம்,)இதனைச் சிறு துண்டுகாகத் துண்டித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

கையாந்த கரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- கெந்தகச் சூரணத்தையும், பறங்கிப் பட்டைச் சூரணத்தையும் மற்ற சரக்குகளின் சூரணத்தையும் ஒன்றாகக் கலந்து மைசாட்சியைக் கல்வத்திலரைத்து மேற்படி சூரணத்தைச் சிறுகச் சிறுக சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக சேரும்படி அரைத்துக் கொள்ள வேண்டும், பிறகு கையாந்தகரைச் சாற்றை விட்டு கையாற் பிசைந்து சித்தப் படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு பெரியபானையில் முன் திருக்கள்ளித் துண்டுகளைப் போட்டுப் பானை வாயில் வேடுகட்டி முன் சித்தப் படுத்தினதை வைத்து மேற் சட்டி மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் பன்னிரண்டு சாம நேரம் எரித்து ஆறின பின்பு ரசாயனத்தை எடுத்துக் கொள்ளவு,

முன் சித்தப்படுத்தின வில்வ வேர் நீரில் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சூரணத்தைத் தூவிக் கிண்டிக் கிளறித் தேனையும்நெய்யையும் விட்டுச் செம்மையாக சேர்த்து கீழிறக்கி ஆறியபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: வராகன் எடை ஒன்று, ஒன்றரை; காலை, மாலை இரண்டு வேளையும் நோய் பலத்திற்குத் தகுந்தபடி அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

தீரும் நோய்கள்:- கிரந்திசூலை, மேகசூலை, வெடிசூலை ஆறாத புண், அரிகிரந்தி, வெட்டை, கிராணிக்கழிச்சல், சூதக வாயு, பக்க வாயு, அண்டவாதம், பக்கவாதம், இருமல் நோய் முதலியஅநேகநோய்கள் தீரும். கடிநஞ்சு, சில்நஞ்சு, காணாகடிநஞ்சுமுதலிய பலவகை நஞ்சுகளும் தீர்ந்திருக்கின்றன. இது ஒரு வகை கற்பத்திற்கு சமானமானதாகையால் உடல் இறுகி வச்சிர காயமாகும்.

பத்தியம்:- பசுவின் பால், துவரம்பருப்பு, மொச்சைப் பருப்பு, வெங்காயம், மிளகு ஆகியவை ஆகும். புளி, புகை

ஆகா. கடும் பத்தியமானால் அரை மண்டலம் உப்பில்லாமல் கொடுக்க வேண்டும். இச்சாபத்தியமானால் ஒரு மண்டலம் உபயோகிக்கலாம்..

## [801 ] கெந்தக லேகியம்

ஏலரிசி அதிமதுரம், செண்பக மொட்டு இலவங்கப்பட்டை இவற்றைத் தனித்தனியே இடித்த சூரணம் வகைக்கு 1 பலம் (35 கிராம்), பாலில் சுத்தி செய்த கெந்தகச் சூரணம் 4 பலம் (140 கிராம்) நல்ல வெல்லம் 10 பலம் (350 கிராம்) தேங்காய்ப் பால் 10 பலம் (350 கிராம்)

செய்முறை:- தேங்காய்ப்பாலில் வெல்லத்தைக் கரைத்து வடி கட்டித் திப்பியை நீக்கி அடுபேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகு பதம் இளம்பதமாயிருக்கும் சமயத்திலிறக்கிச் சூடாறின பின்பு மேற்படி சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதிற் போட்டு மத்தாற் கடைந்து எல்லாம் சேர்ந்த பின்பு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு:- ¼ முதல் ½ வராகன் எடை.

தீரும் நோய்கள்:- மேக வாயு, சூலைகள், கடிவிடங்கள், பிகராங்கள், மேகசூலைகள், மேகவூறல் முதலியவை தீரும்.

பத்தியம்:- கைப்பு, புளிப்பு ஆகியவைகளைத் தவிர்க்கவும்.

## 802. கெந்தக லேகிய [வேறு]

சுத்தி செய்த கெந்தகம் 4 பலம் (140 கிராம்), இதனைப் பொடித்துக் கொள்ள வேண்டும்.)இந்துப்புத் தூள்,மேற்றோல் சீவின சுச்குத் தூள்,ஏலரிசித்தூள், அதிமதுரத்தூள்,இவை வகை 1க்கு 1 பலம் (35 கிராம்) பழைய பனை வெல்லம் 8 பலம் (280 கிராம்), பசுவின்பால் 10 பலம் (350 கிராம்) தேன் 4 பலம்(140 கிராம்)

செய்முறை:- பாலில் வெல்லத்தைக் கரைத்து வடிகட்டித் திப்பி நீக்கிக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி ஆறவைத்து மேற்படி சூரணங்களை ஒன்றாகக் கலந்து அதிற்றூவி மத்தாற் கடைந்து தேனையும் வார்த்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 2 வராகள் எடை.

தீரும்நோய்கள்:- சரும நோய்கள்: சொறிசிரங்கு. நாட்பட்ட கீல்வாதம், சுவாச காசம், மாரடைப்பு,கக்கிருமல், நாட்பட்ட இருமல், கண்டமாலை மூல நோய், நாட்பட்ட சீதபேதி, குதம் வெளிப்பட்டிருத்தல் முதலியவை தீரும்.

பத்தியம்: சமயோசிதம்போல ஏற்படுத்தவும்.

## 803 கெந்தக நெய்.

பசுவின் நெய் 5 பலம் (175 கிராம்) சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் இரண்டரை பலம், சுத்தி செய்த வீரம் அரை பலம், வெடியுப்பு அரை பலம், நவச்சாரம் அரை பலம், சுத்தி செய்த அரிதாரம் கால் பலம்.

செய்முறை:- மேற்படி சரக்குகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துப் பொடித்து மேற்படி நெய்யிற் போட்டுச் சிறுதீயாக இரண்டு மணி நேரம் எரித்து இறக்கி ஆறின பின்பு வடிகட்டி புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 5 முதல் 10 துளிகள்

அனுபானம்:- சர்க்கரை, பொரிமா, வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சூலைக்கட்டு, கிமிர், மேகவூறல், மேகப்படை, சொறிசிரங்கு, புண், புரைகள், மேக நோய்கள், மேகப்படைகள் முதலிய அனேக நோய்கள் தீரும்.

பத்தியம்:- சமயோசிதமாகவும், நோய்களுக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்தவும்.

## 804. கெந்தக நெய் [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 5 பலம் (175 கிராம்), நவச்சாரம், சுத்தி செய்த வீரம் இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சுத்திசெய்த அரிதாரம் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்) வெடியுப்பு 1 பலம் (35 கிராம்) பசுவின் நெய் 10 பலம் (350 கிராம்).

செய்முறை:- மேற்படி சரக்குகளையெல்லாம் பொடித்து, வெள்ளைச் சீலையில் வைத்துத் திரியாகச் சுருட்டி மேற்படி நெய்யில் நனைத்து ஒரு இரும்புச் சலாகையில் கோத்துத் திரியைக்கொளுத்தி, அதன்மீது புன்னெய்யை விட்டுக் கொண்டிருக்க வேண்டும். நெய்யானது கீழே சொட்டிவிழும். அதன் கீழ் ஒரு பீங்கான் பாத்திரத்தை வைத்து அதிற்பிடித்துக் கொள்ள வேண்டும். வடிந்த நெய்யையும் முன் திரியின்மீது மடக்கி மடக்கி விடலாம். இப்படிச் செய்வதால் அது அதிககாரமாயிருக்கும்.

அளவு:- 5 முதல் 10 துளிகள்.

அனுபானம் - சர்க்கரை. கற்கண்டுப்பொடி, பொரிமா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- இதனைக் கால் மண்டலம் உபயோகித் தால் மேகத்திமிர், மேகத்தடிப்பு, குட்டம், பெருநோய் முதலிய வைகள் தீரும்.

பத்தியம்:- நோய் பலத்திற்குத் தகுந்தபடி கடும்பத்திய மாகவும், இச்சாபத்தியமாகவும் ஏற்படுத்தவும்.

## 805. கெந்தக மாத்திரை

பசுவின் பாலில் மூன்று தடவை தூமப்புடம் வைத்து சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் தேவையான அளவு. இதனைப் பொடித்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அது மூழ்கும் படியாகச் சங்கிலைச் சாற்றை விட்டு வெய்யிலில் உலர்ந்த பின்பு முன்போல் முன் சாற்றைவிட்டுச் சுவறவைக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி முப்பது தடவைகள் செய்து முடிவில் கல்வத்திலரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1 மாத்திரை.

அனுபானம்:- சர்க்கரை, வெண்ணெய், பனைவெல்லம், பரங்கிப்பட்டை இளகம் முதலியவைகளாம். காலை மாலை இரண்டு வேளையும் நோயின் பலத்திற்குத் தகுந்தபடி நாற்பது நாள் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள்:- செவ்வட்டைக்கடி முதலிய பலவகை அட்டைக்கடிகள் தீரும். இன்னும் காணாக்கடி, செம்பூரான் முதலிய கடிவிடங்களும் தீரும்.

பத்தியம்:- பசுவின் பால், நெய் முதலியவைகளை அதிக மாகக் கூட்டவும். புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவும். கரப்பான் பொருள்கள், வாயு பெருக்கி ஆகியவை களை நீக்கவும். மருந்தை உபயோகித்து வரும்போது உடலில் அதிக காற்றுப்படாமலிருக்க வேண்டியது.

## 806. கெந்தகக் குழித்தைலம்

சுத்தி செய்த கெந்தகம் 1 பலம் (35 கிராம்) மூக்குவெட்டிச் சுத்தி செய்த சேராங்கொட்டை 1 பலம் [35 கிராம்], கொடி வேலி வேர்ப்பட்டை 1 பலம் (35 கிராம்) துருசு அரை பலம், லிங்கம் 2 வராகன் எடை (7 கிராம்) இரசகற்பூரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) மிளகரணை வேர்ப்பட்டை 2 பலம் (70 கிராம்).

செய்முறை:- மேற்படி சரக்குகளையெல்லால் தனித்தனியே பொடித்துக் கொட்டையையும், வேர்ப்பட்டையையும் அதனுடன் சேர்த்துக் கலந்து பல சிறுதுவாரங்கள் செய்து சுத்தப்படுத்தின ஒரு கலயத்திற் போட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து கலயத்தின் கீழ் மறு கலயம் வைத்து அதில் தைலம் வடியும்படியாகச் சித்தப் படுத்தி அதற்கும் சீலைமண் செய்து அந்தக் கீழ்க் கலயம் மறையும் படியாகப் பூமியிற் புதைத்து மேற்கலயத்தைச் சுற்றிலும் ஐந்தாறு அங்குலம் இடைவெளி யிருக்குப்படியாகக் குழி தோண்டி அதைச் சுற்றிலும் வராட்டியை அடுக்கிப் புடமிட்டு ஆறின பின்பு எடுத்தால் கீழ்க் கலயத்தில் தைலம் வடிந்திருக்கும். அதனை பத்திரப் படுத்தவும்.

பறங்கிப்பட்டை 4 பலம் (140 கிராம்,) இதனைத்தூள் செய்து பசுவின் பாலில் பிட்டவித்து உலர்த்தித் தூள்செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- மேற்படி சூரணம் 1 வராகன் எடை (3 ⅓ கிராம்) இதில் மேற்படி தைலத்தை விட்டு லேகிய பதமாகக் குழைத்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் உபயோகித்து வரவேண்டும்.

தீரும்நோய்கள்:- மேகவூறல், திமிர்வாயு, கைகால் துவளல் சூலைக்கட்டு. கிரந்தி, அரையாப்பு முதலியவைகளெல்லாம் தீரும்.

பத்தியம்:- நோயின் பலத்திற்குத் தகுந்தபடி புளி முதலிய வைகளைத் தள்ளிவைக்கவும்.

## ៦07. கெந்தகக் குழித்தைலம் [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க்கெந்தகம் 5 பலம் (175 கிராம்) பன்றியின் அல்லது யானையின் இலத்தி 5 பலம் (175 கிராம்) நரி வெங்காயம் 5 பலம் (175 கிராம்).

செய்முறை:- ஒவ்வொன்றையும் தனித்தனியாக பொடித்து மேற்கண்டபடி சுத்தப்படுத்தின ஒரு கலயத்திற் போட்டு முன் சொல்லியிருக்கிறபடி குழித்தைலமிறக்கிப் பத்திரப் படுத்தவும்.

அளவு:-மேற்கண்டபடி சித்தப்படுத்தின பறங்கிப் பட்டைச் சூரணம் அல்லது பொரிமா 1 வராகன் எடை (3½ கிராம்), இதில் மேற்படி தைலத்தை விட்டு லேகிய பதமாகக் குழைத்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்:-** மேகவூறல்மே கத்திமிர், கடிவிடம், சில் விடம், குட்டம், தாது நட்டம், பிரமியம, கிராணி, அழிரணம், பவுத்திரம். கிரந்தி, அரையாப்பு, சூலைக்கட்டு, வாதம், வாயு கைகால்பிடிப்பு முதலிய நோய்கள் தீரும். தாது நட்டம் தீர்ந்து தாது விருத்தியுண்டாகும்.

பத்தியம்:- நோய் பலமாயிருந்தால் புளியை நீக்கி வைக்க வும். இலகுவாயிருந்தால் இச்சாபத்தியமாக வைக்கவும்.

## குறிப்பு

இந்தத் தைலத்தைக் கட்டின லிங்கத்தில் விட்டரைத்து வெள்ளியில் பத்திற்கொன்று கொடுக்க வர்ணங் காணும்.

## 808. கெந்தகக் குழித்தைலம் [வேறு]

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 4 ¾ பலம் (166¼ கிராம்), பூநீறு ஆறரை பலம், நவச்சாரம் இரண்டரை பலம், கோழி முட்டை வெள்ளைக்கரு 25.

செய்முறை:- முன் மூன்றையும் தனித்தனியாகப் பொடித்துப்பிறகுஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு மேற்படி அண்டக்கருவைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துக் கருவெல்லம் சென்ற பின்பு ஒரு திரியாகச் செய்து குப்பியிலடைத்துக் குப்பி வாய்க்குக் குதிரைமயிரைச் சொருகித் தலைகீழாக ஒரு பெரிய சட்டியிற் கவிழ்த்து அதன் வாய் வெளியில் வரும்படியாகச் செய்து புட்டியைச் சுற்றிலும் மணலைக் கொட்டி புட்டியின் மீது நாலங்குலமிருக்கும் படியாக அதன் மீது மணலைக் கொட்டி புட்டியின் கீழ் ஒரு பாத்திரத்தை வைத்து மணல் மீது வராட்டியை அடுக்கிப் புடமிட வேண்டும். கீழே தைல மிறங்கும். அதனைப் பத்திரப் படுத்தவும். இதைச் சித்தப் படுத்தும்போது புத்தியைச் செலுத்தி நெருப்பின் நிதானத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும், இதற்குஇவ்வளவு தீ வேண்டுமென இங்கெழுதி முடியாது, அது சமயோசிதம்போல் தெரிந்து செய்ய வேண்டியது.

அளவு: வராகன் எடை, ஒரு வெற்றிலையில் இதனைத் தடவி வெற்றிலையுடன் சாப்பிட வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் நாற்பது நாள் உபயோகிக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:—** கருங்குட்டம், கருமேகம், மேகவூறல், மேகத்திமிர் முதலியவைகள் தீரும்.

**பத்தியம் :- புளி, புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது.**

## 809. கெந்தகக் குழித்தைலம் [வேறு]

**சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 5 பலம் (75 கிராம்), வெடியுப்பு 1 பலம் (35 கிராம்), சுத்தி செய்த மடலரிதாரம் 3½ வராகன் எடை, நவச்சாரம் 2½ வராகன் எடை, வீரம் 2½ வராகன் எடை, பசுவின் நெய் செல்லத்தக்க அளவு.**

செய்முறை:- மேற்படி சரக்குகளைத் தனித்தனியாக பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பசுவின் நெய்யைச் சிறுகச் சிறுக விட்டு 2 மணி நேரமரைத்து வழித்து வெள்ளைச்சீலையிலூட்டித் திரியாக்கிக் காசிக்குப்பியி லடைத்து மேற்கண்டபடி கைபாகமாகப் புடமிட்டுத் தைல மிறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு: ¼ வராகன் எடை.

அனுபானம்:- சர்க்கரை, கற்கண்டுத்தூள், பொரியரிசி மா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- தீராத குட்டங்கள், சயம், சூலை, இரணங்கள், அழிப்புண்கள், குழிப்புண்கள், வெள்ளை நோய்கள், மேகங்கள், குன்ம வாயு, வாதங்கள் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:- நல்லெண்ணெய், புண்ணாக்கு ஆகியவைகளை யும் சேர்த்து வரவேண்டும். உப்பில்லாப்பத்தியம் அவசிய மில்லை.

## 810. கெந்தகக் குழித்தைலம் [வேறு]

சுத்தி செய்த கெந்தகம் 2 பலம் [70 கிராம்] பாற் சாம்பிராணி 4 பலம் [140 கிராம்] சூடன் 1 பலம் (35 கிராம்) கடுகு 8 பலம் [280 கிராம்] தனித்தேங்காய்ப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- எல்லாச்சரக்குகளையும் தனித்தனியாக பொடித்து மறுபடி எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்படி தேங்காய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துச் சிறுமாத்திரைகளாகச் செய்து ஒரு கலயத்திற் போட்டு முன் சொல்லியிருக்கிறபடி குழித்தைலம் இறக்கிக் கொள்ளவும்.

அளவு:- 4 முதல் 8 குன்றிமணி எடை.

அனுபானம்:- சீனாக்கற்கண்டுத் தூள், சர்க்கரை, பனை வெல்லம், பொரியரிசி மா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- பதினெட்டுவகைச் சூலைநோய்கள், பாரிச வாயு முதலிய நோய்கள் தீரும்.

பத்தியம்:- சமயோசிதம் போல இலகு பத்தியமாகவும் கடும் பத்தியமாகவும் ஏற்படுத்தவும்.

## 811. கெந்தகத் தைலம்

சுத்தி செய்த சேராங்கொட்டை 8 பலம் (280 கிராம்) சிறுகீரைக் குடிநீரிலும், பசுவின் பாலிலும் தூமப்புடமிட்டுச் சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 2½ பலம், சிற்றாமணக் கெண்ணெய் 21 பலம்.

செய்முறை:- மேற்படி எண்ணெயில் மேற்படி சேராங் கொட்டையை மூக்குவெட்டி நீக்கி இரண்டிரண்டாக வெட்டி அதிற்போட்டு எரித்துத் தைலம் கக்கி மிதந்த பின்பு கொட்டை களை நீக்கிவிட்டு எண்ணெயை வடிகட்டி மேற்படி கெந்தகத் தைப் பொடிபண்ணிப் போட்டு மெதுவாகவும் சாக்கிரதை யாகவும் எரித்துக் கரண்டியால் துழாவி மேற்பொங்கிச் சிவந்த நிறமானால் இறக்கி விரலினால் தொட்டுப் பார்க்கக் கம்பி போல வந்தால் பதம். அதை புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள்:- இதனை மேலே பூசி வருவதினால் வாயு, வலிகள், முழங்கால்வலி, சூலைக்கட்டுவலி முதலியவைகள் தீரும். தைலத்தைத் தடவி அனல் காட்ட வேண்டும். ஐந்து வேளை தடவினால் எல்லாவகை நோயும் தீர்ந்து போகும்.

இன்னும் இதனுடன் ஒரு வராகன் எடை ரசத்தைச்சேர்த்து மத்தித்து அனலில் காய்ச்சிக் கைவிரலால் தொட்டுத் தடவிமேற் கண்ட நோவுள்ள இடங்களில் தேய்த்து வரவும். அதிசீக்கிரமாக நோவு முதலியவைகள் தணிந்து போகும்.

ஒரு பலம் பசுவின்நெய்யில் ½ வராகன் எடைஎண்ணெயைக் கலந்து உள்ளுக்குக் கொடுத்துவர பிரமேகம், அரையாப்பு, நீரெரிச்சல் ஆகியவை தீரும்.

இன்னும் மேற்படி தைலம் 10 வராகன் எடை (35 கிராம்) சுத்தி செய்த இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்). இவ்விரண் டையும் சேர்த்து மத்தித்து ½ வராகன் எடை வீதம் தகுந்த அனுபானங்களிற் கொடுத்துவரப் பிரமிய நோய், வெட்டை நோய், சூலைநோய், வாயு, மார்புவலி, ஆறாதபுண், கிரந்திகள் அண்டத்திற்புண், புரைப்புண், சர்வாங்கச் சொறி, எல்லா வகை ரணங்களும் தீரும்.

பத்தியம்:- புளி, புகை, புணர்ச்சி; நோய்பலத்திற்குத் தகுந்தபடி ½ முதல் 1 மண்டலம் வரை உபயோகிக்கலாம்.

## 812. கெந்தகச் சுடர்த் தைலம்

சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 5 பலம் (175 கிராம்), வீரம், நவச்சாரம் வகைக்கு 1½ வராகன் எடை, மடலரிதாரம் 3¾ வராகன் எடை, வெடியுப்பு 2 பலம், பசுவின் நெய் 10 பலம்.

செய்முறை:- மேற்படி சரக்குகளை யெல்லாம் தனித் தனியாக பொடித்துப் பிறகு ஒன்றாகச் சேர்த்து அரைத்து மேற்படி நெய்யைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுமணி நேர மரைத்து, ஒரு மெல்லிய துணியில் ஊற்றித் திரிசெய்து, ஒரு இரும்புச் சலாகையிற் கோத்துக்கொளுத்திக் கீழே பீங்கான் பாத்திரத்தை வைத்து மிகுந்திருக்கிற நெய்யைத் திரியின்மீது விட்டுவிட்டு வரவேண்டும் கீழே வடிந்திருக்கிற நெய்யையும் திரியின் மீது விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி விட்டுச் சித்தப்படுத்திக் கொள்வதினால் அதிக காரமாகவும் நல்ல குணஞ்செய்வதாகவுமிருக்கும். இதனை புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- ½ முதல் 1 வராகன் எடை.

அனுபானம்:- சர்க்கரை, பொரிமா, பறங்கிச் சக்கைச் சூரணம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- புண்கள், அரையாப்பு, கிரந்திகள், வெள்ளைக்குட்டம், வெடிப்பு, விதைவாதம், மேக சம்பந்த மான அநேக நோய்கள் தீரும்.

பத்தியம்:- சமயோசிதம் போலவும், நோயின் பலத்திற்குத் தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

## 813. கெந்தக எண்ணெய்

சுத்தி செய்த கெந்தகம் 6 பலம் (210 கிராம்) சுத்தி செய்த இரசம் 1 பலம் (35 கிராம்), வெண்காரம் ¼ பலம் (8¾ கிராம்), காந்தம் ¼ பலம் (8¾ கிராம்), சிறுகீரைச்சாறு செல்லத்தக்க அளவு, நல்லெண்ணெய் ½ படி.

செய்முறை:- கெந்தகத்தையும் இரசத்தையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து, நன்றாய்க் கறுத்த பின்பு மற்ற சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்துச் சேர்த்துச் சிறுகீரைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து மேற்படி நல்லெண் ணெயிற் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து வரவேண் டும். அப்படி எரித்து வருகையில் ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் வார்த்து இந்த எண்ணெயில் ஒரு துளியை

அதில் விட்டால் தண்ணீரில் ஆழ்ந்து போனால் பதம்; அப்படி ஆழாமல் மிதநதால் மறுபடியும் எரித்து அந்தப் பதம் வருகிற வரையில் பார்த்து கவனத்துடன் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு- 1 முதல் $1\frac{1}{4}$ வராகன் எடை.

அனுபானம்:- சர்க்கரை பொரிமா முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- கைகால் குறைந்த குட்டங்கள், கிரந்திகள், கடிவிடங்கள், தடிப்புகள் முதலிய நோய்கள் தீரும். இன்னும் இதனை இரணத்தின் மீதும் பூசலாம். லிங்கப்புண், அரைப்புண் முதலிய நோய்களுக்கு உள்ளுக்கும் உபயோகிக்கலாம். இன்னும் இந்தத தைலத்தையும், நல்லெண்ணெயையும் சமனாகக் கூட்டி மத்தித்து, ரணங்களின் மீது பூசி இளவெய்யிலில் நிற்க இரணத்திலுள்ள பூச்சிகள் நாசமாகி விடும்.

பத்தியம்:- நோய்பலம், உடல்பலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டும்.

## 814 கெந்தக எண்ணெய் [வேறு]

கெந்தகம் 1பலம் (35கிராம்) முள்ளங்கிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச் சாமநேரமரைத்துச் சிறு மாத்திரைகளாகச் செய்து உலர்த்தவும். அதிக ஈரமுமாகாது; அதிகமாகவும் உலர்த்தலாகாது. நடுத்தரமாக உலர்ந்த பின்பு ஒரு முட்டை ஓட்டுக்குள் போட்டு மேலே மறு முட்டை ஓட்டால் மூடி உழுந்துமாவினால் நன்றாகச் சீலை மண் செய்து உலர்த்தவும். இவ்விதம் அந்த முட்டையோடு கொள்ளும் மட்டும் போட்டுச் சித்தப்படுத்திக் கொள்ளலாம். அவசியமானால் இரண்டு மூன்று முட்டைகளிலும் சித்தப்படுத்திக் கொள்ளலாம் பின்பு ஒரு பாத்திரத்தில் முக்கால் வீசை நல்லெண்ணெயை விட்டு முட்டைகள் முழுகும்படிதுலாந்திரமாகக் கட்டி அதில் விடவும். ஒரு விளக்கில் சுமார் 10 பலம் நல்லெண்ணெயை விட்டு நடுத்தரமான வத்தி போட்டு விளக்குக் கொளுத்தி அந்தப் பாத்திரத்தின் கீழே வைத்து எரிக்க வேண்டும். அப்போது கவனத்துடன் ஒருவர் அருகிலிருக்க வேண்டும் சில நேரங்களில் எண்ணெய் பொங்கும்; அப்போது உடனே விளக்கை வெளியில் இழுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம். விளக்கில்விட்ட எண்ணெயெல்லாம் எரிகிறவரையில் ஆறவிட்டு எடுக்க முட்டைக்குள் தைலமிருக்கும்; அதனை புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:- 4 முதல் 8 துளிகள்.**

**அனுபானம்: சர்க்கரை, வறுத்த அரிசிமா, நெய், வெண்ணெய் முதலியவைகளாம் இன்னும் நோய்க்குத் தகுந்த துணை மருந்துகளுடனும் உபயோகிக்கலாம்.**

**தீரும் நோய்கள்:-** சிரங்கு சொறி, புண், மேகச் சொறி, மேகச்சிரங்கு, தடிப்பு முதலிய பல நோய்கள் தீரும். மேக சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் உபயோகப்படும். இது அ்சாவிற்கும் உபயோகப்படும்

## குறிப்பு

மேற்படி முட்டையானது தலைகீழாகாதபடி அடையாஞ் செய்து நேராகக் கட்டித் தொங்கவைக்கவும். தலைகீழாக இருந்தால் எண்ணெயானது கைக்கு வராது.

## 815. கெந்தக எண்ணெய் [வேறு]

நெல்லிக்காய்க் கெந்தகம் தேவையான அளவு. இதனைச் சிறு துண்டுகளாகச் செய்து ஒரு புட்டியில் போடவேண்டும், இது முக்கால் புட்டி இருக்க வேண்டும். இதன் வாய்க்குக் குதிரைவால் ரோமத்தைச் சொருகி வேறு புட்டியை இதன் வாயில் பொருத்திச் சீலைமண் செய்து உலர்த்தி மழைக் காலத்தில் ஒரு கெச சதுரக்குழிதோண்டி அதில் அரைவாசி வரையில் குதிரைலத்தியைப் போட்டு நிறைத்து, அதன் நடுவில் கெந்தகமுள்ள புட்டி மேலாகவும். வெறுமையாயிருக்கிற புட்டி கீழாகவும் இருக்கும்படி வைத்து அந்தக் குழி நிறையக் குதிரைலத்தியைப் போட்டு மூடிவிட வேண்டும். ஆனால், பிரதி வாரமும் புட்டியின் கீழ்மட்டம் வரையில் உள்ள குதிரைலத்தியை நீக்கி விட்டுப் புதுலத்தியைப் போட்டு மறைக்க வேண்டும். இவ்விதமே பிரதி வாரமும் செய்து வந்து மழைக்காலம் போன பின்பு எடுத்தால் கீழ்ப் புட்டியில் தைலம் வடிந்து நிற்கும். இதனை வேறு புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 5; முதல் 8 துளிகள்.

அனுபானம்:- சர்க்கரை, சுக்குச் சூரணம். அதிமதுரச் சூரணம், அசுவகெந்திச் சூரணம், அமுக்குராச் சூரணம், வெண்ணெய், நெய், முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:- இருமல் நோய், மூலநோய். மேகசம்பந்த இரணங்கள், சிரங்கு, புண்கள், குழிப்புண்கள் முதலியவைகள் தீரும்.**

## 816. கெந்தக எண்ணெய் [வேறு]

கெந்தகம் 5 பலம் (175 கிராம்), கோழி முட்டை மஞ்சட் கரு 5 பலம் (175 கிராம்).

செய்முறை:- கெந்தகத்தைப் பொடித்து மேற்படி மஞ்சட் கருவைவிட்டு நான்குசாம நேரமரைத்துச் சிறு மாத்திரைகளாக உருட்டி ஏழு சீலைமண் செய்துலர்த்தின புட்டியில் போட்டு அதன் வாய்க்குக் குதிரை வால் மயிர்த்திணித்துத் தலைகீழாக ஒரு ஓட்டின் மத்தியில் துவாரஞ்செய்துவிட்டு அதன் கழுத்துக்கு நேரே ஒரு பீங்கான் தாத்திரத்தை வைத்து ஓட்டின்மேல் புட்டியைச் சுற்றிலும் கரிநெருப்பைப் போட்டு விசிறிக் கொண்டிருக்கத் தைலமிறங்கும். தைலமெல்லாம் இறங்கி நின்ற பின்பு வேறு புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 2 முதல் 3 துளிகள்.

அனுபானம்;— மேற் சொல்லப் பட்டவைகளேயாம்.

தீரும் நோய்கள்:- இரத்தத் சுத்தி உண்டாகி உடல் பலமுண்டாகும். மேக சம்பந்தமான பலவகை நோய்கள் தீரும். இதனால் பலவகை நோய்கள் தீருகின்றபடியால், இது பலவகை நோய்களுக்கு உபயோகப்படும்

## 817. கெந்தக எண்ணெய் [வேறு]

கெந்தகம் 3 வராகன் எடை (10 ½ கிராம்) கோழி முட்டை மஞ்சட்சரு 1, பொட்டாஷ் உப்பு ¾ வராகன் எடை.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்துத் திரள் பதத்தில் சிறு மாத்திரைகளாகச் செய்து முன் போல் புட்டியில் தைலமிறக்கிக் கொள்ளவும்.

அளவு:- 2 முதல் 5 துளிகள்.

அனுபானம்:- தீரும்நோய்களெல்லாம் மேற் சொன்னவைகளேயாம்.

## 818. கெந்தக எண்ணெய் [வேறு]

நெல்லிக்காய்க் கெந்தகம் 3 பலம் (105 கிராம்), வெள்ளைப் பூண்டுச்சாறு 24 பலம் (840 கிராம்), பிரமதண்டு சமூலச்சாறு 6 பலம்(210 கிராம்)

செய்முறை: கெந்தகத்தைப் பொடித்து, மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சாறெல்லாம் சென்ற பின்பு, மாத்திரைகளைச் செய்து நிழலிலுலர்த்தி ஏழு சீலைமண் செய்து உலர்த்தின புட்டியில் போட்டு வாய்க்கு இரும்புக் கம்பிகளைச் சொருகி அகலமாகிய ஒரு சட்டியின் நடுவில் துவாரஞ் செய்து புட்டியின்வாய் வெளியிலிருக்கும்படியாகத் தலைகீழாக கவிழ்த்து வைத்து, அதை ஒரு அடுப்பின் மீது வைத்து அதற்கு நேரே ஒரு பீங்கான் பாத்திரத்தை வைததுச் சட்டியில் சுமார் 15 வராட்டி வைத்துக் கொளுத்த இரண்டு மூன்று மணி நேரத்தில் கீழே வைத்திருக்கிற பாத்திரத்தில் தைலம் வடிந்திருக்கும்; அதனைப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு: 2 முதல் 5 துளிகள்.

அனுபானம்:- முன் முறையிற் சொல்லப்பட்டிருப்பவைகளேயாம்.

தீரும்நோய்கள்:- மூலநோய்கள், செரியாமை நோய்கள், குன்ம நோய்கள், மேக நோய்கள், புண்புரை முதலியவைகள்

## 819. கெந்தக எண்ணெய் [வேறு]

நெல்லிக்காய்க் கெந்தகம் 3 வராகன் எடை (10½), கோழி முட்டை மஞ்சட்கரு 3.

செய்முறை: மேற்கண்ட இரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாக மைபோல் அரைத்து ஓர் உருண்டையாகச் செய்து கொள்ளவும். ஒரு முட்டை ஓட்டை எடுத்து அதன் கீழ்ப்புறத்தின் நடுவிற் சிறிய துவாரம் செய்து முன் சித்தப்படுத்தியிருக்கிற உருண்டையை அதற்குள் போட்டு அதன் வாயை மறு முட்டை ஓட்டால் மூடி அந்த முட்டை முழுவதும் பூங்காவி மண்ணினால் சீலைமண் செய்ய வேண்டும். ஆனால், அந்த முட்டையின் கீழ்ப்பக்கத்திலிருக்கிற பாகம் அடைபடாமல் கவனத்துடன் சீலைமண் செய்யவேண்டும் பிறகு வேறொரு முட்டையோட்டை எடுத்துச் சீலைமண் செய்திருக்கிற முட்டையின் துவாரம் இதன்வாய்க்கு நேரேயிருக்கும்படியாகப் பொருத்தி அதற்கும் சீலைமண் செய்து இரும்புக் கம்பியினால் உரிபோல் கட்டி அதில் வைத்துத் தொங்கவிட்டு ஒரு பானையின் நடுவில் ஒரு கம்பியைப் போட்டு அதில் தொங்கவிட வேண்டும். பிறகு அந்தப் பானையின் வாயை மறுசட்டியால் மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றிச் சிறு தீயாக ஒருசாம நேரம் எரிக்க கீழ்முட்டையோட்டில் தைலம் இறங்கி இருக்கும். இதனைப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 2 முதல் 3 துளிகள்

அனுபானம்:- சர்க்கரை, சுக்குச் சூரணம், அசுவகெந்திச் சூரணம், பறங்கிச் சக்கைச் சூரணம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- கிரந்தி நோய்கள், மேகநோய்கள், வெட்டை நோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும். இதனைக் கைபாகமாகச் செய்து முடித்தால் அநேக நோய்களுக்கு உபயோகப்படும். இம் முறையாற் அநேகருக்குச் சுகமுண்டாகி கீர்த்தி ஏற்பட்டிருக்கிறது.

## 8 0 கெந்தக எண்ணெய் [வேறு]

நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் (70 கிராம்). பூவந்திக் கொட்டைச் சதை 15 வராகன் எடை (52½ கிராம்), கற்கண்டு 15 வராகன் எடை (52½ கிராம்),

செய்முறை:- முன்னர் கற்கண்டையும், பூவந்திக் கொட்டைச் சதையையும் சேர்த்தரைத்து எண்ணெய்க் கசிவுண்டாகும் பதத்தில் மேற்படி கெந்தகத்தையும் சேர்த்தரைத்து உருண்டைகளாகச் செய்து பாகப்படி குழித்தைலமிறக்கிக் கொள்ளவும்.

அளவு:- 1 முதல் 2 துளிகள்.

அனுபானம்:- சர்க்கரை, சுக்குச் சூரணம், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- கப சம்பந்த நோய்கள், மேக நோய்கள், காக்கைவலி முதலிய நோய்கள் தீரும்.

## 821. கெந்தக நெய்

கெந்தகம் 4 பலம் (140 கிராம்), இலவங்கப் பட்டைச் சூரணம் 1பலம் (35கிராம்) ஏலச் சூரணம் ½ பலம் (17½கிராம்), பசுவின் நெய் 40 பலம் (1400 கிராம்).

செய்முறை:- நெய்யை ஒரு கலயத்தில் விட்டு அதில் கெந்தகத்தைப் பொடித்துப் போட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து அடுப்பேற்றி விரல்கனமுள்ள மூன்று விறகால் கமலாக்கினியாக எரித்து வந்து கெந்தக வாசனை புறப்பட்டவுடனே இறக்கி வேறு பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1½ முதல் 2 வராகன் எடை.

அனுபானம்:- வறுத்த அரிசிமா, சுக்குச் சூரணம், சோம்புச் சூரணம். அதிமதுரச் சூரணம் முதலியவைகளாம். நோய்க்குத் தகுந்தபடி 12 நாள் 20 நாள் சாப்பிடவும்.

தீரும்நோய்கள்:- மேகசூலை, நாபிரணம், நாட்சென்ற புண், கபாலசூலை, கிரந்தி, 18 குட்டம், கடிவிகாரம் முதலிய எல்லாம் தீரும்.

பத்தியம்:- பால், நெய், மோர் வெல்லம், சர்க்கரை, வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் ஆகியவை ஆகும். புளியது, உப்பு, கடுகு, பூசணி முதலியவைகளைத் தவிர்க்கவும்.

## 82. கெந்தி மெழுகு

நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் [70 கிராம்], புளிப்பு மாதுளம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமம் அரைக்க வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு நாளும் நந்நான்கு சாமமாகப் பத்துநாள் அரைக்கக் கெந்தகம் மெழுகாகி விடும்; இதனைப் பீங்கான் சிமிழியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

அனுபானம்:- சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- மேற்கண்ட நோய்களெல்லாம் தீரும்

### தாளகம்

தாளகம் சைதன்ய பொருள்களில் இரண்டாவதானது கெந்தக சம்பந்தத்தினால் செந்தூரங்களாவது போலவே இதன் சம்பந்தத்தாலும் செந்தூரங்கள் செய்யப்படுகின்றபடியால் இதுவும் ஒரு முதன்மை இரசவாத கர்த்தாவெனச் சொல்லப் படுகிறது. ஆதிகாலந்தொட்டு இந்துக்கள், யூனானியர்கள் அரேபியர்கள், சீனர்கள் முதலியவர்களால் கெந்தகத்தைப் போலவே இதுவும் வாதம், வைத்தியம் என்னும் இருவகைகளிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது

இது கெந்தகத்தைப் போலவே பிறவிச் சரக்கு; இது, அதைப்போலவே ஆவி சம்பந்தமாய் இதன் கனியிலுண்டாகிறது. இதன் கனியின் கீழ்ப்பாகத்திலிருந்து இதற்கு நைப்புச் சத்துண்டாகிறது. இதில் வங்கச் சத்து இருக்கிறதென்பதை இரசவாத பண்டிதர் முதலானவர்கள் நேர்முகமாகவும், அனுபோக சித்தமாகவும் கண்டு நிச்சயித்திருக்கிறார்கள். இன்னும் பிருதிவியின் அம்சமும், அப்புவின் அம்சமும் இதில் அதிகப் பட்டிருக்கின்றபடியாலும் தேயுவின் அம்சம் குறைந்த அளவாக இருக்கின்றபடியாலும் கெந்தகம் சொற்பச் சூட்டினால் பற்றியெரிவதுபோல இது பற்றியெரிகிறதில்லை.

கடையில் விற்கப்படும் தாளகமானது அதிக அசுத்தமான தாகையால் இதனைச் சுத்தி செய்து, அல்லது, பதங்கித்து, வாதம், வைத்தியமென்னும் இருவகைகளிலும் உபயோகித்தால் அதிகம் மேலான குணத்தைத் தரும். இதன் கனியானது மலையடிவாரங்களிலும் கெந்தககனிகளின் அருகேயும்காணப்படும். இதில், கெந்தகம் மூன்று பங்கும் பாடாணம் ஒரு பங்கும் இருப்பதாக ஆங்கிலேய பண்டிதர்களின் கருத்தாகும். இது கெந்தகத்தைப்போல பலபூதச் சரக்கல்லவென்பது சிலர்கருத்து. இது நீரில் கரையாது. கொழுப்பு, கருப்பூரத்தைலம் மண்ணெண்ணெய், அல்கோஹல், சாராயம் முதலியவைகளில் சொற்பமாகக் கரையும்.

இதில் மேற்கண்ட காரணங்களினால் எளிதில் நெருப்புப் பற்றாது. இது தனியாக எரியா விட்டாலும் இதற்கினமாக சரக்குகளுடன் சேர்க்கப்பட்டால், அது சீக்கிரம் பற்றி எரிந்து அந்தந்த இனத்திற்குத் தகுந்தபடி பலவண்ணங்களைத் தரும். இதனை மண்பாத்திரத்தில் வைத்து அடுப்பின் மீது ஏற்றி எரித்தால் உருகிச் சிவத்து போகும். அதிகமாகத் தீயிட்டெரித்தால் அது புகைந்தோடிப் போகும்.

## தாளகத்தின் வகைகள்

இது ஐந்து வகைப்படும்,

1. ஹர்தாலே உர்பி (மண்ணரிதாரம்)
2. ஹர்தாலே தப்கீ (மடலரிதாரம்)
3. ஹர்தாலே வர்கீ (பொன்னரிதாரம்)
4. ஹர்தாலே புக்காதி, ஹர்தாலே கோதந்தி; (வெள்ளைத் தாளகம், அல்லது கோதந்த தாளகம்.)
5. ஹர்தாலே ஸிபாஹ் (கறுப்புத்தாளகம்)

மண்ணரிதாரம்:- மஞ்சளரிதாரம் அல்லது, மண்தாளகம், அல்லது வண்ணதாளகம் எனப் பல நாமங்களுண்டு. இது மஞ்சள் வண்ணமாக இருக்கும். இதில் மடல்களிராது. இது பெரும்பான்மையும் மண்கட்டியைப் போலிருக்கும். ஆகையால் இது அதிகமாக வண்ணத்திற்கே உபயோகப்படுத்தப்படுகிறது.

மடலரிதாரம், பொன்னரிதாரம்:- இவ்விரண்டு வகைகளும் மஞ்சள் வண்ணமுள்ள பளபளப்பான மடல்கள் உள்ளவைகளாயிருக்கும். ஆனால் மடலரிதாரத்தின் மடல்களை ஒடித்தால் அவை ஒடிந்து போகும். பொன்னரிதாரத்தின் மடல்களை

ஒடித்தால் அவை ஒடியாமல் வளையும். இதுதான் இரசவாதத் திறகு ஏற்றது. ஆகையால்தான் இதற்குப் பொன்னரி தாரமெனப் பெயரிடப்பட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். இது சிலருடைய அபிப்பிராயம்.

கோதந்த தாளகம்:- இதற்கு தமிழில் வெள்ளைத் தாளகம் என்றும், மாட்டுப் பல் த ளகம் என்றும் அரபியில் ஜர்னீ குஸ்ஸவ்ரா என்றும், கோதந்தி ஹர்தால் என்றும், தாவுஷ்ஷுஈர் என்றும் பெயர். இது மாட்டின் பல்லைப் போல வெண்ணிற முள்ளதாயிக்கும் நெருப்பிற் போட்டால் புகையாது. நெருப் பிற்கு ஓடாது; ஆனால் இது கல்மதத்தைப் போன்றிருப்பதால், சிலர் இதனைக் கல்மதத்தின் ஒரு வகை என்கிறார்கள். ஆனால் கல்மதத்தில் மடல்கள் இராது. இந்த வகையில் மடல்களிருக்கும் இன்னும் வேறு சிலர் இதை ஒருவகைப் பாடாணவகை என்கிறார்கள். ஆனால் பாடாணமானது நெருப்பிற் புகையும்; நெருப்பிற்கு ஓடும். ஆனால், இந்த வகையோ நெருப்பிற் புகையாது. நெருப்பில் ஒடாது, இதனைச் சிலர் வெள்ளை அஞ்சனக்கல் என்கிறார்கள். ஆனால் அதில் மடல்களிரா. இநதக் காரணங்களினால் கோதந்த தாளகம் வேறு, கல்மதம் வேறு, பாடாணம் வேறு, வெள்ளை அஞ்சனக்கல் வேறு, என்பது தெளிவானது. இன்னும் இது தனியாகவே இரசவாதத் திற்கு உபயோகப்படும்.

கருப்புத் தாளகம் :- இதனைச் சில மருத்துவர்கள் கருப்புக் கெந்தகமெனச் சொல்கின்றார்கள் ஆனால், அசல் கருப்புத் தாளகமானது எவ்வளவுபாலிற் போட்டாலும் அவ்வளவையும் உறிஞ்சிக் குடித்து விடும் சக்தி அதற்குண்டு; கருப்புக் கெந்தகத் தில் அவ்வித சக்தி காணப்படாது; இன்னும் கருப்புக் கெந்தகத் தைக் கிரமப்படியும் அளவுபபடியும் சாப்பிட்டுவந்தால் நரை திரை மூப்பு என்பவைகளைச் சமீபத்திலும் வரவிடா. காய கல்பங்களில் இதுவும் சிறந்த ஒன்று. இது கிடைப்பதரிது. ஆனால் சித்தர்கள், யோகிகள் முதலியவர்களுக்கு நல்வரய்ப் பினால் கிடைக்கலாம்.

இன்னும் வேறு சில நூல்களில் தாளகத்தின் வகைகளைப் பற்றிச சொல்லப்பட்டிருக்கிறதாவது:- 1. மஞ்சள் தாளகம், 2. சிவப்புத் தாளகம், 3. பச்சைத் தாளகம், 4. வெள்ளைத் தாளகம். 5 கருப்புத் தாளகம்என ஐந்து வகைகளாம்.இவற்றுள் முதன்மையும் அதிகம் உபயோகப்படத் தக்கதுமானது.வருணத் தில் பொன்னைப் போன்று அப்பிரதத்தைப் போல மடல் மடலாயுள்ளதும், பளபளப்புள்ளது மேயாம். இதற்குத்தான் மடலரிதாரமென்றும், பொன்னரிதாரமென்றும் பெயர். இன்னும் மேற்கண்ட குணங்களுடன் சிவப்பு வண்ணம்

மிகுந்திருப்பதை அதிக சிறப்புடையதெனச் சொல்கின்றார்கள். மடல் மடலாகச் சீக்கிரம் பெயரத் தக்கதும் கெந்தக வாசனை உள்ளதாக இருப்பதும், அதிக சிறப்புடையதெனச் சிலர் சொல்லுகிறார்கள் பச்சை வண்ணமுள்ளதையும், கருப்பு வண்ணமுள்ளதையும், கெட்டவகைகளெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆயினும், வாதம், வைத்தியம் என்னும் இருவகைகளிலும் முன் சொல்லப்பட்ட ஐந்து வகைகளும் உபயோகப்படும். ஆனால், அவைகளை முறைப்படியும், கிரப்படியும், சுத்தி செய்தும், பதங்கித்தும் உபயோகிக்க வேண்டியது மருத்துவர்களின் கடமையாகும். இதிலுள்ள எண்ணெய்ப் பசை போகாத வரையில் இதிலுள்ள தீயகுணம் நீங்காது. இதிலுள்ள தீயகுணங்கள் முழுவதையும்சுத்தி செய்து நீக்க முயல வேண்டும். அப்படிச் செய்யாமல் நமது விருப்பப்படி அரை குறையாகச் சுத்தி செய்து சேர்ப்பதில் அதன் சிறந்த குணத்திற்குப் பதிலாக தீய குணங்களுண்டாகி வயித்தியத் தொழிலுக்கே கெட்ட பெயர் உண்டாகி விடுகிறது. இப்படியுண்டாவதற்குக் காரணம் இதன் சுத்தி முறையை நூல்களின் முறைப்படி அல்லது அனுபோகப்படி அறியாமையும். அப்படியறிந்திருந்தும் சோம்பலினால் அப்படிச் செய்யாமையுமேயாம் ஆகையால் இந்நூலை பார்வையிடும் நண்பர்கள் இனியாகிலும் இந்த முறைகளைக் கவனித்து கிரமப்படி செய்வார்களென நம்பப்படுகிறது. ஆகையால், அப்படிச் செய்பவர்களுக்கு புகழும் புண்ணியமும் உண்டாகுமென்பது திண்ணம்.

வயித்தியத்திற்கும். வாதத்திற்கும் மூலப்பொருளாக இருப்பதே சிறப்புடையது. இதனை வைப்பாகவும் வைத்துக் கொள்ளலாம். கெந்தகம் மூன்று பங்கு, சுத்தப் பாடாணம் ஒரு பங்கு: இவ்விரண்டையும் சேர்த்து பாகப்படி உருக்கினால் வைப்புத் தாளகமாகும். மூலப்பொருளானது அதிகமாய்க் கிடைக்கிறபடியால் வைப்பாக வைக்க அவசியமில்லை ஆனால், சில இரசவாத முறையில் வைப்புத் தாளகம் சேர்க்க வேண்டியிருந்தால் அந்தச் சமயங்களில் மாத்திரம் அந்தந்தச் சமயத்திற்கும் அந்தந்த முறைக்கும் அங்குச்சொல்லியிருக்கிற அளவுப்படி சேர்த்துச் செய்து கொள்ள வேண்டியது. அவ்வித முறைகள் அவசியமான இடங்களில் ஆங்காங்கும் எழுதப்படும்.

## தாளகத்தின் பிரபாவம்

தாளகம் எல்லாவகை உலோகங்களையும் வெட்டையாக்கிக் கொன்று நாசஞ் செய்து விடும். இன்னும் வயித்திய



Cell: 9.529777130
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்.

முறைகளில் வாதமுறைகளில் இதனைச் சேர்ப்பதினால் அந்த யோகங்களைப் பலப்படுத்தி அதிக உபயோகப்படத் தக்கவைகளாகச் செய்யும். இது சம்பந்தமாகச் செய்யப்பட்ட இரசவாதப் பொன்னானது எல்லா வகைகளைக் காட்டிலும் அதிக சிறப்புடையதாக இருக்கும் அனுபோகசாலிகள் இதன் தனிப் பிரயோகத்தினாலேயே வாத முறைகளைச் செய்து அனுபவிக்கின்றார்கள். இதிலுள்ள வங்கத்தையெடுத்துத் தங்கத்துடன் சேர்த்துச் செந்தூரித்து வயித்தியம், வாதம் என்னும் இருமுறைகளிலும் உபயோகப் படுத்துகின்றார்கள். மருத்துவர்களைத் துன்பப்படுத்தும் எண்வகை பெரிய நோய்களையும் இந்த ஒரு சரக்கையே முறைப்படி செய்து உபயே கித்துநிவர்த்திக்கலாம். ஆகையால், இது இரசம், கெந்தகம் ஆகியவைகளைப்போலவே முதன்மையான ஒன்று; இதன் பெருமையைப்பற்றிப் பெரிய நூல்களில் அதிகவிரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றபடியால் அவைகளையெல்லாம் இங்கெழுத இச்சிறிய நூல் இடந்தராதாகையால் இம்மட்டோடு நிறுத்தப்பட்டது.

## தாளகத்தின் பெயர்கள்

வடமொழி:- ஹரிதாரம், கோதந்தம், ஹரித்திரம், நடமண்டனம், நடசௌரபலதம், கவுரம், பீதாபம், காந்திடணம் எனப் பலவகை நாமங்களுண்டு.

தமிழ்:- மால்பாகம் மால்தேவி, அரிதாரம், இலட்சுமி, கோதந்தி, பீதகம், சரம், மிச்சிர கெந்தகம், நடமண்டனம், பிடாலகம், சேல்கண்ணி, முகக்காட்சி, ஆட்குடிச்சி, அரிசத்தி, கௌரவம் முதலியவைகளாம்,

அரபி:- அலம், உஹூஸ். ஹாபிலீண், மலிகைன், முகல்லனபன், ஹஜரதைன், கர்மைனுஜ்ஜஹப், முஅலகுல் அஜ்ஸரத்திலை முதலியவைகளாம்.

## தாளகத்தின் குணம் [யூனானி]

மஞ்சள் தாளகமானது மூன்றாந்தரச் சூடும்வரட்சியுமாம். செந்தாளகமானது நான்காந்தரச் சூடும் வரட்சியுமாம். மற்ற வகைகளெல்லாம் அற்க பலமானவைகளும் நஞ்சின் சுபாவமுடையவைகளுமாம்.

## செய்கையும் குணமும்

இதன் எல்லாவகைகளும் சதையில் எட்டிப்பிடித்து அதனை அழுகச்செய்து இரணத்தையுண்டாக்கும். சங்கோசனகாரி

குணமுடையது. இரணத்தின்மேல் மிச்சமாயுள்ள சதையைத் தின்றுவிடும் வயிற்றிலுள்ள நுண் புழுக்களை நாசமாக்கும். குட்டநோய் முதலிய கொடிய நோய்கள் தீரும்.

தாது நட்டந் தீரும், சுரம், கபநோய் முதலிய பலநோய்கள் தீரும்.

சுத்தித் தாளகம் ஒருபங்கு, சுண்ணாம்பு ஒருபங்கு இவ் விரண்டையும் சேர்த்துப் பொடித்துத் தண்ணீரில் கலக்கி உரோமத்தின் மீது தடவினால் உரோமங்கள்உதிர்ந்துபோகும்

ஜாப்த்தோறமு ஒரு பங்கு, தூய்மைசெய்த தாளகம் ஒரு பங்கு இவ்விரண்டையும் சேர்த்து ஒரு சாமநேரமரைத்துக் களிம்புபதத்தில் எடுத்து வைத்துச் கொள்க. இதிற் கொஞ்ச மெடுத்து துணியில் தடவி இரணத்தின் மீது போட்டு வந்தால் அவை ஆறி உலர்ந்துபோம்.

ரோசாப்பூ எண்ணெய் 4 பங்கு, சுத்தி செய்த தாளகப் பொடி ½ பங்கு இவ்விரண்டையும் சேர்த்து மூன்றுமணி நேரம் அரைத்து தனியே வைத்துக் கொண்டு மேலே தடவிவந்தால் ஆசனத்திலுள்ள கொப்பளங்கள், கட்டிகள், மூலமுளைகள், மூக்கிலுள்ள இரணங்கள் ஆகியவைகள் தீரும்.

நமது தந்தசஞ்சீவித்தூள் 4 பங்கு, சுத்திசெய்த தாளகப் பொடி 1 பங்கு. இவ்விரண்டையும் சேர்த்து மூன்றுமணி நேரம் அரைத்து தந்தத்தின்மீது மஞ்சனப் பொடியைப்போல தேய்த்து வந்தால் ஈறு கரைவதை நிறுத்தி அங்கு சுபாவத்தசை வளர ஏது வாகிப் பற்களை இறுகச் செய்து பலப்படுத்தும்.

சுத்தி செய்த தாளகத்தூள் 1/8 குன்றிமணி எடையைக் கால் அல்லது அரைப்பலம் வெண்ணெயுடன் சேர்த்து உட் கொண்டு வந்தால் கொழுமையினாலுண்டான இருமல், சீதளத்தினாலுண்டான இருமல் ஆகியவைகள் தீரும்.

தூய்மை செய்த தாளகத்தூளை நெருப்பிலிட்டுப் புகைத் துக் குழாயின் மூலமாக அந்தப் புகையைத் தொண்டைக்குள் செலுத்தினால் நாட்பட்ட கொழுமை சம்பந்த இருமல் குணப்படும்.

சுத்தி செய்த தாளகத்தூள், நெய்யரிசிப்பால், சல்கோஜாஞ் பருப்பு. மேல்தோல் போக்கின வாதுமைப் பருப்பு இவை சமஎடை இவற்றைச் சேர்த்து ஒருமணி நேரமரைத்து

நெருப்பிற் போட்டுப் புகைத்து அந்தப் புகையைக் குழாயின் மூலமாகத் தொண்டைக்குள் செலுத்தினால் பழமையான தொண்டைக்கட்டு, பழமையான சுவாசம், இரைப்பு, நாட்பட்ட இருமல் நோய் ஆகியவைகளை அதிக துரிதமாகக் குணப்படுத்தும் ஆனால், மேற்கண்ட இரண்டு பிரயோகங்களுக்குப் பின் கோதுமை மாக்கஞ்சியில் வாதுமையெண்ணெய், பசுவின் நெய் ஆகிய இரண்டையும் கலந்து பானஞ்செய்து வரவேண்டியது. இப்படிச் செய்வதால் அதன் வேகத்தை மீறாமல் அடக்கும்.

சுத்தி செய்த தாளக பற்பம் ¼ குன்றிமணி எடை, தேன் 1 பலம் (35 கிராம்). இவ்விரண்டையும் கலந்து சாப்பிட வேண்டும். இவ்விதம் செய்துவந்தால் நுரையீரலிலுள்ள அசுத்த மாசுகள், கபக்கட்டு, கோழைக்கட்டு ஆகியவைகள் நீங்கி சுத்தியாகி நல்ல குரலோசை உண்டாகும்.

உரோமம் முளையாமலிருக்க வேண்டுமானால் அந்த இடத்தில் உள்ள உரோமத்தை நீக்கி விட்டுச் சுத்தி செய்த தாளகப் பொடியைக் கல்வத்திலிட்டு ஓம இலைச்சாற்றால் வெண்ணெய் போலரைத்து மேற்கண்ட இடத்தில் பூசிக் கொஞ்ச நேரம் தாமதித்து வெந்நீரால் கழுவி விடவேண்டும் இவ்விதம் செய்து வருவதால் அந்த இடத்தில் உரோமமே முளையாது.

தேவையான செந்தாளகத்தை மாட்டுப்பித்து நீரினால் வெண்ணெய் போலரைத்து ஓர் உறுப்பின் மீது தடவி நெருப்பில் பற்ற வைத்தால் அது பற்றாது நெருப்பினால் எரியாமல் சுபாவம் போலவே இருக்கும்

சுத்தி செய்த தாளகத்தூள் 1 பங்கு, அடைக்கலங்குருவி மலம் 2 பங்கு, இவ்விரண்டையுஞ் சேர்த்து மைபோலரைத்து வெண்ணெயில் அல்லது நெய்யில் குழைத்து மூலமுளைகளின் மீது தடவி வந்தால் அவை கரைந்து விழுந்து போம்.

சுத்தி செய்த தாளகத்தூளைக் கல்வத்திலிட்டுப் பசுவின் பாலை வார்த்து மைபோலரைத்து ஓர் இடத்தில் தடவி வைத்தால் அந்த இடத்தில் ஈ உட்காராது; அப்படி உட்கார்ந்த போதிலும் அவை இறந்து போகும்.

## தாளகத்தின் குணம் (ஆயுள்வேதம்)

மண்தாளகம்:- நாக்கு சம்பந்தமான நோய், குட்ட நோய், நடுக்கல் சுரம், சயம், காசம், சுவாசம், புரையோடும் புண், சுசிராவக நோய், சிரத்தாப நோய் ஆகியவைகள் போகும்.

மஞ்சள் தாளகம்:- சயம், காசம். இராசநோய், சிலேத்தும நோய், வாதநோய், அட்ட குன்ம நோய் ஆகியவைகள் தீரும்.

மடலரிதாரம்:- சுவாசகாசம், சிலேத்தும மல்லாவர்த்தம், அசுமரிநோய், கரப்பான் நோய், துட்டவிரணம் முதலியவைகள் தீரும்.

பொன்னரிதாரம்:- மந்தாரகாசம், வாதசுரம், வாந்தியோடு கூடிய சயம், செய்யான்விடம், சர்மதல குட்டம் முதலியவைகள் தீரும்.

சிவப்பு அரிதாரம்:- குளிர்சுரம், மகாவாதநோய்கள், உடல் குத்தல், தினவு, கிடிப குட்டம் முதலியவைகள் தீரும்.

### தாளகத்தின் குணம் ஆங்கிலம்

இதில் அவர்களின் இரசவாத முறைப்படி கெந்தகமும் பாடாணமும் சேர்ந்திருக்கிறதாகத் தெரிய வருவதால் அவர்கள் இதை உள்ளுக்கு அதிகம் உபயோகப் படுத்துகிறதில்லை. ஆகையால், இதன் குணம் அந்த நூல்களில் எழுதப்படவில்லை.

### குறிப்பு

ஆங்கிலேயர்களுக்கு இது அனுபவப்பட்ட போதிலும் நம்மவர்கள் பூர்வத்திலிருந்தே கைவல்யமாக அனுபவித்து வருகின்றார்கள். நம்முடைய அனுபவத்திலும் முறைப்படி செய்து முறைப்படி உபயோகித்தால் சிறந்த குணத்தையே தருகிறது. பல கொடிய நோய்களும் தீர்ந்திருக்கின்றன. இதை அனுபவத்தில் நாம் நிச்சயித்து வருகின்றோம்.

### 1. தாளகச் சுத்தி

4 பலம் (140 கிராம்) பொன்னரிதாரத்தை மொச்சை அளவுள்ள கட்டிகளாகச் செய்து இரட்டைத்துணியில்வைத்துத் தளரமுடிந்து கிழிக்கட்டி ஒருபானை நிறைய இரண்டுபடி பசுவின் மூத்திரத்தை விட்டு அதில் 8 பலம் கற்சுண்ணாம்பைக் கரைத்து மேற்படி முடிச்சை பானைக்குள் துலாந்தரமாகக் கட்டித் தொங்கவிடவேண்டும். ஆனால், அந்த முடிச்சானது பானையின் அடியில் படாமல் இரண்டங்குலம் மேலாக இருக்க வேண்டும். இவ்விதம் சித்தப்படுத்தி அடுப்பின் மீதேற்றிச் சிறுதீயாக எரித்து நீரெல்லாம் சுண்டின பின்பு இறக்கி இளஞ்சூட்டில் வெந்நீரில் அலம்பி எடுத்துக்கொள்ள வேணடும்.

பிறகு முன்போலவே சித்தப்படுத்தி முன்போலவே எடுத்துக் கொள்ளவேண்டும். மூன்றாந்தடவையும் இவ்விதமே

செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிச் சுத்தி செய்து கொண்டால் எல்லாவிததோடமும் நீங்கி நல்ல குணத்தைத் தரும். வெருட்டல், அன்னத்துவேடம், வாந்தி முதலிய தீயகுணம் ஒன்றுமே இராது. சக்திக்குத் தகுந்தபடி ஐந்து, அல்லது ஏழு தடவைகள் செய்து கொள்ளலாம். குறைந்த பட்சம் மூன்று தடவையாகிலும் மேற்கண்ட விதம் மடக்கி, மடக்கிச் செய்து கொள்ள வேண்டும்.

## தாளகச் சுத்தி (வேறு)

பொன்னரிதாரம் 4 பலம் (140 கிராம்) இதனை மேற்கண்டபடி சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கொள்ளவேண்டு. செம்மையாக வெந்த கற்சுண்ணாம்பு செல்லத்தக்க அளவு, பனங்கள் செல்லதத்தக்க அளவு. சுமார் 8 பலம் (280கிராம்) சுண்ணாம்பை ஒரு பாத்திரத்தில் கனமாகப் பரப்பி அதன்மீது ஒரு மெல்லிய துண்டுத் துணியை விரித்து அதன்மீது முன் சித்தப்படுத்தின கட்டிகளை வைத்து அதன்மீது மெல்லிய துணியை விரித்துப் போட்டு அதன்மீது 8 பலம் சுண்ணாம்பை முன்போற் பரப்பி அதன்மீது கொஞ்சம் பனங்கள்ளைத் தெளித்தால் சுண்ணாம்பு வேகம் ஆரம்பித்துப்புகை எழும்பும். அந்தப் புகை அடங்கினவுடன் இன்னும் கொஞ்சம் பனங்கள்ளைத் தெளித்துச் சுண்ணாம்பு களியைப் போலானால் பதமாம். அவ்விடமே ஆறவிட்டுச் செம்மையாகக் குளிர ஆறின பின்பு துணியை மெதுவாக எடுத்துத் தாளகக் கட்டிகளையெடுத்துக் கொண்டு மற்றவைகளை நீக்கிவிடவேண்டும். முன்பாத்திரத்திலுள்ளதையும் நீக்கி அதைச் சுத்தி செய்துவிடவேண்டும் பிறகு முன்போல் அந்தப் பாத்திரத்தில் 8 பலம் (280 கிராம்) சுண்ணாம்பைப் பரப்பி அதன்மேல் முன்போல் மெல்லிய துணியைப் பரப்பி அதன்மேல் தாளகக் கட்டிகளை வைத்து அதன்மேல் மெல்லிய துணியால் மூடி முன்போல் சுண்ணாம்பைப் போட்டுப்பரப்பி பனங்கள்ளைத் தெளித்து பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி, மடக்கி ஏழு தடவைகள் செய்துகொண்டால் தாளகத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் நீங்கி அதனாலுண்டாகும் தீய குணங்களெல்லாம் போய்விடும்.

## குறிப்பு

மேற்கண்ட விதமாகப் பனங்கள்ளிற்குப் பதிலாகப் பசுவின் மூத்திரம், கழுதை மூத்திரம், குமிழியெழும்பும்படியாகச் சுடவைத்த வெந்நீர் ஆகியவைகளிலொன்றை உபயோகித்துக் கொள்ளலாம்.

## தாளகச் சுத்தி (வேறு)

பொன்னரிதாரம் 5 பலம் (175 கிராம், கற்சுண்ணாம்பு தேவையான அளவு, பனங்கள் செல்லத்தக்க அளவு, ஒருபடி கொள்ளத்தக்க வாயகன்ற ஒருபானையில் 10 பலம்(350கிராம்) கற்சுண்ணத்தைப் பரப்பிப் பின்பு முன் தாளகத்தைச் சற்று பெருங்கட்டிகளாகத் துண்டித்து அதன்மீது வைத்து, அதன்மீது 10 பலம் (350 கிராம்) சுண்ணத்தைப் போட்டுக் கொஞ்சம் பனங்கள்ளை விட்டு அது கொதித்துப் புகையடங்கின பின்பு சுமார் ஒருபடி அல்லது, ஒன்றேகால்படி பனங்கள்ளை விட்டு பகல் முழுவதும் வைத்திருந்து மாலை 5- மணிக்கு அடுப்பேற்றிச் சிறு தியாக எரித்து கள் எல்லாம் சுண்டின பின்பு அப்படியே அடுப்புடன் விட்டு வைத்து காலையில் எடுத்து வெந்நீர் விட்டுக் கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். மறுநாளும் முதல்நாள் செய்தபடியே சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் ஏழுநாள் ஏழுதடவை சுத்தி செய்தால் தாளகமானது வெளுத்து தந்தத்தைப் போலாகிவிடும். இவ்விதம் சித்தப்படுத்தின தாளகத்தையே இனிச் சொல்லப்படும் விரமாமுனி மால் தேவி செந்தூரத்தில் சொல்லியிருக்கும் நோய்களைக்குணப்படுத்துவ துடன், (புத்தியுள்ள சீடனுக்குப் பொன்னாகும்) என்று சொல்லியதும் சித்தியாகும். கட்டத்திற்குப் பால்மாறாமல் சிரமப்பட்டால் எல்லாம் சித்தியாகுமென்பதில் சந்தேகமில்லை சோம்பல் சுபாவமுள்ளவர்களுக்கு சொற்ப சிரமமுள்ளதும் ஒரு பெருமலையைப் போலவே தோன்றும். அவ்வகையார்கள் எவ் வகை மருந்தையும் செய்து முடிப்பது இயலாது என்றே சொல்ல வேண்டும்.

## 4. தாளகச் சுத்தி (வேறு)

ரவைக்கோதுமைமாவில் எருக்கம்பாலை விட்டுக் குழைத்து அரைத்துத் தாளகக்கட்டியின் மீதுசுமார் ¼ அல்லது ½ அங்குலம் பூசி, 5 பலம்(175 கிராம்)இலுப்பெண்ணெயில் விட்டுக் காய்ச்சி மாவானது நன்றாகச் சிவந்த பதத்தில் எடுத்து ஆறவைத்து ஆறினபின்பு கவசத்தைப் பிரித்து அதைத் துணியினால் நன்றாகத் துடைத்துவிட்டு முன்போல் ரவைமாவில் எருக்கம் பாலை விட்டுக் குழைத்து அரைத்து எண்ணெயில் பொரித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தட வைகள் செய்தால் தாளகமானது சுத்தியாகி விடும். இதனைத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

## தாளக சுத்தி [வேறு]

5 பலம் [175கிராம்] தாளகத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து கெட்டித் துணியில் முடிந்து வைத்துக்கொள்ள வேண்டும். 1¼ படி காடியை ஒரு பாத்திரத்தில் விட்டு மேற்படி முடிச்சை துலாந்தரமாகக் கட்டித் தொங்கவிடவேண்டும். ஆனால் அந்த முடிச்சானது பானையின் அடியில் படலாகாது. அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துச் சுண்டினவுடன இறக்கி ஆறவைத்து எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு 15 பலம் (5 5 கிராம்) கற்சுண்ணாம்பை இரண்டுபடி நீரில் கரைத்து 1படி தெளிவெடுத்து முன்போல் தாளகத்தைத் கிழிக்கட்டித் தொங்க விட்டு எரித்தெடுத்துக் கொள்ளவேண்டும் பிறகு 1¼ படி முன் தெளிவு தண்ணீரிலும் முன்போல் தொங்க விட்டுச் சுண்ட எரித்துக் கொள்ளவேண்டும். பிறகு மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல் நெல்லிமுள்ளி இவை வகைக்கு 5 பலம் (175கிராம்), இம்மூன்றையும் சிதைத்து 3 படி நீரில் போட்டு 1¼ படியாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டின குடிநீரில் முன் போல முன்தாளகத்தைக் கட்டித் தொங்க வைத்துச் சுண்ட எரித்துத் நூய்மை செய்து கொள்ளவும். இவ்விதம் சுத்தி செய் வதனால் தாளகத்திலுள்ள தீயகுணங்கள் நீங்கி நல்ல குண முண்டாகிவிடும்.

## 6. தாளக சுத்தி [வேறு]

தாளகம் 10 பங்கு, வெண்காரம் 1பங்கு, இவற்றைப் பொடித்து நான்கு பாகமாகச் செய்து நான்கு முடிச்சுகளாக வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு அதன் நடுவில் மேற்படி நான்கு முடிச்சுக்களையும் துலாந்திரமாகக் கட்டித் தொங்கவிட வேண்டும். ஆனால் முடிச்சானது அடிப்பாத்திரத்தில் படாம லிருக்கவேண்டும். இவ்விதம் இரண்டு சாம நேரமெரித்து ஆற விட்டு முடிச்சை யெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதமே அந்த முடிச்சையே காடியில் ஒரு சாமமும், நல்லெண்ணெயில் ஒரு சாமமும் மேற்சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்தித் திரி பலைக் குடிநீரில் ஒரு சாமமும், கலியாணப் பூசனிக்காய்ச் சாற் றில் ஒரு சாமமும் எரித்து பொட்டணத்திலுள்ளதையெடுத்துக் காடியில் கழுவி உலர்த்தியெடுத்துக் கொள்ளவேண்டும். இவ் விதம் செய்வதால் தாளகமானது சுத்தியாகிவிடும்.

## 7. தாளக சுத்தி [வேறு]

தேவையான தாளகத்தைப் பெருந்துண்டுகளாகத் துண்டித்து ஒரு துண்டுத் துணியில் தளர்ச்சியாக முடிந்து

கொள்ளவேண்டும். மண்தோண்டியில் முக்கால்வாசி இருக்கும் படியாகக் கருப்பு வண்ணப் பசுவின் மூத்திரத்தை விட்டு மேற் படி முடிச்சைக் கிழிக்கட்டித் தொங்கவிடவேண்டும். முடிப் பானது பாத்திரத்தினடியிற்படாமலும், மூத்திரத்துக்குள் 6 அங்குலம் ஆழ்ந்தும் இருக்க வேண்டியது. பிறகு இப்பாத் திரத்தை அடுப்பின்மீதேற்றி எரித்து மூத்திரமெல்லாம் சுண்டி ஆறினபின் இறக்கித் தாளகத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் பிறகு முன்போலவே காடியில் எரித்தெடுத்துத் தயிரிலும் அவ் விதமே எரித்தெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு தாளகத்தை ஒரு துணியில் வைத்து முடிந்து கல்யாணப் பூசணிக்காயைத் துளைத்து அதற்குட் செலுத்தி 18நாள்வரையில் வைத்தெடுத்து ஈரத்தை யுலர்த்தி அதிகம் புளித்த தயிரை விட்டு அரைத்து வில்லைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு மருந்து களுடன் சேர்த்து உபயோகிக்க வேண்டியது. இது, வாதம் வைத்தியமென்னும் இரு முறைகளுக்குமாம் இது சுத்திகளில் முதல் தரமான சுத்தியாம். இதனால் வாந்தி, அன்னதுவேஷம் முதலிய தீய குணங்கள் ஒன்றும் உண்டாகாது.

## 8. தாளக சுத்தி [வேறு]

தாளகம் 1 பலம் (35கிராம்), இலந்தையிலை 2 வீசை, (2800கிராம்) ஒரு வீசையிலையை மண்பாத்திரத்தில் வைத்து அழுத்திச் சமப்படுத்தித் தாளகத்தை மத்தியில் வைத்து அதன் மேல் மறு வீசையிலையை வைத்து அழுத்திச் சமப் படுத்தி வாய் பந்தனஞ்செய்து சீலை மண் செய்து அடுப்பேற்றி ஆரம்பத்தில் மெதுவாக எரித்து வர வரத் தீயைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கமலாக்கினியாக எரிக்க வேண்டியது, காடாக்கினியாக எரிக்கலாகாது. இவ் விதம் 4 சாமம் எரித்து நன்றாகக் குளிர ஆறின பின் எடுத்தால் தாளகமானது உருகி இறுகிப் போயிருக்கும். இதனால் தாள கம் சுத்தியாவதுடன் ஒருவிதமாகக் கட்டுப்பட்டுமிருக்கும்: இதனைத் தனியாகவே உபயோகிக்கலாம், இவ்வகை சுத்தி செய்யப்பட்ட தாளகத்தை மருந்துகளுடன் சேர்த்துச் செய்வ தால் அவ்வித மருந்துகளினது பெருமையை நாம் இங்கு எடுத் தெழுத முடியாது அனுபோகசாலிகள் தாம் தாமே இதனுண் மையை விளக்கிக் கொள்வார்கள். சிரமத்திற்குப் பயந்து பின் வாங்கும் பண்டிதர்களுக்கு எவ்வகையான முறைகளும் சிரம மாகவே முடியும். அவ்வகையான வர்களுக்கும் உபயோகப்படும் படியான சில எளிய முறைகளையும் ஆங்காங்கு எழுதி வரு வோம். ஆனால் எல்லாமுறையும் எளிதாயிருப்பது அரிதாகும்.

குறிப்பு:- இன்னும் தாளக சுத்தியானது அநேக வகை களுண்டு. அவைகளையும் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர் கள் நமது அனுபோக வைத்திய ரத்னாகரத்தைப் பார்வை யிடவும்.

## 794. தாளகப் பதங்கம் அல்லது சத்து

சுத்தி செய்த பொன்னரிதாரம் 3 பலம் (105 கிராம்). முலைப்பால் விதை அல்லது காட்டுக் கொள்ளு 3 பலம் (105 கிராம்) இவ்விரண்டையும் தனித்தனியாக பொடித்துப் பிறகு இரண்டையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு மைபோலரைத்துப் பதங்கச் சட்டியில் வைத்து மேலும் பதங்கச் சட்டியை மூடிச் சீலைமண் வலுவாகச் செய்துலர்த்தி அடுப்பேற்றி நான்கு சாம நேரம் தீபாக்கினியாக எரிக்கவேண்டும். எரிக்கும்போது மேற் சட்டியின்மீது ஈரச்சீலையைப் போட்டு வைத்தும் வரவேண்டும் குளிர ஆறினபின்பு பிரித்துப்பார்த்தால் பதங்கமேறியிருக்கும். இந்தப் பதங்கத்தைச் சுரண்டியெடுத்து அதனுடன் முன்போல் 3 பலம் முலைப்பால் விதையை, அல்லது காட்டுக் கொள்ளைப் பொடித்துச் சேர்த்து மசிய அரைத்து முன்போல் பதங்கித்துக் கொள்ளவேண்டும் மூன்றாந் தடவையும் முன்னளவே மேற் படி விதைத் தூளைச் சேர்த்து மசிய அரைத்து முன்போல் பதங்கித்துக்கொள்ளவும். இவ்விதம் செய்வதற்குப் பதங்கம் அல்லது சத்து எனப்பெயர் இது வெண்மையாகவும், பளபளப் புள்ளதாகவும் இருக்கும். இவ்விதம் செய்தெடுத்ததைப் பற்ப முதலியவைகளாகச் செய்து உபயோகித்தால் அதிகச் சிறந்த குணத்தைத் தரும். இதனைத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

## 795. தாளகப் பதங்கம் [வேறு]

சுத்தி செய்த மடலரிதாரம் 4 பலம் (280 கிராம்). இதனை மசியப் பொடித்துப் பதங்கப் பாத்திரத்தில் போட்டு மேற்படி பதங்கப் பாத்திரத்தால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி இரண்டு சாமநேரம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு எடுத்தால் மேற்சட்டியில் பதங்கமேறியிருக்கும். அதனைச் சுரண்டியெடுத்துக்கொள்ளவும் இதனையெரிக்கும் போது பதங்க மேற்சட்டியில் ஈரத்துணியை நனைத்துப் போட்டு வரவேண்டுமென ஞாபகத்தில் வைக்கவேண்டியது.

மேற்சட்டியை மூடாமல் அதற்குப் பதிலாக உரத்த கடுதா சியினால் சட்டியின்மீது கிரீடம்போற் செய்து வைத்துச் சந்தில்லாமல் கோதுமைமாவினால் பந்தனப்படுத்தி உலர்த்தி அடுப்பின்மீதேற்றி ஒன்றரை சாமநேரம் மிதமாக எரித்துக் குளிர ஆறவிட்டு எடுத்தால் பதங்கமேறியிருக்கும். பிறகு அதனை யெடுத்துக்கொள்ளவும். இவ்விருவகைகளிலும் மேலே

சொல்லியிருக்கிறபடி மூன்று தடவை மடக்கி மடக்கிச் செய்தெடுத்துக் கொள்ளவதுதான் குற்ற மற்றதும், சிறந்த குணமுள்ளதுமாம்.

குறிப்பு:- மேற்கண்ட விதமாகச் செய்தெடுத்த தாளகப் பதங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பசுவின் நெய்யை விட்டு மைபோல் அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும் அவசியமானபோது இதனைச்சுங்கானில் அல்லது உக்காவில் வைத்து நெருப்பிட்டுப் புகை பிடிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் சுவாச காசம், மந்தார காசம், நாட்பட்ட இருமல் நோய், ஈளை நோய் முதலியவைகள் தீரும்.

## 796. தாளகச்சத்து (வேறு)

சுத்தி செய்த தாளகம் தேவையான அளவு, சவுக்காரம் சமனெடை முன்னர் தாளகத்தைப் பொடித்துச் சவுக்காரத்தையும் சேர்த்து இரண்டு சாம நேரமரைத்துப் பதங்கப் பாத்திரத்தில் வைத்து மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து அடுப்பின்மீதேற்றி முறைப்படி நான்கு சாம நேரமெரித்து ஆறவிட்டெடுத்து, பொடித்து அதற்குச் சமனெடை சவுக்காரத்தைச் சேர்த்து அரைத்து முன்போல் பதங்கித்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிக் குறைந்தது மூன்று தடவை செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு:- தாளகப் பதங்கமானது வெண்ணிறமாகவும், பளபளப்புள்ளதாகவும் இருக்க வேண்டும். ஆனால் பதங்கித்தவுடன் கறுப்பாயிருக்குமாகையால் பதங்கிக்கும் ஒவ்வொரு தடவையும் சுத்த நீரினால் கழுவியுலர்த்திக் கொள்ளவேண்டும் இப்படிச் செய்வதால் கறுப்பு நிறம் மாறி வெண்ணிறமாகவும், பளபளப்புள்ளதாகவுமிருக்கும். இப்படிச் செய்து கொண்டால் தான் மருந்து முறைக்கு உபயோகமானதாக இருக்கும்.

விசேடக் குறிப்பு:- தாளகச்சத்து அல்லது பதங்கமானது தாளகத்தைப் பார்க்கிலும் அதிக குணமுள்ளதாக இருக்கும். மணலைப் போன்று அதில் பிரகாசமிருக்கும். அதில் கொஞ்சமெடுத்து நெருப்பில் போட்டுவெள்ளைக் காகிதத்தைப் புகையின்மீது பிடித்தால் அது கறுப்பாகிவிடும். அதில் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாற்றை வார்த்தரைத்தால் கறுத்துவிடும். இன்னும் மிருதுவாக இராமல் நெறநெறவென்றிருக்கும். இவ்வகைகள் வைத்திய முறைகளுக்குதவும். இரசவாத முறைகளுக்கு ஆகாது. **இரசவாத முறைகளுக்கு உதவும் தாளகசத்தின் இலட்சணமாவது:-** நெருப்பிற்கு ஓடாமலிருக்கும்; மிருதுவாய்

வில்லை செய்வதற்கு ஏதுவாயிருக்கும். நெருப்பிலிட்டால் புகையாது; எவ்வளவு எலுமிச்சம்பழச்சாற்றை விட்டு அரைத்த போதிலும் கறுப்பாகாது; இதனைக் குகையிலிட்டு உருக்கினால் மற்ற சத்துக்கள் உருகிக கண்விட்டாடுவதுபோல் இதுவும் உருகிக் கண்விட்டாடும். இவ்வகைச் சத்துக்களினால் உயர்ந்த இரசவாத வெள்ளி செய்யலாம்.

## தாளகக்கட்டுகள்

இதனை மூலிகை சம்மந்தமாகவும், காரசாரங்களின் சம்மந்தமாகவும், சுருக்குக்கொடுத்தும், கவசம் செய்து எரித்தும், புடமிட்டும் கட்டிக்கொள்வது வளமை. அப்பாகங்களையெழுதும் முன் இதனைக் கட்டக்கூடியதன் மூலிகைகள், தனிச் சரக்குகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம், அவை பின் வருகின்றவைகளாம்.

பேய்ப்புடல், இலந்தையிலை, எலுமிச்சஞ்சாறு. கரும்புரசக்காடித் தீநீர், ஆமணக்கம் பருப்பு, நேர்வாளப் பருப்பு, கல்லுப்பு, வளையலுப்பு ஆகியவைகளாம்.

இவற்றுள் கரும்புரசக் காடித்தீநீர் முறையை மாத்திரம் இங்கு எழுதுவோம். மற்றவைகளெல்லாம அநேகருக்குத் தெரிந்தவைகளேயாம்.

## கருப்புரசக் காடித் தீநீர்

செங்கருபின் மேற்றோலைச் சீவியிடித்துப் பிழிந்தரசம் 20 படி கொள்ளத்தக்க புதுப் பாண்டங்கள் நான்கு. முதல்நாள் மேறபடி சாற்றை ஒரு பாண்டத்தில் விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும், அன்றுமாலை மறு பாத்திரததில் வார்த்து வைதது மறுநாள் அதை வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்விதமே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாண்டத்தில் விட்டு வெய்யிலில் வைக்கவேண்டும்; முதல் நாள் மறு பாத்திரத்தில் வார்த்து விட வேண்டும்; முதல் வைத்திருந்த பாண்டத்தை வெய்யிலில் வைத்துச் செம்மையாக உலர்த்திக் கொள்ள வேண்டும், இவ்விதம் ஆறுமாதம் செய்து வந்தால் கரும்புரசம் புளித்துக் காடியைப் போலாகிவிடும் இதற்குக் கரும்புரசக்காடியென்று பெயர். இநதக் காடியை வாலையிலிட்டுத் தீ நீராக இறக்கிக் கொள்ள வேண்டும் இதற்குத் தான் கரும்புரசக் காடித்தீநீர் என்று பெயர். இந்தக் காடியினால் தாளகத்தைச் சுறுக்கிட்டுக் கட்டிக் கொள்ளலாம், அல்லது இதை விட்டு அரைத்து அக்கினிப் பீங்கானில் வைத்து அககினி தீட்சை செய்தும் கட்டிக் கொள்ளலாம்.

## 797. தாளகக் கட்டு

பேய்ப்புடல் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு சுத்திசெய்த தாளகம் 1 பலம் (35கிராம்) இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்.

செய்முறை: தாளகக் கட்டியை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து மேற்படி பேய்ப்புடல் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுறுக்கிட வேண்டும். சுமார் அரைப்படிச் சாறு சென்ற பின்பு கட்டியில் கொஞ்சமெடுத்து நெருப்பில் போட்டால் புகையா திருந்தால் பதம். புகைந்தால் மறுபடியும் முன்போல சுறுக்கிட்டுக் கொள்ளவேண்டும் சுவார் ஒருபடி சாற்றில் கட்டுப் பட்டுபோகிறது. இது மூலிகையின் பலத்திற்குத் தகுந்தபடியும், சுறுக்கிடுபவர்களின் கைபாகத்துக்குத் தகுந்தபடியும் சீக்கிரமாகவும், தாமதமாகவும் நெருப்பிற்கு ஓடாமல் கட்டிப் போகிறது.

அளவு:- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

அனுபானம்:- தேன், குடிநீர், இளகம், சூரணம் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- முறை சுரம், குளிர்சுரம், விடாசுரம், நாட்பட்ட சுரம் முதலிய அநேக வகை சுரங்கள் தீரும் இருமல், கோழைக்கட்டு, சுபகட்டு, முதலிய நோய்களும் தீரும்,

## 798 தாளகக் கட்டு [வேறு]

கனமான சோற்றுக் கற்றாழைத் துண்டை எடுத்து அதற்குள் 13 வராகன் எடை (45$\frac{1}{2}$ கிராம்) சுத்தி செய்த தாளகத் துண்டுகளைச் செலுத்தி நூலினால் கட்டி அதன்மேல் நான்கு சீலைமண் செய்து வெய்யிலில் வைத்து, ஈரமுலர்த்தி, சுமார் ஆறு பலம் வராட்டியில் வைத்துப் புடமிட்டெடுத்தால் தாளகமானது உருகியிருக்கும். பிறகு அந்தத் தாளகத்தை எடுத்து நாகதாளியிலையை அரைத்து அதன்மீது கவசஞ் செய்து ஒரு சீலைமண் செய்து ஒரு கலயத்துக்குள் வைத்து ஒரு ஓட்டால் மூடிக் கவசம் வேகும்படியான புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி, மடக்கி மூன்று தடவைகள் போட்டுத் தாளகத்தைக் கொஞ்சம் நெருப்பிலிட்டுப் பார்த்தால் புகையாமலிருந்தால் பதம்; புகைந்தால் புகையடங்கிக் கட்டுகிறவரையில்புடமிட்டுக் கொள்ளவும் பச்குவமாகச் சில தடவைகள் செய்தால் புகையடங்கிக் கட்டிவிடும்.

**குறிப்பு** :- நாகதாளி இலை அகப்படாவிட்டால் பிரமதண்டு இலையை உபயோகித்துக்கொள்ளலாம். அதுவும் அகப்படாவிட்டால் பேய்ப்புடல் இலையை உபயோகித்துக் கொள்ளலாம்.

அளவு, அனுபானம், தீரும் நோய்கள் முதலியவைக ளெல்லாம் முன் சொன்னவைகளேயாம்.

## 799. தாளகக்கட்டு (வேறு)

சுத்தி செய்த தாளகம் 1½ பலம் (52½ கிராம்) இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும். எட்டிக்கொட்டை 10 பலம் (350 கிராம்) சேராங்கொட்டை 10 பலம் (350 கிராம்).

செய்முறை:— எட்டிக் கொட்டைகளையும், சேராங் கொட்டையையும் சன்னத் துண்டுகளாகச் செய்து கொள்ள வேண்டும். சேராங்கொட்டைகளை நான்கு துண்டுகளாகத் துண்டித்துக்கொண்டால் போதுமானது. அதனைத் துண்டிக்கும் போது அதன் எண்ணெய், உடலில் படாமல் கவனத்துடன் செய்ய வேண்டியது, பிறகு இந்த இரண்டு வகையையும் ஒன்றாகச் சேர்த்து மூன்று பாகமாகச் செய்து கொள்ள வேண்டும். ஒரு பாகத்தில் அரைவாசியை ஒரு சிறு கலயத்திற் போட்டு அதன்மீது தாளகக் கட்டியை வைத்துஅதன்மீது மறு அரைவாசி பாகத்தைப் போட்டு வாய்க்குச்சில்லிட்டு 1½ வீசை (2100 கிராம்) எருவில் புடமிட வேண்டும் ஆறின பின்பு எடுத்து முன்போல் மற்றொரு பாகத்தில் புடமிட வேண்டும். இவ்விதம் மூன்று புடமிட்டால் நெருப்பில் புகையாமல் கட்டிப் போகும். புகைந்தால் மறுபடியும் முன்போல் மூன்று புடம் போட்டுக்கொள்ள வேண்டும்.

அளவு, அனுபானம் மேற்கண்டவைகளேயாம்

தீரும் நோய்கள்:- மேற்கண்ட சுரநாய்கள், கபநோய்கள் தீருவதுடன் தாதுக் குறைவு தீர்ந்து, உடல் வலிவு, உடல் திடம் முதலியவைகளுண்டாகும். இவ்விதம் கட்டிப் யற்பம் செய்து சாப்பிட்டால் அநேகவித நன்மைகளுண்டாகும்.

## 800. தாளகக் கட்டு (வேறு)

சுத்தி செய்த தாளகம் 1½ பலம், (52½ கிராம்) இது ஒரே கட்டியாக இருக்க வேண்டியது. பிரமதண்டு இலை 12 பலம் (420 கிராம்). இதனை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவேண்டும.

செய்முறை:- மேற்படி தாளக்கட்டியை மேற்படி இலையில் கவசஞ்செய்து சிறு கலயத்துக்குள் வைத்து வாய்மூடி வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து சுமார் 1 வீசை (1400 கிராம்) எருவில் புடமிடவேண்டும் பிறகு ஆறினவுடன் அடுத்து முன் போல பன்னிரெண்டு பலம் மேற்படி இலையை அரைத்துக்

கவசஞ்செய்து முன்போற் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து புடமிட்டால் புகையடங்கிக் கட்டிப் போகும் சோதனைக்குஒத்திராவிட்டால் அவசியமான வரையில் புடமிட்டுக் கொள்ளவும்.

அளவு, அனுபானம், தீரும் நோய்கள் முதலியவைகளெல்லாம் முன் சொன்னவைகளேயாம்.

## 801. தாளகக் கட்டு [வேறு]

அரசப்பட்டையை எரித்த சாம்பல் 7 பலம் [245 கிராம்], பிராந்தி சாராயம் 7 பலம் (245கிராம்) சுத்தி செய்த தாளகம், 6½ வராகன் எடை (22 ¾ கிராம்).

செய்முறை:- மேற்படி சாம்பலில் மேற்படி சாராயத்தை விட்டுக் குழைத்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தைச் சிறு சட்டியில் வைத்து அதன்மீது தாளகக் கட்டியை வைத்து, அதன்மீது மறுபாதி குழைத்த சாம்பலை வைத்து நன்றாக அழுத்திவிட்டுச் சட்டி வாயைச் சாணக்கியால் மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றிச் சிறு தீயாக இரண்டுசாம நேரம் எரிக்க வேண்டும். ஆறின பின்பு எடுத்து சோதித்துப் பார்க்க புகையாதிருந்தால் பதம். அப்படி ஒத்திராவிட்டால் மறுபடியும் முன்போல் செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று தடவைகளில் தாளகம் கட்டுப்பட்டுப் போகும்.

அளவு அனுபானம், தீரும்நோய்கள் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 802. தாளகக் கட்டு [வேறு]

¾ வராகனெடை எடையுள்ள தாளகக்கட்டிகள் 4 மாதுளை இலை பலம் 6 (210 கிராம்), அரசம்பட்டைச் சாம்பல் 24 பலம் (840 கிராம்).

செய்முறை: மாதுளையிலையை வெண்ணெய் போலரைத்து இரண்டு பாகமாக்கிக் கொள்ளவேண்டும் ஒருசட்டியில் 12 பலம் (420 கிராம்) மேற்படி சாம்பலைப் போட்டுப் பரப்பி அதன்மீது மாதுளையிலை அரைத்த விழுதின் ஒரு பங்கைச் சிறு அடையாகத் தட்டிச் சாம்பலின்மீது வைத்து அதன்மீது மேற்படி தாளகக் கட்டிகளை வைத்து அதன்மீது மேற்படி இலையின் விழுதை அடையாகத் தட்டிவைத்துச் சற்று அழுத்திவிட்டு அதன்மீது 12 பலம் (420 கிராம்) மேற்படி சாம்பலைப் போட்டுச் சற்று அழுத்திவிட்டுப் பாத்திரத்தின் வாயைமூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றிச் சிறுதீயாக நான்கு சாமநேரம் எரித்து ஆறவிட்டெடுத்தால் தாளகமானது கட்டிப்போயிருக்கும். பரிசோதனைக்கும் ஒத்திருக்கும். அப்படியில்லாவிட்டால்

முன்போல் இன்னொரு தடவையும் செய்து கொள்ளவும். அவசியம் கட்டிப்போகும்

அளவு, அனுபானம், தீரும் நோய்கள் முதலியவை களெல்லாம் முன் கண்டவைகளேயாம்.

## 803. தாளகக் கட்டு [வேறு]

சுத்தி செய்த தாளகக் கட்டி 1¼ பலம், புளியாரைக்கீரை ½ பலம், முழ நீளமும் ஆறு அங்குல பருமனுமுள்ள வாழைக் கட்டை 1.

செய்முறை:- மேற்படி மூலிகையை வெண்ணெய் போல ரைத்துத் தாளகக் கட்டியின்மீது கவசித்து உலர்த்தி வாழைக் கட்டையின் மேற்பக்கத்தில் 4 அங்குலர் பள்ளஞ்செய்து அதில் மேற்படி கவசத்தைச் செலுத்தி இந்த வாய்க்கு முன் தூளையே வைத்தடைத்து வாழைக்கட்டையை நிறுத்தி வைத்து வறட்டி களை நடுவில் துவாரம் பண்ணி அது கொள்ளுகிறவரையில் மாட்டி வாய்மட்டம் அடுக்கி அதற்கு மேலும் இரண்டு மூன்று வறட்டிகளை வைத்து நெருப்பிலிட்டு ஆறினபின் எடுக்கத் தாளகமானது உருகிக் கட்டியிருக்கும்; எல்லாப் பரிசோதனைக் கும் ஒத்திருக்கும்.

அளவு, அனுபானம், தீரும்நோய்கள் முதலியவைகளெல் லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 804. தாளகக் கட்டு [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1½ பலம் (52½ கிராம்,) இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும். இதன்மீது 5 எருக்கம் பழுப்பைச் சுற்றி அதன்மீது நூலால் சுற்றிக் கட்டிவிட வேண்டும். பிறகு 2 படி ஆற்றுமணலை ஒரு சட்டியிற் கொட்டி அதனடுவில் மேற்படி கவசத்தை வைத்து அடுப்பேற்றி யெரிக்கவேண்டும். இலையானது எரிந்து கருகின பதத்தில் எடுத்து ஆறவைத்துத் தாளகக் கட்டியை எடுத்து முன்போல் நூலால்கட்டி முன்போல் மணலில் வைத்து எரிக்கவேண்டும். இப்படி மணலில் வைத்து எரிப்பதற்குத் தீட்சை என்று பெயர். இவ்விதம் மடக்கி மடக்கி 50 தீட்சைகள் செய்தால் தாளகமானது கட்டுப்பட்டு நெருப் பிற்கு ஓடாமலிருக்கும். ஒருவேளை கைபாக பேதத்தால் சோதனைக்கு ஒத்தில்லாவிட்டால் மறுபடியும் பத்துப் பதினைந்து தடவை முன்போல் தீட்சை செய்தால் கட்டிப் போகும்.

அளவு, அனுபானம், தீரும் நோய்கள் முதலியவை களெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 805. தாளகக்கட்டு [வேறு]

சுண்ணாம்புக் கல்லில் சுத்தி செய்த தாளகம் 2 பலம் (70கிராம்), இதுஒரேகட்டியாகஇருக்கவேண்டும். அப்பிரேகம், வெங்கலசிமிளை, அரப்பொடி, காந்தம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட நான்கு சரக்குகளையும் தனித்தனியாகப் பொடித்துப் பிறகு ஒன்றாகச் சேர்த்து அரைத்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகசிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து மெழுகுபோலான பதத்தில் எடுத்து மேற்படி தாளகக்கட்டிக்கு எங்கும் சமமாயிருக்கும்படி பூசிக் கவசித்துலர்த்தி அதன்மீது மூன்று சுண்ணாம்புச்சீலை செய்து உலர்த்தி அதன்மீது மூன்று மண்சீலை செய்துலர்த்தி ஒரு மண் பானையில் மூன்றுபடி உமியைக் கொட்டி அதன் நடுவில் வைத்து நெருப்பிடவேண்டும். இது இரண்டு நாள் வரையில் நெருப்பிருக்கும். சில சமயம் இது கொஞ்சம் எரிந்து நின்று விடுவதுமுண்டு. ஆகையால் இது எரியும்போது அடிக்கடி சோதித்து வரவேண்டியது. மேலும் இதனைக் காற்றில்லாத இடத்தில் புடம் வைக்கவேண்டியது. இதனைக் கிரமப்படி பக்குவமாக எரித்தெடுத்தால் உருகிக் கட்டிப்போயிருக்கும் நெருப்பிற் கோடாது. இதனைப் பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு:- 1 அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன், முதலியவைகளாம். எல்லாவகை சுரங்களும் எல்லாவகைக் கபநோய்களும் தீரும்.

## 806. தாளகக் கட்டு [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும். தும்பையிலையை அரைத்த விழுது 10 பலம் (350 கிராம்), இதனை ஒரு சட்டியில் உருண்டையாக வைத்து அதற்குள் நடுவில் முன் தாளகக் கட்டியை வைத்து அதன்மீது ஒரு சிரட்டையால் மூடிச் சந்தில்லாமல் சீலைமண் செய்து அந்தச் சிரட்டை மறையும்படியாக மணலைக்கொட்டி அடுப்பின்மீது வைத்து ஒரு சாமநேரம் எரித்து ஆற விட்டு எடுக்க வேண்டும். பிறகு முன்போல் தும்பையிலையை அரைத்த விழுது 1 பலம் (35 கிராம்) முன்போல் வைத்து. எரித்தெடுக்கவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று முதல் ஏழு தடவைகள் செய்யின் உருகிக் கட்டிப் போகும். நெருப்பிற்கு ஓடாது. அப்படி நெருப்பிற்கு ஓடினால் இன்னும் இரண்டு மூன்று தடவை முன்போல் செய்து கொள்ளவும். சோதனைக்கு ஒத்திருக்கும்.

அளவு:- 1 முதல் 1½ அரிசியெடை

அனுபானம்:- தேன், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- எல்லாவகைச் சுரங்கள், கபநோய்கள் முதலியவை தீரும.

## 807. தாளகக் கட்டு [வேறு]

சுத்தி செய்த தாளகக் கட்டி 1 பலம் (35 கிராம்)வேப்பெண்ணெய் 1 வீசை (1400 கிராம்).

செய்முறை:- தாளகக் கட்டியை ஒரு சட்டியில் வைத்து மேற்படி எண்ணெயை விட்டு அடுப்பின்மீதேற்றிச் சிறுதீயாக எரித்து வரவேண்டும். எண்ணெயானது அரை அல்லது முககால்வாசி சுண்டின பக்குவத்தில் தானே பற்றி எரியும். அப்படிப் பற்றா விட்டால் ஒரு திரியைக் கொளுத்தி அதில் காட்டினால் பற்றிக் கொள்ளும்; அது பற்றி எரிந்து அடங்கின வுடன் சட்டியைக் கீழிறக்கி வைத்துக் குளிர ஆறின பின்பு கட்டியில் கொஞ்சம் எடுத்துப் பொடித்து நெருப்பில் போட்டு கெடாமலிருந்தால் பக்குவமென எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்படியில்லாவிட்டால் முன்போல் இன்னும் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் செய்துகொண்டால் சண்டிக் கட்டாகிவிடும். இதனை எடுத்துப் பொடித்துவைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 முதல் 1½ அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன், இளக வகைகள் சர்பத் வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சுரநோய், கபநோய், குட்டநோய், தாது நட்டம் முதலிய அநேக நோய்கள் தீரும். இன்னும் அனுபோக சாலிகள் இதன் உபயோகத்தை அனுபோகத்தால் நிச்சயித்தறிந்து கொள்வார்கள். ஆகையால், அதைப்பற்றி இங்கெழுதுவது அனாவசியம்.

## 808. தாளக உருக்கு

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும். சோற்றுக் கற்றாழை அடிமரத்துப்பால் செல்லத்தக்க அளவு, சோற்றுக்கற்றாழைவேர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- தாளகக் கட்டியை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து அதன்மீது மேற்படி சோற்றுக்கற்றாழை அடிமரத்துப்பாலை ஊற்றவேண்டும். அந்தப் பாலானது அந்தக்கட்டி அமிழ்ந்திருக்கும் படியாக இருக்க வேண்டியது. அவ்விதம் 5நாள் ஊறவைத்தெடுத்துஒரு செங்கல்லின் மத்தியில்

குடைந்து அதில் மேற்படி கட்டியை வைத்துக் கற்றாழை வேரை அரைத்து ஒரு பருமனான சிரட்டையில் வாய்மட்டம் அடைத்துக் கட்டியின் மீதுமூடி அடுப்பேற்றி எரிக்கவும். சுமார் இரண்டுமணி நேரத்தில் உருகிப்போகும். அந்தப் பதமறிந்து எடுத்து ஆறின பின்பு பொடித்து புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு: - ¼ முதல் ½ குன்றிமணி எடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன் முதலியவை களாம்.

தீரும் நோய்கள்:- எல்லா வகை சுரங்கள், சுவாசகாசம், சயம் முதலிய நோய்கள் தீரும்.

## 809. தாளக உருக்கு [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்), இது ஒரே கட்டி யாக இருக்க வேண்டும். மிளகாய் இலை 5 பலம்(175 கிராம்), இதனை அரைத்து மேற்படி கட்டிக்குக் கவசித்துஓட்டில் வறுக்க வேண்டும், கவசம் எரிந்து கரிந்துபோன பக்குவத்தில் எடுத்து ஆறவைத்து ஆறின பின்பு கவசத்தை நீக்கி விட்டு முன்போல் 5 பலம் (175 கிராம்) மிளகாய் இலையை அரைத்துக் கவசித்து முன்போல் வறுத்து, முன் பதத்தில் எடுத்துக் கொள்ள வும். இவ்விதம்மூன்றாந்தடவையும் செய்து கொள்ளவேண்டும்.

இந்தக் கட்டியை நிறுத்துஇதுகண்ட எடைக்குச் சமனெடை நவச்சாரம், சமனெடை நன்றாக வெந்த சுண்ணாம்புக்கல், இவ்விரண்டையும், வெண்ணெய் போலரைத்து மேற்படி கட்டிக்குக் கவசித்துக் கொள்க. இரண்டு செங்கற்களைச் சமமாகத் தேய்த்து ஒரு செங்கல்லின் மத்தியில் குழித்து அதில் மேற்படி கவசத்தை வைத்து மறு செங்கல்லைப் பொருத்திச் சந்திற்கு மூன்று சீலைமண் செய்துலர்த்தி இலகுபுடமாக இட வேண்டும். இது உருகும் சமயத்தில் ஒருவிதவாசனையுண்டாகும். அந்த வாசனை வந்தவுடன் புடத்தைப் பிரித்துக் கட்டியை எடுத்து ஆறவைத்துத் தூள் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ¼ முதல் ½ குன்றிமணியெடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், இளக வகைகள் முதலிவைகளாம்.

தீரும் நோய்கள்:- எல்லா வகைச் சுரங்களும், கப நோய்களும் தீரும்.

## 810. தாளக உருக்கு [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்), இதனை மேலே சொன்னதுபோல் மிளகாயிலையை அரைத்துக் கவசித்து மூன்று தடவை வறுத்துக் கொள்ளவேண்டும் பிறகு குதிரைக் குளம்பின் சீவல் 5 பலம் (175 கிராம்) இதனை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சிறு கலயத்தில் போட்டு அதன்மீது தாளகத்தை வைத்து அதன்மீது குளம்புச் சீவலின் மறு பாகத்தையும் போட்டு அழுத்தி வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து கவசத்தின் 4 பங்கெடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கத் தாளகமானது உருகியிருக்கும். அதனையெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன். இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- சுரநோய்கள், இருமல் நோய்கள் முதலியவைகள் தீரும்.

குறிப்பு:- மேற்கண்ட தாளக உருக்குகள் நெருப்பில் போட்டால் புகையும். ஆயினும், குணத்தில் சிறந்ததாயிருக்கும். ஆனால், கட்டின தாளகத்தை உருக்காகச் செய்துகொண்டால் நெருப்பிற்கு ஜெயித்து நிற்பதுடன் அதிக மேலான குணத்தைத் தருமென்பதிற் சந்தேகமில்லை.

## 811. தாளக பற்பம்

தாளகம் 2 பலம் [70 கிராம்] இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். முன் சுத்தி, கிரமமுறையில் சொல்லியிருக்கிற விதம் சுண்ணாம்புக்கல்லில் வைத்துப் பனங்கள்ளை விட்டு நீற்று முறைப்படி மடக்கி மடக்கிஐம்பதுதடவைகள் செய்து கொள்ள வேண்டும்; பிறகு ஒரு ரஸ்தாளி வாழைப்பழத்துக்குள் மேற்படி கட்டியைச் செலுத்தி ஒரு கயிற்றில் கட்டி ஒரு படி காடியை ஒரு பானையில் விட்டு அதன் மத்தியில் மேற்படி பழத்தைத் தொங்க விட வேண்டும். ஆனால், அந்தப் பழமானது பாத்திரத்தின் அடியில் படாமல் நாலங்குலத்திற்கு மேலாகவே தொங்கும்படி கட்ட வேண்டும். காடியெல்லாம் சுண்டின பின்பு தாளகக் கட்டியையெடுத்து தண்ணீர்விட்டலம்பி மறு பழத்திற்குள் வைத்து முன் போல் காடியில் தொங்கவிட்டு முன்போல் எரித்து எடுக்க வேண்டும் இவ்விதம் மடக்கி, மடக்கி மூன்று தடவைகள் செய்து எடுத்துக் கொள்ளவும்,

மேற்படி கட்டி இருபது வராகனெடை யிருந்தால் பதி
னைந்து வராகனெடை சீனாக்காரத்தைச் சட்டியிற் போட்டு
உருக்கி, அதில் மேற்படி ட்டியைப் போட்டுப் புரட்டிப்
புரட்டிக் கட்டியின்மீது கவசிக்கும்படி செய்தால் எல்லாம்
கட்டியின்மீது ஒட்டிக்கொள்ளும்; பின்பு இரண்டு பலம் (70
கிராம்) வெள்ளுள்ளியிதழ்களின் தைலமெடுத்து அந்தத்
தைலத்தை மேற்படி கவசத்தின்மீது எங்குந்தடவி உலர்த்தி
மேற்படி சக்கையை அரைத்து அதன்மீது கவசித்து அதன்மீது
ஐந்து சீலைமண் செய்து 40 பலம் (1400 கிராம்) வராட்டியை
அடுக்கி அதன்மீது காற்படி புளியம் புறணியைப் போட்டு
அதன்மீது மேற்படி கவசத்தை வைத்து அதன்மீது கால்படி
புளியம்புறணியைப் போட்டு அதன்மீது 40பலம் (1400
கிராம்) வராட்டியை அடுக்கி நெருப்பிட்டுப் புடமிட
வேண்டும். புடம் ஆறின பின்பு எடுத்தால் தாளகமானது
வெண்ணிறமாகப் பற்பித்திருக்கும். அதனைத் தனியே எடுத்து
வைத்துக் கொள்ளவேண்டும். அதன்மீதுள்ள படிக்காரக்
கவசத்தையும் எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ள வேண்
டும்.

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை

அனுபானம்:- வெண்ணெய், நெய், இளக வகைகள், தூது
வேளை இலையைப் பிட்டவித்துப் பிழிந்த சாறு முதலியவை
களாம்.

தீரும்நோய்கள்:- சயம், சய சம்பந்த சுரம், பலவகை
சுரம், காசம், இருமல் உளைமாந்தை முதலிய கபநோய்களெல்
லாம் தீரும்.

பத்தியம்:- சமயோசிதம் போலவும், நோயின் வலிமைக்
குத் தகுந்தது போலவும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் படிக்
கார பற்பத்தை வேளைக்கு 1 முதல் 2 குன்றிமணி எடை
கொடுக்க சாதாரண இருமல் முதலியவை தீரும்.

குறிப்பு:- தாளக பற்ப முறைகளில் இது மிகவும் அரிய
முறை இதன் சுத்தியில் ஐம்பது தடவை பனங்கள்ளில்
செய்யச் சொல்லியிருப்பதை பற்றிச் சில சோம்பல் சுபாவ
முடையவர்கள் வீணாக மயங்குவார்கள் ஐம்பது தடவையும்
இரண்டு நாளைக்குள் சாதாரணமாகச் செய்து முடிக்கலாம்.
அப்படிச் செய்து வைத்துக்கொண்டால் நல்ல சமயங்களில்
உதவும்.

## 812. தாளகப் பற்பம் [வேறு]

தாளகக் கட்டி தேவையான அளவு, ஒரு கலயத்தில்
நாலங்குலமிருக்கும்படியாக வெந்த சுண்ணக்கல்லைப்போட்டுப்
பரப்பி அதன்மீது தாளகத்தை வைத்து அதன்மீது சுண்ணக்

கல்லைப் போட்டு அது நீறிப் போகும்படியாகக் கழுதை மூத்திரத்தை விட்டு ஒரு நாள் வைக்க வேண்டும். (தாளகத்தை ஒரு துணியில் தளர முடிந்து வைத்ததால் உத்தமம்). மறுநாள் அந்தத் தாளகத்தை எடுத்துக் கொண்டு முன்போல் சுண்ணாக் கல்லுக்குள் வைத்து முன்போல் கழுதை நீரை விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தடவைகள் செய்து கொள்ளவும். பிறகு அரைப்படி கழுதை மூத்திரத்தில் 2 பலம் (70 கிராம்) சவுக்காரத்தைக் கரைத்து மேற்படி தாளகத்தைக் கிழிக்கட்டித் தொங்க வைத்துப் பத்து நாழிகை நேரம் எரிக்க வேண்டும். இவ்விதம் மடக்கி, மடக்கி மூன்று தடவைகள் செய்து கொண்டால் தாளகமானது எண்ணெய் கக்கிச் சுத்தியாகும்.

பசுவின் ஊனாக்கட்டாரிச் சாணியில் ஒரு பெரிய குகையும் மூடியுஞ் செய்து அதில் அரைப்படி அரசம்பட்டைச் சாம்பலைப் அதன்மீது முன்சுத்தி செய்த 1பலம்(35 கிராம்)தாளகக்போட்டு கட்டியை வைத்து அதன்மீதும் அரைப்படி அரசம்பட்டைச் சாம்பலைப் போட்டு மேல்மூடிச் சந்தில்லாமல் நன்றாகப் பொருத்திக் கொஞ்சம் நீர் சுண்ட வெய்யிலில் வைத்து நீர் சுண்டின பதத்தில் ஒரு முழப் புடமிடவேண்டியது குளிர ஆறின பின்பு அதைப் பிரித்துக் கட்டியை எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து ஒரு நாள் சென்று மறுநாள் எடுத்தால் மலர்ந்து பற்பமாகியிருக்கும். அதனை புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்:- திராட்சைப்பழம், வெண்ணெய், நெய், இளக வகைகள் முதலியவைகளாம்

தீரும் நோய்கள்:- சுரநோய்கள், இருமல் நோய், சயம், சுவாசகாசம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

பத்தியம்:- சபயோசிதம்போல ஏற்படுத்தவும்.

## 813 தாளக பற்பம் [வேறு]

தாளகம் 1½ பலம் (52½ கிராம்), இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். காற்படி கற்சுண்ணாம்பை ஒரு கலயத்திற் போட்டு அதன்மீதும் காற்படி சுண்ணாம்பைப் போட்டு அதன் மீது சிறுநீர், கழுதைநீர், பனங்கள், நன்றாய்க் கொதிக்கும் வெந்நீர் ஆகியவைகளில்ஒன்றைவிட்டு நீற்றி முன்சொல்லியிருக்

. கழுதைநீர் அகப்படாத சமயத்தில் பனங்கள்ளு நன்றாகக் கொதித்த வெந்நீர் முதலியவைகளிலும் சுத்தி செய்து கொள்ளலாம்.

கிறபடி சுத்தி செய்யவேண்டும். இவ்விதம் மடக்கி, மடக்கி ஏழு தடவைகள் சுத்தி செய்தால் எண்ணெய் கக்கி சுத்தியாகும். சமயோசிதம் போல் வேறுவிதமாகவும் சுத்தி, செய்து கொள்ளலாம்.

பிறகு, மேற்படி சுத்தி செய்த கட்டியை ஒரு ஓட்டில் வைத்து ஒரு படி தும்பைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்குக் கொடுக்கவேண்டும் பிறகு அந்தக் கட்டியை ஒரு சிறு கலயத்திற் போட்டு அதன்மீது சேவல் இரத்தத்தை மிதக்கவிட வேண்டும். இதற்காக ஒன்று அல்லது இரண்டு சேவல் ரத்தம் போதுமானது. பிறகு நிழலில் வைத்து இரத்தம் சுவறினபின்பு வெய்யிலில் வைத்து நன்றாகக் காய்ந்த பின்பு வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்து முழுப்புடமிடவும் ஆறின பின்பு எடுத்தால் பற்பமாகியிருக்கும். புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1 முதல் 2 அரிசி எடை.

அனுபானம்:- நெய், வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- எட்டு வகை சயநோய்கள், வீக்கங்கள், பித்த சோகை, பாண்டு எலிக்கடி, பிரமை முதலியவை தீரும்.

பத்தியம்:- சமயோசிதம் போலேற்படுத்தவும்.

## 814. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்து கட்டின தாளகம் 1 பலம் (35 கிராம்), தாளிக்காத கற்சுண்ணாம்பு 2 பலம் (70 கிராம்), குப்பைமேனியிலை 2 பலம் (70 கிராம்).

செய்முறை:- பின்கண்ட இரண்டையும் வெண்ணெய் போலரைத்து மேற்படி கட்டிக்குக் கவசித்து உலர்த்திக் கோழிப் புடமிடவும், ஆறின பின்பு எடுத்தால் பற்பமாகியிருக்கும். புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- $\frac{1}{2}$ முதல் 1 அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சயம், விஷபாகம், பாண்டு, சுரம், வீக்கம், பித்தநோய், பைத்தியம், எலிக்கடி முதலியவை தீரும்.

பத்தியம்:- சமயோசிதம் போலேற்படுத்தவும்.

## 815. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து அது முழுகி நிற்கும்படியாக

எருக்கம்பாலை விட்டு, 20நாள் ஊறவைக்க வேண்டும். இதற்கிடையில் இரண்டு மூன்று தடவைகள் புதிய எருக்கம்பாலையும் விட்டு வரலாம். பிறகு நன்றாயுலர்ந்த பின்பு ஒரு பானையில் இரண்டுபடி அரசம்பட்டைச் சாம்பலைப் போட்டு மேற்படி கட்டியை அதன்மீது வைத்து அதன்மீதும் ஒரு படி சாம்பலைப் போட்டு சாமநேரம் விராலி விறகால்எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு எடுத்தால் பற்பமாகியிருக்கும்.

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- மேற்கண்ட நோய்களும் இன்னும் அநேக வகை நோய்களும் தீரும். இதுவும் இந்த வகையில் மிகவும் சிறந்தது. அனுபவத்தில் இதன் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

## 816. தாளக பற்பம் [வேறு]

நன்றாக சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்; பச்சைக்கஞ்சா இலைச்சாறு 2½பலம் (87½ கிராம்) நத்தைச்சூரி சமூலச்சாறு 2½ பலம் (87½ கிராம்) கோரோசனை 1 வராகன் எடை (3½ கிராம்) புளியம் புறணியைச் சுட்ட சாம்பல் 1 படி.

செய்முறை:- இரண்டு வகைச் சாற்றையும் ஒன்றாகக் கலந்து தாளகக் கட்டியை அப்பிரகத் தகட்டின் மீதுவைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுறுக்கிட வேண்டும். சாறெல்லாம் சென்ற பின்பு தாளகக் கட்டியை எடுத்து வைத்துக்கொள்க, ஒரு படி பிடிக்கிற பானையில் மேற்படி சாம்பலில் அரைப்படி போட்டு அழுத்தி விட்டு அதன்மீது முன் சித்தப்படுத்தின தாளகக் கட்டியை வைத்து அதன் மேலும் மறுபாதிச் சாம்பலைப் போட்டுப் பானை வாயை மூடிச் சீலை மண் செய்து முழுப்புடமிட வேண்டும் அல்லது அடுப்பின்மீது வைத்து நான்குசாம நேரம் எரிக்க வேண்டும். ஆறின பின்பு எடுத்தால் தாளகமானது பற்பமாகியிருக்கும்.

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்:- தேன், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சயம், ஈளை; இருமல், சுவாசம், காசநோய், சுரநோய் ஆகியவை தீரும்.

## 817. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்), பேய்ப்பீர்க்கின் இலைச்சாறு ¼ படி, அரசம்பட்டைச் சாம்பல் அல்லது புளியம் புறணிச்சாம்பல் 1 படி.

செய்முறை:- மேற்படி தாளகத்திற்கு பேய்ப்பீர்க்கின் இலைச்சாற்றைச் சிறுகச்சிறுக சுருக்கிட்டு மேற்பாகத்தில் சொல்லியிருக்கிறபடி சாம்பலில் வைத்து எரித்துப் பற்பமாக்கிக் கொள்ளவும்.

அளவு;-1 அரிசியெடை.

அனுபானம்:- தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாம்.

தீரும்நோய்கள்:- மேக வகைகள், சயநோய்கள், காச நோய் குட்டநோய், சுரநோய், பித்தவாயு முதலிய நோய்கள் தீரும்

குறிப்பு :- இந்த மூலிகை சம்பந்தமாகச் செய்யப்பட்ட தாளக பற்பமானது இரசவாதத்திற்கும் உபயோகப்படுமெனச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால், அந்தக் கவலையுள்ள மருத்துவர்கள் பரிசோதித்துத் தெரிந்து கொள்ளவும்.

## 818. தாளக பற்பம் [வேறு]

மேற்கண்ட முறைப்படியே நல்லவேளைச் சாற்றால் சுருக்கிட்டு மேற்கண்ட சாம்பல்களில் வைத்து எரித்தும்பற்பமாக்கிக் கொள்ளலாம்.

**அளவு, துணைமருந்து, தீரும் நோய்கள் முதலியவைக ளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.**

## 819 தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35கிராம்) ஆடுதீண்டாப் பாளைச்சாறு செல்லத்தக்க அளவு, புரசம்பட்டைச் சாம்பல் 1 படி.

செய்முறை:- தாளகத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து செம்மையாகக் காயவைத்துக் கொள்ள வேண்டும் பிறகு ஒருபடி கொள்ளத் தக்க மண்பாத்திரத்தில் அரைப்படி புரசம் பட்டைச் சாம்பலைப் போட்டமுத்தி முன் சித்தப்படுத்தின தாளகக் கட்டியை வைத்துஅதன்மீதும் அரைப் படி சாம்பலைப் போட்டமுத்திப் பாத்திரத்தின் வாயை மூடிச் சீலைமண் செய்து அடுப்பின்மீது வைத்து நான்கு சாமம் எரித்துக் கொள்ளலாம். அல்லது, முழப்புபுடம் போட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு.முருகன்
3, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்.

அளவு:- 1 அரிசி எடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன், முதலியவை களாம்.

தீரும்நோய்கள்:- ஈளை, இருமல், சயம், சுவாசகாசம், சுர நோய் ஆகியவை தீரும்

## 820. தாளக பற்பம் [வேறு]

தாளகத்தை மெல்லிய துணியில் முடிந்து சாக்கடைக் கும்பி யில் ஒருவாரம் போட்டு வைத்து எடுத்து நீரில் கழுவி உலர்த் தவும்; இரண்டாந்தடவையும் கழுவி உலர்த்தவும். மூன்றாந் தடவையும் நீரில் கழுவி உலர்த்திக் கொள்ளவேண்டும்.

4 பலம் (140 கிராம்) கொடிவேலி வேர்ப்பட்டையை ஒரு படி தண்ணீரில் போட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்ட வைத்து வடிகட்டி ஒரு சிறு சட்டியில் விட்டு முன் தாளகக் கட்டியைப் போட்டு அகலால் மூடிச் சீலைமண் செய்து எப்போதும் வெய்யிலுள்ள இடத்தில்போட்டு வைக்கவும். ஒரு வாரம் சென்று கவசத்தைப் பிரித்துக் கட்டியை எடுத்துக் கொள்ளவும். பிறகு 10 பலம் [350 கிராம்] குட்டிவிளா சமூலத்தை அரைத்து, மேற்படி கட்டியைப் பொதிந்து ஐந்து சீலைமண் செய்து கடும் வெய்யிலில் ஒருவாரம் உலர்த்தி 30 பலம் (1050 கிராம்) எடையுள்ள வராட்டியில் புடமிட்டுஆறின பின் எடுக்கவும்; பற்பமாகியிருக்கும். ஆனால், எடை குறை யும்; ஆயினும் குணம் சிறப்புடையதாயிருக்கும்.

அளவு:- 1 அரிசி எடை.

அனுபானம்:- தேன், நெய், வெண்ணெய் முதலியவை களாம்.

தீரும்நோய்கள்:- சுரநோய, கபநோய், சயம், ஈளை, குட்டம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 821. தாளக பற்பம் (வேறு)

பவளக் கொடி 1 பலம் (35 கிராம்) இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அது ஆழ்ந்து கிடக்கும்படியாக எருக்கம் பாலை விட்டு, மூன்று நாள் ஊற வைத்து நான்காம் நாள் ஒரு சிறு கலயத்திற்போட்டு வாய்கசுச் சில்லிட்டு ஐந்து சீலைமண் செய்து முழப்புடமிடவும். ஆறியெடுத்தால் அது சுண்ணமா யிருக்கும்.

இந்தச் சுண்ணத்திற்குச் சமனெடை சுத்தி செய்த தாளகத் தைச் சேர்த்து நாமக் கோவையிலைச் சாற்றால் இரண்டுசாம நேரமரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து கோழிப் புடமிட் டெடுக்கச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 அரிசி எடை.

அனுபானம்:- தேன், நெய், சர்க்கரை.

தீரும்நோய்கள்:- சயம், ஈளை, இருமல், சுவாசகாசம், சுரம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:- நல்லெண்ணெய், பெருங்காயம், ஆகிய இவைகளின் வாடைபட்டால் முகம் வீங்கும். ஆகையால் மூன்றுநாள் வரையில் மேற்படி பொருள்களை அறவே நீக்கி வைக்க வேண்டியது.

## 822. தாளக பற்பம் [வேறு]

**சுத்தி செய்த தாளகம் 1பலம் (35 கிராம்), சிறுநீரை வேர்க் குழித்தைலம் செல்லத்தக்க அளவு.**

செய்முறை:- மேற்படி தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரமரைத்து வில்லையாகச் செய்து அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து கவசத்தின் எடைவராட்டியில் புடமிட வேண்டும். ஆறின பின்பு எடுத்து முன் தைலத்தையே வார்த்து ஒருசாம நேரமரைத்து வில்லை செய்து அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கெடை வறட்டியில் புடமிட வேண்டும். மூன்றாவது முன்போலவே அரைத்து சீலைமண் செய்து மூன்று பங்கு வராட்டியிற் புடமிட வேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கி மேற்படி தைலத்தால் அரைத்துஒவ்வொரு பங்கு வராட்டியை அதிகப்படுத்தி ஏழு முதல் பத்து புடமிடலாம். எப்பொழுது பற்பமாகி விடுகிறதோ அதுவே பக்குவமென நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அளவு:- ½ முதல் 1 அரிசி எடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சயம், சுவாசகாசம், எல்லா வகைக் கபநோய், இருமல், சுரம், வாயு முதலிய அநேக நோய்கள் தீரும் இது செய்வதற்குக் கொஞ்சம் கடினமாயினும் குணத்தில் அதிகம் சிறந்ததாக இருக்கும்.

## 823. தாளகச் சுண்ணம்

அவையம் வைத்த கோழி முட்டையோடுகள் தேவையான அளவு, கொஞ்சம் தண்ணீரில் கொஞ்சம் பூநீற்றை அல்லது, உழமண்ணைக் கரைத்து அதில் மேற்படி அண்ட ஓட்டைப் போட்டுக் காய்ச்சியெடுத்து உள்ளேயுள்ள சவ்வை நீக்கி ஈரமுலர்த்தி,

வெடியுப்பு செயநீரை, அல்லது பூநீற்றைக் கரைத்து இறுத்து தெளிவை விட்டு நன்றாக அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி 3 சீலைமண் செய்துலர்த்தி, ஆறு ஏழு பங்கு வராட்டியில் புடமிட்டெடுக்கச் சுண்ணமாகி யிருக்கும்.

இந்தச் சுண்ணம் 4 வராகன் எடை (14 கிராம்), சுத்தி செய்த தாளகம் 8 வாரகன் எடை (28 கிராம்),மொந்தன் பூவை யும் அதன் கிழங்கையும் சமபாகமாக இடித்துப் பிழிந்த சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்து வில்லை தட்டி உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு சீனாக் காரம் 4 பலம் (140 கிராம் இதில் கொஞ்சம் வெண்ணெயைச் சேர்த்து அரைத்து ஓட்டில் வைத்துப் பொரித்துப் பொடித்துக் கொள்ளவேண்டும். இதனை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு வட்டோட்டில் வைத்து அதன்மீது முன் வில்லையைவைத்து அதன்மீது மீதிச் சீனாக்காரப் பொடியையும் வைத்து அழுத்தி அடுப்பேற்றிக் கமலாக்கினியாக இரண்டுசாம நேரம் எரித்தால் எல்லாம் சுண்ணமாகி விடும்.

மிளகு, சீரகம், தாளிசப்பத்திரி, இவைகளை வெதுப்பித் தூள் செய்து வைத்துக் கொள்ளவும்.இந்தச் சூரணம்½ வராகன் எடை (1¾ கிராம்), மேற்படி சுண்ணம் ½ குன்றிமணி எடை. இவ்விரண்டையும் கலந்து தேனிற் குழைத்துச் சாப்பிட வேண்டும் இவ்விதம் மூன்று வேளை, ஏழு வேளை உபயோகிக்க வும்

தீரும்நோய்கள்:- சயம்,சுவாசகாசம், இருமல், சுரம், வாயு முதலிய பலநோய்கள் தீரும்.

## 8-4. தாளகச் சுண்ணம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) விஷ்ணுகிரந்தி சமூலச்சாறு ¼ படி.

செய்முறை:- மேற்படி தாளகக்கட்டிக்கு மேற்படி மூலிகைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிட வேண்டும். பிறகு ஐந்து பலம் (175 கிராம்) அந்த மூலிகையையே வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தியிருக்கிற தாளகக் கட்டிக்குக் கவசித்துலர்த்திச் சுக்கான் கல்லைத் தூள் செய்துதும்பையிலைச் சாற்றை விட்டு மைபோலரைத்து மேற்படி கவசங் கொள்ளும் படியாக மூசையும் மூடியும் செய்து அதற்குள் வைத்து ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் ஆறு பங்கெடை வராட்டியிற் புடமிடச் சுண்ணமாகும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 825. தாளகச் சுண்ணம் [வேறு]

(அ) தாளகம் 1½ பலம் (52½ கிராம்) சுண்ணாம்புக்கல், கழுதை நீர் ஆகியவைகளில் ஏழு தடவை சுத்தி செய்து கொண்டால் உத்தமம்; அப்படிச் செய்யக் கூடாத சமயத்தில் வேறு வகைகளாகவும், சுத்தி செய்து கொள்ளலாம். இவ்விதம் சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்), குமரிச்சாறு 1 படி, சிவகரந்தை அல்லது கொட்டைக் கரந்தைச்சாறு 1 படி இவ்விரண்டு சாற்றினால் மேற்படி தாளகத்திற்குத் தனித்தனி சுருக்கிட்டு எடுத்துக் கொள்ளவேண்டும்

(ஆ) இரசம், சிற்றண்டவோடு, பூநீறு, இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்) வெள்ளெருக்கம் பால் செல்லத்தக்க அளவு.

(இ) புரசம்பட்டைச் சாம்பல் 2 படி-

செய்முறை:- [ஆ] விலுள்ள சரக்குகளைப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து மைபோலான பின்பு மேற்படி தாளகத்திற்குக் கவசம் செய்துலர்த்திப் புதுச் சுண்ணாம்பு சீலை மூன்று செய்து காயவைத்து [இ] யிலுள்ள சாம்பலை இரண்டு பங்காக்கி ஒரு பங்கை ஒரு பானையிற் போட்டு அதன் நடுவில் முன் கவசத்தை வைத்து அதன்மீதும் மறுபாகச் சாம்பலைப் போட்டு அழுத்திச் சட்டி வாயை மூடி ஐந்து சீலைமண் செய்து அடுப்பின் மீதேற்றித் தென்னைஓலையினால் நான்கு சாமம் எரித்து ஆற விட்டெடுத்தால் தாளகமானது சுண்ணமாகியிருக்கும்-

அளவு:- ½ முதல் 1½ அரிசி எடை.

அனுபானம்:- தூதுவளைச்சாறும், நெய்யும் கலந்த கலவையாம்.

தீரும் நோய்கள்:- சயம், காசம், குட்டம், தாதுநட்டம், சுர நோய்கள், மாந்தாக்கினி நோய் முதலிய அநேக நோய்கள் தீரும். பொதுவாய் இது எல்லா நோய்களுக்கும் உபயோகப்படும். பசி தீபனம் அதிகமுண்டாகும். சாப்பாடு அதிகமாகச் செல்லும்.

## 826. தாளகச் சுண்ணம் (வேறு)

சுத்தி செய்த தாளகம் 2 பலம் (70 கிராம்), வெண்சங்கம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி சங்கம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வில்லை செய்து உலர்த்திக் கொள்ளவும்.

வீரம், நவச்சாரம், வெடியுப்பு, பழப்புளி இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்) இவையெல்லாவற்றையும் மைபோல அரைத்து வில்லையின் மீது கவசித்துலர்த்தி ஏழு சீலைமண் செய்துலர்த்தி 40 பலம் (1400 கிராம்) வராட்டியில் புடமிட்டு, ஆறினபின் எடுக்கச் சுண்ணமாகியிருக்கும். இதனைப் புரசம் சாம்பலிலும் மேற்கண்ட பாகப்படி வைத்துஎரித்துக்கொள்வது எளிய வழி.

அளவு:- ½ முதல் 1 அரிசிஎடை.

அனுபானம்:- தூதுவளையிலைச் சாறும் தேனும் கலந்து தாம்.

தீரும்நோய்கள்:- சயம் காசம், இருமல், சுரம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 827. தாளக பற்பம்

சுத்தி செய்த தாளகம் 3¼ வராகனெடை, தூள் செய்த கழற்சிக்காய்ப் பருப்பு 3 வராகனெடை, சீனக்காரத்துள் 3¼ வராகனெடை.

செய்முறை:- ஒரு சிறு அகலில் பாதிக் கழற்சிப் பருப்புத் தூளை வைத்துப் பரப்பி, அதன்மீது பாதி சீனாக்காரப் பொடியை வைத்துப் பரப்பி, அதன்மீது தாளகத்தை வைத்து, அதன்மீது மீதிப் பாதிச் சீனாக்காரப் பொடியைப் போட்டு, அதன்மீது மீதிக் கழற்சிப பருப்புப் பொடியைப் போட்டு மேல கல் மூடி ஐந்து சீலை மண் செய்துலர்த்தி, மூன்று வீசை காட்டெருவில் புடமிட்டு ஆறின பின்பு எடுத்தால் பற்பமாகியிருக்கும்.

அளவு:- ½ முதல் 1 அரிசி எடை.

அனுபானம்:- வெண்ணெய், வெற்றிலை, இன்னும் அந்தந்த நோயிற்குத் தகுந்த இளகம், சூரணம் முதலியவைகளில் சேர்த்துக் கொடுக்கலாம். நோயிற்குத் தகுந்தபடி ஒரு மண்டலம், அரை மண்டலம் உபயோகிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் :- குட்டம், பெருவியாதி, வெண்குட்டம் நாட்பட்ட கிரந்திநோய், இரத்தக் கெடுதியினாலுண்டாகும் பல நோய்கள் முதலியவை தீரும்.

## 828. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) இதனை ஒரு வீசை வேப்பெண்ணெயில் முன் சொல்லியிருக்கிற பாகப்படி கட்டிக் கொள்ளவேண்டும். பிறகு 6 பலம்(210 கிராம்)வேப்பங் கொழுந்தை அரைத்து இதன்மீது கவசித்து மூன்று சீலைமண்

செய்முறை:-மேற்படி இரண்டு சரக்குகளையும் தனித்தனியே பொடித்துப் பிறகு ஒன்றாகச் சேர்த்து மேற்படி இலைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நன்றாக நான்கு சாம நேர மரைத்து வில்லை செய்துலர்த்தி மேற்படி சாம்பலில் பாகப்படி வைத்து நான்கு சாமநேரம் எரித்து ஆறின பின்பு எடுக்கப் பற்பமாகும்.

அளவு:- ½ முதல் 1 அரிசியெடை.

அனுபானம்:- தேன், வெண்ணெய், நெய் முதலியவை களாம்.

தீரும்நோய்கள்:- பசி தீபனத்தை அதிகப்படுத்தும். தாது வலிமையையும், உடல்வலிமையையும்விருத்தி செய்யும். இரத்தக் கெடுதியையும் அதனால் நேர்ந்த நோய்களையும் நீக்கி இரத்த சுத்தியை உண்டாக்கும்.

## 832. தாளக பற்பம் (வேறு)

**சுத்தி செய்த தாளகம் 3¼ வராகனெடை, பருமனான** வெற்றிலை 12.

செய்முறை:- தாளகத்தைப் பொடித்து மேற்படி வெற்றி லையையும் சேர்த்தரைத்து வில்லை செய்துலர்த்தித் தாளிக்காத அரைப்படி சுண்ணாம்பை ஒரு பானையிற் போட்டு, அதன்மீது வில்லையை வைத்து அதன்மீது அரைப்படி சுண்ணத்தைப் போட்டு மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து அடுப்பின்மீது வைத்து நான்கு சாமம் எரித்து ஆறினபின்பு எடுத்தால் தாளக மானது பற்பமாகியிருக்கும்.

அளவு:- 1 முதல் 1½ அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், காய்ச்சினபால் முதலியவை களாம்.

தீரும்நோய்கள்: சுரம், சயகாசம், நரம்பைப்பற்றின நோய்கள் ஆகியவை தீரும்.

## 833. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகத்தைச் சோற்றுக்கற்றாழைச் சாற்றில் நான்கு சாமமரைத்து, வில்லை செய்துலர்த்தி முள்முருக்கின் சாம்பலில் வைத்து முறைப்படி எரிக்கப் பற்பமாகிவிடும்.

அளவு:- 1 முதல் 1½ அரிசியெடை.

அனுபானம்:- சமயோசிதம்போல் சேர்க்கவும்.

தீரும்நோய்கள்:- பெருவியாதி, வெண்குட்டம், நாட்பட்ட கிரந்தி நோய்கள், இரத்தக் கெடுதியினாலுண்டான வியாதிகள் ஆகியவை தீரும்.

## 834. தாளக பற்பம் (வேறு)

மேற்கண்டபடி சோற்றுக் கற்றாழைச் சாற்றாலரைத்து மேற்கண்டபடி புரசம்பட்டைச் சாம்பலில் வைத்து எரிக்கப் பற்பமாகிவிடும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய்களெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 835. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்), திருநீற்றுப் பச்சை இலை 1 பலம் 35 கிராம். இதன் இலையை அரைத்து மேற்படி கட்டிக்குக் கவசம் செய்து ஒரு முழ நீளமும், ஒரு அடி சுற்றளவுமுள்ள வேப்பங்கட்டையை நடுப்பாகம் வரை நீளத்தில் துவாரம் செய்து அதற்குள் மேற்படி கவசத்தைச் செலுத்தி அந்தத் துவாரத்தை மேற்படி தூளினாலேயே அடைத்துக் கிட்டித்துக் கட்டையின்மீது மூன்று சீலைமண் செய்து சதுரக் குழி தோண்டி ஒரு கெச புடமிட வேண்டும். மூன்று நாள் வரையில் நெருப்பிருக்கும். குளிர ஆறின பின்பு பத்திரமாக எடுத்தால் தாளகமானது விபூதிபோல் மலர்ந்திருக்கும். அதனையெடுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 முதல் 1½ அரிசி எடை.

அனுபானம்:- தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சுரநோய், சயம், இருமல் முதலிய பல வகை நோய்கள் தீரும்.

## 836. தாளக பற்பம் [வேறு[

வெங்காயம் 3 பலம் (105 கிராம்), வளையலுப்பு 3 பலம் [105 கிராம்] இவ்விரண்டையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு ஒரு துணியில் தடவி 1 பலம் (35 கிராம்) சுத்தி செய்த தாளகத்தை அதில் வைத்துப் பலமாகச் சுருட்டி அதன் மீது ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி 1 வீசை [1400 கிராம்] வறட்டியில் புடமிட்டு ஆறின பின்பு எடுத்தால் வெண்ணிறமான பற்பமாகி இருக்கும்.

அளவு:- 1 அரிசி எடை

அனுபானம்:- வெண்ணெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- நாட்பட்ட சுரம் தீரும்; தாதுவளமை உண்டாகும், நீர்த்துப்போன விந்து கெட்டிப்படும்; இன்னும்

அநேக நோய்களுக்கும் உபயோகப்படும்; இரசவாதத்திற்கும் உதவும்.

## 837. தாளக பற்பம் [வேறு]

கற்சுண்ணாம்பு ½ படி, இதனை ஒரு சட்டியில் போட்டு 1¼ படி தண்ணீர் விட்டு நாலைந்து தடவை கலக்கி ஒரு நாள் வைத்து 1 படி தெளிவிறுத்து அதனுடன் 1 படி சிறுநீரையும் ¼ படி குப்பைமேனிச் சாற்றையும் சேர்த்து, 2 பலம்(70 கிராம்) தாளகத்தை எரு மெல்லிய துணியில் தளர்ச்சியாகக் கட்டி அதில் தொங்க விட்டுப் பாத்திரத்தின் அடியிற்படாமல் நாலங்குலம் உயரமிருக்கும்படியாகப் பார்த்து அடுப்பின் மீதேற்றி அந்தந்த நீரெல்லாம் சுண்டுகிறவரையில் எரித்தெடுக்கத் தாளகமானது சுத்தியாகும்.

இவ்விதம் சுத்தி செய்த தாளகம் பலம் (35 கிராம்) காட்டு முருக்கின் இலையைச் சுட்ட சாம்பல் 2 பலம் (70 கிராம்) இதனைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து மேற்படி தாளகத்திற்குச் சமமாகக் கவசஞ் செய்துநன்றாகக் காய வைத்து அதன் மீது ஒரு சுண்ணாம்புச் சீலைமண் செய்து காய வைத்து ஒரு சட்டியில் நான்கு விரற்கிடை மணலைக் கொட்டிக் கவசத்தை அதன்மீது வைத்துச் சட்டி நிறைய மணலைக் கொட்டி மேற் சட்டி மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பின் மீதேற்றி நான்குசாம நேரம் கமலாக்கினி, காடாக்கினியாக எரித்துக் குளிர ஆற வைத்து எடுக்கப் பற்பமாகி இருக்கும். பத்திரமாக எடுத்துக் கொள்ளவும்,

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்: துளசிச்சாறு. தூதுவளைச்சாறு வெண்ணெய் திராட்சைப்பழம், நெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- சுரங்கள், சன்னிகள், காசம். சயம் முதலியவைகள் தீரும்,

பத்தியம்:- சமயோசிதம் போலவும் நோய்க்குத் தகுந்த படியும் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 838. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்து கட்டின தாளகம் 1 பலம் (35 கிராம்) வெடியுப்பு, படிக்காரம். நவாச்சாரம், மடலரிதாரம், கோது நீக்கிய பழம்புளி இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்) இந்த

குறிப்பு :- இந்தப் பற்பமானது சற்று வேகமுள்ளது. சில முரட்டு உடல்களுக்கு இவ்வகை மருந்து தான் உபயோகப்படுகிறது. ஆகையால் அவ்வகையார்களுக்கு உபயோகப்படும் படியாக இதனையும் இங்கு எழுதியிருக்கின்றோம்.

## 840. தாளக பற்பம் வேறு

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி தாளகத்தை கல்வத்திலிட்டுப் பொடித்துப் பிறகு அண்டச் சுண்ணத்தையும் சேர்த்து ஒருமணி நேரம் கலக்கும்படியாக அரைத்துப் பிறகு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடிஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 அரிசி எடை.

அனுபானம்:- தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சுரம், சன்னி, சயம் முதலியவைகள் தீரும்.

## 841. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்து கட்டின தாளகம் 1 பலம் (35 கிராம்) மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம் 3 பலம் (105 கிராம்), சோற்றுக் கற்றாழைசாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி கடுக்காய்ச் சூரணத்தைக் கல்வத்தில் இட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலாகிற வரையில் அரைத்து மேற்படி கட்டிக்குச் சிறுகச் சிறுகவும், உலர உலரவும் கவசம் செய்து முடிவாக நன்றாக உலர்த்தி அதன்மீது மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை வராட்டியில் புடமிடப் பற்பமாகும்.

அளவு:- 1 முதல் 2 அரிசி எடை

அனுபானம்:- தேன், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- எலிக்கடி, சுரநோய் ஆகியவைகள் தீரும்.

---

* இதன் முறைகள் நமது நவநீதத்தில் அநேகம் சொல்லப்பட்டிருக்கின்றன; அவற்றுள் விருப்பமான ஒன்றைச் செய்து கொள்ளவும்.

இந்தையும் முதலில் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு மைபோல அரைத்துக் குகையும் மூடியும் செய்து மூன் தாளகத்தை அதற்குள் வைத்து ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி 40 பலம் (1400 கிராம்) எருவில் புடமிட்டு ஆறின பின் எடுக்க வெண்ணிறமான பற்பமாகியிருக்கும்.

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்:- மேற்கண்டவைகளாம்.

தீரும்நோய்கள்:- சுரம், இருமல், ஈளை, சயம் முதலிய நோய்கள் தீரும்.

பத்தியம்:- புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

குறிப்பு:- சிலருக்கு இதனால் வாந்தி, விக்கல் முதலியவை காண்பதுண்டு. அப்படிக் கண்டால் பச்சைக்கடலையைச் சிறு நீரில் ஊற வைத்து அரைத்துக் காய வைத்து வேளைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம வீதம் ஆறு வேளை கொடுத்தால் மேற்படி வாந்தி, விக்கல் முதலியவை குணமாகும்.

## 839. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 2 பலம் (70 கிராம்) இதனைச் சிறு பிள்ளைகளின் மூத்திரத்தில் கிழிக்கட்டித் தொங்க வைத்து எரித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடச்கி மடக்கி மூன்று தடவைகள் செய்ய அதிலுள்ள எண்ணெய் எல்லாம் வெளிப் பட்டுப் போகும். பிறகு இதனை ரேக்குகளாகப் பிளந்து நீரில் கழுவி உலர்த்தி ஒவ்வொரு ரேக்கின் பேரிலும் வெள்ளைக்காக் காட்டான் இலையை அரைத்து விழுது ஒரு அங்குலம் கவசம் செய்து வெய்யிலில் வைத்து உலர்த்தி அதன்மிது தனிச்சீலை சுற்றி, அதன் மேல் களிமண்ணையும் புற்றுமண்ணையும் சேர்த்தரைத்து ஏழுசீலை செய்துஉலர்த்தி எட்டு எருவில் புடம் போடவும். ஒவ்வொன்றிலும் தனித்தனியாகச் சேலைத் துண்டைச் சுற்றிப் பிறகு இவற்றை ஒன்றாகச் சேர்த்துக் களி மண்ணையும் புற்றுமண்ணையும் அரைத்துச் சீலைசெய்து புட மிட வேண்டும். புடம் எரியும்போது கவனத்துடன் இருந்து அழுகல் நாற்றம் கண்டவுடன் புடத்தைக் கலைத்து விட்டுப் புடம் ஆறின பின்பு எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், தேன் முதலியவை களாம்.

## 842. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்து கட்டின தாளகம் 1 பலம் (35 கிராம்), கோது கொட்டை முதலியவை நீக்கின புளி 3 பலம் (105 கிராம்) உப்பு 2 பலம் (70கிராம்).

செய்முறை:- பின் கண்ட இரண்டையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலானபின்பு மேற்படி தாளகக் கட்டிக்கு உலர உலரக் கவசஞ்செய்து முடிவாக உலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்ப மாகியிருக்கும்.

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், தேன், நெய், இளக வகைகள் முதலியவைகளாம்,

தீரும்நோய்கள்:- சுரநோய்கள், சயம், இருமல் முதலிய நோய்கள் தீரும்.

## 834. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) புளித்தபனங்கள் 12 பலம் (420 கிராம்) பொற்கொன்றைப் பட்டைச்சாறு 12 பலம் (420 கிராம்) கருடன் கிழங்குச்சாறு 12 பலம் (420கிராம்) வன்னியிலைச்சாறு 12 பலம் (420 கிராம்) அரசம்பட்டைச் சுட்டசாம்பல் 2 படி.

செய்முறை:- மேற்படி தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பனங்கள்ளைச் சிறுக சிறுக வார்த்து அரைக்க வேண்டும். 12 பலம் (420கிராம்) கள்ளும்சென்றபின்பு ஒரே வில்லையாகச் செய்து வெயிலில் வைத்துச் கொஞ்சமும் ஈர மில்லாமல் உலர்ந்த பின்பு மேற்படி சாம்பலை இரண்டு பாக மாக்கி ஒரு பாகத்தை ஒரு பானையிற் போட்டு அழுத்தி அதன் மீது முன் சித்தப் படுத்தின தாளச வில்லையை வைத்து மறு பாகச் சாம்பலையும் போட்டழுத்திப் பானைவாயைச்சராவக்கி யால் மூடி மூன்று சிலைமண் செய்துலர்த்தி தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு சாமம் காடாக்கினி ஒரு சாமம் ஆகமூன்று சாமமெரித்து ஆறவிட்டுக் குளிரஆறின பின்பு எடுத் தால் காற்பங்கு பற்பமாகியிருக்கும்.

இவ்விதம் காற்பங்கு பற்பமானதைக் கல்வத்திலிட்டுப் பொற் கொன்றைச் சாற்றை விட்டு முன்போலரைத்து மூன் போல் வில்லை செய்துலர்த்தி முன்போல் சாம்பலுக்குள் வைத்து முன்போல மூன்று சாமம் எரித்துக் குளிர ஆறின பின்பு எடுக்க அரைவாசி பற்பமாகியிருக்கும்.

குறிப்பு:- மேற்படி அரசம்பட்டைச் சாம்பலை எல்லா எரிப்பிலும் சேர்த்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தடவைக்கும் புதிய சாம்பல் வேண்டுமென்பது அவசியமில்லை.

அரைவாசி பற்பமானதைக் கருடன் கிழங்குச் சாற்றிலும் முன்போலவே அரைத்துச் சித்தப்படுத்தி எரித்தெடுக்க முக்கால் வாசி பற்பமாக இருக்கும்.

முக்கால்வாசி பற்பமானதை வன்னியிலைச் சாற்றில் மேற் கண்டபடி சித்தப்படுத்திக் கொள்ள முழுவாசியும் பற்பமாகி இருக்கும்.

இதனைக் குறைந்தது மூன்றரை மாதத்திற்குப் பின்பு உப யோகப்படுத்தவேண்டும். எட்டுமாதம் சென்று உபயோகித் தால் அதிக குணத்தைத் தரும்.

அளவு:- ஒரு கடுகு முதல் மூன்று கடுகு வரை

அனுபானமும், தீரு நோய்களும்:- வெள்ளைப் பூண்டின் சாற்றில் உபயோகிக்க வாத ஆதிக்கமும், குளிர்ந்த நீரில் உபயோகிக்க வாதமும் தீரும்.

நெய்யிற் கொடுக்கப் பித்த ஆதிக்கமும், கள்ளிற்கொடுக்கப் பித்தமும் தீரும்.

தேனிற்கொடுக்க கபஆதிக்கமும், வெந்நீரில் கொடுக்கக் கபமும் குறையும்.

வாதசுரத்திற்குக் காடியிலும், பித்தசுரத்திற்கு செம்பருத் திச் சமூலச்சாற்றிலும், சேத்துமசுரத்திற்கு ஊருத்திரத்துளசிச் சாற்றிலும், வாதசன்னிக்குப் பசுவின் மோரிலும், பித்த சன்னிக்கு உருத்திரமணி சமூலச்சாற்றிலும், சேத்துமசன்னிக்குச் செங்கடப்பூரு சமூலச்சாற்றிலும்; இப்பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

சிலேத்தும சீத சுரத்திற்கு காரரிசி அவல் சாராயத்திலும், பித்தவாத சுரத்திற்கு காரரிசிச் சாராயத்திலும், வாதசீத சுரத் திற்கு காரரிசிச் சோற்றுச் சாராயத்திலும் முறையே அளவுப் படி சேர்த்துக்கொடுக்க குணமாகும்.

இது, சுயானுபவமுறை; இதனை சிரத்தையுடன் நோய றிந்து தகுந்த துணைமருந்துடன் உபயோகித்தால் ஆச்சரியப் படும்படியான குணத்தைத் தரும். வைத்தியத்தில் திறமைசாலி களெனப் பெயர் பெற்ற ஆங்கிலேய வைத்தியர்கள் முதலானவர்களினால் இனித்தீராதெனக் கைவிடப்பட்ட நச்சு சுரம், நச்சுசன்னி, புண்கள், குட்டங்கள் ஆகியவைதீர்ந்திருக்கின்றன

அதனைத் தகுந்த அவ்வார்க்கள், இளக்கங்கள், சர்பத்துகள் முதலியவைகளோடு சமயோசிதம்போல் சேர்த்து உபயோகித்துத் தீராதெனக் கைவிடப்பட்ட தாதுநட்டமுந் தீர்ந்திருக்கின்றது.

குறிப்பு:- மேற்கண்டபடி எரிப்பதற்குப் பதிலாகத்தடவைக்குத் தடவை அரைகெசம் புடமாகப் போட்டெடுத்துக் கொள்ளலாம்.

பத்தியம்:- சமயோசிதம் போல் ஏற்படுத்த வேண்டியது வைத்தியர்கள் கடமையாகும்.

## விசேடக் குறிப்பு

இதுவரையில் நாம் தாளக பற்பத்தின் அநேக வகைகளை எழுதி வந்தோம். இவற்றுள் பெரும்பான்மையும் கைவல்யமானவைகளும், அனுபவ சித்தி பெற்றவைகளும். ஆகையால், திறமைசாலிகள் முறைப்படியும் கைபாகமாகவும் செய்து கையாண்டு சந்தோசிப்பார்களென நம்புகின்றோம். ஆனால் சில கனவான்கள் முறைகளை, முறைப்படி செய்யாமல் முறைபிசகென சொல்வாருமுண்டு. ஆகையால், அத்தகையினர்கள் சற்று தயவு செய்து விடாமுயற்சியுடன் அடுத்தடுத்து இரண்டு மூன்று தடவைகள் செய்வார்களாயின், அதன் மர்மங்களெல்லாம் செவ்வனே விளங்குமென்பது திண்ணம். இந்தத் தாளகத்தின் பற்பவகைகள் இன்னும் அநேகமிருப்பினும் பெர்துவாக இம்முறைகள் போதுமானவைகள். ஆகையால் இத்துடன் நிறுத்தி வெள்ளை தாளகத்தின் அல்லது கோதந்தி தாளகத்தின் முறைகளைச் சொல்வோம்.

இதனை வெள்ளைத் தாளகமெனச் சொல்வதுமுண்டு.

## 844. கோதந்தி தாளக பற்பம்

மேற்படி தாளகம் $3\frac{1}{4}$ பலம் ($113\frac{3}{4}$ கிராம்) வெண்ணிறமான வெங்காயம் 6 பலம் (210 கிராம்).

செய்முறை:- வெங்காயத்தை வெண்ணெய்போலஅரைத்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு அகலில் வைத்து அதன் மீது மேற்படி தாளகத்தை வைத்து அதன்மீது மறுபாகத்தை வைத்து மேலகல் மூடிச் சந்தில்லாமல் மூன்று சீலைமண் செய்து ஈரமுலர்த்தி நூறு பலம் 3500 கிராம் வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 2 முதல் 4 அரிசியெடை.

அனுபானம்:- திராட்சைப்பழம்.

தீரும்நோய்கள்:- எல்லாவித சுரங்களையும் ஆச்சரியப் படும் படியான விதமாகக் குணப்படுத்தும்.

### 845. கோதந்தி தாளக பற்பம் [வேறு]

மேற்படி தாளகம் 3 வராகன் எடை (10 ½ கிராம்), நாயுருவிச்சாம்பல் ½ படி.

செய்முற:- அரைப்படி கொள்ளும்படியான ஒரு கலயத்தில் மேற்படி காற்படி சாம்பலைப் போட்டமுத்தி அதன்மீது கட்டியை வைத்து அதன்மீது மறுகால்படி சாம்பலைப் போட்டு வாயை அகலால் மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றி இலந்தை விறகால் இரண்டு மணிநேரம் எரித்து ஆறவிட் டெடுக்கப் பற்பமாகியிக்கும்.

அளவு:- ஒரு அரிசியெடை முதல் கால் குன்றிமணி எடை.

அனுபானமும்:- உபயோகமும்:- வெற்றிலையுடன் அல்லது பாலாடையுடன் காலை, மாலை இரண்டு வேளையும் ஏழு நாள் உபயோகித்தால் எல்லா வகை இருமல்களும் குணமாகும். இருபத்தொரு நாள் உபயோகித்தால் சுவாசகாச நோய் தீரும். மூன்று நாள் உபயோகித்தால் எல்லா வகைச் சுரங்களும் தீரும். எத்தனை நாட் சென்றதாயினும் சரியே.

### 846. கோதந்தி தாளக பற்பம் [வேறு]

மேற்படி தாளகம் வாரகனெடை 3 (10 ½ கிராம்( வேப்பிலைக் கொழுந்து 6 பலம் (210 கிராம்)

செய்முறை:- வேப்பங்கொழுந்தை வெண்ணெய் போலரைத்து மேற்படி கட்டிக்குக் கவசம் செய்து ஐந்து சீலை மண் செய்துலர்த்தி 100 பலம் (3500 கிராம்) வராட்டியில் புட மிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகியிருக்கும்.

அளவு:- 2 முதல் 4 அரிசியெடை

அனுபானம்:- பாலாடை, வெண்ணெய் முதலியவைகளாம்

தீரும் நோய்கள்:- இருமல், சுரம், சிராவக நோய் ஆகியவைகள். தீரும்.

குறிப்பு:- இது வறட்சி சுபாவமுடையது. ஆகையால் இதை உட்கொண்டவுடன் பசுவின் பாலைப் பருகச் செய்யவேண்டும்.

### 847. கோதந்தி தாளக பற்பம்

மேற்கண்ட முறைபடியே சோற்றுக்கற்றாழையில் சித்தப் படுத்திக் கொள்ளவும்.

அளவு, துணைமருந்து, முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 848 கோதந்தி தாளக பற்பம் [வேறு]

முத்தின சிந்தில் தண்டிதும் மேற்கண்ட முறைப்படியே செய்து கொள்ளவும்.

அளவு, துணைமருந்து முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

தீரும் நோய்கள்:- சுரம், கீல்வாயு ஆகியவைகள் தீரும்.

## 849. கோதந்தி தாளக பற்பம் [வேறு]

மேற்படி தாளகம் 3 வராகன் எடை (10½ கிராம்) வாழைக் கிழங்கு 10 பலம் (35) கிராம், இதற்குள் வைத்து மூன்று சீலை மண் செய்து 100 பலம் (3500 கிராம்) வராட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு, அனுபானம் மேற்கண்டவைகளேயாம்

தீரும் நோய்கள்:- சுரம், இருமல் ஆகியவை தீரும்,

## 850. கோதந்தி தாளக பற்பம் [வேறு]

மேற்படி தாளகத்தை நல்லெண்ணெயில் ஒருவாரம் ஊற வைத்துப் பிறகு ஐந்து பலம் (175 கிராம்) அரசங்கொழுந்தை அரைத்துக் கவசித்துச் சீலைமண் செய்து கவசத்திற்குப் பத்துப் பங்கெடை வராட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பமாகி விடும்.

அளவு, அனுபானம், தீரும் நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 851. கோதந்தி தாளக பற்பம் [வேறு]

மேற்படி தாளகம் 3 வராகன் எடை (10½ கிராம்) கண்டங்கத்திரி இலை 6 பலம் (210 கிராம்).

செய்முறை:- மேற்படிஇலையை வெண்ணெய்போலரைத்து மேற்படி கட்டிக்குக் கவசஞ்செய்து அதன்மீது மூன்று சீலைமண் செய்துஉலர்த்திக் கவசத்துக்குப் பத்துப்பங்கெடை வராட்டியில் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

அனுபானமும்: தீரும்நோயும். வெட்பாலைப்பட்டைச்சூரணம் 2 வராகன் எடை [7 கிராம்], தேன் 2 வராகன் எடை [7 கிராம்] இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உண்ண குட்டநோய்கள் தீரும்.

## 852. தாளகச் செந்தூரம்

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35கிராம்) கற்சுண்ணாம்பை நீரில் கரைத்துத் தெளிவெடுத்துக் காய்ச்சின உப்பு 1 பலம் (35 கிராம்), செம்பருத்திப்பூச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி உப்பைச் சேர்த்து மேற்படிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி வச்சிரமூசையிலிட்டு மூசைக்குச் சில்லியிட்டு ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின்பு எடுத்துக் கொள்ளவும். பிறகு இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போலவே செம்பருத்திப் பூச்சாற்றை விட்டு முன்போல் அரைத்து முன்போல் வச்சிரமூசையிற் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி கவனத்துடன் ஏழுபுடமிட்டெடுத்தால் அது சிவந்து செந்தூரமாகியிருக்கும். இதனை புட்டியில் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு: 1 முதல் 3 அரிசியெடை,

தீரும்நோயும் அனுபானமும்:- திருநீற்றுப்பச்சை இலைச் சாறு 3 வராகன் எடை [10½ கிராம்] தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க. கபகாசம் தீரும்.

யானைப்பிரண்டையை வதக்கிப் பிழிந்த சாறு 3 வராகன் எடை (10½ கிராம்) நெய் 1 வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உண்ண, இரத்த காசம் தீரும்.

செவ்விளநீர் 3 வராகன் எடை (10½ கிராம்) தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, வாதச் சிலேட்டும காசம் தீரும்.

மஞ்சட்கடுக்காய்ச் சூரணம் 3 வராகன் எடை [10½ கிராம்] ஆமணக்கெண்ணெய் 3 வராகன் எடை [10½ கிராம்]இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண சுவாச காசம் தீரும்.

வறுத்திடித்த அரிசித்திப்பிலிச் சூரணம் 1 வராகன் எடை [3½ கிராம்] தேன் 1 வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்

...டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, ஈளைக்காசம் தீரும்.

சர்க்கரை 1 வராகனெடை (3½ கிராம்) தேன் 1 வராகனெடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள பித்த காசம் தீரும்.

வெண்மொச்சியிலையை உலர்த்தி இடித்த சூரணம் 1 வராகன் எடை (3½ குராம்) தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவற்றில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, தபசுரம் தீரும்.

வெண்ணெய் 2 வராகன் எடை (7 கிராம்)தேன் 1 வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, வாந்தி விக்கல் ஆகியவை தீரும்.

துளசிச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 1வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, நான்காம் முறைச் சுரம் தீரும்.

தயிர்ச்சக்கையை உலர்த்தின சூரணம் 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை 7 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண சுக்கிலமேகம் தீரும்.

பருத்தி விதைப்பருப்புச் சூரணம் 1 வராகன் எடை 3½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து செந்தூரத்தை அளவுப்படி உட்கொள்ள வெகுமூத்திர நோய் தீரும்.

சங்குச் சூரணம் 1½ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 1½ வராகன் எடை (5¼ கிரரம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, கிராணி, அதிசாரம், ஆகியவைகள் தீரும்.

ஊமத்தையிலைச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண கிருமிநோய், குட்டநோய் ஆகியவைகள் தீரும்.

நாயுருவிச்சாறு 1½ வராகன் எடை (5¼ கிராம்) தேன் 1½ வராகன் எடை (5¼ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண குத சம்பந்தமான நோய்தீரும்.

குப்பைமேனியிலைச்சாறு 1¼ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 1¼ வராகன் எடை 5¼ கிராம் இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, மேகநோய், சிரநோய் ஆகியவைகள் தீரும்.

சந்தனத்தூள் ¼ வராகன் எடை [5¼ கிராம்], தேன் ¼ வராகன் எடை (5¼ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண சகலபேதி, தோடம் ஆகியவைகள் தீரும்.

வசம்பைச் சுட்டெரித்த சாம்பல் ¼ வராகன் எடை(1¼கிராம்) தேன் 1¼ வராகன் எடை [5¼ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, பேதி, சூலை முதலியவைகள் திரும்.

மாதளம் பூத்தூள் 1வராகன் எடை (3¼கிராம்)தேன் 1¼ வராகன் எடை (5¼ கிராம்) இவ்விரண்டையும்சேர்த்துமேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, விக்கல், பேதி ஆகியவைகள் திரும்.

பத்தியம்:- நோயின் பலம், உடல் பலம், உடல் சுபாவம், முதலியவைகளுக்குத் தகுந்தபடி கடினபத்தியமாகவும் இலகு பத்தியமாகவும் ஏற்படுத்த வேண்டியது. இளமையான உடலா னால் இச்சாபத்தியமாகவும் உபயோகிக்கலாம்.

## விண்ணப்பம்

இந்த அருமையான செந்தூரத்தைக் கருசீவியென்றே சொல்ல வேண்டும். இதனை எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கலாம். எந்த உடலினர்க்கும், எந்தச் சமயத்திலும் உபயோகிக்கலாம். கற்சுண்ணாம்பில் உப்பெடுப்பது அதிக கடினமான தெனச் சிலர்எண்ணக்கூடும். இதில் எவ்வித கடினமும் இல்லை. இதற்கு எவ்விதத்திலும் அதிக பணச் செலவுமில்லை; அதிக உடல் உழைப்புமில்லை; தினம் இதற்காக கால்மணி நேரம் செலவழித்தால் போதுமானது. இதன் உப்பைச் சேகரிக்கும் விதம் பின்னெழுதப்படும். இதனை அதிக கவனத்துடன் புடமிடவேண்டும். புடமிடுவதிலும் கவனக்குறைவால் ஏமாந்து போவதுமுண்டு; ஆகையால், ஆரம்பத்தில் மிகவும் குறைந்த அளவாகப் புடமிடவேண்டும். ஆல்லது, மேற்படி பாகத்தில் கண்ட எடை வராட்டியைக் கொளுத்திப் புகை அடங்கின வுடன் அதிற் மேற்படி கவசத்தை வைத்துக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கொள்ளலாம் ஏழு புடமென்னும் கணக்கு அவசியமில்லை. நன்றாக உருக்கிச் சிவக்கிற வரையில் எத்தனை புடமானபோதிலும் அத்தனைப்புடமும் போட்டுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு புடமான பின்பும் இதனை நிறுத்துக் குறையும் எடைக்கு அவ்வளவு கற்சுண்ணாம்பு உப்பைச் சேர்த்துக் கொண்டு வரலாம். அப்படிச் செய்வதனால் அதன் குணம் சிறப்பிடையதாகும். இதனைச் சற்று சிரமத்துடன் முயற்சி பாகப்படி செய்து கொண்டால் அதிக உபயோகமாயிருக்கும்.

## 853 கற்சுண்ண உப்பு

நன்றாக வெந்த கற்சுண்ணாப்பு 10 படி, கடல் நீர் அல்லது பனி நீரில் 20 படி. கற்சுண்ணத்தை ஒரு மண்பாண்டத்திற் போட்டு அதில் மேற்படி நீரில் சுமார் இரண்டு, மூன்று படியை விட்டால் அது கொதித்து ஆவியெழும்பும். கொதித்து அடங்கின பின்பு மற்ற நீரை யும் விட்டு அடுப்பேற்றி இரண்டு கொதி வரும்படியாகக் கொதிக்க் வைத்துக் குளிர்ந்த இடத்தில் வைத்து விட்டால் இரண்டு மூன்று நாளுக்குள் அதன் மேலே ஆடையைப்போல் படிந்திருக்கும். அதனை ஓலைத் துண்டினால் வழித் தெடுத்துப் பீங்கான் பாத்திரத்திற் போட்டு வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் இரண்டுமூன்று நாளைக் கொரு தடவை வழித்தெடுத்து உலர்த்தி எதுவரையில் உப்பு விளைகிறதோ அதுவரையில் எடுத்துக் காய வைத்து ஈரமில்லாமல் புட்டியில் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் எடுத்த உப்பை மேற்கண்ட பாகத்தில் மேற்கண்ட படி சேர்த்துக் கொள்ள வேண்டும். இன்னும் இந்த உப்பானது பலவகைச் சரக்குகளைக் கட்டவும், தைலம், சூரணம் முதலிவைகளின் குணத்தை அதிகப்படுத்தவும் உபயோகமாகும். ஆனால் இதன் விபரங்களைத் தெரிந்த அனுபவசாலிகள் அநேகர் இருப்பார்களாகையால், அவசியமானவர்கள் அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும், இன்னும் இதற்குச் சமமான ஒரு முறையையே நமது நண்பர்களின் உபயோகத்திற்காக இங்கு எழுதுகின்றோம். அந்த முறையானது முன் முறையைப் பார்க்கிலும் சற்று இலோசானதும் அதிகக் குணமுள்ளதுமாகும். அது பின்வருகிற விதமே.

## 854. குருச் சுண்ணம்.

சுத்தி செய்த பூநீறு 2 படி, நன்றாக, வேகவைத்த கற்சுண்ணாம்பு 2 படி, கடல் நீர் 2 படி அல்லது பனி நீர் அல்லது தண்ணீர் 8 படி.

செய்முறை:- மேற்படி இரண்டையும் கலந்து ஒரு பானையிற்போட்டு இரண்டு அல்லது மூன்றுபடி தண்ணீரை விட்டு அதன்வாயை மூடி வைத்தால் ஒருவித சப்தம் கேட்கும். அடங்குகிறவரையில் மூடி வைத்திருந்து மறுபடி திறந்து மீதி

தண்ணீரையும் விட்டு நன்றாகக் கலக்கி அடுப்பின் மீதேற்றி இரண்டு கொதிவருகிறவரையில் கொதிக்க வைத்து தினம் இரண்டு மூன்று தடவை கலக்கி வரவேண்டும். இவ்விதம் மூன்று நாள்கள் சென்றபின்பு அடுப்பேற்றி இரண்டு கொதிவரும்படியாகச் சுடவைத்து இறக்கி தனியே ஒரு இடத்தில் வைத்து விடவும். இதில் உப்பு விளையும், அந்த உப்பானது மேலே ஆடையைப் போல படித்திருக்கும் அதனை ஓலைத்துண்டினால் வழித்தெடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் போட்டு வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். மூன்றுநாளைக்கொரு தடவை வழித்தெடுத்து உலர்த்திக் கொள்ளலாம். இவ்விதம் உலர்த்தினதை எல்லாம் சேகரித்து பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் சேகரித்த உப்பிற்குக் குருவென்று சொல்வார்கள். இதனால் அநேக காரியங்களைச் சாதிக்கலாம். இது வாதம், வைத்தியம் என்னும் இருவகைகளுக்குமாகும். தேவையான வரையில் உப்பை எடுத்துக் கொண்டு பானையிலுள்ள தெளிவை இறுத்து எடுத்துக்காய்ச்சிக் குழம்புப் பதத்தில் இறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். அதற்குச் சவுக்காரக் குழம்பு என்றும் பெயர். இதனால், நெருப்புக்கு ஓடுகிற சரக்குகளையெல்லாம் நெருப்புக்கு ஓடாமல் கட்டிக் கொள்ளலாம். ஆனால், இதன் முறைகளையெல்லாம் இயற்கையின் அருளால் சமயம் வாய்க்கும்போது எழுதுவோம். இம்முறைகளில் அநேகம் தொட்டுக் காட்ட வேண்டியது அவசியமாயிருக்கின்றன. அப்படிச் செய்யாமல் எழுதிவிடுவதால் ஒரு பலனுமில்லை. கைபாகந் தெரியாத அநேகர் தம்முடைய அறியாமையினால் ஏமாந்து போவதுடன் நூல்களைப் பொய்யென நிந்திக்கிறார்கள். இதுதங்களுடைய குற்றமென்பதும், முறை தப்பென்பதும் அவரவர்களே தெரிந்துகொள்ளவேண்டும் ஒரு முறையைப் பார்த்த உடன் இது உண்மையான முறையென்றும், தப்பான முறையென்றும் திறமைசாலிகள் செம்மையாகத் தெரிந்து கொள்வார்கள், அனுபவமில்லாதவர்கள் அப்படி யூகித்தறிவது அசாத்தியமான காரியம். நாம் இதுவரையில் எழுதியிருக்கின்ற முறைகளும், இனி எழுதப் போகும் முறைகளும் இயற்கையின் அருளாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் நமது அருமைச்சகோதர பண்டிதர்களின் உதவியாலும் பெரும்பான்மையும் அனுபவத்தால் நிச்சயிக்கப் பட்டவைகளே. ஆனால் மூலிகைகளின் குணபேதங்களினாலும், கைபாகம், செய்பாகம் ஆகியவைகளின் பேதங்களினாலும் அக்கினியின் அதிகக்குறைவினாலும் தவறிப்போவதுமுண்டு. அப்பொழுது திறமைசாலிகள் தங்களுடைய நுண்ணறிவினால் இன்னமாறுதலினால் இப்படி நேரிட்டதென யூகித்தறிந்து கொள்வார்கள். ஆகையால் எந்தப் பாகத்தைச்செய்ய ஆரம்பித்தபோதிலும் அவசரப்படாமல் நிதானமாகவும், கவன

மாகவும், யூகமாகவும் செய்வார்களாயின், இயற்கையின் அருளால் எல்லாம் கைகூடுமென்பதில் சந்தேகமில்லை.

## 855. தாளகச் செந்தூரம்

சித்தி செய்து கட்டின தாளகம் 1 பலம் (35 கிராம்), சரக்கொன்றைப்பட்டைச் சாம்பல் ½ படி, புளியம் புறணிச் சாம்பல் ½ படி.

செய்முறை:- இரண்டு வகைச் சாம்புல்களையும் ஒன்றாகக் கலந்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தைக் கலயத்தில் போட்டு அழுத்தி அதன்மீது மேற்படி தாளகக் கட்டியை வைத்து அதன் மீது மறுபாதிச் சாம்பலைப் போட்டழுத்திக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பின்மீதேற்றி இரண்டு சாம நேரம் எரித்து ஆறவிட்டு எடுக்கத் தாளகமானது உருகி இலிங்கம் போல் சிவந்திருக்கும். இதனை எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு:- 1 முதல் 2 அரிசி எடை.

அனுபானம்:- பனைவெல்லம், வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- இசிவு, இருமல்- காசம், மந்தாரகாசம், சுவாசகாசம் முதலிய தீரும், இதனால் சிலருக்கு வாந்தியாவது உண்டு, சிலருக்கு பேதியாவதுமுண்டு. ஆகையால். நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு வேளையாக இரண்டு நாள் அல்லது மூன்று நாள் கொடுக்கலாம். அதற்கதிகம் கொடுக்கலாகாது.

பத்தியம்:- பாற்கஞ்சி, பால், இவைகளைத்தவிர மற்றவைகளாகா மூன்றாம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து தலை முழுகச் செய்விக்கவும். மறுநாள் விட்டு அடுத்த நாள் அவசியமானதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

குறிப்பு:- மேற்படி செந்தூரமாது மேற்கண்ட நோய்களை அதிசீக்கிரம் கண்டிக்கிறது. ஆனால் இது எந்த மருந்தும் பிடிக்காத முரட்டு உடலுக்கும் அவசியமானது. இளமையான உடலுக்கு வேண்டியதிருந்தாலும் அதிக நாள் உபயோகிக்க வேண்டியதிருந்தாலும், மேற்படி தாளகக் கட்டிக்கு இரண்டு பலம் (70 கிராம்) வளையலுப்பை நீர்விட்டரைத்துக் கவசித்து உலர்த்தி மேற்கண்ட பாகப்படி வைத்து எரித்துக் கொள்ள வேண்டும். வேறுவித கெடுதலுடைய குணங்களும் இரா. பயமில்லாமல் எத்தனைநாள் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். ஆனால், இவ்விதம் செய்த செந்தூரமானது இளமை

யோடிருப்பவர்களுக்குத்தான் உபயோகப்படும் பலமற்றவர்களுக்கு உபயோகப்படாது. அத்தகையினர்களுக்கு முன் சொன்ன பாகப்படியே செய்து உபயோகிக்கவேண்டும்.

## 856. தாளகச் செந்தூரம் (வேறு)

சுத்தி செய்த தாளகம் 4 பலம் (140 கிராம்), பின்கண்டபடி இறக்கின சிறுகிளாவேர்க் குழித் தைலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்துக் கைவிடாமல் நான்குசாம நேரமரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து உலர்த்தி ஒரு சட்டியில் ஒன்றோடொன்று படாமல் பரப்பி மேற்சட்டி மூடிச் சந்தில்லாமல் ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றித் தீபாக்கினியாக மூன்றுசாம நேரம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு எடுக்க வில்லைகள் கருஞ்சாயலான வண்ணமாய் இருக்கும். அப்படியில்லாவிட்டால் வில்லைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து வில்லை செய்து உலர்த்தி முன்போல் சட்டியில் வைத்து முன்போல் சீலைமண் செய்து உலர்த்தி முன்போல் எரித்துக் கொள்ளவும். முன்சொன்னபடி கருஞ்சாயலான செந்தூரமாகி இருக்கும். இதனைப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 2 முதல் 4 அரிசியெடை.

அனுபானம்:- தேன், நெய், குடிநீர், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- எல்லாவகைச் சுரங்களும் மூன்றுநாளைக்குள் குணமாகிவிடும். சன்னி, இருமல், காசம், சுவாசகாசம் முதலிய அநேக நோய்கள் தீரும். இது பெரும்பான்மையும் எல்லா நோய்களிலும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த அனுபானங்களில் உபயோகிக்க அந்தந்த நோய்கள் தீரும் இன்னும் இதன் சிறந்த குணத்தை அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம். வாந்தி, சுவையின்மை முதலிய கெடுதலுடைய குணங்கள் ஒன்றுமிராது.

## 857. தாளகச் செந்தூரம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம் 1 பலம் (35 கிராம்), ஒரு முழ நீளமும், ஐந்தங்குல பருமனுமான வாழைக்கட்டை ஒன்று.

செய்முறை:- மேற்படி கடுக்காய்ச் சூரணத்தைக் கல்வத்தில் இட்டு வாழைக்கட்டையின் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மெழுகுபோலாகிற வரையில் அரைத்து மேற்படி தாளகக் கட்டிக்கு உலர உலரக் கவசித்து முடிவாக நன்றாய் உலர்த்தி வாழைக் கட்டையை நிறுத்தி வைத்து அதன் நுனியில் நாலங்குலம் குழிதோண்டி அதற்குள் முன் சித்தப்படுத்தின தாளகக் கவசத்தை வைத்து அதன்மீது முன் எடுத்த சக்கையை வைத்து நன்றாக அடைத்து வராட்டியைத் துவாரம் செய்து வாழைக் கட்டையில் கோர்த்து அடுக்கி வாய்மட்டம் வரையில் கொண்டு வந்து அதன் மீதும் நான்கு வராட்டிகளை அடுக்கி நெருப்பிட வேண்டும். அந்த வாழைக்கட்டையானது எரிந்து போகும்படியாக வராட்டி அடுக்க வேண்டியது. எரிந்து அடங்கின பின்பு எடுத்தால் தாளகமானது உருகி சிவந்து போயிருக்கும்.

இதனையெடுத்துப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 முதல் 3 அரிசி எடை.

அநுபானம்:- தேன், வெண்ணெய், திராட்சைப் பழம், கடுக்காய்ச் சூரணம், தாளிசப்பத்திரிச் சூரணம் அசுவகந்திச் சூரணம் முதலியவைகளாம்

தீரும்நோய்கள் :- சுரம், முக்குற்றம், இரைப்பிருமல் ஆகியவைகள் தீரும்.

### 808. தாளகச் செந்தூரம் [வேறு]

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்) சிவகரந்தைச் சாறு 1 ஆழாக்கு, மேற்படி தாளகக்கட்டியை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்கிட்டுச் சாறெல்லாம் சென்ற பின்பு ஆற வைத்து அதில் ஆறு வராகன் எடை (21 கிராம்) ஒரே கட்டியாக எடுத்துக்கொள்ள வேண்டும். நவாச்சாரம், சூடன், வெடியுப்பு, வெண்காரம், ஈனாக்காரம் இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) எருக்கம்பால், இலைக்கள்ளிப்பால் கற்றாழை அடிமரத்துப்பால், சதுரக் கள்ளிப்பால், ஊமத்தஞ் சாறு இவை வகைக்குச் செல்லதக்க அளவு.

செய்முறை: மேற்கண்ட ஐந்து சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பால் முதலியவைகளால் தனித் தனியே ஒவ்வொரு சாமமரைத்துக் குகையும் மூடியும் செய்து உலர்த்திக் குகைக்குள் முன் தாளகக் கட்டியை வைத்து மூடியால் மூடிப்பொருத்தி ஒரு அண்டவோட்டுக்குள் வைத்து அதன் வாயை மறு அண்டவோட்டால் மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி, 40 பலம் (1400 கிராம்) வராட்டியில் புட

மிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும். இதனை எடுத்துப் பொடித்து புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1 முதல் $1\frac{1}{2}$ அரிசியெடை.

அனுபானம்:- கண்டங்கத்திரி விதையை நெய்யில் வறுத்துக் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்து அரைத்தெடுத்த இளகம், வாதுமைக் கொட்டையையும் கற்கண்டையும் சேர்த்து அரைத்து எடுத்த இளகம் ஆகியவைகளும், இவை போன்றவைகளுமாகும்.

தீரும்நோய்கள்:- சயம், காசம், இருமல், சுரம், வாயு, குட்டம் முதலியவைகள் தீரும்

பத்தியம்:- நோய்வலிமைக்குத் தகுந்தபடியும், உடல் வலிமைக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்தவும்.

## 859. தாளகச் செந்தூரம் [வேறு]

அரப்பொடி 3 வராகன் எடை ($45\frac{1}{2}$ கிராம்), சுத்தி செய்த தாளகம் $6\frac{1}{4}$ வராகன் எடை அப்பிரேகச் செந்தூரம் 6 வராகன் எடை (21 கிராம்), பவளம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), வங்கபற்பம் 3 வராகன் எடை($10\frac{1}{2}$ கிராம்), இரசம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), வெள்ளி அரப்பொடி 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தாளகச் சுண்ணம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சவ்வீரம் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்டவைகளுள் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்து, மற்றவைகளையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்திற்குச் சமனெடை வராட்டியில் புடமிடவேண்டும். ஆறின பின்பு எடுத்து அகலிலுள்ளவைகளைக் கல்வத்தில் போட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி முன்போல் கவசம் செய்து உலர்த்திக் கவசத்திற்கு இரண்டு பங்கு வராட்டியில்புடமிடவேண்டும் முன்கண்டபடியே சித்தப்படுத்தி மூன்றாந் தடவை மூன்று பங்கு வராட்டியிலும், நான்காந்தடவை நான்கு பங்குவராட்டியிலும், இவ்விதமே தடவைக்குத் தடவை ஒவ்வொரு பங்கு வராட்டிகளை உயர்த்தி வந்து, பத்தாந்தடவையில் பத்து பங்கு வடிட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கச் செந்தூரமாகியிருக்கும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 முதல் 1½ அரிசியெடை

அனுபானம்: நெய், தேன், இளகவகைகள், ஆடாதோடை நெய் கடுக்காய் நெய், முயல் நெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- சயம். இருமல், தொழு நோய், வெட்டை நோய், தாதுநட்டம், புண், புரைகள் ஆகிய அநேக நோய்கள் தீரும்.

குறிப்பு:- இதற்குத் தாளகச் செந்தூரமென்று பெயரிட்டிருந்த போதிலும், தங்க செந்தூரம் முலிய வற்றைக் காட்டிலும் அதிகமாகக் குணத்தைத் தருகின்றது. இதன் சிறந்த குணத்தை பழக்கத்தில் அவரவர்கள் கண்டுகொள்ளக்கூடும்.

## 860. தாளகக் கட்டு செந்தூரம்

சுத்தி செய்த பொன்னரிதாரம் 1 பலம் (35 கிராம்) வெள்ளாட்டுப் பித்து 3, பழுத்த கத்தரிப்பழம் 3, மிளகாய் விதை செல்லத்தக்க அளவு, கம்மாறு வெற்றிலைச்சாறு செல்ல தக்க அளவு மாட்டிறைச்சி, அல்லது வெள்ளாட்டிறைச்சி 13 பலம் (455 கிராம்), இது ஒரே துண்டாக இருக்கவேண்டும்.

செய்முறை:- தாளகக் கட்டியை ஒரு பித்துக்குள் போட்டு வாயைக்கட்டி மூன்றுநாள் வைக்க வேண்டும் இரண்டாவதி லுள்ள பித்த நீரில் மூன்றுநாள் ஊறவைக்க வேண்டும். மறுபடி எடுத்து மூன்றாவது பித்திலும் முன்போலவே ஊறவைக்க வேண்டும். இவ்விதம் சித்தப்படுத்தின பின்பு ஒரு கத்தரிப் பழத்தைத், துளைத்து அதற்குள் முன் சித்தப்படுத்தின தாளகத்தைச் செலுத்தித் துளைத்தெடுத்த சக்கையினால் வாயை அழுத்தி மூன்றுநாள் அப்படியே வைத்திருந்து நான்காம் நாள் மிளகாய் விதையை மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டுச் சந்தனம் போலரைத்துக் காலங்குல கனம் கவசம் செய்து உலர்த்தி முன்இறைச்சியின் நடுவில் பக்குவமாகவைத்து மெல்லிய கம்பியினால் சுற்றிக்கட்டி ஒரு கலயத்துக்குள் வைத்து வாய்மூடிச் சில்லிட்டுச் சீலை செய்து கரிநெருப்பில் வைத்துக் கலயத்திற்குள்ளிருக்கும் இறைச்சி கரிந்து போகும்பதமாக எரித்து எடுக்க வேண்டும்ஆறினபின்புதாளகக் கட்டியைஎடுத்து முன்போல் கத்தரிப்பழத்திற்குள் வைத்து முன்போல் சித்தப் படுத்தி முன்போல் இறைச்சிக்குள் வைத்து முன்போல் சித்தப் படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் மூன்றாந்தடவையும் கத்தரிப்பழத்திலும் இறைச்சிலும் சித்தப்படுத்திக் கொள்ளவும். இவ்விதம் செய்து எடுத்த தாளகமானது வாதம், வைதித்ய மென்னும் இருமுறைகளுக்கும் உபயோகமாகும். இது சற்று கடினமான முறையாயிருந்த போதிலும் இதனாலுண்டாகும் தன்மைகள் அதிகம் இதனைப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1 முதல் $1\frac{1}{2}$ அரிசியெடை.

அனுபானம்:- தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- குட்டநோய், புண், கிரந்திநோய் முதலியவைகள் தீரும். தாது நட்டம் தீர்ந்து தாது வலிவுண்டாகும்.

குறிப்பு: இரசவாத முறைகளைத் தெரிந்தவர்களிடம் கேட்டுக்கொள்ளவும்.

## 861. தாளகச் செந்தூரம் (திராவகப் போக்கு)

நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 2 பங்கு, படிகாரம் 1 பங்கு இவ்விரண்டையும் சேர்த்துப் பொடித்து வாலையிலிட்டு முறைப்படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

சுத்தி செய்த சிறுகண்நாகம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), சுத்தி செய்த இரசம் $\frac{1}{2}$ பலம் (17 $\frac{1}{2}$ கிராம்), சுத்தி செய்த தாளகம் $\frac{1}{2}$ பலம் (17 $\frac{1}{2}$ கிராம்).

செய்முறை: முன் இரண்டு சரக்கையும் முறைப்படி தொந்தித்துத் தாளகத்தைப் பொடித்து அதனுடன் சேர்த்து மேற்படி திராவகத்தைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்து ஒரு உருண்டையாகத் திரட்டி உலர்த்தி அதற்குச் சமனெடை வளையலுப்பை எடுத்து மேற்படி திராவகத்தை விட்டு வெண்ணெய் போலரைத்து முன் உருண்டையின் மேல் கவசித்து உலர்த்தி ஒரு சட்டியை அடுப்பின்மீது வைத்துச் சட்டி சூடுகண்ட உடன் மேற்படி உருண்டையைப் போட்டுப் புரட்டிக் கொடுத்து வறுத்து வரவேண்டும். இவ்விதம் நாலுசாமம் வறுத்தால் மேற்படி கவசமானது சிவந்து இரத்த வண்ணமாக இருக்கும். அப்போது இறக்கி ஆறவிட்டெடுத்து மேற்கவசத்தை நீக்கிப் பார்த்தால், உள்ளே உருண்டை சிவந்திருக்கும். பொடித்து புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1 முதல் $1\frac{1}{2}$ அரிசியெடை.

அனுபானம்:- இளக வகைகள், நெய்கள், குடிநீர்கள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- இதை பெரும்பாலும் எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம்; சுரநோய், கபநோய், சயம், காசம், வெட்டை, குட்டம் முதலிய நோய்கள் தீரும். இன்னும் அநேக நோய்களுக்கும் அந்தந்த அனுபானங்களில் உபயோகிக்க அவை தீரும்.

## 862. தாளகச் செந்தூரம் (வேறு)

சுத்தி செய்த தாளகம் 5 பலம் (175 கிராம்), வளையலுப்பு 1 பலம் (35 கிராம்).

செய்முறை:- மேற்படி உப்பைப் பொடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியில் பரப்பி அதன்மீது மேற்படி தாளகத்தை வைத்து அதன்மீது மறுபாக உப்பைப் போட்டு மெதுவாக எரித்து வந்தால் உப்பானது உருகி எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து செந்தூரமாகிவிடும். எல்லாவற்றையும் எடுத்துப் பொடித்து புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

அனுபானம்:- தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- இருமல், இரைப்பிருமல், கபம், சயம், சுரம் ஆகியவை தீரும்.

குறிப்பு:- இது மருத்துவ மறைவு முறைகளில் ஒன்று. அதிக நுணுக்கத்தில் இது முடிந்து விடுகிறது; நோய்களையும் மூன்று நான்கு நாளைக்குள் குணமாக்கி விடுகிறது. கக்கல் முதலிய தீய குணங்கள் ஒன்றுமில்லை. ஆனால் போன நோய் மறுபடியும் திரும்பி வரும். ஆகையால், மருத்துவர்கள் கவனத்துடன் வேறு மருந்துகளை உபயோகித்துத் தடுத்துக் கொள்ளவேண்டும். அதற்காகவே முன்னெச்சரிக்கையாக இங்கெழுதியிருக்கின்றேன். இதன் உண்மையை அவரவர்கள் அனுபவத்தில் தெரிந்து கொள்வார்களாக.

## 863. மால்தேவிச் செந்தூரம்

சுத்தி செய்த அரிதாரம், சுத்தி செய்த மனோசிலை சுத்தி செய்த சாதிலிங்கம், சுத்தி செய்த நாகம், சுத்தி செய்த ரசம், இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்) கறிவேப்பிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:: இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொள்ளவும். மற்றசரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்துக்கொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்படிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி செம்மையாய் உலர்ந்த பின்பு 3 பலமுள்ள (105 கிராம்) 5 எருவில் புடமிட்டாறின பின்னெடுக்கச் செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு.முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
[illegible]

அனுபானம்:- வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- குன்மம், சூலை, காசநோய், குட்ட நோய் பித்தநோய், பித்தக் கிருகிருப்பு, கைகாலெரிவு. வாந்தி, விக்கல், சன்னி, சுரம், இழுப்பு, இசிவு, பக்கவாதம், பிரமேகம் வெட்டை, பிரமியம், சூதகபந்தம் முதலியவைகள் தீரும். தாதுவிருத்தி, இந்திரிய வலிவு ஆகியவைகளுண்டாகும்.

சுத்தி செய்த செம்பு 7 வராகன்எடை [24 ½கிராம்] வெள்ளி 3 வராகன் எடை [10 ½ கிராம்], தங்கம் 1 வராகன் எடை (3 ½ கிராம்] இம்மூன்றையும் உருக்கிஉருக்குமுகத்தில் 1வராகன் எடை [ 3½ கிராம்] மேற்படி செந்தூரத்தைக் கொடுக்க, ஏழரைமாற்றுள்ளவாதப் பொன்னாகும்.

## விண்ணப்பம்

நண்பர்காள்! இம்முறையில் கறிவேப்பிலைச்சாற்றைச் சேர்க்கும் படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கறி வேப்பிலையானது சாறுவராத மூலிகைகளில் ஒன்றென்பது அநேகருக்கும் தெரிந்த செய்தி ஆனாலும், சாறுவராத மூலிகை களில் நாறெடுக்க வேண்டுமானால், துருசுச் சுண்ணம் முதலிய வைகளைச் சேர்த்து எடுக்க வேண்டியது அவசியமாகையாலும் அத்துருசுச் சுண்ணம் எல்லோருக்கும் கிடைப்பது கூடாத காரியமாகையாலும் சாறுவராத மூலிகைகள், உலர்ந்த மூலிகை கள், முதலியவைகளின் சாறெடுக்கச் சுலபமாக ஒருவகையை இங்கெழுதுகின்றோம். இந்த முறைப்படி செய்து கொள்வதால் மூலிகையின் காரம், குணம், தன்மை முதலியவை கெட்டுப் போகாமல் பச்சை மூலிகையில் சாற்றால் எந்தக் குண முண்டாகுமோ அந்தக் குணமேயுண்டாயிருக்கும். இப்பாக மானது அனுபோகப்படியும், நூலின்படியும், நிச்சயிக்கப் பட்டது. இன்னும் இம்முறையானது இரசவாதிகளான முன் னோர்களால் பழங்காலத்திலிருந்தேகையாண்டு வரப்படுகிறது. ஆனால் நம்மவர்களுள் இது அநேகருக்குத் தெரியாதபடியாலும் இவ்விடங்களில் அதிகம் கையாடப் படாதிருக்கிறதினாலும் அநேகருக்கு இதில் அனுபவமில்லையெனச் சொல்லலாம். ஆகை யால் இதன் வகைகளை விபரமாக எல்லோருக்கும் தெரியும்படி யாகவும், எல்லோருக்கும் பயன்படும் படியாகவும் கூடியவரை யில் தெளிவாக எழுதுவோம்.

## சாறுவரா மூலிகைகள், உலர்ந்த மூலிகைகள் ஆகியவைகளின் சத்தெடுக்கும் வகை.

தாழ்ந்த உலோகத்தை உயர்ந்த உலோகமாக மாற்றப் பட்ட சஞ்சீவியான மூலிகைகளுள் பெரும்பான்மையான வகை கள் சாறுவரா மூலிகைகள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை

அவ்வித மூலிகையில் சாறெடுக்கும்போது நேரிடும் சிரமங்களால், சில சமயங்களில் நமது ஊக்கத்தைக் கை விடும்படி நேரிடுகிறது ஆகையால், இந்த முறையை யூனானி மருத்துவர்கள் கண்டு பிடித்து இதைத் தாங்கள் உபயோகித்து வந்த போதிலும் இந்த வகை தெரிந்த ஒவ்வொருவரும் பரம ரகசியயாக வைத்து வந்தார்கள். ஆரம்பத்தில் இந்த முறையானது இரசவாதத் தொழிலுக்கு அவசியமான சத்தெடுப்பதற்கு மாத்திரம் உதவியானதென உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஏனெனில், வண்ணத்தை உண்டாக்குகிற மூலிகைகளில் தாம்பிரம் முதலிய உலோகங்களின் சம்பந்தம் இருக்கிறதென தற்கால ரசாயன நூல்கள் மூலமாகவும், அது நிமித்தமாகவே வண்ணமுண்டாகிறதெனவும், நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வகை மூலிகைகளை வாலையிலிட்டுத் திராவகம் இறக்கினால், அதிலுள்ள உலோக சத்துக்கள்தம் சுபாவ குணத்தினால் வாலையின் அடியில் தங்கிப்போய் அதன் ஆவிமாத்திரம் மேலுக்கெழும்பிப் பிறகு நீராக மாறி அதன் சத்து மாத்திரம் வெளியாகிவிடுமென்பதே.

ஆனால், (தஜர் றுபாதே குஷ்ஹாலி) முதலிய இரசவாத மருத்துவர்கள் உலர்ந்த மூலிகைகளை, அல்லது, சாறுவராத மூலிகைகளைக் கீழ்காணும் விதமாகத் திராவகமிறக்கிச் சஞ்சீவிகளை (இரசவாத மருந்துகளை) செய்யும்படி தத்தம் நூல்களில் எழுதியிருக்கின்றார்கள், இன்னும் தாம் தாமும் அவ்விதமே செய்து சித்திபெற்றிருப்பதாகவும் எழுதியிருக்கின்றார்கள். இன்னும் சமீப காலத்திலுண்டான இரசவாதிகளும் எந்த மூலிகைச் சாற்றால் இரசவாத முறைகளைச் செய்து சித்தி பெற்றிருக்கின்றார்களோ அந்த மூலிகைகளையே கீழ்க்காணும் முறைப்படித் திராவகம் இறக்கி அதனால் மேற்படி மருந்துகளைச் செய்தும் சித்திபெற்றதாக எழுதி இருக்கின்றார்கள். இந்த வகைக்கு அரபு மொழியில் ஹம்மாமே மாரியா என்று பேர். எவ்வித உலர்ந்த மூலிகையாயினும் கீழ்காணும் விதமாகச் செய்தால் சுத்தமான சத்தாக இறங்கும், அது பால் போன்ற வெண்ணிறமான திரவமாயிருக்கும். குணத்தில் வேறுபடுகிறதில்லை.

### ஹம்மாமே மாரியா என்னும் திராவகவாலை

இது சாதாரண திராவகவாலையை, அல்லது யந்திரத்தைப் போன்றது. இதன் அதிக விபரத்தைப்பற்றி நமது யூனானி வைத்திய தாதுவிருத்தி போதினி 2 ம் பாகம் 665ம் பக்கத்தைப் பார்க்கவும்.

1. 2. 3. இந்த நம்பர் அடங்கினது வாலையின்பட்டி அல்லது வாலையின் மேல்மூடி என்று பெயர்பெறும்.

இது வெள்ளி, துத்தநாகம், தகரம், மண் ஆகியவற்றால் செய்யப்படும்.

4 இந்த நம்பருடையது கீழ்ப்பாண்டம் இதன் விலாவில் கீற்றிடப்பட்டிருப்பது அதன் உள்மத்தியில், வைக்கப்பட்டிருக்கும் தடையின் அறிகுறியாகும்.

இத்தடையானது தாம்பிரத் தகட்டினாலிருப்பது உத்தமம். ஆனால் துத்தநாகம், தகரம் முதலியவைகளினாலும் வைத்துக் கொள்ளலாம். இத்தகட்டின் கீழ்ப்புறத்தில் தண்ணீரும் அதன் மேல்புறத்திலே சாறெடுக்க வேண்டிய மூலிகையும் இருக்க வேண்டியது.

இத்தடையின் சமீபத்தில் ஒரு குழாயொன்று வைக்கப்பட்டு இருக்கின்றது. இதன் மூலமாக வாலைக்குள் நீரை விடவும். திராவகம் இறக்கும்போது தண்ணீராவி வெளியே செல்லவும் ஏதுவாகும்.

இந்தப் பாத்திரமும் மண், தகரம் முதலியவற்றால் செய்யப்படும்.

1 பட்டி அல்லது மூடியின் வாய். 2-திராவகம் வடியுங் குழாய், 3- மேல்மூடியினின்று நீர் வடியுங்குழாய் 4. கீழ்ப்பாண்டத்தில் நீர் நிற்க வேண்டிய இடம் இதற்கு நீரை இந்தப் பாண்டத்திலுள்ள தடைக்குச் சமீபத்தில் வைத்திருக்கும் குழாய் மூலமாக விடவேண்டும். மேலும் இதில் தண்ணீரை அரை பாகத்திற்கு அதிகமாக விடலாகாது.

(அ) மேல்மூடியுங் கீழ்ப்பாண்டமும் தனித்தனியாயிருக்கும் பாவனை,

(ஆ) கீழ்ப்பாண்டமும் மூடியும் பொருந்தியிருக்கும் பாவனை.

## மேற்படி யந்திரத்தில் திரவமிறக்கும் முறை

4. நெம்பருள்ளக் கீழ்ப்பாண்டத்தின் மேற்புறத்தில் சாறெடுக்க வேண்டிய மூலிகையை வைக்கவேண்டும். அது அந்தப் பாகத்தில் அரைவாசிக்கு அதிகம் இருக்கலாகாது. இப் பாண்டத்திலுள்ள குழாயின் மூலமாக தண்ணீரை விடவேண்டும். இந்த நீர் அந்தப்பாகத்தில் அரைவாசிக்கு அதிகமிருக்கலாகாது.

பிறகு 1- 2- 3. நம்பருள்ள பட்டியை, அல்லதுமேல்மூடியை வைத்தழுத்தி சந்தில்லாமல் கோதுமைமா, உளுந்துமா, களிமண் ஆகியவைகளிலொன்றைச் சீலைத்துண்டில் தடவி சந்து பந்தனஞ் செய்து அடுப்பேற்றி, 3. நம்பருள்ள குழாயின் அடிப் புறத்தில், அல்லது, நுனிப்புறத்தில் நெட்டித் துண்டை, அல்லது

துணியை இட்டு அடைத்து மேல்மூடியிலுஞ் சுத்த தண்ணீர் வார்த்து மெதுவாய் எரிக்க வேண்டும்.

எண். 2-ல் உள்ள குழாயிலிருந்து வடியுந்திராகவகம் விழும்படி ஒரு பாத்திரத்தை அதன் வாய்க்கு நேரே வைக்கவேண்டும். அப்பாத்திரம் மூடப்பட்டு, அதன்மேல் மூடியில் இரண்டொரு துவாரமுள்ளதாக இருப்பது உத்தமம்.

1-ம் எண்ணில் வார்த்த நீர் சூடாகிவிட்டால் 3-ல் வைத்திருக்கிற நெட்டியை, அல்லது துணியையெடுக்க அந்த நீர் உடனே வெளிப்பட்டுப்போம். முன்போல் துவாரத்தை அடைத்து வேறு சுத்ததண்ணீர் விடவேண்டும். இப்படிச் சூடு காணும் போதெல்லாம் மேற்கண்டபடி நீரை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும் இவ்விதம் செய்வதால் நீரின் ஆவி எழும்பித் தகட்டிற்குத் தாவும். அந்தச் சூட்டினால் மூலிகை வெந்து அதிலிருந்து ஆவியுண்டாகி மேலே போகும். அதன்மீதுள்ள தண்ணீர் ஆவியாக மாறி 2-ம் நெ. குழாய் மூலம் நீராக வடியும். இவ்விதம் அங்குள்ள மூலிகையானது கருகிப்போகாமலும், தண்ணீர் கலப்பில்லாமலும் திராவகமிறங்கும். இவ்விதம் உலர்ந்த அல்லது சாறு வராத மூலிகையிலிருந்து திராவகம் எடுத்து அதன் சாற்றைப்போல உபயோகிக்கலாம்.

இவ்விதமே மேற்படி கறிவேப்பிலையைத் திராவகமிறக்கி உபயோகிப்பது உத்தமமும் சிறந்ததுமான முறையாகும்.

இந்த மூலிகையை எரித்துச் சாம்பலாக்கி உப்பெடுத்து, அந்த மூலிகையை இடித்துச் சேர்த்து ஒருநாள் வைத்திருந்து மறுநாள் பிழிய நீராகும். அந்த நீரையும் உபயோகித்துச் செய்யலாம்.

இந்த இலையை பிட்டவிப்பது போல அவித்து, பிழிந்து சாறெடுக்கலாம்.

ஆனால், இந்த வகைகளிலெல்லாம் முதற்சொன்ன முறை தான் அனுபவமான முறை. மற்றிரண்டு முறைகளும் முறையே ஒன்றுக்கொன்று தாழ்ந்தவையாகும். ஆகையால், அவரவர்கள் சாமர்த்தியம், ஊக்கம், புத்திநுண்மை ஆகியவைகட்குத் தகுந்தபடி தங்களுக்கு விருப்பமான விதமாகவும் வேறு விதமாகவும் செய்து சித்திபெறலாம்.

## விண்ணப்பம்

நமது நண்பர்களில் ஒருவர் கீழ்க்கண்ட விதமாக மேற்படி செந்தூரத்தைச் செய்து வாதம், வைத்தியம் என்னும் இருவகைகளிலும் மூலகிரந்தத்திற் சொல்லி இருப்பதுபோல் தம் அனுபவத்தில் அனுபவித்து வருகிறதாகச் சொன்னதும் தவிர

மேற்படி மருந்தையும் கொடுத்தனர். அந்த மருந்து அவர் சொன்னது போலவே குணத்தில் காணப்பட்டது ஆகையால், அதையும் இங்கெழுதுவோம். அதாவது-

1. இதற்கு வேண்டிய தாளகத்தை முன்சொல்லப் பட்டிருக்கும்" தாளகச் சுத்தியென்னும் தலைப்பில் மூன்று எண்ணிலுள்ள முறைப்படி சுத்தி செய்து கொள்ளவேண்டும்.

2. கறிவேப்பிலையில் சிறுபிள்ளைகள் மூத்திரத்தைக் கொஞ்சம் தெளித்திடித்துச் சாறெடுத்துக் கொள்ளவேண்டியது

மற்றவைகளெல்லாம் முறையிற் சொல்லப்பட்டிருப்பவை களேயாம்

## 864. தாளக மெழுகு

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்). பூவரசங்காயை இடித்த சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி தாளகத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுறுக்கிட வேண்டும். நான்குசாம நேரம் சென்ற பின்பு ஊசியினால் குத்திப் பார்த்தால் சிரமமில்லாமல் உட்சென்றால் மெழுகு பதமென அறிய வேண்டியது. அப்படி இல்லாவிட்டால் மெழுகாகிற வரையில் சுருக்கிட மெழுகாகிவிடும். இதனைக்கல்வத்தில் வைத்து அரைத்து மெழுகைப் போலெடுத்துக் கொள்ளலாம்.

அளவு:- ½ முதல் 1 அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், இளக, வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சுரம், குட்டம், சயநோய், கபநோய் முதலிய அநேக நோய்கள் தீரும். இன்னும் இது இரசவாதத் திற்கும் உதவும்.

## 865. தாளக மெழுகு (வேறு)

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்), பூவரசங்காய் விதைக் குழித்தைலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை, அனுபானம் முதலியவைகளெல்லாம் மேற் கண்டவைகளேயாம்.

## 866. தாளக மெழுகு [வேறு]

தாளகம்1பலம் திருகுக் கள்ளிப்பால் அல்லது சதுரக்கள்ளிப் பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- தாளகத்தை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்து மேற்படி பாலால் நான்கு சாமம் சுருக்கிட்டால் மெழுகாகும்.

அளவு:- ½ முதல் 1 அரிசியெடை.

அனுபானம்:- வெண்ணெய், நெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- குட்டம், குறைநோய், கபநோய்கள், மந்தார காசம், சுவாசகாசம், முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு:- சிலருக்கு இதனால் அதிகபேதி உண்டாகிறது ஆகையால் உடல் திடத்தையறிந்து உபயோகிக்க வேண்டியது. மேலும் ஐந்து வேளை ஆறு வேளைக்கு அதிகம் உபயோகிக்கலாகாது. இதனைச் சுத்தி செய்த தாம்பிரத்தின்மீது கொடுத்தால் ஏதேனும் ஒருவகைப் பிரயோசனமுண்டாகும் இரசவாதத்தில் பிரியமுள்ளவர்கள் இதனைச் செய்து உபயோகித்துப் பார்க்கலாம்.

## 867. தாளக மாத்திரை

சுமார் ஒருபடி சிறுபிள்ளை மூத்திரத்தில் ஐந்து பலம் (175 கிராம்) பூநீற்றைக் கரைத்து ஒன்றரைப் பலம் (52½ கிராம்) தாளகத்தை துலாந்தரமாகக் கட்டித் தொங்க வைத்து இரண்டு சாம நேரம் எரித்து ஆறவிட்டு எடுக்கவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவை செய்து கொண்டால் சுத்தியாகிவிடும்.

இவ்விதம் சுத்தி செய்த தாளகக்கட்டியை ஒரு சாணக்கியில் வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கட்டியில்சூடுகண்ட பிறகு தக்காளிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்குக் கொடுக்க வேண்டும் இவ்விதம் கைமுறையாக நான்குசாம நேரம் சுருக்குக் கொடுத்து ஆறின பின்பு எடுக்கச் சண்டிக் கட்டாகும். பின்பு முன் போல் மஞ்சட் கரிசலாங்கண்ணிச் சாற்றால் இரண்டுமணி நேரம் சுருக்குக் கொடுத்து எடுத்துக் கொள்ளவும்.

மேற்படி தாளகம் 1 பலம் (35 கிராம்) இளவறுப்பாக வறுத்த மிளகுத்தூள், இளவறுப்பாக வறுத்த திப்பிலித்தூள், இளவறுப்பாக வறுத்த தாளிசப்பத்திரித்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) கரிசலாங்கண்ணிச் சாறு செல்லத்தக்க அளவு,

செய்முறை:- மேற்படி தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்ற சூரணங்களையும் சேர்த்து இரண்டுமணி நேரம் கைவிடாமலரைத்து எல்லாம் செவ்வனே சேர்ந்த பின்பு கரிசலாங்காணிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து அரைக்குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு :- 1 முதல் 2 மாத்திரை.

அனுபானம்:- தூதுவளைக் குடிநீர், பிட்டவித்துப் பிழிந்த தூதுவளையிலைச்சாறு, ஆடாதோடையிலைச்சாறு, சுக்குக் குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:-எல்லாவிதக் காசங்கள், சயநோய்,இருமல் கபவாதசுரம் முதலிய நோய்களும், குட்டநோய் முதலியவைகளும் தீரும்.

## 868 தாளக மாத்திரை [வேறு]

சுத்தி செய்த வேப்பெண்ணெயில் கட்டின தாளகம் ½ பலம் (17½ கிராம்) முழுக்கடலையை நீரில் ஊற வைத்துத் தோலுரித்தது 2 பலம் (70 கிராம்).

செய்முறை:- மேற்படி தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி கடலையை ஊற வைத்த நீரை விட்டு மசிய அரைத்து முன் கடலையைச் சேர்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ½ முதல் 1 மாத்திரை.

அனுபானம்:- முலைப்பால், தேன், இஞ்சிச்சுரசம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- இருமல், கபம், சுரம், முதலியவைகள் தீரும், குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

## 869. தாளக மாத்திரை [வேறு]

சுத்தி செய்து கட்டின தாளகம் 1 பலம் (35கிராம்), வெள்ளை மிளகுத் தூள் 1 பலம் (35 கிராம்) திப்பிலிச் சூரணம் 1 பலம் (35கிராம்) ஊமத்தங்காயின் விதைகளை நீக்கி உலர்த்தின தோல் 1¼ வராகன் எடை.

செய்முறை :- தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்றவைகளையும் சேர்த்தரைத்து மைபோல் தூள்செய்து வெள்ளெருக்கம்பூச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு

சாம நேரமரைத்து அரைக் குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு:- ½ முதல் 1 மாத்திரை,

அனுபானம்:- தேன், நெய், முதலியவைகளாம். காலை, மாலை இரண்டுவேளையும் உபயோகித்தால் போதுமானது.

தீரும்நோய்கள்:- இரைப்பு, சுவாசகாசம் முதலிய கப நோய்கள் தீரும்.

## 870. தாளக மாத்திரை [வேறு]

சுத்தி செய்த தாளகம் ஒரு பங்கு, கலைமான்கொம்பை ராவிச் சோற்றுக் கற்றாழைச் சாற்றாலரைத்துப் புடமிட்டெடுத்த தூள் ஒரு பங்கு, முட்டையோட்டைச் சுத்தி செய்து எருக்கம் பால் விட்டரைத்து நன்றாயுலர்த்திப் பிறகு எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழிந்து அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து ஒரு புடம் போட்டெடுத்த தூள் ஒரு பங்கு, கடற்கிளிஞ்சில் வெள்ளையானதும் பருமனானதுமாக எடுத்து அரைத்து, வடிகட்டினதூள் ஒரு பங்கு இந்த நான்கையும் கல்வத்தில் போட்டு எருக்கம் பாலால் கைவிடாமல் இரண்டுசாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி எருக்கம் பழுப்பை ஒரு சட்டியிற் பரப்பி அதன்மீது மேற்படி வில்லைகளை வைத்து அதன்மீதும் எருக்கம் பழுப்பை அடுக்கி மேற்சட்டி மூடி சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி நான்கு சாமம் எரித்தெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொஞ்சம் கருவேலம் பிசின் தூளையும் சேர்த்துப் பன்னீர்விட்டரைத்து ஒரு சாமம் சென்ற பின்பு அரைக் குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ½ முதல் 1 மாத்திரை.

அனுபானம்:- தேன், நெய், குடிநீர் வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:-சுரம், சன்னி, சுவாசம், இருமல், இரைப்பு குட்டநோய் முதலிய அநேக நோய்கள் தீரும். இது பிரபலமான வைத்தியர்களிடம் அவசியமிருக்கத்தக்கது. இன்னும் இதன் பிரயோசனங்கள் அதிகம் உண்டு.

## 871. சீதாம்ச ரசம்

சுத்தி செய்து கட்டின தாளகம், சுத்தி செய்த * மனோசிலை, சுத்தி செய்த நேர்வாளம், இவை வகைக்கு 1 பலம்

* இதனை எலுமிச்சம்பழச் சாற்றில் கொதிக்க வைத்து தூய்மை செய்து கொள்ளவும்.

மேற்றோல் சீவின சுக்குத் தூள் மிளகுத் தூள், அரிசித்திப்பிலித் தூள் இவை வகைக்கு 2 பலம், வேப்பம்பட்டைக் குடிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்கண்டவைகளைத் தனித்தனியே பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்படி குடிநீரைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து குன்றிமணி அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு:- 1 முதல் 2 மாத்திரை.

அனுபானம்:- தேன், கடுக்காய்ச் சூரணம், வெந்நீர், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சீதசுரம், சன்னி, வாதபாண்டு, ஐந்து வகைக் காமாலை, குன்மநோய், சுவாச காசம், உதரநோய், சன்னிபாதங்கள், வாந்தி, எண்பது வகை வாதம், நாற்பது வகைப் பித்தம், சூலை, பேய்ச்சொறி, பித்தப் பாண்டு, சூலைகள், கட்டிகள், மகோதரங்கள் வயிற்றுப்புசம், யானைக்கால் வாதம், சர்வாங்கவாதம், தாகம், தாவரங்கள் விடங்கள், விக்கல், அக்கினிமந்தம் சோடை, பிரமை, மூர்ச்சை, திமிர் நோய், முதலிய அநேக நோய்கள் தீரும்.

இதனை வேப்பிலைச்சாற்றில் குழைத்து மேல்பூச யானைத் தோல்தடிப்பு கொப்புளங்கள், குட்டம், மேகச்சொறி, பேய்ச்சொறி முதலியவை தீரும். திமிர்நோய்களுக்கு அந்த இடத்தில் கொஞ்சம் கத்தியினால் தடவ, அவை தீரும்.

பல்நோவுள்ள இடத்தில் இதனைத் தடவி வைக்கப் பல்லிலுள்ள புழுக்கள் செத்துப் பல்நோவு தீரும்.

எருக்கிலைச் சாற்றில் கரைத்துக் கொஞ்சம் கொதிப்பித்து இளஞ்சூட்டுடன் இரண்டொரு துளி காதில் விட செவி நோய்கள் தீரும்.

நொச்சியிலைச் சாற்றில் நசியம் செய்ய வலிப்புநோய் காக்கைவலி, தலைநோய், முதலியவைகள் தீரும். இன்னும் பதின்மூன்றுவகை சன்னி ஏழுவகை தோடம், காமாலைகள் பூத சேட்டை முதலியவைகளுக்கும் இஞ்சிரசத்தையும் தேனையும் சமமாகச் சேர்த்து கொடுக்க அவை தீரும்.

## 872. தாளக பற்பம்

சுத்தி செய்த தாளகம் 1 பலம் (35 கிராம்), பேரண்டத்தூள் 2 பலம் (70 கிராம்), கற்சுண்ணாம்புத் தெளிநீர் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:- மேற்படி அண்டத்தூளைக் கல்வத்திலிட்டு மேற்படி தெளிநீரைச் சிறுகச் சிறுக விட்டு வெண்ணெய் போல் அரைத்துக் குகையும் மூடியும் செய்து வெய்யிலில் உலர்த்திக் கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்றாய் உலர்ந்த பின்பு மேற்படி தாளகத்தை இதற்குள் வைத்து மேற்படி மூடியால் மூடி ஏழு சீலைமண் முழுவதும் செய்து ஈரமில்லாமல் உலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வராட்டியில் சுாற்றில்லாத இடத்தில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகியிருக்கும். இதனை புட்டியில் பத்திரப்படுத்தவும்.**

அளவு:- 1 முதல் 2 அரிசியெடை.

அனுபானம்:- தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:- சுரம், மந்தாரகாசம், ஈளை, சயம், குட்டம், பதினெட்டு வகை எலிக்கடி நஞ்சு, பலவகை வண்டுக் கடி நஞ்சு முதலியவைகள் தீரும்.

## 873. தாளக பற்பம் [வேறு]

சுத்தி செய்த பொன்னரிதாரம் 1 பலம் (35 கிராம்) இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வெண்ணாச்சி இலையின் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டுக் கைவிடாமல் ஒரு நாள் முழுவதும் அரைக்கவேண்டும். அப்படியே செம்பருத்தியிலையின் சாற்றால் மூன்று நாள் அரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்து உலர்த்தி ஒரு மண் குகைக்குள் அரைவாசி இருக்கும்படியாக வைத்து அதன்மேல் முருங்கை இலையின் சாற்றில் சீலைத் துண்டை நனைத்துக் குகைவாய் வரையில் நிறைந்திருக்கும் படியாக வைத்துக் குகைவாய்க்குச் சில்லிட்டு அதன்மேல் சீலை மண் செய்ய வேண்டியது.

இந்தக் குகையானது இட்டலி ரூபமாயிருக்கும்படி சீலை மண் செய்யவேண்டியது. பின்பு கொஞ்சமும் ஈரமில்லாமல் வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும் வேண்டியது. ஒரு முழக் குழிதோண்டி அதில் அரைவாசி காட்டெருவையிட்டு அதன் மேல் கவசத்தை வைத்து அதன்மேல் காட்டெருவைப் போட்டுக் குழியை நிறைத்து நெருப்பிட்டு எரிந்து புடம் ஆறினபின் எடுக்கப் பற்பமாகியிருக்கும்.

அளவு, அனுபானம் தீரும்நோய்:- இந்தப் பற்பத்தில் ஒரு சிறுபயறளவை வெற்றிலைச் சாற்றில் சேர்த்து உட்கொள்ள, இருமல், சேத்தும நோய் ஆகியவை தீரும்

**வெங்காயச்சாற்றில் மேற்படி அளவுப்படி நான்கு நாள்கள் கொண்டால் இருமல் தீரும்.**

மஞ்சள் பொடியில் சேர்த்து 4 நாட்கள் கொள்ள மேற் சுவாசம் தீரும்.

அரிசித்திப்பிலிச் சூரணத்திற் கொள்ள இருமல் தீரும்.

வெண்ணாச்சியிலைச் சூரணத்திற் கொள்ள விடசுரம், சேத்துமசுரம் ஆகியவை தீரும்.

வாழைப்பழத்திற் கொள்ளப் பித்தசுரம் தீரும்,
மோரிற்கொள்ள கழிச்சல் சுரம் ஆகியவை தீரும்.
வெண்ணெயிலுண்ண, விக்கல், வாந்தி ஆகியவை தீரும்.
உத்தாமணிச் சாற்றிலுண்ண முறைக்காய்ச்சல் தீரும்.
மருதம்பட்டைச் சாற்றிலுண்ண எவ்வகைக் கழிச்சலுந் தீரும்.

பருத்தி விதைப் பாலிலுண்ண, வெகு மூத்திர நோய் தீரும்.

## 874 தாளகாதிச் சூரணம்

சுண்ணாம்பில் சுத்தி செய்த பொன்னரிதாரத் தூள். வறுத்துத் தூள் செய்த அரிசித்திப்பிலிச் சூரணம், இவையிரண்டும் வகைக்கு 12 குன்றிமணி எடை பச்சையரிசியை வறுத்து அரைத்தமா பெரும்பிடி 1, இம் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துச் செல்லத்தக்க தேன் வார்த்துக் கொள்க.

அளவு:- வேளை 1 க்குச் சிறுபாக்களவாக காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்ளலாம்.

தீரும்நோய்கள்:- சயநோய், இருமல், ஆகியவை தீரும்.

பத்தியம்:- புளி, புகை, புணர்ச்சிகளை நீக்கவும்.

## 875. தாளகப் புகை

சுத்தி செய்த பொன்னரிதாரத்தைப் பொடித்து அதற்குச் சமனெடை தேன் மெழுகையும் சேர்த்து நன்றாய் இரண்டும் கலக்கும்படி அரைத்துச் சிறு உருண்டைகளாகச் செய்துகொள்க

புளியம் புறணியை நெருப்பாக்கி அதில் மேற்படிமாத்திரைகளில் 4 அல்லது 5 மாத்திரைகளைப் போடப் புகையும், அந்தப் புகையானது வெளியிற் போகாதபடி முக்காடிட்டுக்கொண்டு புகை பிடிக்கவும், இப்படிச் செய்துவர, இருமல் நோய் உடனே ஓடிப்போகும்.

## 876. தாளகப் புகை (வேறு)

சுத்தி செய்த பொன்னரிதாரம், பொற்கொன்றை மரப் பட்டை, பிரண்டை, இம்மூன்றும் சமன் எடை. இவற்றுள்

ஒவ்வொன்றையும் தனித்தனியே அரைத்துப் பின்பு ஒன்றாகக் கல்வத்திலிட்டுக் கொன்றை மரப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மைபோல அரைத்து, மெல்லிய வெள்ளைச் சல்லாத் துண்டை நனைத்து நிழலில் உலர்த்தி திரி செய்து அதனையும் நிழலில் உலர்த்திக் கொள்க.

தீரும்நோய்கள்:- தயிர்ச்சாதம் சாப்பிட்டு முறைப்படி புகை பிடிக்க, இருமல் நோய் தீரும்.

### 877. தாளகப் புகை (வேறு)

சுத்தி செய்த அரிதாரம் 1 வாரகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இதனைப் பொடித்துத் தூதுவளைச் சாற்றை விட்டு மைபோல அரைத்து, மேற்படி சாற்றைவிட்டே குழம்புபதமாகச் செய்து கொள்க. ஒருமுழ நீளம், அரை முழ அகலமுள்ள ஒரு சல்லாத் துண்டை மேற்படி குழம்பில் தோய்த்து நிழலில் உலர்த்திக் கொள்க. இரண்டாந் தடவையும் முன் தடவை செய்தது போலவே முன் சித்தப்படுத்தின துண்டை மடக்கிச் செய்து கொள்க.

இவ்விதமே 7 வராகன்எடை ($24\frac{1}{2}$ கிராம்) அரிதாரத்தை ஏழு தடவை அரைத்து ஒரு துண்டையே மடக்கி மடக்கி. 7 தடவை தோய்த்து மடக்கி மடக்கி உலர்த்திக் கொள்க.

நோயுள்ளவன், பாற்சாதம் சாப்பிட்டு மேற்படி சீலையில் ஒருதிரி அளவெடுத்துச் சுங்கானில் வைத்துப் புகை குடிக்கவும். புகை குடிக்கும்போது துரிதமாய்ப் புகையை வெளியில் விட்டு விடாமல் மெதுவாயும் தாமதமாகவும் விடவேண்டியது. இவ்விதம் மூன்று நாள் ஆறுவேளை செய்க.

தீரும் நோய்கள்:- இருமல், ஈளை நோய் ஆகியவை தீரும்.
பத்தியம்:- உப்பு, புளி, புகை ஆகியவை ஆகா.

### 878. தாளகப் புகை (வேறு)

இலந்தையிலை, மணத்தக்காளியிலை இவ்விரண்டையும் சமமாகச் சேர்த்து இடித்துச் சாறு பிழிந்து, மெல்லிய வெள்ளைச் சல்லாத்துண்டை நனைத்து நிழலிலுலர்த்திக் கொள்க.

இரண்டாந் தடவையும் முன் இலைகளைச் சாறு பிழிந்து முன் சித்தப்படுத்தினதை மறுபடியும் நனைத்து உலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 5 தடவைகள் செய்து வைத்துக் கொள்க. 2 குன்றிமணி எடை' சுத்தி செய்த பொன்னரிதாரத்தைத் தூள் செய்து 3 அங்குல அகலமும், 5 அங்குல நீளமுள்ள துண்டுகளாக மேற்படி துண்டில் இழித்து முன் அரிதாரப் பொடியைப் பரப்பித் திரியாகத் திரித்து நூலால்

கட்டி வைத்துக் கொள்க இவ்விதமே மற்ற துண்டுகளையும் சித்தப்படுத்திக் கொள்க.

தீரும்நோய்கள்:- புளியம் புறணியை நெருப்பாக்கி ஒரு திரியைக் கொளுத்திப் புகையை வாயாலும் மூக்காலும் இழுக்க வேண்டும், சமயோசிதம் போல 1, 2 திரியைப் புகைக்கலாம். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக மூன்றுநாள் ஆறுவேளை செய்யவும். புளி, புணர்ச்சி புகை, கைப்புப் பண்டங்களையும் கண்டிப்பாக நீக்கிவிட்டுப் பசுவின்மோர்ச் சாதம், பால்சோறு ஆகியவைகளை உபயோகிக்க வேண்டும். இப்படிச் செய்யின் இருமல் நோய், ஈளைநோய் ஆகியவை தீரும்.

## 879. தாளகப் புகை [வேறு]

(1) சுத்தி செய்த பொன்னரிதாரம் 1 பலம் (35 கிராம்) இதனைக் கல்வத்திலிட்டு, நையப் பொடித்து, மணத்தக்காளிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மைபோல அரைத்துக் குழம்பு பதமாகச் செய்து ஏழு பாகமாகப் பாகித்துக் கொள்க. மெல்லிய வெள்ளைச்சல்லாவில் ஆறு விரற்கடை சதுரமுள்ள துண்டு 1-ம், இதற்கிரட்டிப்பான துண்டு 1-ம், மும்மடங்கான துண்டு 1-ம், நான்கு மடங்கான துண்டு 1-ம் ஆக நான்கு வகைகளாய்த் துண்டித்துமுன் சித்தப்படுத்தின அரிதாரக் குழம்பில் ஒரு பாகத்தில் நனைத்து நிழலில் உலர்த்த வேண்டியது முன் துண்டுகள்நன் றாய் உலர்ந்த பின்மறுபாகத்திலும்முன்போலவே நனைத்து நிழலில் உலர்த்த வேண்டியது. இவ்விதம் மீதியான மற்றஐந்து பாகங்களிலும்மடக்கிமடக்கிஅந்தத் துண்டுகளையே நனைத்து உலர்த்தி ஒரு குப்பியில் வைத்து அதன்மேல் எண் 1, எனக் குறித்தும் வைத்துக் கொள்க

(2) சுத்தி செய்த பொன்னரிதாரம் 1 வராகன் எடை (3½ கிராம்) இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்து மைபோலான பின்பு, 7 பாகஞ்செய்து ஒரு பாத்திரத்தில் முன்போலவே ஆறு விரற்கடை சதுரமான துண்டு, இதற்கிரண்டு மடங்கான துண்டு. மூன்று மடங்கான துண்டு 1, நான்கு மடங்கான துண்டு 1, ஆக வேறு மெல்லிய வெள்ளைச் சல்லாத் துண்டில் முன்போலத் துண்டித்து முன்போலவே ஏழு தடவைகள் மடக்கி மடக்கி நனைத்து, மடக்கி மடக்கி உலர்த்திக் கொள்ள வேண்டியது. இவ்விதம் சித்தப்படுத்தினவைகளை வேறொரு குப்பியில் போட்டு எண் 2 எனக்குறிப்பிட்டுக் கொள்க.

(3) சுத்தி செய்த பொன்னரிதாரம் 1 வராகன் எடை (3½ கிராம்). இதனைக் கல்வத்திற் பொடித்துக் கொள்க. மூன்று வராகன் எடை (10½ கிராம்) மிளகை வெந்நீர்விட்டு மை போலரைத்துப் பிழிந்தநீரை, மேற்படி தாரப் பொடியிற் சிறுகச்சிறுக விட்டு, அரைத்து மைபோலானபின், முன்போல் 4 வகை அளவுள்ள துண்டுகளைச் சித்தப்படுத்தி மடக்கி மடக்கி உலர்த்தியும் நனைத்தும் வேறு குப்பியில் வைத்து இதன்மேல் எண் மூன்றெனக் குறித்து வைத்துக் கொள்க.

(அ) இவ்வகைகளை உபயோகிக்கும் விதம். வாததேகி, கப உடல் தன்மையானவர், உடல் பலமுள்ளவர்களாயிருந்து நோய் கப சம்பந்தமாயினும் அல்லது வாத சம்பந்தமாயினும் முதல்நாள், எண் 1-ல் உள்ள சீலையில் கால்வராகன் எடை எடுத்துச் சுங்கானில் வைத்துப் புகை குடிக்க வேண்டும். புகை குடிக்கும் முன், மூன்று ஆழாக்குப் பாலைக் குடிக்கவேண்டும். இரண்டாம் நாள் எண் 1-ல் காலேயரைக்கால் வராகன் எடையைச் சுங்கானில் வைத்து வழக்கம் போலவே பாலைக் குடித்துவிட்டு, புகை குடிக்கவேண்டும் மூன்றாம் நாள் அரை வராகன் எடை மேற்படி சீலையைச் சுங்கானில் வைத்து முன் போலவே பாலைக் குடித்துவிட்டுப் புகை குடிக்கவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும்; சமயோசிதமாக 2 நாள், 5 நாள், 6 நாள், 7 நாள், 9 நாள், 10 நாள். முடிவாய் 15 நாளுக்கு அதிகப்படாமற் செய்யலாம். இந்தப் புகையை உபயோகித்து வருகையில் குணங்கண்டால் அக்கணமே மருந்துப் புகை குடிப்பதை நிறுத்திவிடவேண்டியது.

(ஆ) பித்த உடலானால் எண் 2 இல்உள்ள சீலையை (அ) வில் சொன்னபடி செய்யவேண்டும்.

(இ) வாயால் இரத்தம் விழும் நோய்களுக்கு எண் 3ல்உள்ள சீலையை (அ)-வில் சொன்னபடி செய்யவும்.

பத்தியம்:- இம் மூன்று வகைகளுக்கும் பத்தியம் ஒன்றே ஆகையால்; அதனையும் இங்கெழுதுவோம். முருங்கைப் பிஞ்சு, துவரம்பருப்பு ஆகியவையாகும். பசுவின் பால் நெய் ஆகியவைகளை அதிகமாய்ச் சேர்த்துக்கொள்க. உப்பு, புளி ஆகியவைகளைக் கண்ணாலும் பார்க்கலாகாது.

இந்த மூன்று வகையாலும் தீரும்நோய்கள்:- இருமல், ஈளை, இரைப்பு, சுவாசகாசம், கோழைக்கட்டு, கபக்கட்டு ஆகியவைகளெல்லாங் குணமாகும்.

## தாளகம் விடமித்த லட்சணம்

இது, அளவிற்கு மிஞ்சினாலும், முறை பிசகாகச் செய்த இதன் பற்பம் முதலியவைகளை உபயோகித்தாலும், சில உடல்

களுக்குக் கீழ்க்காணும் தீயகுணங்களுண்டாகும். அவை பின் வருகிற விதமாகும்.

நகக்கண்களில் உதிரம் கவறிப் பக்குக்கட்டிப் புண்ணாகிச் சீழுண்டாய் உபத்திரவம் செய்தல், வயிற்றில் சதா எரிச்சல் உண்டாதல், தொனி மாறுபடுதல், பிரமையாயிருத்தல், மூக்கில் சரசரவென இரத்தம் வடிதல், வாயிலைத்தல், தலையில் தினவு உண்டாதல், தலைமயிர் முனைசிவந்து அக்கினிக் கொழுந்து போல் இருத்தல், சுவாசத்தை அதிகப்படுத்துதல், ஒருவேளை பநதித்தல், அடிவயிற்றில் கொஞ்சம் வீக்கக்குறி காணுதல், இடப்பக்கத்தில் வலியுண்டாதல், உணவில் வெறுப்புக்காணுதல் முதலியவைகளாம்.

இவற்றுள் எல்லாக் குறிகளும் ஏக காலத்திற் காணவேண்டு மென்ம் அவசியமில்லை. மேற்கண்டவைகளுள் இரண் டொன்று கண்டபோதிலும் நிதானித்து மருந்தினால் உண் டானதா. அல்லது, வேறு வகையால் உண்டானதா என யூகித் தறிந்து சமயோசிதம்போல் மருந்தை நிறுத்தியும், கீழ்க்காணும் முறையைப் பயன்படுத்தியும் நிவர்த்தி செய்ய வேண்டியது.

## 880. தாளகம் விடமித்ததற்கு மருத்துவம்

மிளகு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), உப்பு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சித்திரமூலவேர்ப்பட்டை $\frac{1}{8}$ பலம், இம் மூன்றையும் ஓர் புதுப் பாண்டத்தில் போட்டு ஒன்றரை ஆழாக்கு தண்ணீர்விட்டு அரை ஆழாக்காகச் சுண்டவைத்து வடிகட்டி உட்கொள்ளச் செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையும் உபயோகித்துவரத் தீரும்.

## 881. மேற்படி [வேறு]

அவுரிவேர்ப் பட்டை $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), மிளகு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), உப்பு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) மூன்றையும் முன் சொன்னதுபோல் செய்து சாப்பிடத் தீரும்.

குறிப்பு:- கெந்தகம், இலிங்கம், வீரம், மிருதார்சிங்கி முதலியவைகள் விடமித்ததற்குச் செய்யும் சிகிச்சைகளை இதற் கும் செய்யலாம்.

அனுபோக வைத்திய நவநீதம்
(ஆறாம்பாகம்)
முற்றுப் பெற்றது.

# சித்தர்களின் கிடைத்தற்கரிய நூல்கள்

**(31-7-95 வரை வெளிவந்தவை)**

## 48 சித்தர்கள் பெரிய ஞானக்கோவை

1. பதஞ்சலி வியாக்ரபாதர். பராசரர். பரத்துவாசர். வசிஷ்டர், துர்வாசர் முதலிய ரிஷிகள் இனிய தமிழில் பாடிய யோக ஞான நூல்கள் 400 பக்கங்கள்
**வசிஷ்டர் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசித்த வைத்தியம் 2/6**
**சங்கரர் நவக்கிரகசுக்கிஷம்** 100 முதலிய அரிய பகுதிகள் கொண்டது. மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டு
ரெக்ஸின் பைண்டிங் செய்த புத்தகம் விலை ரூ. 150 00
சாதா பைண்டிங் 125 00

## யோக ஞான சாஸ்திரத் திரட்டு

2. **இரண்டாம் பாகம்**— காலாங்கி நாதர் இடைக்காட்டுச் சித்தர், கொங்கணர், குதம்பைச் சித்தர் முதலிய சித்தர்களின் பாடல்கள் ரெக்ஸின் ரூ. 100 00
**மூன்றாம் பாகம்** சாதா ரூ 80 00
கடைப்பிள்ளை, கல்லுளிச் சித்தர், கஞ்சமலைச் சித்தர், குருராஜர் முதலிய சித்தர்கள் பாடியவை. ரெக்ஸின் 100 00
சாதா 70 00
ஆறாம் பாகம் இராமதேவர் ரெக்ஸின் 100 00
சாதா 70 00
**பத்தாம் பாகம்**
அகஸ்தியர் ஞான அமுதம்
மேப்லித்தோ—ரெக்ஸின் - பைண்டிங் 100 00
அட்டை பைண்டிங் 80 00
3. கைலாச நாதர் சூத்திரம் 201, காலாங்கிநாதர் கற்பவிதி, பூஜாவிதி, தீட்சா விதி. 27 00

## அகஸ்தியர்

4. 12000 என்னும் பெருநூல் காவியம்
ஐந்து காண்டங்கள் ஐந்து புத்தகம். ஒவ்வொன்றும் 35 00
ஐந்து காண்டங்கள் 75 00
5. வைத்திய காவியம் 1500 50 00
6. அமுத கலைக்ஞானம் 1200 45 00
7. வாத சௌமியம் 1200 40 00
8. மாந்திரீக காவியம் 1000 (இரண்டாம் பதிப்பு) 45 00
9. பூஜாவிதி முதலிய 7 நூல்கள் 50 00
10. கன்ம காண்டம் 300, சௌமதி நூல் 400, பரிபாஷை 300 45 00
11. **இலக்க சௌமிய சாகரம்** ஹக்கீம் பா. மு. அப்துல்லாசாயபு அவர்கள் எழுதிய உரையுடன் 100 00
12. மஹா திராவகம் 800 30 00
13. முப்பு சூத்திரங்கள் 15 00
14. **வைத்திய ரத்தினச் சுருக்கம்** உரையுடன் 25 00

## போகர்

| | | |
|---|---|---|
| 15. | போகர் ஏழாயிரம் 1—4 | 35 00 |
| | 2-3-5-6-7 | 32 00 |
| | —ஏழு காண்டங்களும் | 230 00 |
| 16. | நிகண்டு 1700 கருத்துரையுடன் கருக்கிடை நிகண்டும் அடங்கியது | 100 00 |
| 17. | நிகண்டு கையேடு | 15 00 |
| 18. | ஞான சூத்திரங்கள் | 30 00 |
| 19. | ஜெனன சாகரம் | 25 00 |
| 20. | வைத்திய காவியம் 1000 | 35 00 |
| 21. | போக முனிவர் 7000க்கு சூத்திரம் 700 | 30 00 |
| 22. | போகர் சரக்குவைப்பு 800 | 40 00 |

## கொங்கணர்

| | | |
|---|---|---|
| 23. | வாத காவியம் 300 உரையுடன் மூன்று காண்டங்கள்—ஒவ்வொன்றும் | 60 00 |
| | மூன்று காண்டங்கள் | 18 00 |
| 24. | கருவூரார் வாத காவியம் | 15 00 |
| 25. | கருவூரார் பல திரட்டு உரையுடன் | 25 00 |
| 26. | சட்டை முனி நிகண்டு | 40 00 |
| 27. | தன்வந்திரி நிகண்டு வைத்தியம் 300, பால வாகடம் 360 | 35 00 |
| 28. | நந்தீசர் நிகண்டு+கருக்கிடை | 30 00 |
| 29. | நந்தீசர் கலைக்ஞானம் | 40 00 |
| 30. | தட்சிணாமூர்த்தி மெய்ஞானம் 1500 திருமந்திரம் | 50 00 |
| 31. | மச்சமுனி திருமந்திரம் 800 | 27 00 |
| | இராமதேவர் வைத்திய காவியம் 1000 | ரூ. 65 00 |
| 32. | யாகோபு வைத்திய சிந்தாமணி 700 உரையுடன் | 60 00 |
| 33. | யாகோபு சுண்ணம், சுண்ணக் காண்டம் லோக செந்தூரம், வாத வைத்தியம் | 55 00 |
| 34. | திருவள்ளுவர் நவரத்தின வைத்திய சிந்தாமணி 800 | 45 00 |
| 35. | திருவள்ளுவர் நாதாந்தத் திறவுகோல் ஏணி ஏற்றம், குருநூல் 51, வாத சூத்திரம் 80 பஞ்சரத்தினம் 500 | 30 00 |

## திருமூலர்

| | | |
|---|---|---|
| 36. | திருமூலர் வைத்தியம் 1000 உரையுடன் | 40 00 |
| 37. | திருமூலர் கருக்கிடை 600 உரையுடன் | 30 00 |
| | திருமூலர் புவனைகக்கிஷம் மாந்திரிகம் | 60.00 |
| 38. | தேரையர் வைத்திய காவியம் 1500 | 40 00 |
| 39. | தேவரயர் வைத்தியம் 1000 உரையுடன் | 42 00 |
| 40. | உரோமரிஷி வைத்தியம் 500 சூத்திரம் 100, பரிபாஷை 300 | 40 00 |

| | | |
|---|---|---|
| 41. | பிரம்மமுனி மருத்துவ விளக்கம் | 25 00 |
| 42. | புலிப்பாணி மருந்துகள் | 16 00 |
| 43. | சித்தர்கள் இரசவாதக்கலை | 45 00 |
| 44. | அப்துல்லா இரசவாத மஞ்சரி | 20 00 |
| 45. | ஒட்டியம் சல்லியம் | 15 00 |
| 46. | சித்தர் எண் யந்திரங்கள் | 15 00 |
| 47. | கோரக்கர் சந்திரரேகை | 30 00 |
| 48. | கோரக்கர் மலைவாகடம் | 30 00 |
| 49. | கற்ப நூல் திரட்டு சட்டைமுனி 100 கொங்கணர் 100. புலஸ்தியர் 300 திருவள்ளுவர் 300. போகர் 300 | 45 00 |
| 50. | காகபுசுண்டர் பெருநூல் காவியம் | 40 00 |
| 51. | யூகிமுனி பரிபூரணம் 200 வைத்தியக்கும்மி 1000 | 30 00 |
| 42. | யூகிமுனி வாதாங்கதீட்சை300, வாதவைத்தியம் 200 மதிவெண்பா 100 | 45 00 |
| 53. | புலஸ்தியர் வாத சூத்திரம் 300, ஞானகற்பம் 222 | 25 00 |
| 54. | ஊர்வசி ரசவாத சிட்கா வைத்திய சிட்கா பஞ்சரத்தினம் | 40 00 |
| 55. | சுப்பிரமணியர் ஞானக்கோவை | 25 00 |
| 56. | முருகப் பெருமான் அகஸ்தியமகாமுனிவருக்கு உபதேசித்த யோக ஞானம் 500 உரையுடன் | 75 00 |
| 57. | கல்ப காலம் வாழலாம் | 22 00 |
| 58. | ஆயுள் வேதம் (சாரங்க தர சம்ஹிதை) | 35 00 |
| 59, | சிவ வாக்கியம் 1000 | 20 00 |
| 60. | சித்தர் வரலாறு கூறும் சதுரகிரித் தலபுராணம் | 50 00 |
| 61. | வீரமாமுனிவர் வாகடத்திரட்டு முதல் பாகம் | 30 00 |
| 62. | ,, ,, இரண்டாம் பாகம் | 30 00 |
| 63. | பதார்த்த குண சிந்தாமணி | 60 00 |
| 64. | பிராணரக்ஷாமிர்த சிந்து டி. ஆர் மகாதேவ பண்டிதர் | 100 00 |
| 65. | ரோக நிர்ணய சாரம் டி.ஆர். மகாதேவ பண்டிதர் | 50 00 |
| 66. | ரோமரிஷி வினாடி பஞ்சபட்சி சாஸ்திரம் உரையுடன் | 60 00 |
| 67. | பிருகுமுனிவர் மாந்திரீகம் | 10 00 |
| 68. | கருவூரார் மாந்திரீகம் | 20 00 |
| 69. | யுநாநி தாதுவிருத்தி போதினி ஹக்கீம்பா. மு. அப்துல்லா சாயபு அவர்கள் எழுதியது 1192 பக்கங்கள் ரெக்ஸின் பைண்டிங் | 200 00 |
| | அப்துல்லா அனுபோக வைத்திய நவநீதம் பத்து பாகங்கள் முதல்பாகம் | 40 00 |
| | பத்து பாகங்கள் | 400 00 |
| 70. | அனுபவ நாடி ஞானபோதினி | 15 00 |

## ஜோதிடம்

| | | |
|---|---|---|
| 71. | சோதிடப் பேரகராதி | 60 00 |
| 72. | ஜோதிஷ கணித சாஸ்திரம் - பஞ்சாங்க கணனம் | 60 00 |
| 73. | பீராங்கி முனிவர் ஜோதிடம் | 15 00 |
| 74. | மச்ச முனிவர் ஜோதிடம்- நந்திரேகை | 20 00 |

## இலக்கியம்

| | | |
|---|---|---|
| 75. | சிலப்பதிகாரம் சொல்லாராய்ச்சி<br>டாக்டர். சௌந்திரபாண்டியன் | 40 00 |

## ஆயுட் கால பலன்

12 லக்னங்களுக்கும், 12 புத்தகங்கள் கணித்து எழுதியவர் **பாலஷண்முகானந்தா**. உங்களுடைய எதிர்கால பலன்களையும், அதிர்ஷ்டங்களையும், நன்மை தீமை நேரும் காலங்களையும் நீங்களே படித்துத் தெரிந்துகொள்ளலாம். சோதிடர்களுக்குக் கையேடுபோல் உதவக்கூடியது. பராசார ஓரை, சாராவளி பலதீபிகை முதலிய சகல நூல்களின் சாராம்சம் அடங்கியது.

| | |
|---|---|
| ஒரு லக்னத்துக்குரிய புத்தகம் | 10 00 |

## புண்ணிய புராண நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மத் பாகவதம் 564 பக்கங்கள் | 45 00 |
| 2. | கல்கி புராணம் | 10 00 |
| 3. | அத்யாத்ம ராமாயணம் பக்கங்கள் 400 | 25 00 |
| 4. | நாராயணீயம் | 30 00 |
| 5. | ஆத்மானந்தம் | 9 00 |

## இதர நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | பழமொழிகள் பலவிதம் | 12 00 |
| 2. | விந்தையான விடுகவிகள் | 12 00 |
| 3. | அறிவுரை ஆயிரம் | 20 00 |
| 4. | புத்தர் நீதிக் கதைகள் 224 பக்கங்கள் | 20 00 |
| 5. | அக்கினிப் புயல் (வீரம் மிக்க பாரத மன்னர்கள் கஜினி முகமதுவின் முன்னால் தோல்வியுற்று வீழுந்த காரணம் என்ன என்பதை விளக்கும் சரித்திர நாவல் | 12 00 |

★